# ‘இறவாப் புகழுடையோன்’

கௌரவ முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

## அமரர் அருணாசலம் தங்கத்துரை

அவர்களின் 25 ஆவது ஆண்டு நினைவு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இறவாப் புகழுடையோன்’

கௌரவ முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

## அமரர் அருணாசலம் தங்கத்துரை

அவர்களின் 25 ஆவது ஆண்டு நினைவு மலர்

வெளியீடு

ஏற்பாட்டுக்குழு

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு
'இறவாப் புகழுடையோன்'

பதிப்பு
முதற் பதிப்பு : 2022

பதிப்புரிமை
கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்

வெளியீடு
ஏற்பாட்டுக்குழு

அச்சு
பென் விஷன் அச்சகம், திருக்கோணமலை, இலங்கை
+94 76 900 00 35
benvisionprinters@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அருணாசலம்

# தங்கத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மூதூரின் முத்து எங்கள் முது பெரும் சொத்து மனித நேயத்தின் மாண்பாளன். மங்காப் புகழ் படைத்த மாமனிதன் அமரர். தங்கத்துரை அவர்களின் கிளிவெட்டிக் கிராமம் அவதரித்த அறங்காவலன் அனைவரையும் அன்பாலே ஈர்க்கும் அறநெறியாளன். இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதற்கு வழிகாட்டிச் சென்ற பெருந்தகை எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி நீங்கா துயில் கொண்ட துயர்மிக்க நாள் 1997 ஆடி 05ஆந் திகதி இருபத்தைந்து வருடங்கள் ஓடி மறைந்தாலும் உள்ளத்தில் நீங்கா நினைவாக இன்னும் நிலைத்திருப்பவர் எங்கள் தங்கம் தங்கத்துரை அண்ணன் அவர்கள்.

அமரர் அ. தங்கத்துரை அண்ணனை "நெஞ்சினிக்கும் நினைத்தால் நாவினிக்கும் மொழிந்தால் பாவினிக்க வந்த தங்கா! மக்கள் வாழ்வினிக்க வந்த தலைவா! என்று வாழ்த்தத் தோன்றும். தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அது தரத்தினில் குறைவதுண்டோ! இதைப் போன்று மக்கள் சேவையே மகேசன் சேவை என நினைத்து தன்னலமற்ற தியாகமிக்க அர்பணிப்பினை செய்த தங்கத் தமிழன் தங்கத்துரை அண்ணன் மக்கள் சேவகனாய் மக்களின் மனதில் என்றும் நிலைத்திருப்பார். மங்காப் புகழோடு உயர்ந்து நிற்பார்.

அண்ணன் தங்கத்துரை 1970-1977 வரையிலான காலப்பகுதியில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பிராக பணிபுரிந்தவர். இந்தக்காலப்பகுதியில் அவனிபோற்றும் அற்புதமான சேவைகளையும் - சாதனைகளையும் புரிந்தவர். அனைவரும் போற்றும் அளவிற்க்கு அரசியல், சமூகம் கல்வி சார்ந்த அர்ப்பணிகள் மேற்கொண்டவர்.இக்காரணத்தினால் மக்கள் மனம் நிறைந்த தங்கத் தலைவனாக தலை நிமிர்ந்து நின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிவெட்டி மக்களுக்கு மட்டுமல்ல மூதூர் தொகுதி மக்களுக்கு மட்டுமல்ல திருக்கோணமலை மாவட்டத்திற்கும் ஏன்? முழு நாட்டிற்க்குமே இன மத மொழி பிரதேச வேறுபாடுன்றி ஆற்றப்பட்ட அரும்சேவை இன்று வரை "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி" நிலைத்து நிற்க்கின்றது. தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக அரசியல் களமிறங்கி இதுவரையில் எவரும் சாதித்திருக்காத சேவையினை மக்களுக்காக அர்ப்பணித்த அரசியல் வாதி அண்ணன் தங்கதுரை என்று ஆணித்தரமாக கூறலாம்.

தமிழ் மக்களின் அரசியலில் எதிர்காலம் பற்றிய தூர நோக்கும் திருக்கோணமலை மாவட்டத்தின் குறிப்பாக கிராம புற மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் படித்துவிட்டு வேலையற்றிருந்த இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளை கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற இன்னோரன்ன பல துறைகளிலும் வேலைவாய்ப்புகளை வழங்கி இருந்தார். "கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை" என்பதனை நன்குணர்ந்த அவர் அதிகமான படித்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் பெற்றுக்கொடுத்தார்.கல்வியின் மூலமாகவே தமிழ் பேசும் மக்களின் வாழ்வை ஒளிபெறச் செய்யமுடியும் என நினைத்துச் செயற்பட்டார். தன்னிடம் உதவி கோரி எவர் வந்தாலும் புன்னகையோடு இல்லையென்று கூறாமல் இயன்றவரை உதவி புரிந்தார்.

தங்கத்தமிழன் தங்கத்துரை அண்ணனின் சீரான அரசியல் வாழ்க்கையையும், சிறப்பியல்புகளையும் "இறவாப் புகழுடையோன்" என்ற இருபத்தைந்தாம் ஆண்டு நினைவு மலர் மூலம் பல பேரின் கட்டுரை வாயிலாகவும் அவரது சிறப்பியல்பினை காணலாம். எப்போதும் அவரின் குரலில் ஆணித்தரமான உரிமைக்கான வேட்கை இருந்தது. அவரின் அரசியல் வாழ்க்கை ஆதவன் அஸ்தமிக்காத இராஜ்ஜியமாகவே இருந்தது.

அமரர்.தங்கத்துரை அண்ணனின் நற்பணிகளுக்கு, சேவைகளுக்கு நன்றி செலுத்தும் வண்ணமும் இவரது அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றையும், மகத்தான மக்கள் சேவையையும் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளும் விதமாகவும் அவர் பிறந்த மண்ணில் அவருக்கு உருவச் சிலை அமைத்தலும், அவரது பெயரால் நினைவு மலர் வெளியீடும் இருபத்தைந்தாம் ஆண்டு நினைவு தினத்தில் செயற்பாட்டுக் குழுவினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு இம் மண்ணைச் சார்ந்த புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசிக்கும் பல பேர் உதவ முன்வந்தனர். அதை போல் உள்ளூரிலும் அவரால் பயன் பெற்ற பலர் முன்வந்தனர். இதனால் இப்பணி இப்போது நிறைவேற்றுவதையிட்டு மனம் மகிழ்கிறது.

எப்போதோ நடைபெற்று இருக்க வேண்டிய இப்பணி இப்போது நிறைவேற்றுவதும் அவரது சிலை திறப்பு விழாவும் நினைவுமலர் வெளீயீடும் நினைவேந்தல் நிகழ்வும் தி/மூ/கிளிவெட்டி மகா வித்தியாலயத்தின் அமரர் அ.தங்கத்துரை நினைவு மண்டபத்தில் 2022.08.28 ம் திகதி இடம் பெறுவதும் அன்னார் செய்த வேலைக்கு நாம் புரியும் கைமாறு ஆகும் "எந்நன்றி கொன்றார்க்கும் உயர்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவன் வாய் மொழிக்கிணங்க நல்லுள்ளம் கொண்ட மனித நேயம் மிக்கமாமனிதனை நினைவு கூறுவது காலத்தின் தேவையாகும்.

வெற்றித் தேவதை அண்ணன் தங்கத்துரை அவர்கள் நாடிய காரணம் என்ன? அவரது தன்னம்பிக்கை விடாமுயற்சி கடின உழைப்பு மனித நேயமிக்க மக்கள் சேவை" இவைகளே ஆகும். மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் அது முடிந்த பின்னாலும் என் பேச்சிருக்கும் "கடமை அது என் கடமை" என்பதை நிரூபித்துக்காட்டி மாமனிதருக்கு மக்கள் செய்யும் நன்றிக் கடனாகவே நாம் பார்க்கின்றோம்.

இப்பணியானது எந்த ஒரு தனிநபர் நலனும் கட்சி அரசியல் நலனும் சார்ந்த விடயமல்ல அமரர் அ.தங்கத்துரை அண்ணன் ஆற்றிய அரசியல் சமூகம் நாட்டுப்பணிகளை கௌரவிக்கும் முகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுள்ள மாந்தர்களால் இப்பணிநிறைவேற்றபடுகின்றது. திருக்கோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு சார்பில் வெற்றி பெற்று பதவி வகித்த அண்ணன் தங்கதுரைக்கு இங்கு ஒரு தனியிடம் உண்டு. அவர் எம்மை விட்டுப்பிரிந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்து விட்ட போதும் அவர் மக்கள் மனங்களில் மறையாத மறக்க முடியாத மாமனிதராக இன்று வரை இருப்பதே இப்பணி நிறைவேற்றத்திற்க்கு காரணமாக உள்ளது.

திருக்கோணமலை மாவட்ட மண்ணில் மாமனிதன் அமரர் தங்கதுரை போன்ற மக்கள் சேவர்கள் பிறந்து மக்களை நலம் பெற்று வளமாகவாழவைக்க வேண்டும்மென்று இறைவனைப்பிராத்திப்போம்!

அனைவருக்கும் அன்பின் வணக்கமும், நன்றியும் உரித்தாகட்டும்.

'கலைமாறன்'
செ. லோகராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

**ஆசிச்செய்தி**
- சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

**எங்கள் அப்பா**
- அப்பாவின் அன்புச் செல்வங்கள்

**மண்ணையும் மக்களையும் நேசித்த உன்னத மனிதனின் வரலாறு கல்மேல் எழுத்தே**
- திரு. சா. செ. சந்திரகாசன் (சட்டத்தரணி, OfERR நிறுவன ஸ்தாபகர்)

**மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர் தங்கத்துரை**
- கௌரவ இரா. சம்பந்தன் (பாராளுமன்ற உறுப்பினர்)

**தமிழின விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த தலைவர் தங்கத்துரை**
- கௌரவ மாவை. சோ. சேனாதிராஜா (தலைவர் - தமிழ் அரசுக் கட்சி)

**மூதூர் தந்த முத்து**
- கௌரவ வீ. ஆனந்தசங்கரி (செயலாளர் நாயகம் - தமிழர் விடுதலைக் கூட்டணி)

**மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனங்களில் வாழும் அமரர் அருணாசலம் தங்கத்துரை**
- கௌரவ. இம்ரான் மகரூப் (பாராளுமன்ற உறுப்பினர்)

**கிழக்கின் அரசியல் தனித்துவத்தின் அடையாளம்**
- கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன் (பாராளுமன்ற உறுப்பினர்)

**தமிழன்னை தனது இன்னொரு தவமகனையும் இழந்தாள்**
- கௌரவ துரைராஜசிங்கம் (சட்டத்தரணி, முன்னாள் விவசாய அமைச்சர் கி.மா)

**மக்களை நேசித்த தலைவர்**
- கௌரவ சி. தண்டாயுதபாணி (முன்னாள் கல்வி அமைச்சர் கி.மா)

**தனிப்பெருந்தலைவன் தங்கத்துரை**
- திரு. கு. நாகேஸ்வரன் (முன்னாள் உறுப்பினர் கி.மா.ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயரிய எண்ணங்கள் கொண்ட தங்கத்தலைமகன்**
- திரு. எம்.ஏ.எம்.அரூஸ் (தவிசாளர் - மூதூர் பிரதேச சபை)

**தன்னிகரில்லா மக்கள் தலைவன் அண்ணன் அமரர் தங்கத்துரை**
- திரு. சி. துரைநாயகம் (உப தவிசாளர் - மூதூர் பிரதேச சபை)

**தங்கத்துரை அண்ணர் பற்றிய நினைவுகள்**
- திரு. ச. குகதாசன் (தமிழரசுக்கட்சி - திருகோணமலை மாவட்ட குழுத் தலைவர்)

**மக்கள் சேவகன் தங்கத்துரை**
- அமரர் பொ. கந்தையா (காந்தி ஐயா)

**தமிழ் மண்ணின் தங்கம் அண்ணன் தங்கத்துரை**
- Dr அமிர்தலிங்கம் பகீரதன் (அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை)

**அன்பான, பண்பான மனிதர் அண்ணன் தங்கத்துரை**
- Dr. கனகசபாபதி சந்திரதேவா

**Thangannaa**
- திரு. ஆர். ஸ்ரீனிவாசன் - ஓய்வுபெற்ற சட்டத்தரணி

**மக்களின் மனதை வென்ற தலைவன்**
- திரு. சா. செ. ச. இளங்கோ (சட்டத்தரணி)

**ஏன் சென்றாய் நண்பா**
- திரு. சுந்தரம் டிவகலாலா (முன்னாள் செயலாளர், கல்வி அமைச்சு, வ.கி.ம)

**தங்கத் திருநகரின் தலைமகன் தங்கத்துரை**
- மகாராஜா ஸ்ரீராஜசேகரா (முன்-சுதேச மருத்துவ மாகாணப் பணிப்பாளர் வ.கி.மா)

**கந்தளாயின் கலங்கரை விளக்கு**
- திரு. க. ரவிராஜன் (தலைவர் - சோழீஸ்வரர் திருப்பணிச்சபை)

**எனது வழிகாட்டியாகத் திகழ்ந்த தங்கத்துரை அண்ணா**
- திரு. சு. மோகனதாஸ் (வேந்தர் - வவுனியா பல்கலைக்கழகம்)

**தங்கத்துரை அண்ணன்**
- திரு. பேராசிரியர் பால.சுகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமான மனிதத்தின் சொந்தக்காரர் அமரர் தங்கத்துரை
- திரு. க. அருள்சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

மக்கள் நலத்திட்டங்களால் மனதிலிருந்து நீங்காதவர்
- திரு. க. தேவகடாட்சம் (ஓய்வுபெற்ற கிராம சேவகர்)

மூதூரின் முத்து எங்களின் சொத்து
- திரு. க. நடேசபிள்ளை (ஓய்வுநிலை கணக்காய்வாளர் சுகாதார திணைக்களம்)

திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்களின் இதயக்கனி
- திரு. ஸ்ரீகிருஸ்ணராஜா (ஓய்வுபெற்ற மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கி.மா)

மாமனிதர் அருணாசலம் தங்கத்துரை
- திரு. அ. விஜயானந்தமூர்த்தி
(ஓய்வுபெற்ற மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கி.மா)

நெஞ்ச நினைப்பினில் நிலைத்திருப்பாய்
- திரு. செ. லோகராஜா (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

கொட்டியாபுரப்பற்றின் அரசியல் வரலாறு படைத்த முதல்வர்
- திரு. ஆ. செல்வநாயகம் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

இறவாத பிறவாமை பெற்று மீண்டும் மறவாமையுடன்
எம்மை நாடி சேவையாற்ற வாரீரோ.
- திரு. ஒ. குலேந்திரன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

இருத்துவோம்
- திரு. சோ. இராசேந்திரம் (தாமரைத்தீவான் - ஓய்வுபெற்ற அதிபர்)

தங்கமான சேவகன் தங்கத்துரை
- திரு. வே. தங்கராசா (ஓய்வுபெற்ற அதிபர்)

நினைவில் நிறைந்து நிற்கும் தலைவர்
- திரு. ஒ. வர்ணகுலநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்)

சீவியத்தில் நேசித்தோம் இறப்பிலும் மறவோம்
- அருட்சகோதரி தெரேஸ்ராணி (ஓய்வுபெற்ற அதிபர் - புனித மரியாள் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையாளர்
- திரு. அ. இராசேந்திரம் (ஓய்வுபெற்ற அதிபர்)

அணைந்தது தமிழர் ஒளிவிளக்கு
- திரு. இ. தருமலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்)

ஆற்றல் மிக்கவர் அண்ணன் தங்கத்துரை
- திரு கோ. வீரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்)

ஒரு சாதாரண மனிதன் சரித்திரமாகினான்
- திரு. சி. நவரெத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்)

மறக்க முடியாத செயல்வீரன் தங்கத்தமிழன் தங்கத்துரை
- திரு. த. சிதம்பரப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்)

கிழக்கு வானில் உதித்த தங்கஜோதி அண்ணன் தங்கத்துரை
- திரு. க. ஜெயநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்)

மறைந்தும் மறையாத மாமனிதர் அண்ணன் தங்கத்துரை அவர்கள்
- திரு. இரா. இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்)

ஆளுமை நிறைந்த தலைவன்
- திரு. க. யோகானந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்)

திருக்கோணமலை மாவட்டத்தின் வரலாற்றில் தடம் பதித்த
தங்கத்தமிழ் மகன் தங்கத்துரை ஐயா
- திரு. பா. கோணேஸ்வரராசா (அதிபர் - கிளிவெட்டி ம.வி)

திருமலைக்கு கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம்
- அறங்காவலர்கள் - செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை

என்றும் மறக்கமுடியாத தனிப்பண்புகளையுடைய தலைவர்
- திரு. தங்க முகுந்தன் - முன்னாள் மாநகர சபை உறுப்பினர்

முத்தமிழ் நாடாமல் மூதூரில் முதல் வரமய்யா நீங்கள்
- திரு. ராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளில் நிலைத்திருக்கும் அண்ணன் தங்கத்துரை
- திரு. கோ. இரத்தினசிங்கம்

Thangathurai Annai
- திரு. அன்ரன் பயர்ஸ் கிறிஸ்தோபர் - தென்னாபிரிக்கா

என்றும் மக்களின் மனதில் மங்காத புகழுடையோன்
- திரு. இரா. ஞானகணேசன்

அமரர் தங்கத்தரை பற்றிய என் மனப்பதிவுகள்
- திரு. முகம்மது முகைதீன் அனஸ்

மக்களால் போற்றப்படும் மக்கள் சேவகன்
- திரு. சு. கணேஸ் - டென்மார்க்

கிளிவெட்டி கிராமத்தின் விடிவெள்ளி எங்கள் தங்கத்துரை எம்.பி
- திரு. கே. விஜயன் (தலைவர் - கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்)

உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்
- திருமதி. நவமணிதேவி - லண்டன்

மனதில் பதிந்த நினைவுகள்
- திருமதி. சரோஜாதேவி - கனடா

எமது மண்ணில் மனம் வீசும் மனிதர்
- திரு. வை.சு.சிறி - சுவிஸ்லாந்து

ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
- திரு. க. ஜெகதீஸ்வரா - நோர்வே

துருவ துடிப்புகள்
- கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்

பாராளுமன்ற இரங்கல் உரைகள் (1997.07.23, 24)
நன்றி பகிர்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
## ஆதீனகர்த்தா, பிரதமகுரு
## சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்களின் ஆசியுரை

திருக்கோணமலை மாவட்ட கௌரவ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். அ.தங்கத்துரை அவர்களின் 25வது நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற 'இறவாப் புகழுடையோன்' எனும் நினைவு மலருக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் துணையோடு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தெட்சண கைலாயம் என போற்றப்படுகின்ற திருக்கோணமலை மண்ணின் மூதூர் பிரதேசத்தில் கிளிவெட்டி எனும் கிராமத்தில் பிறந்து இளம்வயதில் பாராளுமன்றம் சென்று வேலைவாய்ப்புகள் உட்பட பல அபிவிருத்தித் திட்டங்களை மக்களுக்காக முன்னெடுத்திருந்தார். குறிப்பாக பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான வரலாற்றைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனம் மற்றும் கந்தளாய் சோழீஸ்வரர் ஆலயம் போன்றவற்றை பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் முன்னின்று உழைத்திருந்தார்.

கௌரவ. அமரர். அ.தங்கத்துரை அவர்கள் எம்மைவிட்டு பிரிந்து 25 ஆண்டுகள் சென்றாலும் அவர் ஆற்றிய சேவைகள் இன்னும் அவரை நினைவுபடுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. அவருடைய இழப்பு எமது மக்களுக்கு பாரிய இழப்பாகும். இந்த நிலையில் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் அவருடைய நினைவுகளையும், சேவைகளையும் மீட்டுப் பார்க்கும் முகமாகவும், ஆவணப்படுத்தும் முகமாகவும் வெளியிடப்படுகின்ற 'இறவாப் புகழுடையோன்' எனும் மலர் மிகச் சிறப்பான முறையில் அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பாதங்களை பணிகின்றேன்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள்புரிவாராக.
நன்றி



**அமரர். அ.தங்கத்துரை அவர்கள் ஆலய வழிபாட்டின் போது...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பாவின் அன்புச் செல்வங்கள்

## எங்கள் அப்பா...

அப்பாவின் 25ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரை நினைவு கூரும் விதமாக அவரது உருவச்சிலை மற்றும் நினைவு மலர் வெளியிடும் முயற்சி அவரது ஊர்மக்களினால் மேற்கொள்ளப்படும் செய்தி அறிந்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அதனை மிகச் சிறப்பாக நடத்த பெருமுயற்சி எடுத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூதூர் கிளிவெட்டிக் கிராமத்தில் 1936 ஆம் ஆண்டு பிறந்த அவர் கிளிவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புலமைப் பரிசு பெற்று 1947 இல் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் சென்ற முதல் மாணவராவார். மாணவப் பருவத்தில் கல்வியில் இருந்த ஈடுபாட்டைப்போலவே விளையாட்டிலும் மிகுந்த ஆர்வம் உள்ளவராக விளங்கினார். தடகள விளையாட்டுகள் அனைத்திலும், டென்னிஸ் விளையாட்டிலும் பல வெற்றிகளையீட்டி பதக்கங்களையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரம் தாண்டுதல் போட்டி ஒன்றில் கலந்து கொண்ட போது தோள்பட்டை விலகல் ஏற்பட்டதிலிருந்து (Shoulder dislocation) அவர் எழுதும்போது கை நடுக்கம் எப்போதும் இருந்தது. யாழ்ப்பாணம் அரியாலை ஸ்டான்லி கல்லூரியில் 1952 இல் இணைந்து உயர் கல்வியை முடித்தபின் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் எழுதுவினைஞராக 1955 இல் நியமனம் பெற்று இரத்தினபுரியில் இரண்டு வருடங்கள், பின் கொழும்பு ரத்மலானை தலைமைக் காரியாலயம், அதன்பின் 1965 இல் பிரதம லிகிதராக சோமபுரம் ஆகிய இடங்களிலும் பணியாற்றினார். அப்போது இலங்கை எழுதுவினைஞர் சங்க உறுப்பினராக இருந்ததோடு கிளிவெட்டி மற்றும் அண்டைய மூதூர்க் கிராமங்களின் முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டார்.

1947 முதல் 1956 வரை மூதூர்த் தொகுதியில் பாராளுமன்றத்திற்கு ஓர் அங்கத்தவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார். மூதூர் தேர்தல் தொகுதியில் 60-65 வீத இஸ்லாமிய வாக்காளர்களும், 30-35 வீத தமிழ் வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டிருந்ததால் தமிழர் ஒருவரும் இத்தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக 1960 முதல் இரு அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மூதூர் தேர்தல் தொகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே போட்டியிடவேண்டும் என்ற முடிவை மூதூர் தமிழரசுக் கட்சியின் பொறுப்பாளர் திரு. அருளப்பு ரோச் டி வாஸ் மற்றும் கிளிவெட்டி கிராமசபைத் தலைவர் திரு.விநாயகமூர்த்தி ஆகியோர் முன் மொழிந்ததையும், அப்பாவை வேட்பாளராகத் தெரிவு செய்ததையும் கட்சியின் தலைமைப் பீடம் ஏற்றுக் கொண்டதையடுத்து அவர் தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1970 இலிருந்து 1977 வரை மூதூர் பாரளுமன்ற உருப்பினராகச் சேவையாற்றினார். அப்போது 34 வயது இளைஞரரான அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தலைவராகவும், அக்கட்சியின் மலையக தோட்டத் தொழிலாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

1977 தேர்தலில் மூதூர் தொகுதி மீண்டும் ஓர் அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டு, சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதால் மூதூர் தொகுதியில் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாததாக்கப்பட்டதன் காரணமாக மீண்டும் மக்களுக்காக பாராளுமன்றில் சேவையாற்றும் வாய்ப்பினை அவர் இழந்தார். இந்நிலையில் 1978 ஆம் ஆண்டு அவரது சொந்த ஊரான கிளிவெட்டி கிராமத்தில் இடம்பெற்ற ஒரு வன்முறைச் சம்பவத்தில் அவரையும் தொடர்புபடுத்தி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு திருக்கோணமலை, மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் எட்டு மாதங்கள் சிறையில் வைக்கப்பட்டு பின் விடுதலையானார். பாராளுமன்ற உறுப்பினர் பதவி நிறைவடைந்ததும் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயில ஆரம்பித்து 1980 இல் சட்டத்தரணி ஆனார்.

1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவர் பதவியையும், சட்டத்தரணியாகப் பணியாற்றும் தகுதியையும் இழந்த போதிலும் தொடர்ந்தும் திருக்கோணமலையிலேயே இருந்து மக்களுக்கான சேவையில் ஈடுபட்டார்.

1984 இல் உலகம் முழுவதிலும் இருந்து பங்கேற்பாளர்கள் கலந்து கொண்ட சிறுபான்மை இன ஒடுக்குமுறை பற்றிய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கப் பயணம் செல்ல விமான நிலையம் சென்றபோது இலங்கை நிலவரத்தை அமெரிக்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியப்படுத்தி விடுவார் என்ற சந்தேகத்தில் CID ஆல் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் அவர் நினைத்தவாறு அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டார்.

1985 இல் திருக்கோணமலை மற்றும் வடக்கு கிழக்கு வாழ் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதையும், காணாமல் ஆக்கப்படுவதையும் Amnesty International, சர்வதேச ஊடகங்கள் மற்றும் வெளிநாட்டு உயர்ஸ்தானிக அலுவலகங்களுக்கு அறிவித்து அவர்களை விடுவிப்பதற்கான அழுத்தங்களை இலங்கை அரசுக்கு கொடுத்ததால், தவறான தகவல்களை பகிர்வதாக குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டு திருக்கோணமலை கோட்டை இராணுவ முகாமில் வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். அந்நேரத்தில் இராணுவத்தினர் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அப்பாவும் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற வதந்தியும் திருமலை மக்கள் மத்தியில் பரவியது.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அப்பாவைப் பார்ப்பதற்காக எங்கள் பெரியப்பாவுடன் நாங்கள் இராணுவ முகாமிற்கு செல்வோம். அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்த போது அப்பாவின் மூத்த சகோதரர் குடும்பத்தினர் மற்றும் அம்மாவின் சகோதரி குடும்பத்தினர் எங்களுக்கு பேருதவியாக இருந்தனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்களுக்கு மேல் குற்றம் நி'ரூபிக்கப்படாமல் இராணுவ சிறையில் அடைத்து வைக்கப்பட முடியாதென்ற சட்டத்திற்கமைய 90 ஆவது நாள் அப்பா விடுவிக்கப்பட்டார். விடுதலை ஆனபின் தொடர்ந்தும் அவ்விடயங்களை அம்பலப்படுத்துவார் என்று கருதி அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு அவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்படலாம் என்ற தகவலை அப்பாவின் நலன் விரும்பி அதிகாரிகள் சிலர் ரகசியமாக அவரிடம் தெரிவித்து நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தியதை அடுத்து குடும்பத்தினருடன் இந்தியா செல்லவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது.

இந்தியா சென்றதும் சென்னையில் தந்தை செல்வாவின் புதல்வர் திரு. சந்திரஹாசன் அவர்களினால் இந்தியாவில் அகதிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டிற்காக சென்னையில் நடத்தப்படும் ஈழ ஏதிலியர் கழகத்தில் (OfERR) இணைந்து செயலாற்றினார். அப்போது பல இந்திய அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் மூத்த ஊடகவியலாளர்கள் பலரையும் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார். திரு.சந்திரஹாசன் அவர்களுடன் இணைந்து குறிப்பாக தமிழக அரசியல் தலைவர்களான திரு. கருணாநிதி, திரு. ஜி.கே.மூப்பனார், திரு. திருநாவுக்கரசு, திரு. வைகோ மற்றும் தேசிய அரசியல் தலைவர்களான திரு. வாஜ்பாய், திரு. சந்திரசேகர், திரு. நம்பூதிரிபாத், திரு. சுப்பிரமணியம் சுவாமி, திரு.மணிசங்கர் ஐயர் போன்றோரையும் அடிக்கடி சந்தித்து அவர்களுக்கு இலங்கைத் தமிழர் நிலைமைகளை எடுத்துரைத்தார்.

சென்னையில் தமிழ்நாடு மற்றும் இந்திய அரசினால், இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட வீடு மற்றும் பிற வசதிகள் அவருக்கும் வழங்க முன்வரப்பட்ட போதிலும் அப்பா அவற்றை ஏற்க மறுத்து சென்னை அண்ணா நகரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் நாங்கள் குடும்பத்துடன் வசிக்க ஏற்பாடு செய்தார். அங்கு இருந்த போது இலங்கையில் வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு வெளிநாடுகளில் தஞ்சம் புகுவதற்காக வந்த பலரையும் அப்பா எங்களுடன் தங்க வைத்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளை அவர்கள் வெளிநாடு செல்லும்வரை ஏற்படுத்திக் கொடுத்தார்.

1988 இல் அப்பா மீண்டும் நாடு திரும்பி தொடர்ந்தும் மக்கள் பணியில் ஈடுபட்டார். அவர் முன்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது பணியாற்றிய பல அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும் நல்ல நட்பையும், தொடர்பையும் பேணி வந்ததால் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத காலங்களில் கூட அவரால் தொடர்ந்து இவ்வாறு சேவையாற்ற முடிந்தது. பொதுச் சேவையில் ஈடுபடுபவர் பணியில் இல்லாத வேளைகளிலும் கூட தொடர்ந்து சேவை செய்ய வேண்டும், செய்ய முடியும் என்று அடிக்கடி கூறுவார். அதை எண்ணத்தில் மட்டுமல்லாமல் செயலிலும் நிரூபித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பின்படி, இலங்கையில் 160 தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. மீண்டும் 1989 இல் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு மாற்றப்பட்டு 22 பல அங்கத்தவர்களைக் கொண்ட தேர்தல் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டபோது 1989 தேர்தலில் மூதூர் தேர்தல் தொகுதி, திருக்கோணமலை தேர்தல் மாவட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. 1994 இல் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு அம்மாவட்டத்தில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டார். அவர் இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர் ஆற்றிய பணிகளுக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த அதேவேளையில் மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பிடம், கல்வி, வேலை வாய்ப்பு, கிராம நகர அபிவிருத்தி ஆகியவை தொடர்ந்து நடைபெற வேண்டும் எனபதை வலியுறுத்தினார். அவ்வாறு செய்யாவிடில் எமது சமூகம் கல்வியறிவு மற்றும் கலாச்சாரத்தை இழந்த சமூகமாக ஆகிவிடும் என்ற தொலைநோக்குடன் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பது மூலமே சமூகத்தை மேம்படுத்த முடியும் என்பதே அப்பாவின் முழுமையான நம்பிக்கையாக இருந்தது. தனக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் பெரும்பகுதியை பாடசாலை கட்டிடங்கள் அமைப்பதற்கு ஒதுக்கினார்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்காக புதிய நியமனங்கள் வழங்கப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்த பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாக்கப்பட்டன. வெளிநாட்டுத் தூதரகங்கள், நலம்புரி அமைப்புக்கள் என்பவற்றின் அனுசரணைகளைப் பெற்று பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளின் தொடர்ச்சியான திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுத்தார். பல காரணங்களால் பாடசாலைப் படிப்பை இடைநிறுத்திக் கொள்ளும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்து இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார். குடியிருக்க வீடற்ற மக்களின் தேவைகளை நிறைவேற்ற கணேசபுரம், வரோதயநகர் ஆகிய இடங்களில் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கினார். இவற்றில் எல்லா வசதிகள் அடங்கிய மூவின மக்களுக்கான 100 வீடுகளைக் கொண்ட கணேசபுரம் வீடமைப்பு நிறைவு பெற்றது. அத்துடன் அரச உத்தியோகத்தர்களுக்கான 5 வருட சம்பள முற்பணக் கடனுடன் கூடிய வீடமைப்புத் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்த ஆவன செய்தார். போக்குவரத்து வசதிகளின்றி இருந்த கிராமங்களை புதிய பாதைகளை அமைத்து இணைத்தார். சீரழிந்து கிடந்த பல பாதைகள் திருத்தியமைக்கப்பட்டன.

இதன் மூலம் மக்கள் இலகுவாகவும், குறைந்த நேரத்திலும் பயணங்கள் செய்ய வழிவகை செய்யப்பட்டது. மக்களின் அறிவுவளர்ச்சிக்கும், பொழுதுபோக்கிற்குமாக பல நூல் நிலையங்களும், சனசமூக நிலையங்களும் அமைக்கப்பட்டன. மின்சார வசதிகள் இன்றி இருந்த பல கிராமங்களில் அவ்வசதியை ஏற்படுத்தினார். வன்செயலால் பாதிக்கப்பட்டு உழைக்கும் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தார். பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் இளைஞர் யுவதிகளின் விடயத்தில் தலையிட்டு அப்பாவிகளின் விடுதலைக்கு உதவினார். குடிநீர் வசதியற்ற கிராமங்கள் பலவற்றிற்கு நீர் கிடைக்க ஆவன செய்தார். உவர்மலை, வரோதயநகர் போன்ற நில அமைப்பில் உயர்வான இடங்களில் இருபெரும் நீர்த்தாங்கிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் நிறைவு பெறாறிருந்தன.

மக்களின் சுகாதார, வைத்திய வசதிகளை உயர்த்துவதற்காக செல்வநாயகபுரம், நிலாவெளி, சம்பூர், மணற்சேனை, கிளிவெட்டி ஆகிய கிராமங்களில் வைத்தியசாலைகளை அமைத்துக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் கப்பல்துறையில் வைத்தியசாலைக்கான கட்டிடப் பணிகள், திருக்கோணமலை தள வைத்தியசாலையினை பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தும் பணிகள் நடைபெற்று மேலும் ஏனைய பல வேலைத்திட்டங்கள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், 1997 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ம் நாள் மாலை திருக்கோணமலை நகரில் உள்ள சிறீ சண்முக வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டிடத்தைத் திறந்து வைத்துவிட்டு வெளிவந்த சமயம் படுகொலை செய்யப்பட்டார். அத் துயரச் சம்பவத்தில் அக்கல்லூரியின் அதிபர் திருமதி ராஜேஸ்வரி தனபாலசிங்கம், நாமகள் வித்தியாலய அதிபர் திரு. ஜோசப், கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் உப அதிபர் திரு. சீவரத்தினம், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு.கணேசலிங்கம், தொழில்நுட்பவியளாளர் இரட்னராஜா ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் இந்நாளில் நினைவு கூர்ந்து வணங்குகிறோம்.

சமூக சேவையாளர்கள் மக்களோடு மக்களாக இணைந்து வாழவேண்டும் என்பதில் அப்பா மிக உறுதி பூண்டிருந்தார். பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும் பேரூந்துகளிலும், புகையிரதங்களிலும் பயணங்களை மேற்கொண்டார். இன, மத வேறுபாடு இன்றி சேவைகள் செய்ததால் அனைத்து சமூக மக்களினதும் அபிமானம் பெற்றிருந்தார். மிகவும் நட்பாகப் பழகக் கூடியவர் என்பதால் எவருடனும் அவரால் இலகுவாக இணைந்து செயல்பட முடிந்தது. அப்பா மிகவும் எளிமையானவர். எங்களுக்கும் எளிமையான வாழ்க்கையையே போதித்தார். பணம் சேர்ப்பதிலோ, ஆடம்பர வாழ்க்கை வாழ்வதிலோ அவருக்கு எப்போதுமே நாட்டம் இருந்ததில்லை.

மிக நேர்மையான அரசியல்வாதி என்று பெயரெடுத்தார். தனக்கென்று சொத்து, செல்வம் சேர்க்காத அரசியல்வாதிகளில் ஒருவர் அவர் என்பதையும், நாங்கள் அவரது குடும்பத்தினர் என்பதையும் எங்களால் என்றென்றும் கர்வத்துடன் சொல்ல முடியும். திருக்கோணமலை இராஜவரோதயம் வீதியில் எங்கள் அம்மாவிற்கும், அவரது மூத்த சகோதரிக்கும் அவர்களது தந்தையார் கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலேயே நாங்கள் அங்கு இருக்கும் வரை வசித்தோம். அப்பாவுக்கு சொந்தமாக எங்கும் வீடு இருக்கவில்லை.

அவர் எங்களிடம் மிகவும் அன்பாகவும் அதேசமயத்தில் கண்டிப்புடனும் இருந்தார். எங்களை சென்னையில் விட்டுவிட்டு அவர் இலங்கை திரும்பிய போது ஒவ்வொரு வாரமும் எங்களுக்கு கடிதம் எழுதினார். "என் அன்புச் செல்வங்களுக்கு" என்று எங்களை விளித்தே அவரின் கடிதங்கள் ஆரம்பிக்கும். எங்கள் மூவரிடமும் நற்பண்பு, நல்லொழுக்கம், நற்குணம், பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு என்பவற்றை மிகக் கண்டிப்பாக அறிவுறுத்தினார். அத்துடன் தன்னால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கான மூலதனத்தை மட்டும் தரமுடியுமே தவிர வேறு எந்த பொருளாதார வசதிகளையோ, சொத்துக்களையோ தர முடியாது என்றும் கூறுவார். எங்களிடம் பேசும்போதெல்லாம் கல்வியின் முக்கியத்துவத்தையே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருப்பார்.

அப்பா தனது தாய் தந்தை, சகோதரர்கள் மீது அளவு கடந்த அன்பும், பாசமும் கொண்டவராக இருந்தார். அப்பா திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது அப்பாவின் மூத்த சகோதரர் தனது வீட்டிலேயே அலுவலகம் அமைத்துக் கொடுத்து அவர் அங்கேயே தங்கியிருக்கவும் ஏற்பாடு செய்தார். டென்மார்க்கில் இருந்த அவருடைய இளைய சகோதரரும் அப்பாவின் மேல் மிகுந்த பாசமும், மரியாதையும் உள்ளவர். அப்பா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும், இல்லாத போதும் அவரது பொருளாதார நிலையை உணர்ந்து ஆசையப்பா சமயங்களில் அவருக்கு பண உதவி செய்தார் என்பதையும் நன்றியுடன் நினைவு கொள்ள விழைகிறோம்.

அப்பா நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தகங்கள் வாசிப்பதிலேயே செலவிட்டார். திருவள்ளுவரின் திருக்குறளின் பெருமையை எடுத்துரைக்கும்போது "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற குறளை குறிப்பாக எடுத்துரைப்பார். மகாகவி பாரதியார் பற்றியும் அவரது கவிதைகளைப் பற்றியும் பேசும்போது "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற கவிதையையும் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால் அஞ்சியஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்ற கவிதையையும் அடிக்கடி மேற்கோள் காட்டுவார்.

மகாத்மா காந்தியடிகள் பற்றி பாரதியார் எழுதிய "வாழ்க நீ! எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறி கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க! வாழ்க!" என்ற பாடலையும் குறிப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சமயநூல்கள் குறிப்பாக இந்து சமய வேதங்கள், பகவத் கீதை, பௌத்த நூல்கள், பைபிள் மற்றும் குர்ஆன் ஆகிய பலவற்றையும் வாசிப்பதில் ஆர்வம் காட்டியது மட்டுமன்றி "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற வாசகத்தையும் அடிக்கடி உச்சரிப்பார். க்ஷேக்ஸ்பியர், சார்ல்ஸ் டிக்கன்ஸ், ரொபேர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன், லியோ டொல்ஸ்டோய், ஜேன் ஒஸ்டின் போன்றவர்களின் எழுத்துக்கள் பற்றியும் எடுத்துரைப்பார். அவர் எங்களுடன் பேசும் போது அடிக்கடி கூறும் மேற்கோள்கள் இவை:

"Everything must have a place & everything must be in its place."

"Work while you work, play while you play."

"Heights by great men reached and kept were not attained by a sudden flight.

But they, while their companions slept, were toiling upward in the night. "

"I may not agree with what you say but I will defend to the death your right to say it."

பொழுதுபோக்கு என்ற சொற்பதனை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. செய்வதற்கு ஏராளமான வேலைகளும், அவற்றைச் செய்வதற்கான நேரப் பற்றாக்குறையும் இருக்கும் போது ஏன் பொழுதைப் போக்க வேண்டும் என்று வினாவுவார்.

மகாத்மா காந்தியின் தியாகத்துடன் கூடிய அகிம்சை வழி போராட்டம், ஜவஹர்லால் நேருவின் புலமை, இராஜாஜியின் இலக்கியத்திறன் மற்றும் காமராஜரின் நேர்மை அரசியல் போன்றவற்றை எங்களிடம் எடுத்துரைத்தார். மற்றும் நிறவெறிக்கெதிராக போராட்டங்களை மேற்கொண்ட மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றவர்களின் வரலாறுகளையும் குறிப்பிடுவார்.

தந்தை செல்வா அவர்களினது நேர்மையான பாரபட்சமற்ற அரசியல் போக்கையும் சிங்களத்தலைவர்களும், சிங்களப் பொதுமக்களும் கூட அவரின் மேல் வைத்திருந்த பெருமதிப்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் கூறுவார். திரு. அமிர்தலிங்கம் அவர்களின் ஆளுமை மற்றும் மொழிவன்மை பற்றியும் புகழ்ந்து பேசுவார். முன்னாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கதிரவேலுப்பிள்ளை அவர்களினது அசாதாரண சிந்தனைத் திறன் பற்றியும், திரு. கொல்வின் ஆர் டி சில்வா அவர்களின் மிதவாதப்போக்கு பற்றியும் எங்களிடம் எடுத்துக் கூறுவார்.

அவர் வாழ்ந்த வாழ்க்கைமுறை மற்றும் கற்றுக் தந்த அறிவுரைகள் மூலமாக நாங்கள் தெரிந்து கொண்ட, புரிந்து கொண்ட விடயங்கள் ஏராளம். அவருக்கு மக்களாகப் பிறந்தது எங்கள் அதிர்'டம் என்றே கருதுகிறோம். தனது தொடர்பணி காரணமாக எங்களுடன் மிகக் குறைந்த அளவே நேரம் செலவிட முடிந்த போதிலும் தனது தொகுதி மக்களின் மேம்பாட்டுக்காக கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் கிராம, நகர அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர் இடைவிடாத அர்ப்பணிப்புடன் செயற்பட்டது கண்டு நாங்கள் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு அவர் வாழ்ந்த வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு என்று பலரும் கூறுவது எங்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்நினைவுநாள் நிகழ்வின் மூலம் அவரது அரசியல் வரலாற்றை இக்கால மற்றும் வருங்கால இளைஞர்களுக்கும் தெரியப்படுத்த எடுக்கப்படும் இம்முயற்சியை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம்.

அப்பாவின் அன்புச் செல்வங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சா. செ. சந்திரகாசன்
சட்டத்தரணி,
OfERR நிறுவன ஸ்தாபகர்

## மண்ணையும், மக்களையும் நேசித்த உன்னத மனிதனின் வரலாறு கல் மேல் எழுத்தே!

திருமலை மண்ணின் துருவ நட்சத்திரமாய் ஒளி வீசிய உன்னத மனிதர் சகோதரர் அமரர் அ. தங்கத்துரை எம்பி அவர்கள். பிரதேச வேறுபாடுகளைக் களைந்து வடகிழக்கின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும், இலங்கை மண்ணில் வாழும் தமிழ் பேசும் சமூகத்தின் உரிமைகளுடன் கூடிய நல்வாழ்வு நாடி நாளும் உழைத்த நல் உள்ளங்கொண்ட உன்னத தமிழன் என்றால், சகோதரர் அமரர் அ. தங்கத்துரை என்பதை என்றும் அறைந்து கூற கடமைப்பட்டவனாக நான் இருக்கின்றேன்.

அவரைப் பார்த்த நாள் முதல் அவர் மரணிக்கும் வரை எங்கள் நட்பு நாளும் தொடர்ந்த ஒன்றாகவே இருந்து வந்தது. வாழ்வாங்கு வாழ்ந்த உன்னத தமிழனாய் எனது விரல் என்றும் சகோதரர் அமரர்அ.தங்கத்துரை அவர்களைச் சுட்டிக்காட்டத் தவறாது. இலங்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என அரசியல் களமாடிய அமரர் அ. தங்கத்துரை ஆற்றிய மக்கள் பணி வரலாற்றில் என்றும் தவறாது பேசப்படும்.

1983 யூலை கலவரத்தைத் தொடர்ந்து தாய் மண்ணை விட்டு புலம் பெயர்ந்து தமிழகத்தில் ஏதிலியாய் வாழும் அவலம் ஏற்பட்டது. ஏதிலிகளாய் இன்னலுற்று நின்ற ஈழத்தமிழர்களின் எதிர்கால நலன் நாடி அவர்களுக்கு வழிகாட்ட அமைப்பொன்றின் தேவை ஏற்பட்டது. அதற்கென கைகோர்த்துச் செயல்பட்ட ஈழத் தமிழரில் என்னை கவர்ந்த உறவே அமரர் அ. தங்கத்துரை.

38 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மண்ணில் வாழும் ஈழத் தமிழ்ச் சொந்தங்களுக்கான வழிகாட்டும் அமைப்பாக சேவயாற்றி வரும் "ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தினை" உருவாக்க என்னோடு தோள் கொடுத்து உழைத்த அமரர் அ.தங்கத்துரை அவர்களை என்றும் என்னால் மறந்துவிட முடியாது.

புலம்பெயர்ந்து தமிழக மண்ணில் வாழ்ந்த ஈழத் தமிழர் நலன் நாடியும், தாய் மண்ணில் வாழ்ந்த ஈழத்தமிழ் உறவுகளின் உரிமைகளுக்காவும் இந்திய மண்ணின் நிர்வாகத் தலைநகரான புது டெல்லியில் எம்முடன் இணைந்து சேயைாற்றிய சகோதரர் அ. தங்கத்துரை அவர்களின் கடின உழைப்பை கண்ணாரக் கண்டு உணர்ந்தவன் நான். இந்திய தேசிய கட்சிகளின் தலைவர்களையும், ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களையும் நேரில் கண்டு தமிழ்க மண்ணில் வாழும் ஏதிலியர் துயர்களைந்து, ஈழத்தமிழர்கள் இன்னல் தீர்க்கவும் உதவுமாறு கோரிய சந்தர்ப்பங்களில் எல்லாம் எம்முடன் அவர் இணைந்து சேயைாற்றியதை இங்கு கூற நான் கடமைப்பட்டுள்ளேன்.

1994 இல் நடந்த இலங்கை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், திருமலை மாவட்டத்தில் இருந்து 22,409 தமிழ் வாக்காளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பு வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராக, மீண்டும் தேர்வானார் சகோதரர் அமரர் அ.தங்கத்துரை அவர்கள்.



நீண்ட இடைவெளிக்கு பின் நாடாளுமன்றத்திற்கு M.P ஆக தேர்வான அமரர் அ.தங்கத்துரை அவர்களின், இனவாதம் தவிர்க்கும் மக்கள் நல நோக்கை உணர்ந்த இலங்கை நாடாளுமன்றம், ஆளுமைமிக்க இலங்கை நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழுவின் தலைவர் பொறுப்பை அவருக்கு வழங்கிக் கௌரவித்ததே அவரின் திறமைக்கும், மக்கள் பணிக்குமான அங்கீகாரம்.

தாய் மண்ணில் வாழும் தமிழர் நலன் காக்க இந்தியாவில் இருந்து 1988 இல் நாடு திரும்பிய அவர் 05.07.1997 இரவு 7 மணி வரை தமிழர் நலன் நாடியே உழைத்து உயிரை ஈந்தார். அடுத்தவரை வருத்தி வாழ்வதை விட, அடுத்தவர் நலன் நாடி வாழ்வதே வாழ்க்கை என்பதை எமக்கு உணர்த்தி மறைந்த, அன்பு உறவாம் அமரர் அ. தங்கத்துரை அவர்களின் வாழ்வு, உலகு தழுவி பரந்து வாழும் ஈழத் தமிழ்ச் சொந்தங்களுக்கு நல்ல வரலாற்றுப் பாடமாய் நிலைத்து நிற்கும், அன்புருவே உங்களை நினைத்து நெகிழ்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970ஆம் ஆண்டு
தேர்தல் பிரச்சாரத்தில்
உரையாற்றும் போது...






1983ஆம் ஆண்டு அமெரிக்கா நாட்டிற்கான
சுற்றுப்பயணத்தின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்களின் நினைவு நாள் செய்தி

# மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர் தங்கத்துரை

தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அன்றைய திருக்கோணமலை மாவட்ட சபையின் தலைவருமான அமரர் திருவாளர் அருணாசலம் தங்கத்துரை அவர்களின் 25வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுக்கு கனத்த இதயத்துடன் இச்செய்தியினை வழங்குகின்றேன்.

மறைந்த திருவாளர் அருணாசலம் தங்கத்துரை அவர்கள் 1970 ஆண்டு, அன்று இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் தொகுதியிலிருந்து தமிழரசுக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் அவருடன் நான் மிகவும் நெருக்கமாகப் பழகி வந்துள்ளேன். 1977 ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் வரை அவர் மூதூர் தொகுதியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகக் கடமை புரிந்தார். அவருடைய மறைந்த தந்தை பெரியார் மயில்வாகனம் அருணாசலம் அவர்களுடனும் மறைந்த திருவாளர் தங்கத்துரையின் ஏனைய குடும்பத்தினருடனும் எனக்கு மிக நெருங்கிய உறவு இருந்து வந்துள்ளது. அவர்கள் அனைவருடனும் நான் மிகவும் நெருக்கமாகப் பழகியிருக்கின்றேன். 1981 ஆம் ஆண்டு மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டு அச்சபைகளுக்கான தேர்தல் நடைபெற்ற பொழுது அமரர் தங்கத்துரை அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்துக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் அத்தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பமின்றி இருந்த போதிலும், என்னுடைய கட்டாயத்தின் நிமித்தம் அவர் அத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அமரர் தங்கத்துரை அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்தின் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அமரர் திருவாளர் தங்கத்துரை அவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் மிகவும் நெருங்கிய தொடர்பு எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவர் அதிக கவனஞ் செலுத்தி மக்களுக்காகக் கடுமையாக உழைத்தார்.

அவரது அகால மரணம் தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அவரை நினைவுகூர்ந்து நடைபெறுகின்ற இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று, எல்லோரும் அன்னாரை நினைவுகூர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுவதையிட்டு நான் திருப்தியடைகின்றேன். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கோணேசப் பெருமானையும் பத்திரகாளி அம்பாளையும் வேண்டுகின்றேன்.

நன்றி

இரா. சம்பந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவை.சோ.சேனாதிராசா
தலைவர்,
தமிழ் அரசுக்கட்சி
யாழ்ப்பாணம்.
30.05.2022

## தமிழின விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த தலைவர் அமரர். அருணாசலம் தங்கத்துரை

திருக்கோணமலை மூதூர் தந்த தலைவன் தங்கத்துரை பழம் பெரும் தமிழர் கிளிவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழறிவும் தலைமைப் பண்புகளும் ஆளுமையும் கொண்ட மக்கள் விடிவுக்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து காட்டிய உதாரண மனிதனை இழந்து விட்டோம் என்று நெஞ்சில் இருத்தி நினைவு கூரும் நன்றியுள்ள மக்கள் வரலாற்றில் அவரைப் பதிவு செய்ய விரும்புவது இயல்பேயாகும்.

இளமையில் கல்வியிலும், அரசுத்துறை நிர்வாக முகாமையிலும் முன்னணி வகித்துப் பெருமை பெற்றிருந்தார். மூதூர் கிளிவெட்டிப் பிரதேசத்திலும் திருமலையிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் நண்மதிப்புப் பெற்றிருந்தவராய் விளங்கினார். அரசுத்துறைப் பணியிலிருந்த காலத்தில் சட்டத்துறையிலும் பயின்று அறிவு கொண்டிருந்தார். மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் கல்வி, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராகவும், சைவ மத நம்பிக்கை மிக்கவராகவும், அரசியல் அறிவு, ஆற்றல், மக்கள் விடுதலையில் கொள்கைப் பற்றுக் கொண்டவராகவும், தலைமைத்துவ பண்புகள் நிறைந்தவராகவும் விளங்கினார்.

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் 1970ல் தமிழரசுக் கட்சி சார்பிலும், 1994 காலங்களில் த.வி.கூட்டணி சார்பிலும் தமிழர் தலைவர் திரு.சம்பந்தன் அவர்களுடன் திரு.தங்கத்துரை அவர்களும் திருமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்பொழுது திருமலைத் தேர்தல் தொகுதி இரட்டை உறுப்பினர் தொகுதியாகவிருந்தது. 1981 காலப்பகுதியில் மாவட்ட அபிவிருத்திச்சபை முறையிலிருந்தபொழுது திருக்கோணமலை மாவட்டத்திற்கு திரு.தங்கத்துரை அவர்களே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் படி தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிணமித்திருந்தன. “ஐரோப்பியரிடம் போரில் இழந்த சுதந்திரத்தை, தமிழீழத்தை மீளப் பெறுவது” எனும் தீர்மானத்தை வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேற்றினர்.

ஒரு கட்டத்தில் இலங்கை அரசியலமைப்புக்கு சத்தியப்பிரமாணம் செய்வதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டதனால் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய அபிவிருத்திச் சபை முதலான சபைகளின் உறுப்பினர்களும் இலங்கை அரசியலமைப்புக்கு சத்தியப் பிரமாணம் செய்வதில்லை என்பதால் பதவிப் பொறுப்புக்களிலிருந்து விலகியிருந்தனர். அப்பொழுது திரு.தங்கத்துரை அவர்களும் சத்தியப்பிரமாணம் செய்யாமல் பதவிப் பொறுப்பிலிருந்து விலகியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இனக்கலவரங்கள் ஏற்படுத்தப்பட்ட காலங்களில் குறிப்பாக 1977 காலப்பகுதியில் திரு.தங்கத்துரை அவர்களும் தமிழரசு, கூட்டணியினரும் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்து அவர்கள் கப்பல்களில் தங்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் வரை கொழும்பு பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்கள் முகாம்களிலிருந்து உதவிகளைப் புரிந்தவர்களுடன் தீவிர பணியாற்றியிருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் அலுவலகங்கள் கொழும்பில் இயங்கிய பொழுது திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி, தங்கத்துரை முதலானோர் ஒரே வீட்டில் தங்கியிருந்து அந்த அலுவலகங்களில் நானும் ஒன்றாக இருந்து அரசியலில் பணியாற்றியிருக்கிறோம். அப்பொழுது திரு.தங்கத்துரை அங்கிருந்து நிர்வாகப் பொறுப்புக்களை முழுநேரமும் வகித்து வந்தார். அத்தோடு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தொழிற்சங்கப் பணிகளுக்கு குறிப்பாக மலையக தொழிலாளர் மக்கள் மத்தியில் இலங்கைத் தொழிலாளர் கழகத்திற்கும் திரு.தங்கத்துரை பொறுப்பு வகித்திருந்தார்.

1983 காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமிழினப் பிரச்சனை தொடர்பில் இந்தியாவில் தங்கியிருந்த பொழுதும் பிற நாடுகளில் பேச்சுக்களில் ஈடுபட்ட பொழுதிலும் திரு.தங்கத்துரையவர்களும் குறிப்பாக இந்தியாவில் தங்கிப் பங்கு கொண்டிருந்தார்.

1983 காலப்பகுதி இலங்கையில் இனக்கலவரங்களும், தமிழ் இனப்படுகொலைகளும் தீவிரமடைந்த காலம். பாரதப் பிரதமர் இந்திராகாந்தியே "இலங்கையில் நடப்பது தமிழினப் படுகொலை தான்" என்று இந்திய மாநிலங்கள் அவையில் குறிப்பிட்ட காலம். இலங்கை மீது இந்தியா தலையீடு ஏற்பட்ட காலம்.

1979ல் பிரதமர் மொராஜி தேசாயைச் டெல்லியில் சந்தித்த பின் அன்னை இந்திரா அவர்களை திரு.பழநெடுமாறனுடன் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தலிங்கம் முதலில் சந்தித்தார். அப்பொழுது ஏற்பட்ட நட்பும் 1983ல் சந்தித்த பொழுது ஏற்பட்ட அரசியல், இராஜதந்திர உடன்பாடுகளும் இலங்கைத் தமிழினப் பிரச்சனைக்கு மூலோபாயங்களை வகுத்தன.

1971 காலப்பகுதியில் வங்கதேசம் விடுதலை பெற்ற மூலோபாயம், இராஜதந்திரோபாயம் இலங்கை இனப்பிரச்சனையிலும் கையாளும் உத்திகள் தீர்க்கம் பெற்றிருந்தன. வங்கதேச விடுதலைக்கு "முக்தி பனி" விடுதலை அமைப்புப் போன்று 1983ன் பின்னர் பல ஆயிரம் எங்கள் தமிழ் இளைஞர்களும் போர்ப் பயிற்சி பெற்றனர்.

1984 ஒக்டோபர் 31 அன்று பஞ்சாப் பிரச்சனையால் பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்டார். அன்னை இந்திராவின் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு எம் தலைவர்கள் டெல்லிக்கு சென்ற வேளை திரு.அமிர்தலிங்கம் அண்ணர் குறிப்பிட்டதைப் பாருங்கள், "விதிகெட்ட தமிழன் கதியற்றுப் போனான். இந்தப் பயங்கரப் படுகொலை நடந்திராவிட்டால் எங்கள் தமிழர் வரலாறே வேறு விதமாக இருந்திருக்கும்" என்பது தான். இலங்கைத் தமிழர்களுக்கும் ஒரு வரலாற்றுச் சோகமாகவேயிருந்துவிட்டது. பாரதப் பிரதமரும் - அமிர்தலிங்கம் அண்ணரும் இலங்கைத் தமிழர் இனப்பிரச்சனைக்கு வகுத்த மூலோபாயமும் திசைமாறிச் செல்லும் நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலை தொடர்ந்ததும் 1989ல் இந்திய - இலங்கை உடன்படிக்கை ஏற்பட்டதுமான காலம். இவ்வரலாற்று நிகழ்வுகளை இச்சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய வேண்டும் என எண்ணுகிறேன்.

1989ல் தலைவர் அமிர்தலிங்கத்தை இழந்தோம். 1991ல் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியையும் பாரதம் இழந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் இலங்கைக்கு அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் என எம் இனப்பிரச்சனைக்குத் தீர்வையொட்டி முன்னெடுக்கக் காரணமான பிரதமர் ராஜீவ் காந்தியை நாமும் இழந்தோம். ஆனாலும் இந்தியத் தலைவர்களோ - இலங்கைத் தமிழர்களோ 13ஆவது திருத்தச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு அப்பால் சென்று ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்தியா உட்பட நாமும் அந்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறோம்.2021,2022களில் மனித உரிமைப் பேரவையில் "இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வுக்கு 13ஆம் திருத்தம் உட்பட அதற்கு அப்பால் சென்று அதிகாரங்கள் பகிரப்படும் நிலை ஏற்பட வேண்டும்" என இந்தியப் பிரதிநிதியே அறிவித்தமையை குறிப்பிட்டுச் சொல்லலாம்.2015 மார்ச் 13ம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாரதப் பிரதமர் மோடி அவர்களும் "இவ்வாறான பிரச்சனைகளுக்கு கூட்டுறவு அடிப்படையிலான சமஷ்டி தீர்வே (Co-operative Federalism) தன்னுடைய விருப்பம்" என்று குறிப்பிட்டமையை சுட்டிக்காட்டலாம்.

தமிழினப் பிரச்சனை தீர்க்கப்படாதமையால் 2009 வரை உக்கிரமடைந்த தமிழின விடுதலைப்போரில் இனத்தலைவர்களை இழந்தோம். ஆயுதப் போரில் ஈடுபட்ட தலைவர்களை இழந்தோம். இலட்சக்கணக்கான மக்களை இழந்தோம். எம் தமிழ் இனத்திற்கும், இந்நாட்டிற்கும் இன்னும் விடிவோ எமக்கு விடுதலையோ ஏற்படவில்லை என்பது தான் துயரம்.

1989 காலப்பகுதியில் திரு.அமிர்தலிங்கம் அவர்கள் இழப்பின் காரணமாக பாராளுமன்றத்தில் வெற்றிடம் ஏற்பட்ட பொழுது திருவாளர்கள் ஆனந்த சங்கரி, நீலன் திருச்செல்வம் ஆகியோருடன் திரு.தங்கத்துரை முதலானோர் முன்னின்று மாவை சேனாதிராசாவே அந்த வெற்றிடத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்று தீர்மானித்திருந்தனர் என்பது மட்டுமல்ல அவர்களும் நானும் முழுமனதுடன் ஒன்றுபட்டு மக்கள் மத்தியிலும் அரசியல் கடமைகளை நிறைவேற்றினோம் என்பது தான் வரலாறு.

இத்தகைய பின்னணிகளைக் கொண்ட திருமலை மாவட்டம் கோணேஸ்வரம் சைவம், பௌத்தம், கிருத்துவம்,முஸ்லீம் மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பது இன்னொரு முக்கியமிக்கதாய் விளங்குகிறது. ஆனால் சிங்கள அரசுகள் பௌத்த சிங்களமயமாக்கும் அரசியல் திட்டத்துடன் திருமலைப் பிரதேசத்தில் திட்டமிட்ட பௌத்த சிங்களக் குடியேற்றங்களை அரங்கேற்றி வருவதுதான் இந்நாட்டின் பிரச்சனைகளுக்குக் காற்கோளாகும். இதன் மூலம் தமிழர் பிரதேசங்களில் தமிழினக் குடிப்பரம்பலை மாற்றி, பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவ அரசியல் ஆதிக்கத்தையும் ஆட்சியையும் நிலைநாட்டும் செயற்பாடுகளாகும், அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கெதிராகவும் திரு. தங்கத்துரை அவர்களும் முன்னின்று போராடியவர்.

திருமலையில் கிழக்கு மாநிலத்தில் தமிழர் தேசத்தின் அரசாட்சியை மீட்டெடுத்து தமிழ் மக்களை தமிழர் தேசத்தைப் பாதுகாப்பதுவே எம் தலையாய கடமையாகும். அன்று இவ்வுணர்வுகளோடு திரு. தங்கத்துரை தன்னை அர்ப்பணித்திருந்தார். திருமலை மாவட்ட மக்களின் தேசத்தின் தமிழினத்தின் பாதுகாவலனாகத் தன்னை அர்ப்பணித்திருந்தார் என்றே குறிப்பிடுவேன்.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் 1997 யூலை 5ஆம் நாள் வன்கொடுமைக்குள்ளாகி இழந்த தலைவர் தங்கத்துரையை நினைவு கூர்ந்து ஒரு செய்தி தருகிறேன். இதனால் அவர் உறவுகளுக்கும் எமக்கும் ஆறுதல் தரும் என்று எண்ணவில்லை.

தமிழர் தேச மக்களை இலட்சக்கணக்கில் இனப் போரில் இழந்தோம். இத்தனை இலட்சம் மக்களை தமிழினப் படுகொலைகளை விதைத்துவிட்ட பொழுதும் தமிழினப் பிரச்சனைக்கு இன்னுந்தான் தீர்வில்லையென இதயம் கொந்தளிக்கிறது! இவற்றையெல்லாம் தமிழினத்தின் விடுதலையொன்றே ஆறுதல்படுத்தும் என நம்பியிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி

## දවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණ

## THAMIZH UNITED LIBERATION FRONT

66, MACKENZIE ROAD
COLOMBO - 05, SRI LANKA
0094 112552372 0112581182

NO: 315, A-9 ROAD,KILINOCHCHI
TEL:021 228 5448
0777 890171 tulf1977@gmail.com

THANTHAI SELVA AGAM,
1077, K.K.S ROAD, JAFFNA.
021 222 3631

## மூதூர் தந்த முத்து



எனது இனிய நண்பரான அமரர் திரு.அருணாசலம் தங்கத்துரை அவர்கள், 1970ம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியில், தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்படி இருந்தும் அத் தொகுதியில் இஸ்லாமிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஜனாப் அப்துல் மஜீட் அவர்களுடன் இணைந்து இன மத, பேதமின்றி செயற்பட்டார். அதே ஆண்டில் நான் கிளிநொச்சி தொகுதியில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டு முதன் முறையாக பாராளுமன்றம் சென்றேன். அந்த வகையில், பாராளுமன்ற அரசியலில் நாங்கள் இருவரும் சமகாலத்தவர்கள். அத்தோடு பாராளுமன்றத்தில் நாங்கள் இருவரும் அருகருகே ஆசனத்தை கொண்டவர்கள். அதேபோல பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் ஒரே அறையில் நாம் இருவரும் தங்கியிருந்த நாட்கள் அற்புதமானது. அவர் எப்போதும் என்னை 'சங்கர்' என்றே அழைப்பார்.

1970 ம் ஆண்டு தொடக்கம் அவர் வாழ்ந்த இறுதி நாள் வரைக்கும், நாங்கள் இருவரும் சுகதுக்கங்களைப் பகிர்ந்துக் கொள்கின்ற நெருங்கிய நண்பர்களாகவே வாழ்ந்திருந்தோம். அந்த நட்பானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் உறவு முறை சொந்தமாக மாறியது என்பது இறைவனின் நியதியாகும்.

நண்பர் தங்கத்துரை அவர்கள் தனது கல்வி வாழ்க்கையின் பின்னர் ஒரு அரசு ஊழியராக நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில் புரிந்தார். தான் தொழில் புரிந்த காலத்தில் தேவை நிமித்தமாக நீர்ப்பாசன காரியாலயத்திற்கு வரும் மக்களுக்கு, இன, மத, மொழி பேதமின்றி அந்த மக்களுக்கு காலம் தாழ்த்தாமல் சிறந்த மக்கள் சேவையாற்றினார். ஆதலால்தான் பின்னாளில் அந்த மக்களின் அமோக ஆதரவோடு பாராளுமன்றம் சென்றார். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், இல்லாத போதும் மக்களுக்கான அவரது சேவை தொடர்ந்தது.

சிங்கள மக்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்காக மூதூர் தொகுதியை இரண்டாக பிரித்து சிங்கள மக்களுக்காக சேருவில தொகுதி உருவாக்கப்பட்டது. அதை அறிந்திருந்த தந்தை செல்வநாயகம் அவர்கள் உயிருடன் இருந்த போது 'எதிர்காலத்தில் திருக்கோணமலை தொகுதியை தங்கத்துரை அவர்கள்தான் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்' என்றும் 'அத்தொகுதியில் அவரின் சேவையை ஆரம்பிக்க வேண்டும்' என்றும் வற்புறுத்தியிருந்தார். தேர்தல் வரும்போது திருக்கோணமலைத் தொகுதியை அமரர் தங்கத்துரை அவர்களுக்கு தருவதாக உறுதியளித்திருந்தார் என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன்.

இருப்பினும் 1977ம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அவருக்கு நியமனம் கிடைக்காதமை இன்று வரை எனக்கொரு மர்மமாகவே இருக்கின்றது. அந்த நேரத்தில் தந்தை செல்வா காலமாகியிருந்தார். தான் சார்ந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர்களின் முடிவுகளால் அவருக்கு அந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படாமையால் கோபமுற்ற அவரது அபிமானிகள் திருக்கோணமலையில் பெரும் போராட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினார்கள் என்பது வரலாறு. 1982ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு பெருவாரியான வாக்குகளால் வெற்றிபெற்று மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்றினார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இந்த நாட்டை விட்டு இடம்பெயர்ந்திருந்தனர்.

அந்த வகையில் நண்பர் தங்கத்துரை அவர்களும் இந்தியாவில் தனது குடும்பத்தினருடன் தஞ்சமடைந்திருந்தார். மிக நீண்ட காலத்திற்கு பிறகு மீண்டும் 1994ம் ஆண்டு நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளால் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். அத்தோடு அவரது அரசியல் வாழ்வில் அவருக்கு எதிரான சூழ்ச்சிகளும் ஆரம்பமானது.



**அரசியல் தலைவர்களுடன் அமரர் அ.தங்கத்துரை அவர்கள்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது சகாக்களால் ஏற்படுத்தப்பட்ட அவருக்கெதிரான செயற்பாடுகளைக் கண்டு நான் மனம் வருந்தியமையை இன்றும் நினைவு கோருகிறேன்.

இருப்பினும் அவர் தளர்ந்து விடவில்லை. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கு அமைய மக்களுக்கு பணியாற்றினார். அந்த மக்கள் சேவையாளனை அவர் பிறந்த, நேசித்த திருக்கோணமலை மண்ணில் மக்களுக்கான அவரது சேவையின் போது அந்த மக்களின் முன்பாகவே வெடிகுண்டுகளால், அகிம்சையின் மீது நம்பிக்கை வைத்த அந்த மனிதத்தை வீழ்த்தியது துரோகத்தனத்தின் உச்சமல்லவா? இப்படிப்பட்ட செயற்பாடுகளினால் தான் எமது இனம் இன்று நாதியற்றிருக்கிறது.

என் இனிய நண்பனே! நீங்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் ஆனால் நீங்கள் மக்களுக்கு செய்த சிறந்த சேவைகள் காலம் கடந்தும் அந்த மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டு இருக்கிறது நண்பா. "நினைவுகள் இனிமையானது அது போல கொடுமையானதும் கூட"

என் மனக்குமுறல்களை மீண்டும் இத்தால்
வெளிப்படுத்துகிறேன்.

நன்றி

வீ. ஆனந்தசங்கரி,
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்ரான் மகரூப்
பாராளுமன்ற உறுப்பினர்
திருக்கோணமலை மாவட்டம்

## மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனங்களில் வாழும் அமரர். அருணாசலம் தங்கத்துரை

திருக்கோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை கொடியவர்களின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி ஏறத்தாழ கால் நூற்றாண்டுகள் கடந்தாலும் இன்றும் அவர் மக்கள் மனங்களில் வாழ்ந்து வருகின்றார். அவரது நல்ல குணங்களும் செயற்பாடுகளுமே இதற்குக் காரணமாகும்.

1977ஆம் ஆண்டு வரை திருக்கோணமலை மாவட்டத்தில் திருக்கோணமலை, மூதூர் என இரண்டு தேர்தல் தொகுதிகள் மாத்திரமே இருந்தன. இதில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாகும். அமரர் தங்கத்துரை அவர்கள் 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் மூதூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். மனித நேயமிக்க செயற்பாடுகள் இவரிடம் நிறைந்து காணப்பட்டன. இனம், மதம், மொழி, வேறுபாடுகளுக்கப்பால் சகலரையும் மனிதன் என்ற ரீதியில் இவர் நோக்கினார். அந்த வகையில் இவரது சேவை சகல மக்களையும் நோக்கி நகர்ந்தது. இதனால் அனைவரும் இவரை நேசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 இல் சேருவில தொகுதி தோற்றம் பெற்றதால் மூதூர் ஒற்றை அங்கத்தவர் தொகுதியாகியது. மூதூர்த் தொகுதி முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதி என்பதால் 1977 பொதுத் தேர்தலில் இவர் போட்டியிடவில்லை.

1981ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்ட இவர் வெற்றி பெற்று மாவட்ட சபைத் தலைவரானார். எனினும், இவர் சார்ந்த கட்சியின் தீர்மானத்துக்கமைய இவர் அப்பதவியை ஏற்கவில்லை. இதன் மூலம் கட்சிக் கட்டுப்பாடுகளை முற்றிலும் பின்பற்றிய ஒருவராக இவர் திகழ்ந்தார்.

1994 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட இவர் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார். இக்காலப் பகுதியில் சக பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எனது தந்தை முன்னாள் இராஜாங்க அமைச்சர் மர்ஹூம் எம்.ஈ.எச்.மகரூப் அவர்களோடு மிகவும் சிநேகபூர்வமாக இவர் நடந்து கொண்டார். இருவரும் கட்சி வேறாயினும் மக்கள் சேவை அடிப்படையில் நெருங்கிப் பணியாற்றினார்கள். இவரது சேவை மாவட்டம் முழுவதும் வியாபித்திருந்ததை நான் அறிந்துள்ளேன். கோமரங்கடவெல பகுதியில் இவருக்கான வாக்கு வங்கி இல்லை எனினும் அங்கும் இவரது சேவை வியாபித்தது. அதேபோல முஸ்லிம் மக்களிடமும் இவரது சேவை சென்றடைந்துள்ளது.

சட்டத்தரணியான இவர் தமது மக்கள் உரிமையோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டுமென்பதற்காக பல வழிகளிலும் உழைத்துள்ளார். பல நெருக்குவாரங்களுக்கு உட்பட்டு துன்பங்களை அனுபவித்தாலும் மக்களுக்கான தனது சேவையினை இவர் கைவிட வில்லை. இதனால் தான் மக்கள் மனங்களில் இவர் இன்னும் வாழ்கின்றார். 1997 ஜூலை 5 ஆம் திகதி கல்விப் பணி நிமித்தம் திருக்கோணமலை ஸ்ரீ சன்முக இந்து மகளிர் கல்லூரி கட்டடத் திறப்பு விழாவில் அதிதியாகக் கலந்து கொண்டிருந்த வேளையில் இவர் கொல்லப்பட்டார். இவர் மண்ணைவிட்டு மறைந்து ஏறத்தாழ கால் நூற்றாண்டு மறைந்தாலும் இவரது அர்ப்பணிப்பான சேவையினால் இன்றும் மக்கள் மனங்களில் வாழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශිවනේසතුරෛ චන්ද්‍රකාන්තන්, පා.ම.
சிவநேசதுரை சந்திரகாந்தன், பா.உ.
Shivanesathurai Santhirakanthan, MP



எனது இல / මගේ අංකය / My No } MP/CM/2022/03

உமது இல / ඔබේ අංකය / Your No }

திகதி / දිනය / Date } 15.06.2022

## கிழக்கின் அரசியல் தனித்துவத்தின் அடையாளம்
## அமரர் அருணாசலம் தங்கத்துரை

கிழக்கு மாகாணம் பல அரசியல் தலைவர்களை பிரசவித்திருந்த போதும், நீண்ட கால நோக்கில் அவர்களின் பயணத்திற்கு மேட்டுக்குடி தலைமைகள் முற்றுப்புள்ளி வைக்க முனைந்து செயற்பட்ட கடந்தகால வரலாற்றுப் பக்கங்களில் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களின் அத்தியாயமும் மிக மிக முக்கியமானதொன்றாகத்திகழுகின்றது.

தரிசு நிலத்தினை வளமாக்கி செல்வம் செழிக்கும் பூமியாக மாற்றும் மண்பற்றாளனாக 1936ல் கிளிவெட்டியில் பிறந்து இலங்கை சுதந்திரத்திரமடைந்த காலத்திலிருந்தே தமக்கான அரசியல் தலைமையின்றி அல்லல்பட்ட மூதூர் தொகுதி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கும் சாணக்கிய சத்திரியனாக சுமார் 23 வருடங்களின் பின்னர் 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற முப்பத்தி நான்கு வயதே நிரம்பிய இளமை துடிப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினராகவும் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராகவும் மக்களுக்கு சேவையாற்றிய அமரர் தங்கத்துரை அவர்களின் நினைவஞ்சலி மலரில் எனது செய்தியையும் பதிவிட கிடைத்தமையை இட்டு பெருமை கொள்கின்றேன்.

வருடங்கள் இருபத்தியாறு உருண்டு ஓடினாலும் தான் வலிந்து ஏற்றுக் கொண்ட சமூக சேவையின் வழியூடான அரசியல் பயணத்தில் வாய்ப்பேச்சு மற்றும் பத்திரிகை அரசியலுக்கு மத்தியில் பிறந்த மண்ணை நேசித்து இறுதி மூச்சை தன்தாய் மண்ணிலேயே ஆகுதியாக்கிய மக்கள் சேவகன் தங்கத்துரை அவர்கள் நடைமுறைப்படுத்திய மக்கள் நலன் சார் பணிகள் எண்ணிலடங்காதவைகளாகும்.

போக்குவரத்திற்கு தகுதியற்றுக்காணப்பட்ட பல வீதிகளை செப்பனிட்டு சிறந்த வீதிகளாக மாற்றியமைத்தார் பாலங்கள் பல அமைத்து விவசாயப்பணிக்கு உரம் சேர்த்த உட்கட்டமைப்பு பணிகள் ஒருபுறமும் இளைஞர்களுக்கான அரசு வேலைவாய்ப்புகள் மற்றும் கல்வித் துறை மேம்பாடு என தனி மனித மேம்பாடுகள் ஒருபுறமும் தான் சார்ந்த சமூகத்தின் இருப்பினையும் அடையாளத்தையும் பாதுகாப்பதற்காகவென அளப்பரிய பணிகள் மறுபுறம் என முக்கோண வடிவில் சமூகத்திற்காக இறுதிவரை சேவையாற்றிய ஒரு சேவகன்.

No.91, Lake Rd-1,Batticaloa,Sri Lanka.
T.P. 9465 222 7682 | Fax. 9465 222 7683
E.Mail. mail@pillaiyan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශිවනේසතුරෛ චන්ද්‍රකාන්තන්, පා.ම.
சிவநேசதுரை சந்திரகாந்தன், பா.உ.
Shivanesathurai Santhirakanthan, MP

| | | |
|---|---|---|
| எனது இல / මගේ අංකය / My No — MP/CM/2022/03 | உமது இல / ඔබේ අංකය / Your No — | திகதி / දිනය / Date — 15.06.2022 |

வாய்ச்சவால் அரசியல் செய்த தலைவர்களுக்கு மத்தியில் சமூகத்தை நேசித்து மக்களுக்கான அரசியல் பாதையில் பயணிக்கும் கிழக்கு மாகாணத்தில் ஆளுமைமிக்க தலைமைகளை விரும்பாத மேட்டுக்குடி மேலாதிக்க சிந்தனையினால் உட்கட்சி பூசலின் காரணமாக பல தடைகளுக்கு முகம் கொடுத்தபோதும் தனது உறுதிமிக்க நிலைப்பாட்டால் மூதூர் பிரதேசத்தில் தமிழர்கள் தங்களது அரசியல் இருப்பை நிலைப்படுத்திக் கொண்ட நிலையில் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முல்லைத்தீவில் தனித் தேர்தல் தொகுதியினை உருவாக்குவதற்காக மூதூர் தொகுதியை இரண்டாகப் பிரித்து சேருவலைக்கு தனியான தேர்தல் தொகுதி உருவாகுவதற்கு ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டை அங்கிகரித்த தமிழ் தலைமைகளின் தீர்மானத்தின் விளைவாக 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அமரர் தங்கத்துரை அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டது.

இருந்தும் மக்கள் சேவையில் தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தங்கத்துரை அவர்கள் 1981-ஆம் ஆண்டு மாவட்ட சபைத் தேர்தலில் 44 691 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டி மக்களுக்கான சேவையை தொடர்ந்தார்.

ஆசனத்திற்கான அரசியல் தலைமைத்துவம் வழங்காது மக்களின் தேவைகளுக்காக குரல் கொடுத்த இவர் சுமார் எட்டு மாதங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்பட்டிருந்தமையினையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அமரர் தங்கத்துரை அவர்கள் அர்ப்பணிப்பான சேவையின்பால் அன்று மக்களை ஒன்றிணைத்ததன் காரணத்தால் கிளிவெட்டி பிரதேசமானது இன்றும் தலைநிமிர்ந்து நிற்பதற்கு கால்கோளிட்டது என்றால் அது மிகையாகாது. கிழக்கின் அரசியலில் தனித்துவத்துடன் விளங்கிய தங்கத்துரை அவர்கள் கிழக்கின் அரசியல் வரலாற்றில் ஒரு சகாப்தம் என்பதனை யாரும் மறுக்க முடியாது.

என்றும் நீங்கா நினைவுடன்

சிவ. சந்திரகாந்தன் 15/6/22

சிவநேசதுரை சந்திரகாந்தன்
பாராளுமன்ற உறுப்பினர்
இணைத் தலைவர்
மாவட்ட அபிவிருத்திக் குழு
மட்டக்களப்பு மாவட்டம்.
தலைவர் -த.ம.வி.பு

சிவநேசதுரை சந்திரகாந்தன்
பாராளுமன்ற உறுப்பினர்
மட்டக்களப்பு மாவட்டம்.
இணைத் தலைவர்
மாவட்ட அபிவிருத்திக் குழு
மட்டக்களப்பு மாவட்டம்.
தலைவர் - த.ம.வி.பு.

No.91, Lake Rd-1,Batticaloa,Sri Lanka.
T.P. 9465 222 7682 | Fax. 9465 222 7683
E.Mail. mail@pillaiyan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கி.துரைராசசிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
முன்னாள் கிழக்கு மாகாணசபை அமைச்சர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
முன்னாள் பொதுச் செயலாளர்.
சட்டத்தரணி,

## தமிழன்னை தனது இன்னொரு தவமகனையும் இழந்தாள்!

1994 ஜுலை 12 அல்லது 13ம் நாள் என்று நினைக்கின்றேன். காலை வேளை கொழும்பு 'கிராண்ட்பாஸ்' வீதியில், நான் வாடகைக்குக் குடியிருந்த வீட்டுத் தொலைபேசி அழைத்தது. தொலைபேசியை எடுத்தவர் அழைப்பு எனக்கானது என என்னை அழைக்கின்றார். நான் தொலைபேசியை நான் வாங்கிய கையோடு, "ஹலோ" என்கிறேன்.

"தம்பி... துரைராசசிங்கமா"

"ஆம்... நீங்கள்!.."

"தம்பி நான் தங்கத்துரை பேசுகின்றேன்"

"சொல்லுங்க... அண்ணா..." எனது உடலில் ஒரு மின் பாய்ச்சல்.

'மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை இவர்' என்று நினைப்பதற்குள், "தம்பி... நான் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில்தான் படித்தவன். வந்தாறுமூலையில் எனக்கு நண்பர்கள் உண்டு. அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத்தான் பேசுகின்றேன். வருகின்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டணியில் நீங்கள் போட்டியிட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றார்கள். நீங்கள் 'கல்ஸ்டொப்பில்' தானே பிறக்ரிஸ் பண்ணுறீர்கள்?"

"ஆம் ஐயா..." (முன்பு 'அண்ணா'... இப்போது 'ஐயா'... மின் பாய்ச்சலின் தாக்கம்)

"நல்லது... பிறக்ரிஸ்க்குத் தடை வராது ஊரார் விரும்பி அழைக்கின்றார்கள்... நல்ல முடிவாய் எடுங்கள். அந்த நல்ல முடிவை எடுத்தால் என்னை வந்து சந்தியுங்கள்" என்று கூறி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு அலுவலக முகவரியையும், அவரது தொலைபேசி எண்ணையும் தருகின்றார். குறித்துக் கொள்கின்றேன்.

அன்றும், மறுநாளும் பல்வேறு தொலைபேசி அழைப்புகள். 14ம் நாள் பிற்பகல் குறித்த முகவரிக்குச் செல்கின்றேன். அதற்கு முன் சுதந்திரன் செய்தித் தாளில் புகைப்படத்தில் மட்டும் கண்ட உருவம் என் எதிரில், ஏறு நெற்றி, நன்கு எண்ணெய் இட்டு 'ஜங்கி' வைத்து வார்ந்த அழகான தலைமுடி. நடுத்தரமான அழகிய மீசை... மலர்ச்சி குடியிருக்கும் வசீகர முகம்.

"துரைராசசிங்கம்..." என்ற விசாரிப்புடன் கூடிய மேற்கண் பார்வை. "நல்ல முடிவோடுதான் வருகின்றீர்கள் என்று நினைக்கின்றேன்..." என்று தொடங்கிய உரையாடல் எனது அரைகுறை முடிவையும் முழுமையடையச் செய்கின்றது.

அன்று இரவே 'ஜேசு ரவல்ஸ்'இல் மட்டக்களப்புக்குப் புறப்படுகின்றேன். பின் தேர்தல்... தெரிவு, மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புப் பணியகத்தில் சந்திக்கின்றோம்... தேர்தலில் வெற்றிபெற்றவர்களாக... மட்டக்களப்பில் இருந்து வெற்றி பெற்ற நாங்கள் மூவர், திருமலையில் வெற்றிபெற்ற அண்ணன் தங்கத்துரை அவர்கள், தலைவர் மு.சிவசிதம்பரம் அவர்கள் ஆகிய ஐவரும் அமர்ந்திருக்கின்றோம்.

தலைவர் அவர்கள் கட்சியின் மரபை விளக்குகின்றார். 'இவ் அடிப்படையில் தங்கத்துரை அவர்கள் தான் உங்கள் பாராளுமன்றக் குழுத் தலைவராக நியமனம் பெறவேண்டும்' என்று கூறி... 'இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சம்மதம் தேவை' என்று முடிக்கின்றார். எனக்கும், என்னை அடுத்து இருந்தவருக்கும் அதுவே நியாயம் என்றுபடுகின்றது. ஆனால், எங்களில் மூன்றாமவர்,

"மட்டக்களப்பில் இருந்து நாங்கள் மூவர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றோம். எனக்கு இவர்கள் இருவரும் ஆதரவாய் இருக்கின்றார்கள். நானே, குழுத் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்" எனக் கூறி எங்கள் முகங்களைப் பார்க்கின்றார். நாங்கள் இருவரும் மௌனிகளாய் இருக்கின்றோம்.

தலைவர்... மீண்டும் பல நியாயங்களைச் சொல்கின்றார். தங்கத்துரை அண்ணன் அவதானித்தபடி இருக்கின்றார். தன்னைத் தானே முன்மொழிந்தவர் விட்டுக்கொடுப்பதாயில்லை. நாங்கள் இருவரும் பேசாமலேயே இருக்கின்றோம். இதற்குமேல் என்ன செய்வதென்று தெரியாத நிலையில், தலைவர், "தங்கா..." என்கிறார்.

தங்கத்துரை அண்ணர்,

"சரி... அவருடைய விருப்பப்படியே செய்யுங்கள்" என்று முற்றுப்புள்ளி வைக்கின்றார். வடை, தேநீருடன் கூட்டம் முடிவடைகின்றது. எனது மனதுக்குள் ஒரு கிலேசம். புதுவித அனுபவம். ஏன் இப்படி...? என்ற கேள்வி... அத்தனையும் ஊமைக்கனவாய் உறைகின்றன. விடை பெற்றுக்கொண்டு உறைவிடங்களை அடைகின்றோம்.

1994 செப்டெம்பரில் பூத்த சமாதானப் பூ அற்ப ஆயுளுடன் கருகி உதிர்கின்றது. பின்னரான பல்வேறு நிகழ்வுகளுடன் அந்த ஆண்டு நிறைவடைகின்றது. அதன் நடுப்பகுதியில் கட்சியில் சிறு சலசலப்புகள் கருக்கொள்கின்றன. திருமலைத் தேர்தல்தொகுதி தொடர்பானவைதான் அந்தச் சலசலப்புகள். மத்திய குழுக் கூட்டங்களிலே சிறு சிறு சுழிக்காற்றுகள் தோன்றி மறையும். தேர்தலுக்கு முன்னரான ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று, தங்கத்துரை அண்ணர் மீது கண்டனக் கணைகள் பாயும். அவரோ அவற்றைப் பெரிதுபடுத்தியதாகத் தெரியவில்லை.

இவை தொடர்பில் அரைகுறை விளக்கம் தான் எனக்குத் தெரியும். அதைப்பற்றி விசாரிப்பது கூடச் சங்கடமாய் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிக்காற்று சற்றுப் பெரிதாகி இரண்டொரு மத்தியகுழுக் கூட்டங்களில் கோடை இடியாய் இடித்தது.

1996 என்று நினைக்கின்றேன். ஒரு நாள் நான் பாராளுமன்ற நூலகத்தில் செய்தித்தாள் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். தங்கத்துரை அண்ணன் அங்கு வந்தார். என்னை அழைத்துக் கொண்டு ஒரு பக்கமாய்ச் சென்றார். அங்கிருந்த மேசையருகில் இருந்த கதிரைகளில் இருவரும் அமர்ந்தோம்.

வெற்றுத்தாள்களைத் தந்து, தம்பி நான் சொல்வதை எழுதுங்கள் என்றார். திருக்கோணமலை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளருக்கு முகவரியிட்டுக் கடிதம் தொடங்கியது. 'திருக்கோணமலை' என்று தான் அவர் சொல்லுவார். 'ஒப்பந்தப்படி, அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டால் நான் பதவி துறந்து அடுத்தவருக்கு இடம்கொடுக்க வேண்டும். பாராளுமன்றிலோ அரசியல் நிர்ணய சபை அமைக்கப்படவில்லை. எனவே, ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் தேவை இன்னும் ஏற்படவில்லை' என்பதே கடிதத்தின் சாரம். எழுதி முடிந்ததும் கையெழுத்திட்டார். வழமைபோல கையை ஒருவிதமாய் அசைத்தசைத்து அவ் ஒப்பத்தை இட்டார். அது பின்னர் உரியவருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

இதன் பின்னர் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டங்களிலும், திருமலைப் பிரச்சனை கொதித்துக் கொண்டுதான் இருந்தது. தங்கத்துரை அண்ணனோ தொகுதி வேலைகளில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அவர், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் எழுது வினைஞராய்ப் பணியாற்றியவர். தட்டச்சு செய்வதில் கெட்டிக்காரர். மிக வேகமாகக் கடிதங்களைத் தட்டச்சு செய்வார். உரிய அமைச்சரிடம் கொடுத்துக் கட்டளையை எழுதிப் பெற்றுக்கொள்வார். அமைச்சுகளின் செயலாளர்களைச் சந்திப்பார். திருமலையின் பல்வேறு நிறுவனங்களுக்கு அபிவிருத்திக்கான நிதிகள் சென்றடையும்.

அது போர்க்காலம்.

அடிக்கடி ஊர் செல்ல முடியாது. கொழும்பிலே அடைந்து கிடக்க நேரிடும். அநேகமான அந்நாட்களில் நான் தங்கத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணரின் இருப்பிடம் செல்வேன். அவர் இடதுசாரிச் சிந்தனை உள்ளவர். அவற்றைத் தமிழர் அரசியலில் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்ற வகையில் அரசியற் பாடம் நடாத்துவார். நேரம் தெரியாமல் கலந்துரையாடிக் கொண்டிருப்போம். தெளிவு பெறுவதற்காக நூல்கள், கட்டுரைகள் என்பவற்றையும் தருவார்.

அவருக்கு, கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த கதிரவேற்பிள்ளை அவர்களை நன்கு பிடிக்கும். கதிரரின் அணுகுமுறைகளை சிலாகித்துப் பேசுவார். தனது விவாதங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் கதிரர் 'தங்கா இப்படிக் கொஞ்சம் யோசித்துப் பார்' என்று சில விடயங்களைச் சொல்வாராம். அதன் அடிப்படையில் பார்க்கும் போது தனது விவாதிப்புகள் பொடிப் பொடியாய்ப் போய்விடுவது கண்டு தான் பிரமிப்படைந்ததாகப் பல தடவைகள் சொல்லியிருக்கின்றார்.

அவரது பாராளுமன்ற உரைகள் பிரசார உரைகளாக அமையாது, பொறுப்பு வாய்ந்தவையாயும், பொருள் பொதிந்தவையாயும் இருக்கும். ஆங்கிலத்திலேதான் பேசுவார். அமைச்சர்கள் காதுகொடுத்து அவதானிப்பதைக் கண்டுள்ளேன். உணவு வேளைகளில் பல அமைச்சர்கள் அவரை அணுகி அவரது கருத்துக்களைப் பாராட்டிய பல சந்தர்ப்பங்களைப் பார்த்துள்ளேன்.

உணவு உண்டபின் உணவு மண்டபத்தைச் சுற்றி ஒருமுறை நடந்து வருவார். ஏன் அப்படி என்று கேட்டதற்கு 'உண்டபின் நூறடி உலாவு' என்பார். தங்கத்துரை அண்ணன் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். நான் அதே ஊரவன். அங்கே பயின்றவன். கிழக்குப் பல்கலைக்கழகம் கால் கொண்டதால் அப்பாடசாலை சித்தாண்டிக் கிராமத்துக்குத் தூக்கி வீசப்பட்டது. இன்றும் அதே பெயருடன் இயங்குகின்றது.

இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் சேர்ந்து அதன் பொன் விழாவைக் கொண்டாடத் திட்டமிட்டனர். பொன்விழா மலருக்காக என்னிடம் கட்டுரை கேட்டனர். என்னூடாகத் தங்கத்துரை அண்ணனிடமும் கேட்டனர். அவர் சொல்லச் சொல்ல அவரது கட்டுரையை நானே எழுதினேன். அதன் மூலம் பழைய செய்திகளை அறிய முடிந்தது. இது நடந்தது 1995 இல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 மே அல்லது ஜுன் என்று நினைக்கின்றேன். கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தங்கத்துரை அண்ணனுடன் நானும் சென்றிருந்தேன். அவரைப் பேச அழைத்தார்கள். அவர் பேசத் தொடங்கினார். தொடங்கிய சிறிது நேரத்தில் கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. சிலர் எழுந்து நின்று சத்தமிட்டனர். ஆனால், அவர் அசைந்து கொடுக்கவில்லை. சத்தமிட்டவர்களைக் கவனத்தில் எடுக்காமலேயே தனது பேச்சைத் தொடர்ந்தார். ஆனால், குழப்பவாதிகள் குரல் மேலோங்கியது. எனவே, அவர் மேடையை விட்டு இறங்கினார். நாங்கள் மாதிவலைக்குப் பயணமாகினோம். அவர், நம் இனத்தின் எதிர்காலம் பற்றி அதிகம் கவலைப்பட்டார். 'இப்போது தோன்றியுள்ள நிலைப்பாடு தமிழ் மக்களை எங்கோ கொண்டு நிறுத்தப் போகின்றது' என்று கவலை கொண்டார்.

இந்த நிகழ்வு நடந்து ஒரு மாதம் கழிந்திருக்கும். 1997 ஜுலை 05 காலையில் எனக்கு அழைப்பு எடுத்தார். 'தம்பி நான் இன்று ஒரு நிகழ்வுக்காகத் திருக்கோணமலை செல்கின்றேன். என்னைச் சந்திக்க கிரானில் இருந்து சிலர் திருக்கோணமலை வருகின்றார்கள். நிகழ்வு முடிந்து நான் வீட்டுக்குச் செல்ல சற்றுத் தாமதமாகலாம். எனவே, நான் வரும்வரை வீட்டில் இருக்குமாறு சொல்லுங்கள்' எனக் கூறித் தொடர்பிலக்கத்தையும் தந்தார். அவர் கூறியபடியே நானும் அவர்களுக்கு அறிவித்தேன்.


அன்று மதியம் தாண்டிய வேளை எனக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு அலுவலகத்தில் இருந்து அழைப்பொன்று வந்தது. அங்கிருந்து பேசியவர் பீதியடைந்த குரலில் அந்தக் கொடுமையான செய்தியைச் சொன்னார்.

திருமலை சோகமயமானது. தமிழன்னை தன் இன்னொரு தவமகனை இழந்தாள்.

இல 73, வாவிக்கரை வீதி 01,
071 8497158
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.தண்டாயுதபாணி
முன்னாள் கல்வியமைச்சர்,
கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.
14.05.2022

## மக்களை நேசித்த தலைவர்

"அண்ணன் தங்கத்துரை" என எல்லோராலும் உரிமையாக அழைக்கப்பட்ட அமரர் திரு.அ.தங்கத்துரை அவர்களது இருபத்தைந்தாவது நினைவு நாளில் அவரைப் பற்றி எனது மனதில் பதிந்திருக்கும் சில நினைவுகளை மீட்டிப் பார்க்க விரும்புகிறேன்.

அரசியலில் தங்கத்துரை அண்ணன் அவர்கள் பிரவேசித்த அந்த நாட்களிலிருந்து அவருடனான என்னுடைய தொடர்புகள் நெருக்கமானதாகவே இருந்தது.

1970ம் ஆண்டு பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதியில் தங்கத்துரை அண்ணன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட போது மூதூர் தொகுதியின் தமிழ்ப் பிரதேசம் என்னும் ஏனைய நண்பர்களோடு திரிந்து அவருக்காக பிரச்சாரம் செய்ததை நினைத்தப் பார்க்கின்றேன். இத் தேர்தலில் வெற்றி பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றம் சென்றார். தொகுதி மக்களுக்காக ஒரு முழு நேர அரசியல் வாதியாக நின்று அர்ப்பணிப்போடு பணியாற்றினார்.

பின்னர் 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் திருக்கோணமலை தொகுதிக்கான வேட்பாளர் நியமனத்தை அமரர்.அ.தங்கத்துரை அவர்களுக்கே வழங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இளைஞர்களாலும், மக்களாலும் கட்சிக்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இளைஞர்கள் பலர் கொழும்பு சென்று மறைந்த தலைவர் அமரர்.மு.சிவசிதம்பரம் அவர்களது வீட்டில் வைத்து கட்சித் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தினோம். போராடினோம். இச் சந்தர்ப்பத்தில் அமரர்.மு.சிவசிதம்பரத்தின் வாகனம் வீட்டு வளவிலிருந்து வெளியேற முனைந்த போது எமது இளைஞர்கள் இரண்டு மூன்று பேர் வாகனத்திற்கு குறுக்காக படுத்து விட்டார்கள். எவ்வாறாயினும் எமது கோரிக்கை வெற்றி பெறவில்லை. வேட்பாளர் நியமனம் தங்கத்துரை அண்ணனுக்கு கொடுக்கப்படவில்லை.

1981ம் ஆண்டில் மாவட்ட சபைத்தேர்தலில் தங்கத்துரை அண்ணன் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டிருந்தார். இத்தேர்தலில் பல சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. திருக்கோணமலை தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள் அமரர்.தங்கத்துரை அவர்களின் வெற்றிக்காக திட்டமிட்டு பணியாற்றினார். இத்தேர்தலின் வெற்றி என்பது மாவட்டத்தின் தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சனையாகவும் இருந்தது. கட்சி தொண்டர்களுடனும், நண்பர்களுடனும் மாவட்டம் முழுவதும் திரிந்து பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டோம்.

இத்தேர்தலில் தங்கத்துரை அண்ணன் மாவட்ட சபைத் தலைவராக வெற்றி பெற்றார். இத்தேர்தலில் தங்கத்துரை அண்ணனின் வாக்கெண்ணும் பிரதிநிதியாகக் கடமையாற்றிய காரணத்தினால் முழுமையாக சிங்கள வாக்காளர்கள் மாத்திரமே உள்ள வாக்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களிலும் தமிழ் வாக்காளர் வாக்களிப்பு நிலையங்களிலும் தங்கத்துரை அண்ணனுக்கு ஒரு சில வாக்குகளாவது அளிக்கப்பட்டிருந்ததை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இவ்வாறாக அமரர்.தங்கத்துரை அவர்களை மக்கள் பிரதிநிதியாக ஆக்கவேண்டுமென்று நான் செயற்பட்டமைக்கு காரணம் என்னவெனில் அவர் ஒரு சாமானியனாக மக்களோடு நின்று அவர்களை நேசித்து அர்ப்பணிப்போடு சேவையாற்றும் மனப்பாங்கு கொண்டவராக இருந்தமையினாலாகும்.


தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான சரியான பாதையில் அவர் பயணித்துக் கொண்டிருந்தார். அதேவேளை திருக்கோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் தீவிரமாக இருந்தார். மாவட்டத்தின் கல்வி விருத்தி தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டிருந்தார்.


அவரது இறுதித் தருணத்தில் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் கட்டடத்திறப்பு விழாவின் பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் நானும் கலந்து கொண்டிருந்தேன். அமரர்.அ.தங்கத்துரை அவர்களுடன் இரண்டொரு விடயங்கள் தொடர்பாக உரையாட வேண்டிய தேவை இருந்ததனால் சில நிமிடங்கள் காத்திருந்தேன். ஆயினும் பலர் அவரை சூழ்ந்து நின்று உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஆகவே அடுத்த நாள் அவரைச் சந்திப்போம் என முடிவு செய்து கொண்டு கல்லூரியை விட்டு வெளியேறினேன். நான் வெளியேறிய இரண்டொரு நிமிடங்களில்தான் அந்த துர்ப்பாக்கிய நிகழ்வு இடம்பெற்றது. தங்கத்துரை அண்ணனின் மறைவு எமது மாவட்டத்திற்கே ஒரு பேரிழப்பாகிவிட்டது. மக்களை நேசித்த, மக்களால் கவரப்பட்ட ஒரு தலைவராக அவர் விளங்கினார். அவரது நினைவுகள் என்றும் நெஞ்சில் நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த நகரபிதா திரு.சூரியமூர்த்தி அவர்களுடன் அமரர். அ.தங்கத்துரை அவர்கள் களப்பணியை மேற்பார்வை செய்தபோது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமாரசாமி நாகேஸ்வரன்
முன்னாள் கிழக்குமாகாணசபை உறுப்பினர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

## தனிப்பெருந்தலைவன் தங்கத்துரை...

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் செயல் திறன்மிக்க அரிசியல் தலைவராக அமரர் தங்கத்துரையை குறிப்பிடலாம். அதுமட்டுமல்ல பல தியாகிகளையும் போராளிகளையும் கண்ட திருமலை மண்ணில் பலநாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற திருமலை மாவட்டம் மிகச்சிறந்த ஆளுமைமிக்க என்றும் மக்களால் மறக்க முடியாத மக்கள் சேவையாளனாக, நாடாளுமன்ற உறுப்பினராக திரு. தங்கத்துரையைக் கண்டது எனலாம்.

சட்ட மேதைகளும் மேட்டுக்குடி வாரிசுகளும் ஆக்கிரமித்திருந்த அரசியலில் சாமான்யரான தங்கத்துரை அண்ணன் காலடி எடுத்து வைத்தபோது சிலர் கேலி செய்தனர், இன்னும் சிலர் வெற்றி வாய்ப்பை நிராகரித்தனர். ஆனால் அமோகமான மக்கள் ஆதரவோடு அவர் வெற்றி வாகை சூடியதும் அனைவரும் வியந்து நின்றனர். அதன்பின்னர் அவரது ஒவ்வொரு நகர்வையும் சுறுசுறுப்பையும் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டு மொத்த தமிழ் சமுதாயமும் அவர் பின்னால் நின்றது. நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் அவரது தமிழ் நலம் சார்ந்து அரசியல் செயற்பாடுகள் மிகவும் ஆக்கபூர்வமானதாக அமைந்தது.

கிராமப்புற மக்களுடன் தொடர்பற்றிருந்த அரசியலை மாற்றி கிராமந்தோறும் தெருக்கள் தோறும் சென்று மக்களை சந்தித்து இளைஞர்களை இணைத்து வாலிப முன்னணிக் கிளைகளை அமைத்து தமிழரசுக்கட்சிக்கு உரமேற்றினார். இதன் மூலம் கட்சி சார்ந்த அரசியலில் ஒரு புதுப்பொலிவு ஏற்பட்டது. இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சூழ்நிலையும் கட்சி அரசியலுக்கு சவாலான போதும் தனி மனித ஆளுமையினாலும் செயற்பாட்டாலும் திருக்கோணமலை மாவட்டத்தில் (தங்கத்துரை என்ற) தமிழரசுக்கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்த முடிந்தது. திருமலை மண்ணில் தோல்வியை சந்திக்காத அரசியல்வாதியாக திரு. தங்கத்துரை விளங்கினார்.

ஒரு அரசியல்வாதியாக மக்கள் பிரதிநிதியாக பல்வேறுபட்ட செயல்பாட்டு வடிவங்களை அவர் வெளிபடுத்தினார். அவரது எளிமையான தோற்றமும் அனைவரும் கவர்ந்திழுக்கும் வசீகரமும் கள்ளமற்ற புன்சிரிப்பும் அவரது வெற்றிக்குப் பின்னால் இருந்ததெனலாம். ஆட்சியிலிருக்கும் பெரும்பான்மையின அரசியல் சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக எதிர்க்கட்சியில் அமர்ந்து தமிழ்த்தரப்பு எதையும் சாதிக்கமுடியாமல் தவித்தபோதும் தங்கத்துரை அண்ணன் தனது விடாமுயற்சி, தக்கரீதியான வாதத்திறமை, உறுதியான நிலைப்பாடுகளால் கிராமப்புற மக்களின் அடிப்படை தேவைகளை அரசுக்குணர்த்தி நிலைமைகளை சாதகமாக்கி அரசு நிர்வாகிகளையும், அரசியல் தலைவர்களையும் தனதுபக்க நியாயத்தை உணரவைத்து திருமலை மாவட்டத்தில் அபிவிருத்தியையும், வேலைவாய்ப்புகளையும் செயற்படுத்தினார். தமிழ் பிரதேசங்களில் செயற்பட்ட ஆளுங்கட்சி வியக்கும் அளவிற்கு அவரது சமூக நலன் சார்ந்த அரசியல் செயல்பாடு அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வேலைவாய்ப்பு வழங்கும் தனது தெரிவில் தேடித்தேடி மிகவும் வறியநிலையிலுள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டது இன்றும் நினைவு கூறப்படுகிறது. பின்தங்கிய பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் அதன் தேவைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு மூதூர் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டினார் இம்மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பை தக்க வைப்பதற்கு அவர் எடுத்த நடவடிக்கை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது மலையக தமிழர்களை இம்மாவட்டத்தில் பல இடங்களில் குடியேற்றுவதற்கு அவரெடுத்த நடவடிக்கையினால் பல கிராமங்கள் உருவாக்கப்பட்டன. இன்றும் அக்கிராமங்கள் அவர் பெயரை உச்சரித்துக் கொண்டிருக்கின்றன. திருமலை மண்ணின் குறுகிய கால, நீண்டகால அபிவிருத்திகள் எவ்வாறு அமைய வேண்டுமென்று அவர் தெளிவான நிலைப்பாட்டில் இருந்தார். பல்வேறு திட்டங்களை வகுத்து அதற்கான முன்னெடுப்புகளையும் மேற்கொண்டார். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலை வளாகமும், திருமலை தொழில்நுட்பக் கல்லூரியும் இதற்குச் சான்றாக அமைகிறது.

மூதூரின் முதல்வராக வெற்றிவாகை சூடி பின்னர் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகி அவர் மக்களுக்காற்றிய சேவை மகத்தானது வரலாற்றில் மறக்கவோ, மறைக்கவோ முடியாதது. காலத்தால் அழியாத காவியமாக வாழ்ந்த மாமனிதர் தங்கத்துரை அவர்களின் இழப்பின் மூலம் திருமலை மாவட்ட தமிழர்கள் மட்டுமல்ல கிழக்கு மாகாணத் தமிழர் சமூகம் தன் எதிர்கால தலைவரை இழந்து ஒட்டுமொத்த ஈழதமிழர்களும் ஒப்பற்ற தன்னலமற்ற தமிழ்த்தேசியத் தலைவனை அரசியல் செயற்பாட்டாளனை இழந்தது என்றும் மாறாத வடுவாகவும் துயராகவும் நிலைத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975ஆம் ஆண்டு 'சிவயோக சமாஜத்தில்'
சுவாமி கெங்காதரனாந்த அவர்களுடன்



தனது அலுவலகப் பணியில் அமரர்.அ.தங்கத்துரை அவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- எம்.ஏ.எம்.அரூஸ்

தவிசாளர் - மூதூர் பிரதேச சபை

## உயரிய எண்ணங்கள் கொண்ட தங்கத் தலைமகன்

1997.07.05 ஆம் திகதி திருமலை மாவட்ட சிறுபான்மை மக்களின் நெஞ்சங்களை விட்டு நீங்காத வேதனையானதும் சோதனையானதுமான சோக தினமாகும். திருமலை மாவட்ட மக்களுக்கு அரசியல் தலமைத்துவம் வழங்கி மாவட்டத்தின் நில புலங்களையும் வளங்களையும் பாதுகாப்பதற்காக ஓங்கி ஒலித்த சிம்மக்குரல் அமரர்.அ.தங்கதுரை அவர்கள் இலட்சியங்களுக்காக உரமாகத் தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்ட தினமாகும்.

தனது இளமைப் பருவத்தில் இடதுசாரிக் கொள்கைகளால் இவர் தந்தை செல்வ நாயகத்தின் சமஸ்டிக் கொள்கையை ஏற்றுக் கொண்டு தான் சார்ந்த சமூகத்தை ஆழமாக நேசித்தார். சிறுபராயம் முதலே அநீதிகளுக்கெதிராக குரல் கொடுத்தார். ஒரு சிந்தனையாளராக, காத்திரமான பேச்சாளராக துடிப்புள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணியாக, திறன்மிக்க அரசியல்வாதியாக பல்வகைப்பட்ட பாத்திரங்களினூடாக மகத்தான மக்கள் பணியை செய்தார்.

சிறுபான்மைச் சமூகங்கள் கௌரவமாகவும், சமத்துவமாகவும் வாழ வேண்டும். இது அரசியல் அமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதை உண்மையாக விரும்பினார்.

மாவட்டத்தின் கல்வித்துறையின் பிற்போக்கையும், கலாச்சார தனிமையையும் அறிந்து இம்மாவட்ட மக்கள் வெற்றிகரமாக கல்வியைப் பெறுவதற்கு பல புதிய பாடசாலைகளை உருவாக்கியதோடு கட்டிடங்களே இல்லாத பாடசாலைகளுக்கு பல மாடிக் கட்டிடங்களையும் கட்டிக் கொடுத்தார். எண்ணற்ற யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கினார். பதவிக்காக அலையும் பல அரசியல்வாதிகளுக்கு மத்தியில் பணி செய்வதற்காக பதவிகளை ஏற்றவர்தான் இவர் என்பதை நினைக்கும் போது உள்ளமெல்லாம் பூரிக்கின்றது.

இவரது சொல்லிலும் செயலிலும் வீரமும், தீரமும் விவேகமும் நிறைந்து காணப்பட்டது. அன்னாரது ஓயாத உழைப்பும், உறுதியான நிலைப்பாடும், தலைசாயாத துணிவும் அரசியல் தீர்க்கதரிசனமும், திறமையும், தலைமைத்துவ பண்புகளும், துணிவான பேச்சும், மனிதநேயமும், அடக்கமான போக்கும், பணிவான பண்பும் அவரது வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் ஒத்தாசை புரிந்த பொக்கிசங்களாகும்.

• உயரிய எண்ணங்களுக்காக தான் சார்ந்த சமூகத்தின் ஒற்றுமையையும் சமூகத்தின் பிரச்சினைகளை தெளிவுபடுத்தவும் அவர் செய்த பங்களிப்புகளும், அர்ப்பணிப்புகளும் எண்ணிலடங்காதவை. கோடிக் கணக்கில் கொட்டினாலும் பெறமுடியாத ஒரு பிரபல்யத்தை மிகச் சுலபமாகப் பெற்றார். தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்தார். அதனால் சிறைவாசத்தைக் கூட அனுபவித்தார்.

துன்பங்களையும் சோதனைகளையும் கண்டு பின்வாங்காது கரடுமுறடான பாதைகளைக் கடந்து பயணித்தார். செல்வத்தை சேகரிப்பதற்கான வாய்ப்புக்கள் கடல்போன்று அவர் முன்னிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. அவை எதுவும் சமூகப் பணியிலிருந்து அவரை பாதுகாக்கவில்லை. தான் சார்ந்த சமூக மேம்பாடு ஒன்றினையே இலக்காக் கொண்டு உளச் சோர்வையும், மனத்தளர்ச்சியையும், ஏமாற்றங்களையும் சகித்துக் கொண்டு சிரமங்களுக்கு மத்தியில் சமூக விடுதலைக்காக போராடினார்.

உள்ளத்தால் உயர்ந்தோர்கள் நல்லோர்கள், பெரியோர்கள் போன்ற உன்னதமான மனிதர்களை சரித்திர நதியின் அணைக்கட்டுக்கள், அனுபவக்கல்வியின் பேராசிரியர்கள், அறிவெனும் நந்தவனத்தின் ஜுவாலைகள் என வர்ணித்த கவிஞர் கண்ணதாசன். அத்தகைய உயர்ந்தோர்கள் ஜனனம் ஒரு பொது விசேசமாக கருதப்படுவதில்லை எள்ற போதிலும் அவர்களின் மரணமோ மகத்தான மணி மண்டபமாக கருதப்படுகின்றன. இந்த யதார்த்தத்தை தங்கதுரை அவர்களின் இறுதிச் சடங்கில் நிதர்சனமாகக் காணக்கூடியதாக இருந்தது.

மூதூர் பள்ளிக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தங்கபுரம் என்ற கிராமமும், கிளிவெட்டி பாலத்தின் மறுபக்கம் அமைந்தள்ள தங்கநகர் கிராமமும் இந்தியாவின் அண்ணாநகர் ஏசியாட் கொலனியில் அமைந்துள்ள தங்கதுரை அரங்கமும், தங்கதுரை பூங்காவும் அன்னாரின் சேவைக்கு அடையாளச் சின்னங்களாகும்.

துணிவும், நம்பிக்கையும், ஆற்றலும், திறமையும் கொண்ட தலைவர்களை அழித்துவிட முடியாது என்பதற்கு அமரர். தங்கதுரை அவர்களின் வரலாறு சான்றாக உள்ளது. ஒரு அரசியல் ஞானியை காவு கொண்டாலும் இந்த நாட்டிலும் இம் மாவட்டத்திலும் ஜனநாயக அரசியல் உள்ள வரை அன்னாரது நாமமும், சேவையும் பேசப்பட்டுக் கொணடே இருக்கும். புகழோடு மறைந்த தலைவர்களுள் அமரர். தங்கதுரை அவர்களுக்கும் தனிப்பெரும் இடம் நிச்சயம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'மஹாபொல' புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில்...



பாராளுமன்ற மன்ற உறுப்பினராக வெற்றிவாகை சூடி
மக்களால் வரவேற்ற போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவப்பிரகாசம் துரைநாயகம்
உப தவிசாளர்
மூதூர் பிரதேச சபை

# தன்னிகரில்லா மக்கள் தலைவன்
# அண்ணன் அமரர். தங்கத்துரை

மூதூர் மக்களால் மட்டுமல்லாது திருக்கோணமலை மாவட்ட மூவின மக்களாலும் தலையில் தூக்கி கொண்டாடப்பட்ட அரசியல் தலைவர் என்றால் அது எங்கள் அண்ணன் தங்கத்துரை அவர்கள்தான். அவருடைய காலத்தில்தான் எங்கள் பிரதேசங்கள் அபிவிருத்தி அடைந்தன என்றால் அது மிகையாகாது அதுமட்டுமல்லாமல் பல ஏழைகளின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டும் என்பதற்காக பல சவால்களுக்கு மத்தியிலும் பல ஏழைகளுக்கான வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தவர் அவர். இதனால்தான் அவர் இன்றும் பல வீடுகளின் சுவர்களில் கடவுளாக வாழ்ந்து வருகின்றார்.

கிளிவெட்டியின் அடையாளமாக திகழும் அண்ணன் தங்கத்துரை அவர்கள் கிளிவெட்டி எனும் கிராமத்தில் இருந்து எந்த அரசியல் பின்னனியும் இல்லாமல் 34 வயது இளைஞனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம் சென்றிருந்தார். அவர் இந்த உலகை விட்டுப் பிரிந்து 25 ஆண்டுகள் ஆனாலும் அவர் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் இன்னும் அவரை நினைவுபடுத்திக் கொண்டுதான் இருக்கின்றன.

1970 தொடக்கம் 1997 வரையான அரசியல் வாழ்க்கையில் இருமுறை தேர்தல் அரசியலில் அமோக வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றிருந்தார் இந்த காலப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்கள், வேலை வாய்ப்புகள் என பல்வேறு பணிகளை ஒவ்வொரு திணைக்களங்களாக ஏறி, இறங்கி நிறைவேற்றியிருந்தார்.

அவர் தனது அரசியல் வாழ்க்கையில் எந்த சொத்தையும் சேர்க்காத தூய அரசியல்வாதியாகவும், உண்மையான மக்கள் பிரதிநிதியாகவும் வாழ்ந்திருந்தார். அவரைப்பற்றி எமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் சென்று இவரைப்போன்ற உண்மையான மக்கள் சேவகர்களை உருவாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். அந்தவகையில் அவர் தொடர்பான இந்த ஆவண நூல் வெளியிடப்படுவதும், அவருடைய திருவுருவச் சிலை நிறுவப்படுவதும் சிறப்பான விடயமாகும்.

எமது நீண்டகால விருப்பமும் முயற்சியும் இன்று நிறைவேறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்முகம் குகதாசன்

## தங்கத்துரை அண்ணர் பற்றிய நினைவுகள்...

நான் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஓர் ஒப்படை எழுதுவது தொடர்பாக 1974ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் பொது நிருவாக அமைச்சுக்குச் சென்றேன். அங்கு ஓர் அலுவலரோடு பேசிக் கொண்டிருந்த வேளையில், அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு அருணாசலம் தங்கத்துரை அவர்களும் அந்த அலுவலரைப் பார்ப்பதற்கு வந்தார். அவ்வலுவலர், என்னை நாடாளுமன்ற உறுப்பினருக்கு அறிமுகம் செய்தார். அன்றுதான் நான் முதல் முறையாகத் தங்கத்துரை அண்ணரோடு பேசினேன்.

அந்தச் சந்திப்பு முடிந்தபின்பு இருவரும் பொது நிருவாக அமைச்சிலிருந்து ஒன்றாக வெளியேறினோம். அப்பொழுது நேரம் நண்பகலாக இருந்தது.

"ஓர் உணவகத்துக்குப் போய் உணவு உண்போமா?" என்று கேட்டார்.

"நான் சைவ உணவு உண்பவன்" என்று கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி கிறீன் லான்ட்ஸ் சைவ உணவகத்துக்குப்போவோம்" என்று கூறி அங்கு அழைத்துச் சென்றார்.

இருவரும் ஒன்றாக நண்பகல் உணவை உண்டோம். உணவின் பொழுது எனது ஊர், எனது குடும்பம், எனது கல்வி முதலியன பற்றி கேட்டு அறிந்து கொண்டார். தனது கல்வி, குடும்பம் முதலியன பற்றியும் எனக்குக் கூறினார்.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறை நிறைநீர்" என்ற வள்ளுவர் வாக்குக்கமைய, அதாவது அறிவுடைய மேலோர் நட்பு வளர்பிறைத் தன்மை உடையதாய் வளர்ந்து வருவது போல தங்கத்துரை அண்ணர் உடனான நட்பும் வளர்ந்து வந்தது.



நான், கொழும்பில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், தங்கத்துரை அண்ணர் பொதுநலன் கருதிப் பல்வேறு அமைச்சுகளுக்கும் சலிப்பின்றி ஏறி இறங்குவதைப் பார்த்திருகின்றேன். அடிக்கடி கல்வி அமைச்சுக்குச் செல்வார். எனக்குப் பல்கலைக் கழக வகுப்புகள் இல்லாத வேலைகளில் நானும் அவரோடு செல்வேன். இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற வசதிகள் அப்பொழுது இருந்ததாக எனக்கு நினைவில்லை. பல வேளைகளில் பேருந்திலும் சில சமயங்களில் மகிழுந்திலும் பயணித்து இருக்கின்றோம்.

1977ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் உற்றார், உறவினர் மற்றும் உடமைகளை இழந்து ஏதிலிகள் ஆகிவிட்ட மலையக மக்களை கொண்டு வந்து திருக்கோணமலை மாவட்டத்திலே குடியமர்த்தி மறுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபட்டேன். தங்கத்துரை அண்ணர் அந்தப் பணிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கமும் ஊக்கமும் அளித்ததோடு அவற்றுக்கு உறுதுணையாகவும் விளங்கி வந்தார்.

1981 ஆம் ஆண்டு மாவட்ட சபைத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலிலே சிறிலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடவில்லை. இச்சூழலில் திருக்கோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே நேரடிப் போட்டி இருந்தது. ஐக்கியதேசியக் கட்சி சார்பில் திரு ரகீம் என்பவர் போட்டி இட்டார். தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் தங்கத்துரை அண்ணர் போட்டியிட்டார். கடுமையான போட்டி நிலவியது. இரண்டாயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்றுத் தங்கத்துரை அண்ணர் வெற்றி பெற்றதை அனைவரும் அறிவர்.

மேற்படி தேர்தல் பரப்புரைக்கு நேரமின்மை காரணமாகத் தங்கத்துரை அண்ணர் கட்டுக்குளம் பற்றுக்கு வரவில்லை. எனினும், கட்டுக்குளம் பற்றில் இருந்த தமிழ் வாக்குகளை ஏறத்தாழ முழுமையாகத் தங்கத்துரை அண்ணருக்குக் கிடைக்கச் செய்வதற்கு நான் அயராது உழைத்தேன். தங்கத்துரை அண்ணர், திருக்கோணமலை மாவட்ட சபைத் தலைவரான பின்பு கட்டுக்குளம் பற்று மக்களுக்கு நன்றி சொல்வதற்காக வந்தார். திரியாயிலுள்ள எமது வீட்டிலே நான்கு நாட்கள் தங்கியிருந்தார். தென்னன்மரவடி, புல்மோட்டை, திரியாய், குச்சவெளி, இரணைக்கேணி கும்புறுபிட்டி, கோபாலபுரம், நிலாவெளி முதலிய ஊர்களில் நடைபெற்ற நன்றி நவிலல் கூட்டங்களில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்தார். அவர் மாவட்டசபைத் தலைவர் என்ற நிலையில் கட்டுக்குளப்பற்று மக்களைச் சந்திப்பதற்கும் அப்பகுதி நிலைமைகளைப் பார்ப்பதற்கும் அவ்வப் பொழுது வருவார். வரும் வேலைகளில் எமது இல்லத்தில் தங்கியிருப்பார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக 1984ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நான் இலங்கையை விட்டு வெளியேறித் தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது. தமிழ்நாட்டிலே நான் ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகம் என்ற அமைப்பின் செயலாளராகப் பணிபுரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தேன். அவ்வேளையில் தங்கத்துரை அண்ணர் குடும்பத்தோடு தமிழ்நாட்டிற்கு வந்தார். தமிழ்நாட்டில் அவரது மக்கள் புஷ்பாஞ்சலி, தர்மினி, அகிலன் ஆகியோரை முதலில் பள்ளியில் சேர்ப்பதிலும் பின்னர் கல்லூரிகளில் சேர்ப்பதிலும் பங்காற்றினேன்.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தில் நான் செயலாளராகப் பணியாற்றிய காலப் பகுதியிலே ஏறத்தாழ இரண்டு இலட்சம் இலங்கைத் தமிழ் மக்கள் ஏதிலியராகத் தமிழகத்தில் தஞ்சம் புகுந்து இருநூற்றுக்கும் மேற்பட்ட இடைத்தங்கல் முகாங்களில் தங்கியிருந்தனர். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகச் செயலாளர் என்ற அடிப்படையில் அவர்களுக்கு இடருதவி வழங்குவதிலும் மறுவாழ்வுப் பணிகள் ஆற்றுவதிலும் அவர்களது பிள்ளைகளைப் பள்ளி,கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் சேர்ப்பதிலும் ஈடுபட்டிருந்தேன். தங்கத்துரை அண்ணர் இப்பணிகளுக்கு உறுதுணையாக விளங்கினார் .அவற்றில் பங்கெடுத்தார். 1987 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி முதல் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத் தலைவராகவும் பணியாற்றினார்.

1994 இல் நான் கனடா செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கனடா சென்ற பின்பும் தங்கத்துரை அண்ணரது சமூக, அரசியல் பணிகளுக்கு என்னாலான நிதி உதவியை வழங்கி வந்தேன்.அவரது தொடர்பும் நட்பும் அவர் மறையும் வரை நீடித்திருந்தது.

“இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண்” அதாவது ‘தான் மகிச்சியாக இருக்கவேண்டும் என்று எண்ணாமல், எடுத்த கருமத்தை முடிப்பதையே விரும்புகின்றவன், தனது உறவுகளது துயரத்தைப் போக்கி அவர்களைத் தாங்கி நிற்கும் தூணாவான்’ என்ற தமிழ்மறை தந்த வள்ளுவப் பேராசானின் வாக்கிற்கு அமையத் தங்கத்துரை அண்ணரது வாழ்க்கை அமைந்திருந்தது அவர் மறைந்தாலும் அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைவிற் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பொ. கந்தையா
முத்துக்குமாரசுவாமி
கோவிலடி
திருக்கோணமலை
1.07.2016

அன்புள்ள பெரியோர்களே,
தாய்மார்களே,
வணக்கம்.

மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு அருணாசலம் தங்கத்துரை ஐயாவின் 19வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் சில நினைவுகளைத் தெரிவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு நன்றி கூறுகிறேன். எனக்கு வயது 92. நடப்பது கஷ்டம் 3 வருடகாலம் வீட்டிலேயே இருக்கிறேன்.

ஐயா எனது பொதுத் தொண்டுக்கு ஊக்கமும் சேவைக்கும் ஆதரவாகவும் உதவியாகவும் இருந்துள்ளார். உலகில் விலை மதிக்க முடியாதது ஒன்று நேரம். ஐயா தனது தேவைகளையும் குறைத்துக் கொண்டு முழு நேர ஊழியராகவும் தொண்டராகவும் பணியாற்றினார்.

ஒளவைக்கிழவி நான் (என்றும் அகரக்காரம்) போன்ற எல்லாரும் நல்லாயிருக்க வேணும் என்று மக்களுக்கு உபதேசித்தார். பல நீதி நூல்களை எழுதித் தந்தார். திருவள்ளுவர் திருக்குறளை ஆக்கித்தந்தார். நாயன்மார்கள் சமய நூல்களைப் பாடித் தந்தனர். வாழ்ந்து காட்டினர். கேட்டோமா. பணம் சம்பாதிக்கும் கல்வி தான் வேண்டும் என்கிறோம். இதுதான் வாழ்க்கை.

கிராமந்தோறும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து சமயக் கல்வியையும் ஒழுக்கம் பண்பாட்டுக் கல்வியையும் நீதி நூல்களையும் கற்பிக்க வேண்டும். பெற்றோரும் ஒத்துழைக்க வேண்டும்.

தங்கத்துரை பெயருக்கேற்ற பெரியார். தங்கமான பெரியார். பேருக்கும் புகழுக்கும் பாராளுமன்றம் செல்லவில்லை. ஏழைகளுக்கும் கஷ்டப்படும் மக்களுக்கு உதவவே சென்றார். பலர் தொழில் வாய்ப்பும் பெற்று வறுமை நீங்கி வாழ்கிறார்கள்.

ஐயாவுக்கு சாதி சமயம் கட்சி பேதம் ஒன்றும் இல்லை. ஒற்றுமை இல்லாக் குடி ஒருமிக்கக் கெடும் (ஒரே மக்கள். கூடியிருக்கும்) ஒத்தால் வாழ்வோம். எங்கள் சகோதரர்களை ஐயா காட்டிய ஒற்றுமையாய் வாழ்வோம் யமனிடம் ஒப்படைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருள் மாணிக்கம் போன்ற அருமை ஐயாவை இழந்தோ
ம். ஐயாவின் உதவிகளோ பணிகளோ எல்லாம் இழந்தோம்.
சேவை செய் அல்லது செத்துமடி என்றார்
மகாத்மாகாந்தி. அன்பாக பணி செய்ய என்னை ஆளாக்
கிவிட்டு விட்டார் இன்ப நிலைதானே வந்து எய்து
ம் என்ற பராபரமே என்றார் தாயுமான அடிகளார்
காந்தியடிகள் வாழ்வியல் கிராம ராஜ்யம்
திருக்குறட்படியும் பெருவாழ்.
மக்கள் விழிப்பு வாழ்வு. பட்டின வாழ்வு.
ஆடம்பர வாழ்வு கொண்டுவரும் தாழ்வு.
ஐயாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்
இயன்ற அளவு ஐயா காட்டிய வழியில் நடந்து
ஒற்றுமையாக வாழ்வோம்

அன்புடன்.
பொ. கனகையா
காந்தி ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மண்ணின் தங்கம் அண்ணன் தங்கத்துரை.

அண்ணன் தங்கத்துரை கிளிவெட்டியில் பிறந்திருந்தாலும் கூட அவர் முழு திருகோணமலை மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தியவராவார். கிளிவெட்டியில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து பாடசாலை கல்வியை முடித்ததும் நீர்வளத்துறையில், அரச உத்தியோகத்தில் இணைந்து கடமையாற்ற ஆரம்பித்தார். ஆரம்பத்தில் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபாடு இல்லாமல் இருந்த போதும் அரச உத்தியோகஸ்தர் சங்கத்தில் இணைந்து தனது ஊரான கிளிவெட்டியிலும் அண்டைய பகுதிகளிலும் இருந்த அரச உத்தியோகஸ்தர்களின் முன்னேற்றத்தில் ஈடுபாடு காட்டி பொதுச் சேவையில் தன்னை இணைத்து கொண்டார். இவரது தமிழ் உணர்வுகள் தட்டி எழுப்பப்பட்டது அறுபதுகளின் ஆரம்பத்தில், திருமதி பண்டாரநாயக்க ஆட்சியில் திட்டமிட்டு நடாத்தப்பட்ட அல்லை, கந்தளாய் சிங்கள குடியேற்ற நிகழ்வுகளாகும். மூதூர் பிரதேசத்தில் ஏற்பட்ட இதன் தாக்கம் அண்ணன் தங்கத்துரையை இலங்கை தமிழரசு கட்சியுடன் தன்னை இணைத்து தமிழ் தேசியத்தில் பிணைந்து செயலாற்ற தூண்டியது. அன்று ஆரம்பித்த அவரது தமிழின உரிமைப்போராட்ட நடவடிக்கைகள் அன்னாரின் உயிர் திட்டமிட்டு பயங்கரவாதிகளால் பறிக்கப்படும் வரை எந்த தழும்பலும் இல்லாமல் தொடர்ந்தது. 1970ம் ஆண்டு ஒரு இளைஞனாக மூதூர் தொகுதியில் தமிழரசு கட்சி வேட்பாளராக அவர் தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலில் வென்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெற்றி விழாவில் கலந்து கொள்ள அவர் வந்த போது அந்த தேர்தலில் தோல்வியடைந்திருந்த எனது தந்தையாரை வீடு தேடிவந்து சந்தித்துபேசிய போது தான் முதல் முதலாக அன்று சிறுவனாக இருந்த நான் சந்தித்தேன். அன்பாக பாசத்துடன் அளவளாவினார்.

1970 முதல்1977 வரை மூதூர் பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூட முழு திருகோணமலை மாவட்டத்திலும் சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தது மட்டுமல்லாமல் பல இடங்களில் தமிழ் குடியேற்ற திட்டங்களையும் முன்னெடுத்து திருமலையில் எமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்தினார். அன்றைய திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரின் கனவான் அரசியலில் இருந்து வேறுபட்டு மக்களோடு மக்களாக, இளைஞர் தலைவனாக பல செயல்திட்டங்களை முன்னெடுத்தார். தமிழர் கூட்டணி உருவாகி தமிழர் விடுதலை கூட்டணியாக பரிநாமம் எடுத்து தமிழீழ இலட்சியத்தை முன்னெடுத்த போது திருகோணமலை மாவட்டத்தில் அதற்கான பிரச்சாரங்களை முன்னெடுத்து கொள்கை பரப்புரை செய்தார்.

புதிய தொகுதி பங்கீடு காரணமாக சேருவெல என்ற சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டு மூதூர் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குரிய தொகுதியாக மாறிய போது 1977 தேர்தலில் அவர் திருகோணமலை வேட்பாளர் நியமனத்தை வேண்டி நின்றார். அன்று தமிழர் விடுதலை கூட்டணியின் சார்பில் பிரேரிக்கப்பட்ட மூன்று வேட்பாளர்களில் அண்ணன் தங்கத்துரையே மக்கள் ஆதரவு பெற்ற வேட்பாளராக திகழ்ந்தார். ஆனால் சில பல காரணங்களால் திரு இரா சம்பந்தன் அவர்கள் வேட்பாளராக நியமிக்கப்பட்டார். இதற்கு சொல்லப்பட்ட ஒரு காரணம் தந்தை செல்வா விரும்பிய வேட்பாளர் திரு சம்பந்தன் என்பது. வேட்பாளர் நியமன தெரிவு குழுவில் இருந்த உறுப்பினர்களுக்கெதிராக தமிழர் விடுதலை கூட்டணி ஆதரவாளர்கள் கிளர்ந்தெழுந்து அவர்களது மோட்டார் வாகனங்களுக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E-mail: amfs1927@gmail.com Web: www.amirthalingam.com

அவை முன்னேறாதவாறு தடுத்து சத்தியாக்கிரகமிருந்தனர். தனது ஏமாற்றத்தையும் பொருட்படுத்தாது கட்சியின் கட்டுப்பாடு பேணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அண்ணன் தங்கத்துரை தனது ஆதரவாளர்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி அன்றிலிருந்து திரு சம்பந்தனின் வெற்றிக்காக உழைத்தார். எந்த காலத்திலும் அண்ணன் தங்கத்துரை இதையிட்டு கலங்கியது கிடையாது. அன்றும் என்றும், எனது தந்தையார் இறக்கும்வரை ஒரு நல்ல சகோதரனாக உடன் பணியாற்றிய ஒரு தலைவனாகவே திகழ்ந்தார். 1981ம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் தலைமை வேட்பாளராக நியமிக்கப்பட்டு பெரு வெற்றி ஈட்டி திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபையை இரண்டு வருடங்கள் கொண்டு நடாத்தினார்.

மாங்குயில் கூவும் பூஞ்சோலை எம்மை பூட்டி வைக்கும் சிறைச்சாலை என 1978ல் எட்டு மாதங்கள் சிங்கள சிறைச்சாலையில் தனது சகோதரருடன் அடைக்கப்பட்டார். 1983ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னர் திருகோணமலையிலேயே தங்கியிருந்து எல்லாவித நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ்மக்களை பாதுகாத்து வந்தார். 1985ல் வடக்கு கிழக்கில் அரச பயங்கரவாதத்துக்கு உள்ளாகி ஆற்றொணா துன்பங்களை அனுபவித்து வந்த தமிழ் இளஞர்களின் நிலைமைகளை சர்வதேச மன்னிப்பு சபை உட்பட பல மனித உரிமை அமைப்புகளுக்கும் வெளிநாட்டு தூதராலயங்களுக்கும் எடுத்தியம்பியமையால் பிழையான செய்திகளை" பரப்புவதாக அரசாங்கத்தால் குற்றஞ்சாட்டப்பட்டு கைதாகி திருகோணமலை கோட்டையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளானார். தொண்ணூறு நாட்களின் பின் விடுதலையாகி மீண்டும் கைதாகும் சூழ்நிலையும், உயிருக்கே ஆபத்தும் ஏற்படும் நிலையில் குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் வசித்து வந்த தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்களுடன் அன்னாரும் சேர்ந்து தன் பங்களிப்பை நல்கினார். சென்னையில் பல தடவைகள் அவரை பல சந்தர்ப்பங்களில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அன்னை இந்திரா காந்தியின் கட்டளையை ஏற்று அனைத்து கட்சி மாநாட்டுக்கு தமிழர் விடுதலை கூட்டணி 1984ல் சென்ற போது தமிழரசு கட்சியின் பிரதிநிதியாக அன்னாரும் அந்த கூட்டங்களில் கலந்து கொண்டு தன்பங்கை ஆற்றினார். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து ஏனைய தலைவர்களுடன் 1988இல் நாடு திரும்பினார். 1994ம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் போட்டியிட்டு அதி கூடிய விருப்பு வாக்குகளை பெற்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரானார். பல சதிகளின் மத்தியிலும் தன்னால் முடிந்தளவு தனது கடமைகளை நிறைவேற்றினார். தேர்தல்களில் தோற்ற போதும் சரி வென்ற போதும் சரி தான் சார்ந்த இயக்கத்திற்கும் இனத்திற்கும் என்றும் விசுவாசமாகவும் நேர்மையாகவும் பணியாற்றி இறுதி வரை வாழ்ந்தார். மிக நெருக்கடியான கால கட்டங்களில் கூட மக்களை முன்னிறுத்தி செயல்பாடுகளை மேற்கொண்ட தலைவன் அண்ணன் தங்கத்துரை அவர்கள். அவர் புகழ் என்றும் வாழ்க. இந்த சந்தர்ப்பத்தில் அவர்களது ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்படும் இந்த நினைவு மலர் வெளியீடும் சிலை நிறுவுதலும் சிறப்பாக நிகழ எனது வாழ்த்துக்கள்.

**Dr. அமிர்தலிங்கம் பகீரதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகசபாபதி சந்திரதேவா
Consultant Anaesthetist King's College Hospital
NHS Foundation
Trust London UK.

## அன்பான, பண்பாண மனிதர் அண்ணன் தங்கத்துரை

அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்விற்கு நான் இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு மிகவும் மனநிறைவைத் தருகிறது. அண்ணன் தங்கத்துரை ஒரு அன்பான, பண்பான மனிதர். எனது மூத்த சகோதரர் அம்சதேவா அண்ணன் தங்கத்துரையைப் பற்றி அடிக்கடி எங்கள் வீட்டில் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பார். இது நடந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் என நினைக்கிறேன். எனது சகோதரரும், அவரது நண்பர்களும் அண்ணன் தங்கத்துரையைச் சந்தித்து சமூக அரசியல் நிலைமைகளைப் பற்றி அடிக்கடி பேசி இருக்க வேண்டும். அவ்வாறான சந்திப்புகளே எனது சகோதரருக்கு அண்ணன் தங்கத்துரை மீது மிகுந்த அன்பும், மரியாதையும் ஏற்படக் காரணமாக அமைந்தது. என் அண்ணாவின் பேச்சு எனக்கும் திரு.தங்கத்துரை அவர்களைச் சந்தித்துப் பேசும் ஆவலைத் தூண்டியது. நான் தங்கத்துரை அண்ணாவைச் சந்தித்தபோது எனக்கும் அவர் மீது மிகுந்த அன்பும், மரியாதையும் ஏற்பட்டது. அரசியலில் ஈடுபட முன்பு அவர் நீர்ப்பாசனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். 1977 இல் முதல் முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பதவிக்காலம் முடிவடைந்த பின் தனது இன மக்களின் உரிமைகளை வென்றெடுக்க சட்டப்படிப்பு உதவும் என்பதை உணர்ந்து இலங்கை சட்டக்கல்லூரியில் சேர்ந்து தன் கடும் முயற்சியால் பரீட்சையில் சித்தி அடைந்து 1980 இல் சட்டத்தரணியானார். அவர் மனதில் எவ்வளவு இலட்சியங்களைச் சுமந்து தன் இடைவிடா முயற்சியால் அவரது 44 ஆவது வயதில் இந்தப் பட்டத்தை வென்றெடுத்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வயது படிப்புக்கு ஒரு தடையல்ல என்பதை எமக்கு உணர்த்திய அன்னாரின் மீது மென்மேலும் மதிப்பும், மரியாதையும் வளர்கிறது அல்லவா?

அவர் அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும், சிரித்த முகத்துடனும் பேசுவார். உள்ளதை உள்ளபடி சொல்வார். அவருடன் பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரிவதில்லை. அவரது அன்பான சுபாவத்திற்கு 'தங்கத்துரை' என்ற அவருடைய பெயர் மிகப் பொருத்தமானது. அவர் திருக்கோணமலையில் வாழ்ந்த அனைத்து தமிழ் மக்களின் இதயங்களையும் வென்றெடுத்தார். திருமலை வாழ் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது இரவு பகலாக உழைத்தார். இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் மிகவும் பாடுபட்டார்.

எமது உறவு மேலும் வளர்ந்து அவரது மகள் புஷ்பாவுக்கும் எனது தம்பி மதனதேவாவிற்கும் இடையில் ஏற்பட்ட திருமண பந்தத்தால் தங்கத்துரை அண்ணா எங்கள் உறவினர் ஆனார். அப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதர் எங்களுடன் இன்னும் பல பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து மக்களுக்கு சேவை செய்து இருக்கவேண்டும். எமது சமுதாயத்தில் உள்ள ஆயிரக்கணக்கான நலிவுற்ற மக்கள் அவரது சேவையால் நலன் அடைந்து இருக்க வேண்டும். 5ம் நாள் ஆடிமாதம் 1997 ஸ்ரீசண்முக வித்தியாலயத்தில் நடைபெற்ற கொடூரச் செயல் எனக்கு தாங்க முடியாத மன வேதனையைத் தந்தது. 25 வருடங்கள் ஆகிவிட்டாலும் மனதில் அதே வேதனை இப்போதும் இருக்கத்தான் செய்கிறது.

அமரர் தங்கத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக நீங்கள் அவரை நினைவு கூறும் 25ஆம் ஆண்டு நிகழ்வுகள் நிறைவாக நடக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ranganathan Srinivasan
Attorney-at-law (Sri Lanka) (Retired)
NSW, Australia. (Formerly of Colombo, Sri Lanka)
28 May 2022

# Thangannaa:
## Pleasant Memories of a Great Soul, Friend and Selfless Leader

Although he was a close friend for many years I called him "Anna" or more precisely "Thanganna" conjoining his name Thangathurai with "Anna" which aptly describes our relationship.

In this write-up I go down cherished and pleasant "Thanganna Memory Lane"

When penning this, I greatly miss another close friend, brother and partner in legal practice, late S. Perinpanayagam, Attorney-at-law (popularly called "Perri) as almost always I met Thanganna (Anna) with Peri after Anna and I returned to Sri Lanka at the end of our stint in exile in Chennai where we took refuge following the 1983 Black July holocaust. In fact, after our return, we three were always seen together. Our other



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

partner in the legal practice was A E Pararajasingham (Para), who too was a close friend of Anna and often joined us over drinks and meals.

In Anna I found a balanced right-thinking mind, never overtaken by emotions, anger or hatred. He once told me that his mentor and Guru was late Mr. S. Kathiravetpillai, ITAK MP for Kopay in Jaffna.

Although a champion of Tamils' rights, Anna never gave way to racism or hatred of the majority race, only despising their racist policy but not the persons. In fact he had close friends among the Sinhalese and Muslims, politicians and others, some of whom were diametrically opposed to his Federal Party (ITAK) and TULF policies. He maintained good friendly relations with Muslim Leaders particularly of the Eastern Province. He was keen to establish Tamil-Muslim unity and cordial relationship. He stood steadfastly for the merger of Eastern and Northern Provinces as a Tamil Homeland.

Public servants with whom he interacted as an MP to get things done for his electorate and its people, too treated him as a close friend. In this he had the advantage of being fully fluent in all three languages, spoken and written.

Public servants, mainly Sinhalese, held him in high esteem as he mingled with them as a friend and not as a demanding authoritative MP. The higher officers fondly called him "Thangey". They were taken up when Anna used to recognize and go and talk to them even when they were transferred to powerless positions (such as the pool) with changes of Governments. They told him that he is the only MP who so recognizes them even when they are "pushed to a corner." In return they too helped him get things done for his electorate, even when he was not a parliamentarian.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was always a simple and unassuming person. Even when he was an MP he was not hesitant to walk or travel by a hired three wheeler (auto) without security, which he often did. He served all the people in his electorate, Tamils, Sinhalese & Muslims and of all strata and casts.

I also found in him a tactful and practical down to earth personality. Although physically short in height, he stood tall as a simple, righteous, honest, forthright political leader with deep foresight. Indeed, deep within my heart, I regret that we do not have his most needed leadership at this crucial time for the country in general and Tamils in particular.

I found him to be a family man too in spite of his onerous duties as a political leader. On many occasions, when we were in Chennai, he used to discuss with me about the education and well-being of his children. He was much concerned about their education as we were living in uncertain times and circumstances.

## His Services to the Community in India

I interacted closely with Anna when we were living in exile in Chennai after the Black July pogrom; we closely worked with S.C.Chandrahasan (Chandra) in the Refugee Organization OfERR (Organization for Eelam Refugee Rehabilitation) and the Human Rights organization, PROTEG (Organization for Protection of Tamils Eelam from Genocide & other Crimes) of which Chandra was the founder and leader.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As many years have passed and my memory being somewhat confused owing to old age (81) I could pen down only some sketchy memories etched in my mind regarding Anna's services to the Tamil community in India.

Anna and I drafted and printed a booklet titled, if my memory is correct, "Tamil Attempts at Peaceful Co-existence and Sinhala Perfidy".

This booklet outlined the various attempts made by Tamil Leaders and particularly, pacts entered into by Thanthai Chelva (on behalf of ITAK) and SWRD Bandaranaike and the Dudley-Chelva Pact and promises & undertakings made, and how they were breached/torn off. My recollection is that this booklet was distributed to the political leaders in Tamil Nadu and the diplomatic missions in Chennai.

Each year Anna and I were selected by Chandra to get to New Delhi to meet the Political Leaders, Ministers, MPs and others such as Newspaper Editors and Columnists and canvass their support for the Sri Lankan Tamils' cause. We were able to get easy access to the Parliament House when Anna introduces himself as a former MP of Sri Lanka; he tactfully mumbles the word "former", so the officials get the impression that he was a current MP even at that time. This is an example of his being a tactful and practical person.At that time, the Indian Congress Party was in power and Rajiv Gandhi the Prime Minister. In New Delhi, we met parliamentarians of all political parties and hues, of Tamil Nadu and Northern India.

To the best of my recollection, the following are **some** of the political leaders we met in New Delhi: Jaswant Sinha, Vajpayee, Pranab Mukherji and the Leader of one the Communist Parties, possibly CPM, who was from Kerala and whose name I am unable to recollect. There



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

were many other important political personalities we met and their names and details have faded from my memory.

During that period, Y. Gopalaswamy (Vaiko) was a DMK MP in the Federal Parliament. We had some pleasant meetings with him. He too, like Anna, was a person who genially mixed with all leaders in Parliament irrespective of their political leanings. He was instrumental in getting us appointments with some North Indian Leaders. He fixed those appointments over the phone; and we noticed that he spoke to them genially cracking jokes as though they were intimate buddies.

One incident is etched in my mind: we met Mr. Jaswant Sinha MP at his residence in the early morning by appointment at his residence and he talked with us over tea served in his garden. Parliament was in session on that day and he was to proceed to Parliament after meeting with us; he requested us to draft some questions regarding the ethnic issue in Sri Lanka which he proposed to ask in Parliament to get clear answers from the Government Ministers about Government's approach and policy on our issue. Anna and I sat and drafted the questions. Anna knew the format as he himself had been a Parliamentarian. Later we learnt that Jaswant Sinha did ask those questions in Parliament.

We met Editors and Columnists (writing on our Tamils' issue) of leading Indian journals such as The Hindu, Times of India etc. They were all sympathetic and listened to us patiently. Anna was able to clear all their doubts and misunderstandings and give them a clear picture regarding the intricate Tamils' Issue and our decades long struggle in Sri Lanka. We made this trip to New Delhi twice, once every year and during the winter sessions of parliamentAnna's service to our community rendered in India, particularly, in Chennai and more importantly, New Delhi, is of historical importance. It should be indelibly recorded in the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

history of the Sri Lankan Tamils' struggle for equality and recognition as a nation.

## After Our Return to Sri Lanka

Perri and I used to drop in and see Anna, almost daily, on our way back home from our office in Hulstdorph, at the then TULF Office in Thimbirigasyaya (where Anna and Leader Mr. Sivasithambaram were also living) and later at the MPs quarters in Madiwela, close to the parliament house. If we were unable to meet on any particular day, we get in touch over the phone, without fail.

Anna used to discuss with us various topics and gets our suggestions for his speeches in parliament and other places. Often he gets me to draft speeches, memorandums and letters, as he very much appreciated my wordings. When I ask "Why me, your drafts are excellent" he quips, "No, I want your Midas touch". However, I have now lost that talent and am now struggling to recollect appropriate words, both in Tamil and English.

After he became an MP, Anna used to come over to my residence in his official vehicle, sits with me and gets the drafts done, sometimes taking hours. I give below some of what Anna told me and incidents relating to him that are forever etched in my mind.

This was an incident in the parliament house when the UNP was in the opposition. When Anna was seated in the canteen or some other place in the parliament house, a UNP MP had brought a motion or resolution which was agreed to be signed by all parties in the opposition. It had been signed by many leaders including Thanthai Chelva. Anna carefully read through and told the signature collecting MP that he cannot sign the document; the UNP MP was aghast and asked how he could refuse when his leader has signed; Anna had replied, I will speak to my



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

leader. He then met Thanthai Chelva and explained that their Party should not subscribe to the document as, although it sets out many necessary reforms and amendments to some acts, it had no mention of Tamils' problems or rights; as was his wont, Thanthai carefully listened to Anna's analysis and requested Anna to call all the Party MPs to the party room in the parliament house, which was done; when Thanthai narrated Anna's objections to the party signing the document, there was angry response from most MPs saying how can a new comer to the party who is from a different camp (reference to Anna's earlier leftist leaning) raise such objections and especially when the Leader has already signed. Thanthai, again true to his innate character, said in a calm voice "I am not infallible; Thangathurai is right; we should not subscribe to this document; I will speak to JR and withdraw my signature" or words to that effect. Anna related this incident to us in praise of Thanthai Chelva, a leader who listens patiently even to the junior members and also readily acknowledges mistakes or errors in judgement.

I remember the occasion when Anna was invited to be the Chief Guest at an event in a Sinhala School in Trincomalee. A Ven. Buddhist Monk, who was the chief organizer (probably from the Parent-Teachers Association) came over to Anna's official residence and invited him. Anna was rather hesitant as it was a Sinhala school and he could be misunderstood by Tamil voters and tried to suggest some other personalities like famous cine actor Gamini Fonseka who was the then Governor of Eastern Province. But the Ven. Monk would not take no for an answer and conveyed that all teachers, parents and students were adamant that Anna should be the Chief Guest. Finally Anna agreed. He discussed with us his speech and it was decided he would not refer to his being a Tamil or to the ethnic issue but generally about the electorate and people, particularly students and education.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After the event, back in Colombo, he told us he spoke in Sinhala and. except for a passing mention at the start about his being a TULF MP, he devoted his speech entirely to education; how from a village area he was able to come up by hard work; he was the first in his area to enter government clerical service and work in the Irrigation Department. Likewise he encouraged the students to take education seriously and promised that as the MP of the area he would give all possible assistance required by the school and they were free to approach him at any time. When the event was over Anna was surrounded by large number of students wanting to converse with him all about education and related matters like sports etc. It is indeed ironical that Anna was later assassinated in a similar event but in a Tamil/Hindu School and in Trincomalee itself.

Another happening that is etched in my mind relates to a General Manager of Railways (GMR) during late 1996 and early 1997. I forget his name; he was a Sinhalese and hailing from Kandy. He was unfairly suspended from his post owing to some political pulls, with a view of ultimate dismissal; but he continued to occupy his official quarters, a modest house, just adjoining the Slave Island Railway Station. Our legal firm was the Instructing Attorneys in a case filed on his behalf in this matter. He was also a simple extremely friendly outspoken gentleman and became close to Perri and me, and quite often invited us to his home for drinks and dinner. On one such occasion he asked us whether we know Mr. Thangathurai MP of Trincomalee. We said we know him very intimately. He said he was very much indebted to him and keen to meet him. He explained that, previously when he was stationed in Trincomalee, Anna was very helpful in many ways, in spite of him being a Sinhalese and that he cannot forget Annaa's help in his capacity as the MP and his friendship. We un-hesitantly told him that we will get Anna to come and join him at dinner in his house. When we mentioned this to Anna he



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

readily agreed and was happy to meet GMR. A convenient day and time was fixed and Anna and we enjoyed the hospitality of GMR at dinner in his quarters. GMR was extremely happy in meeting Anna. All of us discussed even the ethnic problem in a candid and frank manner.

Ironically it was the same GMR who informed me about Anna's assassination within minutes of the fateful event. First, some background facts relating to this sad happening.When Anna told me that he was proceeding to Trincomalee to attend an event at Sri Shanmuga Hindu Ladies College, I asked him whether it was safe, as previously there were some indications that he may be targeted by a particular militant group (I do not wish to name it). Anna told me that all signals he had received from that quarter was that he would be safe and there was no animosity against him. Perri and I were however worried.

Even when Anna happens to be in Trincomalee, I used to call him every day over the phone. On that day (5th July 1997) around 7 O'clock or so in the evening, forgetting that he would be attending the school function, I called his Trincomalee residence. A gentleman answered and said he has gone for the school event and had not returned. But while he was speaking I heard the scream of a lady. The person in the line hurriedly said, he will cut the line and call later. I was confused but did not call back. About half an hour or so later, GMR called me and very hesitantly said "Srini.....there has been a bomb blast..." I said "Oh my God, was it in Fort or near your quarters? Are you all safe?" He said "No Srini....it is in Trinco...; my heart sank fearing the worst, and asked, "Is it Thanga" and he said "yes" and that Anna succumbed to his injuries. He had been informed by the Railways Engineer in Trincomalee (he mentioned a Tamil name) whose wife was a doctor at the hospital and was on duty when Anna was brought there after the blast and shooting



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and had immediately informed her husband, who in turn immediately conveyed it to GMR.

For the funeral, Mukunthan, who was working in the TULF office and much attached to Anna and closely known to me, had organized a van for many of us to travel to Trinco; Perri and I and some others joined the van at the TULF Office in Thimbirigasyaya in the early hours of the morning. Mukunthan also accompanied us. As the van was proceeding from the office towards the main Havelock Road, a tall man came running waving his hands signaling the van to stop. He was recognized as a former police security officer assigned to Mr.Sivasithamparam but then transferred out of that unit. He said he knew Anna very well, liked him a lot and he must attend his funeral; we accommodated him in the front seat of the van. During that period there were lots of check-points and most often vehicles were stopped and occupants' identity cards were checked and questioned. We had no such problems as this officer showed his police identity card and told them that we were his people. We were thus able to reach Trinco in time.

At the funeral, when the procession was proceeding from the Trinco Town Hall to the cemetery, the main banner at the beginning of the procession was held on one side by this officer and by me on the other. And my "Thanganna Memory Lane" narrative ends here but not his pleasant memories which will remain till my last breath. We all can find solace in the definite belief and conviction that Anna will be at the lotus feet of God enjoying eternal bliss.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சா.செ.ச.இளங்கோ
சட்டத்தரணி

## மக்களின் மனதை வென்ற தலைவன்

கிழக்கிலங்கையின் மூத்த பெரும் அரசியல்வாதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.தங்கத்துரை அவர்கள் நான் சென்னையில் இருந்தபோது, அவரும் சென்னைக்கு புலம்பெயர்ந்திருந்தார். நான் 1985 முதல் 1994 வரை அவருடன் நேரடியான தொடர்பினை கொண்டிருந்தேன். அவர் எனது தந்தையான திரு.சா.செ.சந்திரகாசன் அவர்களின் நண்பருமாக இருந்தார். இந்த காலப்பகுதியில் தமிழகத்தில் புலம்பெயர்ந்திருந்த இலங்கைத் தமிழர்களின் உரிமை போராட்டத்திற்கு ஆதரவாக இந்திய மண்ணில் ஆதரவு திரட்டல் பணிகளையும் மற்றும் அரசியல் கலந்துரையாடல்களையும் நடாத்துவதிலும் பெரும் பங்காற்றியிருந்தார்.

1984ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஈழ ஏதியர் மறுவாழ்வு கழகத்தின் பணிகளிலும், 1986 ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ஈழத் தமிழர் பாதுகாப்பு கழகத்தின் செயற்பாடுகளிலும், எனது தந்தையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து அயராது உழைத்தவர்களில் அமரர்.தங்கத்துரை அவர்கள் குறிப்பிட்டு சொல்லக் கூடியவராக இருந்தார்.

எனது சிறுபராயத்தில் அவரை எப்பொழுதும் சிரித்த முகத்துடன், உறுதியான மனமுடைய தெளிவான சிந்தனையுள்ள செயல்வீரராகவே உணர்ந்திருக்கிறேன். அவருடைய மகன் திரு.த.அகிலன் அவர்கள் நான் கல்விகற்ற பாடசாலையில் படித்தமையால், அவரின் மனைவி மற்றும் அவரின் புதல்விகளுடனும் எனக்கு அறிமுகம் இருந்தது. 1997ஆம் ஆண்டு இடம்பெற்ற அவருடைய படுகொலை, எனது தந்தையார் உட்பட இந்திய வாழ் புலம்பெயர் தமிழர்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது. அத்துடன் திருக்கோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு அவருடைய மறைவானது பெரும் சோகத்தினை ஏற்படுத்தியது.

அமரர்.தங்கத்துரை அவர்களைப் பற்றி சிந்திக்கும் போது அவருடைய ஆதரவாளரும், அமரர்.தங்கத்துரை அவர்களின் காவியத்தினை எழுதிய மூதூரைச் சேர்ந்த கவிஞர்.அனஸ் அவர்களை நினைவுகூருதல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசின் தந்திரோபாயமான செயற்பாடுகளினாலும் பல போராட்டங்களிலும் உணர்வுகளின் தூண்டல் காரணமாக ஏற்பட்ட துயர்ச் சம்பவங்களினால், தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லீம் சமூகத்துடனான உறவுகள் பாதிக்கப்பட்ட நிலையிலும், அமரர்.தங்கத்துரை அவர்கள் இன்றும் தமிழ் பேசும் இரு சமூகத்தினர் மத்தியிலும் நீங்காது நிலைத்திருப்பது அமரர்.தங்கதுரையின் தீவிர ஆதரவாளரான கவிஞர்.அனஸ் அவர்களை சந்தித்தபோது அறியக்கூடியதாக இருந்தது.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அமரர்.தங்கத்துரை அவர்களை பற்றி, திருமலையின் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான திரு.சச்சிதானந்தம் ஐயா அவர்கள் கூறுகையில், 1970ஆம் ஆண்டு தேர்தலின் பின்பு அப்போதைய ஐக்கிய முன்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசாங்கம் புதிய குடியரசு யாப்பு உருவாக்கத்தினை மேற்கொண்டது. இதன் போது ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும், தமிழரசுக் கட்சிக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனால் தமிழ் மக்கள் அரசிடமிருந்து மிகவும் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. அப்போது தனது தொகுதி மக்களின் அரசகருமங்களை பூர்த்தி செய்வதற்கு தனது தனிப்பட்ட தொடர்புகளை பயன்படுத்தி அயராது பாடுபட்டவர் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

1977ஆம் ஆண்டு தேர்தலில் திரு.இரா.சம்பந்தன் அவர்களுக்கு ஆசனம் வழங்கப்பட்ட போது அதனை உளமார ஏற்று 1981ஆம் ஆண்டு மாவட்டசபைத் தலைவராகி மீண்டும் மக்களுக்கு சேவை புரிந்தார். அத்துடன் 1983ஆம் ஆண்டு கலவரத்தின் பின் தமிழர்விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தலைவர்களும் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த போதும், அமரர்.தங்கைத்துரை அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்காக பணியாற்றிக் கொண்டிருந்தார். 1985ஆம் ஆண்டு அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் அவரை கைது செய்ய ஆணை பிறப்பித்த பின்பே இந்தியாவுக்கு புலம்பெயர்ந்து சென்றார்.

1994ஆம் ஆண்டு மீண்டும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவரின் அகால மரணம்வரை தைரியமாகவும், உறுதியாகவும், பலதரப்பு மக்களுக்கு மத்தியிலும் பல சவால்களுக்கிடையேயும், மக்களுக்கு நட்புடன் தனது சேவையை செய்த மாபெரும் தமிழ்பேசும் மக்களின் தலைவராக இருந்தார். இன்றுவரை திருமலை மக்கள் அவரை நேசிப்பது மெய்சிலிர்க்க வைக்கின்றது.



**பிரதி அமைச்சர் ஜனாப். எம்.சி. அபூபக்கர் மற்றும் அரச அதிகாரிகளுடன் அமரர்.அ.தங்கத்துரை அவர்கள்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர்,
கல்வி அமைச்சு, வ.கி.ம

## ஏன் சென்றாய் நண்பா...

நண்பன் தங்கதுரைக்கும் எனக்கும் ஏற்பட்ட உறவு என் வாழ்நாளின் சுவாரஸ்யமானதும் முக்கியமானதுமான பக்கங்களைச் சார்ந்தவை.

அவரை நான் 1970 ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் பயிலுனராக அவர் கடமையாற்றிய கல்வி அமைச்சில் சந்தித்தேன். மலர்ந்து வரும் பாராளுமன்ற உறுப்பினர் என நண்பனும் நிர்வாக சேவை அதிகாரி என நானும் சந்தித்த அந்த முதல் சந்திப்பே பின்னாளில் எங்களிடம் ஏற்பட்ட உறவிற்கு வித்திட்டது எனலாம். அந்த வருடமே நண்பன் தங்கத்துரை திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளராக பாராளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். நாளடைவில் எங்கள் நட்பு இறுக்கமடையத் தொடங்கியது. அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் நானும் திருக்கோணமலை மாவட்டத்தில் நிர்வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை அதிகாரியாக கடமையாற்றுவேன் என்று விளையாட்டாகக் கதைத்தது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. நாம் கதைத்தது போல் அவர் மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் நான் திருக்கோணமலை மாவட்டத்தின் காணி அபிவிருத்தி அதிகாரியாகவும் அந்த வருடமே ஒன்று சேர்ந்தோம்.

எங்கள் உறவு நாளாந்தம் கடமை நிமித்தமும் நட்பு ரீதியாகவும் வலுவடைந்தது. என் வாழ் நாளில் பல அரசியல்வாதிகளோடு தொடர்பு கொண்டிருந்தேன். அவர்களுள் ஒரு சிலர் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டிருந்தார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களில் நண்பன் தங்கத்துரை முதன்மையானவர் என்று கூறலாம்.

மக்களோடு, மக்களுக்காக நின்ற பெரும் மனிதன் என் நண்பன் என இன்றும் சிறிய இறுமாப்போடு கூறிக் கொள்வேன். என் இனிய பேரப் பிள்ளைகள் ஐவருடனும் நான் பகிர்ந்து கொள்ளும் கதைகள், விடயங்களில் இதுவும் ஒன்று!

திருக்கோணமலை மாவட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளராக நான் கடமையாற்றிய போது விடுதலைப் புலிகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட கரும்புலிகள் தினத்தன்று சண்முக வித்தியாலத்தில் இடம் பெற்ற ஒரு நிகழ்விற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அந் நிகழ்வின் பிரதம விருந்தினராக நண்பன் தங்கத்துரை அழைக்கப்படிருந்தார். கரும்புலிகள் தினத்தன்று இவ்வாறான நிகழ்வுகள் தடைப்பட்டிருந்த காலம். அதனால் அந்நிகழ்வுகள் ஒன்றிலும் நான் பங்குபற்றவில்லை. வழமை போல கல்வி அமைச்சில் அமைக்கப்படிருந்த பூப்பந்தாட்ட மைதானத்தில் நான் விளையாடிக் கொண்டிந்த போது குண்டு வெடித்த பெருஞ் சத்தம் நகரை உலுக்கியது. சற்று நேரத்தில் எனது அமைச்சிற்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. இடியெனச் செய்தி இறங்கியது. சில கணங்களில் வைத்தியசாலையில் நின்றேன். அங்கு நான் கண்ட நண்பன் தங்கத்துரையை என் ஆயுளுக்கும் மறவேன்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனின் சேவை இவ்விதம் நிறுத்தப்பட்டது ஏற்றுக் கொள்ளப்படவே முடியாத ஒரு விடயம். அவர் குடும்பம், சமூகம், உற்றார் உறவினர், நண்பர் என பரந்த வட்டத்தில் நீங்கா வெறுமையை விட்டுச் சென்ற அந்த இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று.

நண்பன் இருந்திருந்தால்.......

பல முறை நினைத்ததுண்டு.......

கால ஓட்டத்தில் பற்பரிமாண சதுரங்கங்களில் சிக்கியவர்கள் நாம் என்பதிற் சந்தேகமேயில்லை என்பேன். நாமாக, நம்மை வைத்து, நமக்காக, நாமேயாக எனக் காரணங்கள் நீள்கின்றன.

இன்னமும் கூட சற்றே தளராமல் தந்திரோபாய வலைகள் புனைந்த வண்ணமே ......

என் சந்ததியினர் காண விளைந்த, விரும்பிய கல்வியூடான நல் மாற்றங்கள் சகலரையும் சென்றடைந்தால் புரிதல்கள் பல புருவங்களை உயர்த்தும் என்பதுடன் அவை அம் மாற்றங்களை ஆரோக்கியமான சந்ததியுட் பரப்பும், பரப்ப வேண்டும் எனும் ஆவலுடன் அதனை என் நண்பன் தங்கத்துரை நினைவாகச் சமர்ப்பிக்கிறேன்..........

எனினும் நண்ப, ஏன் சென்றாய் எனும் என் வினா விடையில்லாமலே......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமரர். அ.தங்கத்துரை அவர்களின் 25வது ஆண்டு நினைவையொட்டி மூதூர், கிளிவெட்டியில் நிறுவப்பட்ட அமரர் அவர்களின் சிலைத்தோற்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர் இராச மதிப்பிற்குரிய
மகாராஜா ஸ்ரீராஜசேகரா
(பேரறிஞர் மருத்துவர் க. பாலசுப்பிரமணியம்
(முன்-சுதேச மருத்துவ மாகாணப் பணிப்பாளர் வ.கி.மா)

## தங்கத் திருநகரின் தலைமகன் தங்கத்துரை

இலங்கைத் தமிழ் மக்களின் இனிய நண்பன். முத்தூரின் முத்து. மக்களின் முதல்வன், திருமிகு கோணமலையின் தானைத் தளபதி, பெருமகன் தங்கண்ணா. அமைதியான தோற்றமும் அசையாத கொள்கையும் கொண்ட கோமான்.

காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை மக்கள் அவருடைய வீட்டில் அலைமோதும். இருநூறுக்கு மேற்பட்ட மக்கள் தினமும் அவரைச் சந்தித்து தமது குறைகளை தேவைகளை எடுத்துரைப்பர். எல்லோருடைய கோரிக்கைகளையும் இன்முகத்துடனும் அன்புடனும் கேட்டு ஆவன செய்து கொடுப்பார். ஒரு போதும் முகம் சுளிக்கவோ கோபப்படவோமாட்டார். தமிழ் சிங்கள சோனகர் எல்லோரும் மொழி வேறுபாடோ மதவேறுபாடோ இன்றி வந்து சந்தித்து தேவைகளை நிறைவேற்றிய மகிழ்ச்சியுடன் செல்வர். இவை நான் கௌரவ அ.தங்கத்துரை பா.உ வீட்டில் நேரில் கண்ட சில காட்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" என்ற குறளுக்கு சான்றானவர்.

1980களில் மாவட்டசபைக் காலத்திலிருந்து நம்மிருவருக்கும் நட்பு ஏற்பட்டது. ஏற்படுத்தியவர் அண்ணா அமுதர். அஞ்சாத சிங்கம் தங்கண்ணா. அரசியல் வேலைகள் சம்பந்தமாக வந்து மூளாயில் எங்கள் வீட்டுக்கு அருகில் இருந்த அண்ணா அமுதர் வீட்டில் தங்குவார். அக்காலத்தில் எங்கள் வீட்டுக்கு வருவார். அரசியல் நிலைமைகளைப்பற்றி பேசுவோம், விவாதிப்போம். பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் ஆக தெரிவு செய்யப்பட்டார் வேலைப்பளுவும் அதிகமானது.

1996ல் இடமாற்றத்தில் திருக்கோணமலைக்கு வந்தேன். தங்கண்ணையை சந்தித்து அகத்தியர், இராவணன் வரலாறு திருக்கோணமலையுடன் இணைந்தது. அது பற்றி ஆராய்ச்சி செய்யவும், தடயங்களை பார்வையிட்டு ஆய்வு செய்து ஆவணப் படுத்துவதற்காகவும் 5 வருடத் திட்டத்தில் வந்துள்ளேன் எனக்கூறினேன். திருக்கோணமலை சைவ தமிழ் வரலாற்றை ஆய்வு செய்ய வேண்டும் ஆவணப்படுத்த வேண்டும் என்று நானும் ஆர்வமாக உள்ளேன். உங்கள் ஆய்வுகளுக்கு தேவையான உதவி ஒத்தாசைகளை நான் வழங்குவேன். என்னுடன் தொடர்பில் இருந்து ஆய்வின் முன்னேற்றம் பற்றி தெரியப்படுத்தும்படி கூறினார். அவர் திருக்கோணமலை வீட்டில் நின்றால் மாலையில் என்னைத் தொலைபேசியில் அழைப்பார். இரவு 8 மணிக்கு அவருடைய ஜீப்வண்டி வரும். இருவரும் சாப்பிட்டுக் கொண்டே ஆய்வின் முன்னேற்றம், தமிழர் அரசியல் நிலை, திருக்கோணமலை மாவட்ட வரலாற்று தடயங்களின் பாதுகாப்பு, பொதுப் பிரச்சினைகள் பற்றியும் பேசுவோம். அடுத்த நாள் ஆய்வுடன் சம்பந்தப்பட்ட இடத்திற்கு என்னை அழைத்துச் செல்வார். உண்மையில் தங்கண்ணா திருக்கோணமலையின் சைவ தமிழ் வரலாற்றை ஆய்வு செய்யவேண்டும் என்பதிலும் ஆவணப்படுத்த வேண்டும் என்பதிலும் என்னைவிட மிகுந்த அக்கறையாகவும் ஆர்வத்துடனும் இருந்தார். செய்யக் கூடியவர்கள் முன்வராதது அவருக்கு கவலை அளித்தது. அதனால் எனது ஆராய்ச்சிகளுக்கு அவர் மிகப் பெரிய உந்துசக்தியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். நான் எனது ஆய்வுகளை கட்டுரையாக சில அறிஞர்கள் முன் படிக்க ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்யுமாறு கூறினேன். மிகுந்த மகிழ்ச்சியுடன் திருக்கோணமலை நகர மண்டபத்தில் கருத்தரங்கினை ஏற்பாடு செய்து தானே தலைமை தாங்கி நடத்தினார். 5 மணிநேரம் கருத்தரங்கு நடைபெற்றது. திருக்கோணமலை, மூதூர், திருக்கரசை, கிளிவெட்டி, மேன்காமம் போன்ற பல இடங்களிலும் இருந்து பல அறிஞர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். தலைமை வகித்த தங்கத்துரை "பேரறிஞர் பாலசுப்பிரமணியம் முத்தூர் அகத்தியர் வரலாற்றை எமக்கு எழுதித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நாம் அதனை பதிப்பித்து வெளியிடுவோம். அகத்திய தாபனத்தில் அகத்தியருக்கு பத்துலட்ச ரூபா செலவில் கோட்டம் கட்டுவேன். அகத்திய பல்கலை தாபனத்தை மீள அமைக்க வேண்டும்" என்று தெரிவித்தார். அதற்கு ஒரு கழகத்தை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அகத்தியர் பல்கலை தாபனத்தை மீளமைத்து நடத்த பண்டிதர் வடிவேல் தலைமையில் அகத்திய தாபனக் கழகம் அமைக்கப்பட்டது. அதன் காப்பாளராக அருணாசலம் தங்கத்துரை பா.உ தெரிவு செய்யப்பட்டார். அவர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கரசை மாநகர், அகத்திய தாபனம், இரணியன்மலை இடிபாடுகள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தமிழர் பேரழிவை சந்திக்க வேண்டியிருந்ததால் அவரை படுகொலை செய்தனர். அது இலங்கைத் தமிழினத்திற்கு பேரிழப்பாக முடிந்தது. பண்டிதர் வடிவேல் நான் எழுதிய நூலை பதிப்பிப்பதற்கு தம்மிடம் தர வேண்டும் என்று 1997ல் கேட்டார். நான் இன்னும் எழுதி முடியவில்லை. நூலை எழுதித் தருமாறு கேட்க, வெளியிடுவதாக கூறிய தங்கண்ணை இல்லை இனி யாருக்காக எழுத வேண்டும். தங்கண்ணையின் இறப்பு என் மனதை அதிகம் பாதித்துள்ளது. எழுதக்கூடிய மனநிலையில் நான் இல்லை எனக் கூறினேன். சந்திக்கும் போதெல்லாம் பண்டிதர் நூலைக் கேட்பார். நானும் முடியவில்லை என்று கூறுவேன். தங்கண்ணையின் மறைவு திருக்கோணமலை மாவட்ட தமிழ்மக்களுக்கு சொல்லொணா பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டது. 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டும் நான் அதே பதிலைச் சொன்ன பொழுது பண்டிதர் நீங்கள் நூலை எழுதித் தராவிட்டால் அகத்தியரின் வரலாறும் முத்தூரின் சிறப்புக்களும் மண்ணுக்குள் மறைக்கப்பட்டு விடும் என்று கூறினார். அகத்தியரின் வரலாறு மறைவதற்கும், முத்தூரின் பெருமைகள் மண்ணுள் புதைந்து போவதற்கும் நான் காரணமாக இருக்க விரும்பவில்லை. மேலும் தங்கண்ணை எதைச் செய்ய வேண்டும் என்று உழைத்தாரோ, எம்மிடம் கேட்டுக்கொண்டாரோ, அவருக்காக நாம் அதைச் செய்யாவிட்டால் அவரின் ஆத்மா அமைதி அடையாது. அவருக்கு நாம் செய்யக்கூடிய உதவி, நன்றி அவர் விரும்பியதை, எம்மிடம் எதிர்பார்த்ததை நிறைவேற்றுவது தான் என்ற முடிவில் 2001ல் நூலை எழுதினேன். முத்தூர் பொன் சற்சிவானந்தம் சாரதா மகளிர் இல்ல வளர்ச்சிக்காக அதனை வெளியிட்டார்.

தற்பொழுது இரண்டாம் பதிப்பை விரிவாக எழுதி தங்கண்ணைக்கு சமர்ப்பணத்துடன் எழுதினேன். பேருபகார சிந்தையுள்ள சமூகசேவையாளர் முத்தூரின் சைவ தமிழ் வரலாற்றில் ஆர்வமுள்ளவருமான பொன் சற்சிவானந்தம் 2019ல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். தங்கண்ணையின் கோரிக்கையினாலும் உதவியினாலும் தான் என்னால் முத்தூரின் அகத்தியரின் வரலாறுகளை ஆவணப்படுத்த முடிந்தது. ஆனால் இரணியன்மலை, அகத்திய பல்கலைக்கழக 5 கல் நீளமான வளாகம், செங்கோன் அரண்மனைச் சிதைவுகள், திருமங்கலாய்ச் சிவன் கோவில், அக்கால நாகரிகத்தின் கறுப்பு சிவப்பு மட்பாண்ட ஓடுகளின் சுவடுகளை பேணிப் பாதுகாக்க முடியவில்லை. மட்பாண்ட ஓடுகள் சிலவற்றை யாழ் பல்கலைக் கழகத்தில் சேர்ப்பித்தேன். எம்பெருமான் சிவபெருமான் வழிகாட்டுவான் பாதுகாப்பான். எல்லாப் புகழும் தங்கண்ணைக்குத்தான் சேரவேண்டும். மனதைவிட்டு அகலா மாண்புடையோன் மக்கள் தொண்டன் தங்கத்துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசமானிய.க.ரவிராஜன்
தலைவர்
சோழீஸ்வரர் திருப்பணிச்சபை

## கந்தளாயின் கலங்கரை விளக்கு

அமரர் உயர்திரு திரு.தங்கத்துரை ஐயா அவர்களின் அகால மரணச் செய்தியை கேள்வியுற்ற நாள் முதல் இன்றைய தினம் வரை அதனை மனதில் மீள நினைக்காத நாளே இல்லை எனும் துயரத்துடன் அன்னாரின் சாதனை மலருக்குச் செய்தியை வழங்குகின்றேன்.

திருக்கோணமலை மாவட்டத்தில் எல்லைப் புறக்கிராமங்களில் பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்த கிராமங்களில் கந்தளாயும் ஒன்றாகும். அமரர் திரு.தங்கத்துரை அவர்களின் சிந்தனைகளில் 'கந்தளாய் எனும் கிராமம் தக்கவைக்கப்பட வேண்டும்' என்ற சிந்தனையும், தீர்க்க தரிசனமும் அவருடன் இணைந்து அரிய பணி செய்த எனக்கு, அவர் மீது ஒரு இணையற்ற பற்றை உருவாக்கியதென்றால் அது மிகையாகாது.

அவர் அடிக்கடி உச்சரிக்கும் ஓர் சொல்தான் 'கந்தளாய்க்கு ஆலயமும் பாடசாலையும் இரு கண்கள்' எனவும் 'அவற்றை சீரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் ஒழுங்கமைத்தாலே கிராமம் எழுச்சி பெறும்' எனவும் கூறுவார். அதற்காக தனது பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டார். கந்தளாயிலே 11ம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட புராதன சிவாலயம் காணப்படுகின்றது.

1977ம் ஆண்டில் கந்தளாய் குளத்திலிருந்து குடிநீரானது, குழாய் மூலம் திருமலை மாவட்டம் முழுவதும் வழங்கப்பட்டது. எனினும் சிவாலயத்திற்கு குடிநிர் வழங்கப்படவில்லை. 1994ம் ஆண்டு அன்னார் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அதே வருடமே சுமார் 4 இலட்சம் ஒதுக்கி ஆலயத்திற்கு குழாய் நீரைவழங்கி தனது தேர்தல் வாக்குரிமையை காப்பாற்றினார். இதே போன்று படித்த எமது கிராம இளைஞர் யுவதிகளுக்கு அரச வேலைவாய்ப்புகளை விசேடமாக ஆசிரியத் தொழிலை பெற்றுக் கொடுத்து எமது கிராமத்தில் அரச உத்தியோகத்தர் என்ற அந்தஸ்த்தை பெற்றுக் கொடுத்தார்.

சிவாலயம் அன்னாரின் காலத்தில் புதுப்பொலிவு பெற்று மட்டுமல்லாது கிராம வீதிகள் எமது பாடசாலையும் பல பௌதீக வளங்கள் பெற்றுக் கொண்டது. இவ்வாறு எம் இனத்திற்கு அளப்பெரிய சேவை புரிந்த பெருந்தகை அமரர் திரு.தங்கத்துரை அண்ணா. "அண்ணா" என அனைவராலும் உரிமையுடன் அழைக்கப்பட்ட மூதூர் அன்னை பெற்றெடுத்த முத்து பொதுப்பணிக்கே ஓர் வரைவிலக்கணத்தை வழங்கியவர். சடுதியாக எம்மை விட்டு நீங்கி விடுவார் என் நாம் ஒரு போதும் நினைக்கவில்லை. 'அவன் தந்தான் அவனே எடுத்துக்கொண்டான்' என்று மனதை தேற்றிக் கொண்டு அன்னாரின் நினைவில் விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி. சு. மோகனதாஸ்
வேந்தர், வவுனியா பல்கலைக்கழகம்.
Professor Subramaniam Mohanadas
BSc (Hons), Ph.D (Adelaide), C.Chem., F.I. Chem.

## எனது வழிகாட்டியாகத் திகழ்ந்த தங்கத்துரை அண்ணா!

அமரர். தங்கத்துரை அண்ணா அவர்கள் நான் ஸ்ரான்லிக் கல்லூரியில் 1953ஆம் வருடம் 6ஆம் வகுப்பில் சேர்ந்த போது 10ஆம் வகுப்பில் கல்வி கற்றவர். அவருடன் கல்வியன்காட்டைச் சேர்ந்த ஆலாலசுந்தரம், மன்னாரைச் சேர்ந்த சூசைதாசன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சேக்ஸ்பியர் மற்றும் பலரும் கல்வி கற்றனர். பிற்காலத்தில் ஆலாலசுந்தரம், சூசைதாசன், தங்கத்துரை ஆகியோர் மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்துக்கு அவரவர் பிரதேசங்களிலிருந்து தெரிவாகினர். தங்கத்துரை அண்ணா அவர்கள் மூதூர் இரட்டைத் தொகுதியிலிருந்து தெரிவானார்.

நான் 6ம், 7ம், 8ம் வகுப்புக்களில் ஆரம்பப் பிரிவில் கற்ற பொழுதும் பின்னர் 9ம், 10ம் வகுப்புக்களில் மத்திய பிரிவில் கற்றபொழுதிலும், பின் 11ம், 12ம், 13ஆம் வகுப்பு மேற்பிரிவில் கற்றபொழுதும் சிறந்தவிளையாட்டு வீரனாகத் திகழ்ந்ததற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியவழிகாட்டியாக ஆரம்பத்தில் திகழ்ந்தவர் தங்கத்துரை அண்ணாவாகும். நான் ஆரம்பப் பிரிவில் இருந்தபோது எனது உடற்கட்டையும், நீண்ட அடியெடுத்து ஓடுவதையும் பார்த்து என்னை குறுந்தூர ஓட்டங்களைத் தவிர்த்து ஏனைய தடகள நிகழ்வுகளுக்கு என்னைத் தயார்படுத்தினார். இவருடைய வழிகாட்டலில் நானும், எனது நண்பர்களும் நன்றாக விளையாடி தடகளப் போட்டிகளில் எமது பாடசாலை வடமாகாணத்தில் தொடர்ச்சியாகச் சம்பியனாக வந்தது. அதுமாத்திரமன்றி 1959ல் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பிடித்தது.


நான் ஆரம்பப் பிரிவில் கற்கின்ற காலத்தில் வெள்ளைநிறச் சேட்டும், வெள்ளைநிற நீளக்காற்சட்டையும் அணிந்து கம்பீரமாகத் தோன்றும் தங்கத்துரை அண்ணா உட்பட சிலரை role-model ஆகப் பார்த்ததுண்டு. விளையாட்டுத் துறையில் மட்டுமன்றி கல்வி, கலை, கலாச்சார விடயங்களிலும் முன்னோடியாகத் திகழ்ந்த தங்கத்துரை அண்ணா அவர்கள் வாழ்க்கையில் அதி உச்சநிலையை அடைந்து எமது இனத்தின் விடிவுக்காக தம்மாலான சகலதையும் ஆற்றியிருந்தார்.

அவரது வழிகாட்டலில் வளர்ந்த நானும் பல்கலைக் கழகங்கள் சென்று விஞ்ஞானமாணி, கலாநிதி, இணைப் பேராசிரியர் போன்ற பட்டங்கள் பெற்று துணைவேந்தர் மற்றும் வேந்தர் நிலைகளை அடைந்து சிறப்பாக இருக்கின்றேன்.

அன்னாரது 25ஆம் ஆண்டு நினைவில் அவருக்காக சிலர் ஏற்பாட்டுக் குழு அமைத்து உருவச் சிலையையும் நிறுவி, நினைவு மலர் ஒன்றையும் வெளியிட ஏற்பாடு செய்ததில் எனது சிலகருத்துக்களைப் பரிமாறியதில் பெருமகிழ்வடைகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் பாலசுகுமார்

## தங்கத்துரை அண்ணன்

தங்கத்துரை அண்ணன் இறந்து 19 வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும் அவர் விட்டுச் சென்ற திருக்கோணமலை மாவட்டத்துக்கான அரசியல் வெற்றிடம் அப்படியே உள்ளது. இதே நாளில்தான் (05.07.1997) தங்கத்துரை அண்ணன் உட்பட சண்முகா வித்தியாலய அதிபர் இராஜேஸ்வரி, கூனித்தீவின் மூத்த அதிபர் ஜீவரத்தினம் என பல கல்வியாளர்களும் படுகொலை செய்யப்பட்ட நாள்.

அண்ணன் தங்கத்துரை அடிப்படையில் இடதுசாரி கொள்கையில் நாட்டம் கொண்டவர். கொழும்பில் வேலை செய்கிற போது சமசமாஜி தொழிற்சங்கத்துடன் இணைந்து பணியாற்றியவர். இலங்கையின் பல இடதுசாரி தலைவர்களுடனான நட்பு அவருக்கிருந்தது. மூதூர் சதாகுதி அரசியல் பிரதிநிதித்துவம் தங்கத்துரை அண்ணனுக்கு முன்பு மூதூரை சாராதவர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. 1970ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றவராக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகிறார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எப்படி இருக்க வேண்டும், இயங்க வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணம் அண்ணன் தங்கத்துரை என்றால் அது மிகையன்று. மூதூர் தொகுதியில் இன்றுவரை அவர் சாதனையயை மிஞ்சியவர் எவருமிலர். மூதூர் தொகுதியின் படித்த இளைஞர்கள் அவர் காலத்திலேயே பெருமளவு அரச உத்தியோகங்களை பெற்றுக்கொண்டனர். பல அபிவிருத்தி திட்டங்கள் அவர் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.

1977ல் புதிய தேர்தல் தொகுதி வரைவில் முல்லைத்தீவு தொகுதியை வடமாகாணத்தில் பெற்றுக்கொண்டு மூதூர் தொகுதியயை தாரை வார்த்தது தமிழர் கூட்டணி. இரட்டை அங்கத்தவர் முறை நீக்கப்பட்டு சேருவில தொகுதி உருவாக்கப்பட்டிருந்தது. 1970ம் ஆண்டு நான் 10ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த நேரம் அண்ணன் தங்கத்துரை தமிழரசுக் கட்சி வேட்பாளர் பிரச்சாரத்திற்கு அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என தேசியக் கட்சிகள் தமிழ் பகுதிகளில் கிளைகளை கொண்டிருந்தன. ஆனாலும் மூதூர் தமிழ் மக்கள் தங்கத்துரை அண்ணன் பின்னாலேயே அணி திரண்டனர்.

சேனையூர் பிள்ளையார் கோயில் முன்றலில் முதல் கூட்டம் பல முன்னணி தலைவர்களுடன் தந்தை செல்வாவும் கலந்துகொள்கிறார். நானும் அக்கூட்டத்தில் பிரசார உரையாற்றுகிறேன். கட்டைபறிச்சான் கனகசிங்கம் ஆசிரியர், என் ஆசிரியர் செ.விபுணசேரகம், அண்ணன் கெங்காலிங்கம் ஆகியோர் பிரசாரகளத்தில் அணிசேர்கின்றனர். அத்தோடு என் மாமா நாகேஸ்வரன், நண்பன் இரா.இரத்தினசிங்கம் என அண்ணன் தங்கத்துரைக்காக பல மேடைகளில் பேசுகிறோம். சம்பூரில் குழந்தைவேல் மாஸ்ரர், மணி, சித்திரவேலயுதம், மூதூரில் பூபா.மதுரநாயகம், புண்ணியமூர்த்தி, குலேந்திரன், அன்ரனி டொக்டர் பள்ளிக்குடியிருப்பில் இரத்தினசிங்கம், மல்லிகைத்தீவில் பாலசிங்கம், சிற்றம்பலம், நடேசபிள்ளை, பட்டித்திடலில் யோகேந்திரம், கவிஞன், மேங்காமத்தில் கிருபை, கிளிவெட்டியில் தவகுமார், துரை, கணேஸ் என மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி எங்கும் அண்ணன் தங்கத்துரையின் வரவு அரசியலில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. என் அப்புச்சி தீவிர தமிழரசுக்கட்சி வெறியர் என்று சொல்லாம். அண்ணன் தங்கத்துரைக்காக மிக தீவிரமாக செயல்பட்டார். எங்கள் வீட்டுக்கு நன்றி சொல்ல வந்த போது அப்புச்சி கையைப்பிடித்து நன்றி சொன்ன காட்சி பசுமை நினைவாய் உள்ளது.

1972ல் குடியரசு யாப்புக்கு எதிரான உண்ணாவிரத போராட்டங்களுக்கு தலைமை தாங்கி மூதூர் தொகுதியெங்கும் இளைஞர்களை அணி திரட்டியவர் அண்ணன் தங்கத்துரை. அவர் மூட்டிய கனலே பின்னாளில் இயக்கங்கள் மூதூர் பிரதேசத்தில் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு தளம் அமைத்தன எனலாம்.

1981 மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் அண்ணன் மிகப்பெரிய வெற்றி பெறுகிறார். அந்த நாட்களில் திருக்கோணமலை மாவட்டம் முழுவதும் பிரச்சாரத்துக்காக அவருடன் பயணித்த நாட்கள் மறக்க முடியாத நினைவுகள். மூதூர் பிரதேசத்தில் ஆரம்ப நாட்களில் ஈழ விடுதலை இயக்கங்கள் வளர்ச்சியில் முக்கிய ஆதரவு தளமாக அவர் இருந்தார். குறிப்பாக ஈழப்புரட்சி அமைப்பின் தோழர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. இறுதி வரை எத்தனை இடர்கள் வந்த போதும் தன் கட்சிக்கு விசுவாசமாயிருந்த ஒருவர் கொண்ட கொள்கை மாறா தலைவர் அவர். அவர் காட்சிக்கு இனியன் கடும் சொல் பேசா பண்பாளன். எப்போதும் சிரித்த முகம். அவர் வாயில் 'முடியாது' என்ற வார்த்தை வரவே வராது. எல்லோருடனும் சகஜமாக பழகும் சுபாவம். அகம்பாவமற்ற அரசியல். மற்றவரை மதிக்கும் பண்பு. அதிகாரத்தொனியற்ற தோழமை அரசியல்.

இறுதியாக 1995ல் தோழர் பற்குணத்தின் மரண வீட்டில் சந்தித்தமை நீண்ட உரையாடல். திருக்கோணமலையில் தனி பல்கலைக்கழகம், மூதூரில் ஒரு தொழில் நுட்ப கல்லூரி என பல கருத்துக்களை இருவரும் பகிர்ந்து கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இளைஞர் பேரவையினால் நடைபெற்ற உண்ணவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்ட போது...



'மஹாபொல' பரிசில் வழங்கும் வைபத்தில் மங்கள விளக்கேற்றும் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம்
(கனடாவிலிருந்து) 9.6.2022

# தங்கமான மனிதத்தின் சொந்தக்கார்
# அமர் தங்கத்துரை

அமரர் அ.தங்கத்துரை அவர்களை அடியேனில் மிகுந்த அன்பு பாராட்டிய அண்ணன் என்பதா!

நன்றாகப் புரிந்து கொண்டு நட்புறவு பூண்ட நண்பர் என்பதா!

தான் பிறந்த மண்ணின் மக்களுக்காக அயராமல் உழைத்த தமிழ் தேசிய அரசியல்வாதி என்பதா!

அனைத்து மக்களையும் வித்தியாசம் பாராது அன்போடு அரவணைத்த அருமையான மனிதர் என்பதா!

இவையெல்லாம் இணைந்த ஒப்பற்ற கலவையின் சொரூபம் என்பதே நிச்சயமான நிசம்.

மூதூர் கிளிவெட்டி கிராமத்தில் வாழ்ந்த அவரது பெற்றோர் தொலைநோக்குப் பார்வையோடும் விருப்போடும் மகனுக்கு இட்ட பெயர் தங்கத்துரை. அவருக்கே உரித்தான உயர்ந்த பண்புகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெயர் எவ்வளவு தூரம் பொருந்திப் போயியிருக்கிறது என்பதை இப்போதும் எண்ணி வியக்கிறேன். தங்கத்தின் மதிப்பு எப்போதும் தாழ்ந்து போவதில்லை.

அடியேனுக்கு 1971ல் திருமணமான போது, 1 பவுண் தங்கத்தின் விலை ரூ.1000ற்குள் இருந்தாக ஞாபகம். இப்போது அதன் விலை ரூ.173,000 என்று என் நண்பர் கூறினார். அமரர் தங்கத்துரை அவர்களை தங்கத்தின் மதிப்போடு பணரீதியில் ஒப்பிடுகிறேனோ என்ற தாழ்வான எண்ணம் ஏற்படுவது இயற்கை. அடியேன் சொல்ல வந்தது அதுவல்ல, அவருக்குப் பெயர் வைத்த பெற்றோர் எங்கள் பிள்ளை நற்பண்புகளோடு எதிர்காலத்தில் தங்கத்தைப் போல மதிப்போடு மிளிர வேண்டும் என்று இயல்பாகவே விரும்பியிருக்கிறார்கள். அந்த விருப்பிற்கு எந்த விதத்திலும் மாசு ஏற்படா வண்ணம் வளர்ந்து, பெருமதிப்போடு வாழ்ந்திருக்கிறார் என்பதைக் கூறுவதே இப்பதிவின் நோக்கம்.

அடியேன் 1970ல் பரீட்சைத் திணைக்களத்தில் கடமையாற்றிய போதே அண்ணனோடு பழக்கம் ஏற்பட்டது. பின்னாளில் திருக்கோணமலை கல்வித் திணைக்களத்திற்கு மாற்றலாகி வந்த போது அவரது தொடர்பு மேலும் இறுக்கமாயிற்று.

அடியேனை தன் 'கணீர்'க்குரலில் "தம்பி" என்றுதான் அழைப்பார். அவரைச் சுற்றி எப்போதும் நாலைந்து பேர் தங்கள் பிரச்சனைகளைச் சொல்வதற்காகக் கூடியிருப்பார்கள். எனக்கு அடிக்கடி தொலைபேசி எடுப்பார்.

"தம்பி, ஈச்சிலம்பற்றையிலிருந்து இன்னார் உங்களிடம் வந்து தனது பிரச்சனையைச் சொல்வார், அதனைக் கவனித்து ஆவன செய்து கொடுங்கள்" என்று உரிமையோடு கூறுவார்.

அவரது உதவும் இயல்பும், அடியேனது அதே இயல்பும் ஒரே கோட்டில் பயணிப்பதை அவதானித்திருக்கிறேன். அதனாலேயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ, அண்ணன் கேட்ட அனைத்தும் என்னால் செய்ய முடிந்திருக்கிறது.

அமரர் அண்ணன் தங்கத்துரை அவர்கள் எங்கள் மக்களுக்காக அயராமல் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவையை எம் மண்ணின் மக்கள் என்றும் நினைவு கூர்வார்கள். குறிப்பாக, எண்ணற்ற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் அவர் காட்டிய ஆர்வம், அர்ப்பணிப்பு காரணமாக "நாம் இந்த நிலைமையில் இன்று இருப்பது தங்கத்துரை அண்ணன் போட்ட பிச்சை" என்று கூட சிலர் கூறியதை அடியேனால் மறக்க முடிவதில்லை.

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் திருக்குறளுக்கு உதாரணமாக விளங்கியவர் எங்கள் மண்ணின் மைந்தரான தங்கத்துரை அண்ணன் எனக் கூறுவதில் அடியேன் மிகையெதையும் உணரவில்லை.

பாராளுமன்ற உறுப்பினராக இருக்கையிலும் சரி, அப்பதவியில் இல்லாத போதும் சரி, எம் மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளை, பலவிதமான சவால்களுக்கு மத்தியிலும் யாரை சந்திக்க வேண்டுமோ, அவர்கள் எத்தகைய உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களை நேரில் சந்தித்து தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதில் அண்ணன் காட்டிய தீவிரத்தை, அதனூடாக மிளிர்ந்த அவரது ஆற்றலை பல தடவைகளில் நேரில் தரிசித்தவன் என்கிற முறையில் இன்றும் அவரது ஆளுமையை எண்ணி வியப்படைகிறேன்.

அண்ணன் எதிர்பாராதவிதமாக காலமானபோது அடியேன் வெளிநாட்டில் வேலையில் இருந்தேன். எப்படி எங்கள் மண்ணின் மாணிக்கமான "துரை" அவர்கள் சமீபத்தில் காலமான போது தூரத்திலிருந்து அந்தத் துயரத்தை அனுபவித்தேனோ, அதே துன்பத்தை தங்க அண்ணன் காலமான அந்தக் காலத்திலும் அடியேன் அனுபவித்திருக்கிறேன். என்னளவில், மூதூர் மண்ணில் பிறந்த இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் என்றும் மறக்கவொண்ணா மண்ணின் மைந்தர்கள்.

எல்லோரையும் அரவணைத்து அன்பு பாராட்டும் இயல்பு, இதனை என்னால் செய்ய முடியாது என்று ஒருபோதும் சொல்ல விரும்பாத நிகரற்ற குணநலம் ஆகிய கூர்மையான பண்புகளோடு குணமென்னும் குன்றேறி நின்று செயலாற்றிய பெருந்தகை அண்ணன் தங்கத்துரை. அவர் போன்ற பெரியவர்கள் மிக அரிதாகவே தோன்றுவார்கள். அதனாலேயே மக்கள் மனங்களில் அழியாமல் இன்றும் நிலைத்திருக்கிறார்கள்.

"உயர்ந்த புகழ்" போல நிலையாக நிற்க வல்லது வேறொன்றுமில்லை என்று பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவர் கூறிச்சென்றது எவ்வளவு உண்மை என்பதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இக்கூற்று எங்கள் பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமான அமரர் அண்ணன் தங்கத்துரைக்கு வெகுவாகப் பொருந்தும்.

அமரரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை வேண்டுவதும், அவர் காட்டிய வழியில் நடக்க முயல்வதுமே நாம் அவருக்குக் காட்டும் கைம்மாறு.

அன்பே சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகசபை தேவகடாட்சம்
மல்லிகைத்தீவு - மூதூர்
திருக்கோணமலை

## மக்கள் நலத்திட்டங்களால் மனதிலிருந்து நீங்காதவர் அமரர். அருணாசலம் தங்கத்துரை

ஒரு காலத்தில் (1949 இற்கு பின்னர்) தேர்தல் அரசியலுக்குள் உட்பட்ட போது மூதூரின் அரசியல் தலைமை மூதூரை சொந்த இடமாக கொண்டவர்களிடம் சேரவில்லை என்பது எம்மக்கள் மத்தியில் ஒரு நெருடலாகவே இருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட அரசியல் தலைமைகளிடமிருந்து (1970) மூதூரை தன் வசப்படுத்திய ஒரு உரிமை கொண்ட தலைமைதான் கிளிவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அருணாசலம் தங்கத்துரை.

ஒரு நடுத்தர வருமானம் கொண்ட குடும்பத்தில் அவதரித்தார். தந்தையார் அமரர் அருணாசலம், விவாகப் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் (தோம்பர்) என்ற பெரு வாரியன வருமானம் இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ உத்தியோகத்தர். உயர் சிந்தனை கொண்டு அமரர் தங்கத்துரை அவர்களை மட்டக்களப்பு வந்தாறுமூலை பாடசாலைக்கும் உயர்கல்விக்காக யாழ்ப்பாணம் ஸ்டான்லின் கல்லூரிக்கு (தற்போது கனகரெட்ணம் மகா வித்தியாலம்) அனுப்பியிருந்தார். உயர் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் அவருக்கு நீர்ப்பாசன திணைக்களத்தில் எழுது வினைஞர் பதவி கிடைக்கப்பெற உயர்கல்வியை இடையில் முறித்துக் கொண்டார்.

ஒரு எளிமையான கிராமத்து சூழ்நிலையில் கிடைத்த கல்வியும் அதை முழுமையாக பெறமுடியாத அனுபவங்களையும் தன் நிகழ்வியல் வாழ்வில் பெற்றுக்கொண்டார்.

ஒரு இடத்தின் ஆணிவேர் கிராமமே என்பதை நன்குணர்ந்த அவர் தனது தலைமைக் காலங்களில் எண்ணிலடங்காத கல்விச் சேவைகளை கிராமங்களுக்கு வழங்கியிருந்தார். பின்தங்கிய கிராமங்கள் தோறும் புதிய பாடசாலைகள் உதயமானது.

1970ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியில் வேட்பாளராக அறிமுகமாகிய அமரர் தங்கத்துரை அவர்கள், முன்னரான காலங்களில் மக்களுக்கு மிகப் பரீட்சயமானவராக இல்லாவிடினும் அவரின் இளமைத் துடிப்பும், ஆளுமையும், குரல்வளமும், நேர்மையான சிந்தனையும் கொண்ட எளிமையான போக்கும் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருந்தது.

இரட்டை அங்கத்தவர்களைக் கொண்ட மூதூர் தொகுதிக்கு இரு பாராளுமன்ற உறுப்பினர்களாக அமரர். அ.தங்கத்துரை (தமிழர் விடுதலைக் கூட்டணி) அவர்களும் அமரர் ஏ.எல்.அப்துல் மஜீது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள் மூதூர் தமிழ் மக்களுக்கான தலைமை உருவாகிவிட்டதென தமிழ் மக்கள் மகிழ்வடைந்த போதிலும் அமரர் தங்கத்துரை அவர்கள் அதில் இறுமாப்படையாமல் தனது தொகுதி மக்கள் அனைவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதங்களற்றே நோக்கினார். பல கல்வித் திட்டங்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் தாண்டி அநாதை இல்லங்கள், தபோவனம் போன்றவைகளுக்கான பௌதீக வளங்களை ஏற்படுத்தல் மேலும் புதிய குடியேற்றங்கள், எல்லைத்திட்ட மீள் நிர்மாணம், புதிய வாய்க்கால்கள் அமைப்பது, புதிய பாதைகள் அமைப்பது, ஒட்டு, படுகாடு, கருக்கு போன்ற புதர்நிலங்களை வயல் செய்கைக்கு வளமாக்கியமை, குடியேற்ற திட்டங்களாக புளியடிச்சோலை, கப்பல்துறை, தங்கபுரம், தங்கநகர், திருமங்கலாய் போன்ற கிராமங்கள் அவர் பெயர் கூறும் சான்றுகளாக இன்றுவரை உள்ளன.

இதைவிட நில ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்படும் இடமான திருமங்கலாய் பகுதியில் தனிப்பட்ட ரீதியாக தானே அங்கு சென்று காடுவெட்டி (04 ஏக்கர் வரை) மரவள்ளித் தோட்டம் செய்து வழிகாட்டியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து மக்களும் அங்கு சென்று தோட்டங்கள் செய்யத் தொடங்கினர் சொந்த நிலங்களை பயன்படுத்தாவிடின் அவை பிற இனத்தவரால் கபளீகரம் செய்யப்படும் என்பதை நன்கு அனுபவத்தில் உணர்ந்திருந்தார்.

நல்ல தலைவனுக்குரிய பண்பு அவரிடம் இருந்தது. பாதிக்கப்பட்ட மக்களை வளப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அடிமனதில் வேரூன்றி இருந்ததால் அதில் ஆர்வமும் இருந்தது. அதனால் நல்ல திட்டங்கள் உருவாகியன. அதன் வெளிப்பாடாக செயற்பாடு இருந்தது.

1978ஆம் ஆண்டு அமரர் தங்கத்துரை அவர்களின் வாழ்வில் ஒரு திசைமாற்றம். சித்திரை மாத அரச மரத்தறிப்பை காரணமாக்கி சில காலம் சிறையில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. அக் காலங்களை அவர் பயனுள்ளதாக மாற்றியமைத்துக்கொண்டார்.

அந்த சிறைவாசத்தை சாதகமாக்கி சட்டம் படித்தார். சிறைவிட்டு வெளியேறும் போது சட்டத்தரணி அந்தஸ்துடன் வெளியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைக்குள் இருந்தவாறு ஆசிரிய நியமனங்கள் பல செய்தார். தொண்டராசிரியராக சேவையாற்றிய பலரை, 'சுவிட் மஜீத்' என அழைக்கப்படும் (சம்மாந்துறை) பாராளுமன்ற உறுப்பினரின் நட்புடன் ஆசிரிய சேவையில் உள்வாங்கினார்.

1977 - 1981 வரை ஓய்வாக இருந்த காலங்களில் மக்களுக்கான சேவையிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார். அதனால்தான் மீண்டும் திருக்கோணமலை மாவட்ட மக்கள் (1983) மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர். இவ் வெற்றிக்கு மறைந்த அமைச்சர் ஏ.எல் அப்துல் மஜீது அவர்கள் துணிச்சலாக ஆதரவு வழங்கியதை இலகுவில் எவரும் மறந்து விடமுடியாது.

இவர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதாரண மனிதனாகவும் மாறுபட்ட மனிதனாகவும் காட்சி தந்தவர். அந்த எளிமையான மானிடத்தை இழந்து (1997.07.05) 25 ஆண்டுகள் ஆனபோதிலும் இன்னமும் நினைவாலும் மக்களுக்கான நற்செயல்களாலும் ஓர் உன்னத தலைமைத்துவம் கொண்ட மனிதராக போற்றப்படுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தையா நடேசபிள்ளை
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வு நிலை கணக்காய்வாளர்,
சுகாதார திணைக்களம்
மல்லிகைத்தீவு, மூதூர்.

## மூதூரின் முத்து எங்கள் சொத்து

தெய்வீகம் நிறைந்ததும் தேவாரப்பாடல் பெற்றதும் நிறைகடல் மோதி ஒலி எழுப்பும் கோணேசர் மலையின் உச்சியிலே மாதுமை உடனுறை கோணேசப் பெருமான் கோயில் கொண்டு குடிகள் பெருக்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திருக்கோணமலையின் தெற்கே முத்துக்குளித்த மூதூரின் கிழக்கே நீர் வளமும், நிலவளமும், குறிப்பாக மாவலி நீர் வரம்பு நிறை சுழண்டு வழிந்தோடும் நீர் பரப்பையும் கிளிவெட்டி கிராமத்தின் அதியுயர் சிறப்பை "ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்" எனும் மொழிக்கமைய அழகுபடுத்திக் கொண்டிருக்கும். மாவலி நீர் வடிந்து ஓடும் ஆறு அமைந்து அழகுபடுத்திக் கொண்டு இயற்கையாகவே பச்சை பசேலென காட்சி அளித்துக் கொண்டிருந்த கிராமமே கிளிவெட்டி கிராமம். இங்கு வாழும் மக்கள் விவசாயத்தை உயிர்நாடியாக கைப்பிடித்து உழைத்து வரும் உழவர்கள். இங்குதான் அருணாசலம் யோகம்மா தம்பதியினருக்கு 1936-01-17ஆம் திகதி மூதூரின் முத்து அண்ணன் தங்கத்துரை அவர்கள் பிறந்தார். மிகவும் கட்டுடம்போடு கல்வியை மிகவும் சிறப்பாக கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தார். அதே போன்று அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் பாக்கியதுரையும் கல்வியில் மேலோங்கி அரச வைத்தியராகவும் ஏனைய இருவரும் கமத்தையும் மேற்கொண்டார்கள். தங்கத்துரை அவர்களின் தந்தையார் மிகவும் சிறந்த கல்விமான். இதனால் இறப்பு பிறப்பு பதிவாளராக நியமனம் பெற்று மக்களுக்கு சிறந்த பணியை மேற்கொண்டார். கல்வியில் சிறந்து தனது மேற்படிப்பை மட்/வந்தாறுமூலை மகா வித்தியாலயத்திலும், யாழ்/ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்று முடித்ததோடு எழுதுவினைஞராக அருகாமையிலுள்ள சோமபுர நீர்ப்பாசன திணைக்களத்தில் அரசபதவியை ஆரம்பித்தார். அன்றிலிருந்து மக்கள் சேவைக்கு ஆயத்தமானார். அப்போதைய சூழலில் சரியான பாதைகள், நீர் பாய்ந்து வழிந்தோடும் வடிவாய்கால்கள், வேலைகளில் கூடிய கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு மேலும் உறுதுணையாக செயற்பட்டவர்.

1964ம் ஆண்டு திருக்கோணமலையில் சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதியரின் மகள் சத்தியேஸ்வரி அவர்களை தனது வாழ்க்கைத் துணையாக கரம்பற்றி, நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகவும், நல்ல கணவராகவும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் சேவையையும், நன்நடத்தைகளையும் அறிந்துகொண்ட தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் தமது கட்சியோடு இணைத்துக் கொண்டார். மூன்று மொழிகளிலும் மிகவும் சரளமாக பேசும் ஆற்றலும், அவரின் தோற்றமும், கம்பீரமும் தந்தை செல்வா அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது, அதனால் இளைஞர் தலைவராக நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து தமிழுக்காகவும் தமிழ் மக்களை காக்கும் நோக்கிலும் தனது பதவியை ஆரம்பித்தார். ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று தமிழரசுக் கட்சிக்கிளைகள் ஆரம்பித்தார். இதில் நானும் என்னைப் போன்ற இளைஞர்களும் மிகவும் நெருக்கமாக செயல்பட்டு அவர் கரங்களை உறுதியாக உயர்த்திக் கொண்டோம். அண்ணன் தங்கத்துரை அவர்களின் செயல்பாட்டில் விருப்பம் கொண்ட தந்தை செல்வா 1970ம் ஆண்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பில் நிறுத்தப்பட்டார். என்னை போன்ற ஏனைய கிராம இளைஞர்கள் படை சூழ்ந்து அண்ணனை வெற்றி வாகை சூட வைத்தோம். அன்றிலிருந்து எமது மூதூர் மக்களின் விடிவெள்ளியாக தோற்றம் பெற்றார். தேர்தல் காலத்தில் எவ்வாறு கிராமம் கிராமமாகச் சென்று மக்களின் தேவை அறிந்து சிறப்பான சேவையை ஆரம்பித்தார். இது 1997ஆம் ஆண்டு வரை நீடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டம் (1970-1997) மூதூர் மக்களின் பொற்காலம் என்றே கூறவேண்டும். எதிர்க்கட்சியில் அமர்ந்த போதிலும் தன்னால் எப்படியான சேவைகளை ஆற்ற முடியும் என்பதை இனம் கண்டு, அதாவது கல்வி, போக்குவரத்து, நீர்ப்பாசனம், சுகாதாரம், செயற்பாடுகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயல்பட்ட செயல்வீரன். அக்காலம் இருண்ட பகுதியை சூரியோதயம் வெளிச்சமாக்குவது போல அண்ணன் அவர்களின் செயல்பாட்டினால் சகல துறைகளிலும் ஒளிக்கீற்று பிரகாசித்தது. மிகவும் தொலைநோக்குடையவராக இருந்தவர். உயர் அதிகாரிகளோடும் ஏனையோருடனும் மிகவும் அந்நியோன்யமாக பழகும் சிறப்பைக் கண்டேன். இச் சிறப்பினால் எப்போதும் அவரது வீட்டில் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யபட்டுக் கொண்டே இருந்தது. ஒரு உயர் மட்டமான அறிஞர் கூட்டம் அவர்களிடம் இருந்தது. இரவு வேளையில் கூட்டத்தினருடன் கலந்துரையாடிச் செயல்பட்டவர். கொழும்பிலிருந்து வந்துவிட்டால் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கும். எப்போதும் புன்முறுவலோடு உற்சாகத்தோடும், ஏனையவர்களோடும் இணைந்து செயல்பட்டவர். அதனால் எமது தொகுதி வெளிச்சத்திற்கு கொண்டு வந்த பெருமை அவரையே சாரும். தங்கத்துரை அவர்கள் இப்படியான செயற்பாடு அவரோடு முடிந்து கொண்டது. மீண்டும் இருள் எமது தொகுதியைச் சூழ்ந்துகொண்டது. பாடசாலைகளை அமைப்பதிலும். குளங்களை சீரமைப்பதிலும், மிகவும் ஆர்வம் காட்டியவர்.

அந்த வகையிலே மல்லிகைத்தீவு கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள் பெருவெளிக்குளம் அழிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது அரச சார்பில் நடந்தது. இதை மீண்டும் குளம் ஆக்குவதன் மூலம் சுமார் 5000ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு நீரை தேக்கி நீர்ப்பாசனம் செய்யலாம், என மீண்டும் அதை அமைப்பதற்கு முயற்சி செய்து கட்டுமான பணிகள் ஆரம்பிக்கும் போது, அரசியல் சார்பிலே செயற்பட்டு தடை உத்தரவு போட்டு நிறுத்தப்பட்டது. அன்றிலிருந்து பெருவெளிக்குளம் இன்று வரையும் அப்படியேதான் கிடையாக கிடக்கின்றது. மகாவலி நீர் இல்லை என்றால் விவசாயம் விட்டுப்போகும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. போதாக்குறைக்கு தற்போது யானைகள் குடிகொண்டு ஏனைய கிராமங்களில் பயிர்களையும் வேளாண்மையையும் அழித்துக் கொண்டிருக்கின்றதை தற்போது காண முடியும். எது எப்படியானாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அரசியல் தலைவர்களோடு குறிப்பாக தமிழ் தலைவர்களோடு பழகி இருந்தாலும், தங்கத்துரை அண்ணன் போல், ஒரு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அதுவும் பூரணமாக அரசை எதிர்த்து சேவை செய்ய முடியுமென மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து காட்டியவர். அரச சார்பில் இரண்டாவது அங்கத்தவராக வெற்றி பெற்ற ஜனாப்ஏ.எல்.அப்துல் மஜீத் அவர்கள், அத்தோடு பிரதி அமைச்சரும் கூட இவரோடும் போட்டிபோட்டு செயல்பட்ட செயல்திறன் கொண்ட பொய் ஏமாற்றுகள் அற்ற சிறந்த பழக்க வழக்கங்களை கொண்டு இறுதி மூச்சு வரை செயல்பட்ட செயல் வீரன். 1977ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசியலில் தமிழரசுகட்சியில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அக்காலத்திலிருந்து மேலும் இக்கட்சியின் பணியில் தீவிரமாக ஈடுபட்டதனால் பல தடவை சிறை சென்று மீண்டவர். 1994ம் ஆண்டு திருமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மிகவும் பெரும் சாதனைகளில் கிளிவெட்டியில் அரசமரம் வெட்டி இதிலும் அவர் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் இருந்தவர்.

இறுதியாக நானும் அண்ணன் தங்கத்துரை அவர்களும் இந்தியாவில் சந்தித்த போது அண்ணன் தங்கத்துரை அவர்கள் கூறிய வார்த்தை 2 1/2 வருடத்தில் தனது நாடாளுமன்ற பதவியை இரா சம்பந்தன் ஐயா அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணக்கருத்தை என்னிடம் கூறினர். அடுத்த நாள் நானும் எனது நண்பர் ஜோன் எலிசாவும் அவரை இலங்கைக்கு விமானம் மூலம் வழி அனுப்பி வைத்தோம். அதுதான் இறுதித் சந்திப்பாக இருந்தது. இந் நிகழ்வு நடைபெறும் என கனவிலும் நினைத்திருக்கவில்லை.

1997-07-05ந் திகதி தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி கட்டிடத் திறப்பு விழா முடிவில் பல அறிஞர் பெருமக்கள் புடை சூழ்ந்து வெளியேறும்போது காலன் கவரவில்லை, கயவர்கள் அவர்களின் உயிரைப் பறித்துக் கொண்டார்கள். அத்தோடு பல அறிஞர் பெருமக்களும் துப்பாக்கிக்கு இரையானார்கள். இன்றும் என்றும் மறக்க முடியாத மாமனிதன் அண்ணன் தங்கத்துரை எங்கள் சொத்து இடைநடுவில் பறிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை மறக்க முடியாத ஒரு சிறந்த அரசியல்வாதியாகவே பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ. ஸ்ரீகிருஷ்ணராஜா

## திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்களின் "இதயக் கனி" அமரர் அருணாசலம் தங்கத்துரை

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்.
அது முடிந்த பின்பும் என் பேச்சிருக்கும்.
உள்ளம் என்றொரு ஊர் இருக்கும்.
ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கும்."

"பதவி வரும் போது,
பணிவு வரவேண்டும் தோழா,
பாதை தவறாமல்,
பண்பு குறையாமல் பழகி வர வேண்டும் தோழா!"

இது கவிஞன் கண்ணதாசனின் வரிகளில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் பாடுவதாக கேட்ட பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலுக்கு ஏற்ப தன் வாழ்க்கையை வகுத்து திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்களின் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட மக்களின் "இதயக் கனியாகத்" திகழ்ந்தவர்தான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்கள்.

1970ம் ஆண்டு மூதூர் தொகுதியின் அரசியலில் ஒரு மைல் கல் என்றே கொள்ளப்படவேண்டும். காலம் காலமாக தமிழரசுக் கட்சியின் கோட்டைகளாக விளங்கிய மூதூரின் தமிழ் கிராமங்கள், தமது வாக்குகளை வழங்கிய போதும், தமிழ் மக்கள் அரசியலை பொறுத்தவரை அநாதைகளாகவே காணப்பட்டனர். தமது கட்சிக்கு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் உள்ளார் என்பதை விட தமிழ் கிராமங்களின் கட்டுமான அபிவிருத்தி, கல்வி, சுகாதார மேம்பாடு அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு, மற்றும் வேலை வாய்ப்புகள் கானல்நீராகவே காணப்பட்டன. இந்நிலையில்தான் தங்கத்துரை என்ற இளைஞரின் அரசியல் பிரவேசம் அமைந்திருந்தது.

'கொட்டியார் புரம்' என அழைக்கப்படும் மூதூரின் அழகிய விவசாயக் கிராமமான 'கிளிவெட்டி' எனும் கிராமத்தில், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த திரு.திருமதி.அருணாசலம் தம்பதியினருக்கு 17.01.1937ல் பிறந்த புதல்வனாக திரு. தங்கத்துரை ஆவார். அன்னார் தமது ஆரம்ப கல்வியை தி/கிளிவெட்டி அ.த.க பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை மட்/வந்தாறுமூலை ம.விலும், உயர்தரக் கல்வியை யாழ்/ஸ்ரான்லிக் கல்லூரியிலும் பெற்றவராவார்.

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். இதற்கு அமைய பாடசாலை வாழ்க்கையிலே முதல் மாணவனாகவும் தலைமைத்துவம், மற்றோருக்கு உதவும் மனப் பாங்கு, வாதிடும் திறன், பேச்சாற்றல் புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவராக தங்கத்துரையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாறுமூலை ம.ம வியில் படிக்கும் காலத்தில் கண்டோம் என அன்னாரது நண்பர்கள் இப்போதும் கதைப்பதுண்டு.

இவ்வாறு மனித நேயமிக்க மனிதரை 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி, மூதூரில் களமிறக்கியது. மூதூர் தொகுதியின் அனைத்து தமிழ் கிராமங்களுமே, அமரர் தங்கத்துரையை, தானைத் தலைவனாக ஏற்றுக் கொண்டன.

பொதுத் தேர்தல் முடிவானது. மூதூரின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. அனைத்து தமிழ் கிராமங்களும், மகிழ்ச்சிப் பிரவாகத்தில், தங்கத்துரை அவர்களுக்கு வரவேற்பு அளித்தன. வாசல்தோறும் பூரண கும்பம் வைத்து ஆராத்தி எடுத்து, நெற்றித் திலகமிட்ட காட்சி இன்றும் மீட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

உரிமைகள் மறுக்கப்பட்ட வசதிகள் வாய்ப்புகள் வழக்கப்படாத, அபிவிருத்தி என்பதே இல்லாமல் திரு.தங்கத்துரையின் குரல் ஒலித்தமை சிறப்புக்குரியதாகும். அரசியல் அநாதைகளாகக் காணப்பட்ட மூதூர் தொகுதி தமிழ் மக்களின் குரலாக 33 வயதிலே இளைஞராகப் பாராளுமன்றம் சென்று மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் எவரையும் கவர்ந்திழுக்கும் வசீகரம் கஷ்டமுறுவோர் தம்மிடம் நாடி வருவோருக்கு உதவும் மனப்பாங்கு இதற்கு மேலாக சாதி, மத, பேதமற்ற முறையில் தனது சேவையை இந்த மண்ணில் வாழும்வரை வழங்கிய மக்கள் தலைவனாகவே தங்கத்துரையைக் கொள்ள வேண்டும்.

அமரரின் காலத்தில் தான் மூதூரில் படித்த இளைஞர், யுவதிகள் அரச வேலைவாய்ப்புக்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

மூதூரின் அரசாங்க பிரதி அமைச்சராக இருந்த மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத் கூட, ஒரு தடவை "தங்கத்துரை கெட்டிக்காரன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் வீரன்தான் எனக் கூறியமை அமரர் அண்ணன் தங்கத்துரையின் சேவைக்குச் சிகரமாய் அமைந்தது எனலாம். அமரர் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் அரசாங்க கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரின் சேவைக்குச் சமமாக செயற்பட்டமையை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

1983ல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று அவர் தெரிவு செய்யப்பட்டமையானது, திருக்கோணமலை மாவட்டத்தின் தமிழர்களுக்கு மேலதிகமாக, இஸ்லாமிய சிங்கள சகோதரர்களும், அவர் மீது வைத்துள்ள அபார நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

மாவட்ட முறைமைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் திரு.அமிர்தலிங்கம் அவர்கள் அமரர்.தங்கத்துரை வேட்பாளர் நியமனத்தில் இடம் கொடுக்கவில்லை. இதற்கான காரணம் கட்சியாளர் அவர் மீது கொண்ட பொறாமையின் உச்ச கட்டமாகும். ஆனால் அன்னார் சட்டத்தரணி இல்லை எனக் கூறப்பட்டது.

அமரர் அவர்களின் ஆதரவாளர்கள் தமிழ் மக்கள் கிளர்த்தெழுந்தார்கள். ஆனால் தங்கத்துரை அவர்களோ அனைவரையும் சமாதானப்படுத்தி தான் மீண்டும் அரசியலுக்கு வருவேன் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் செய்யும் சேவைகளை நான் தொடர்ந்து செய்வேன் எனக்கூறி அந்த இடைப்பட்ட காலத்தில் கொழும்பு சட்டக் கல்லூரியில் இணைந்து 03 வருடங்கள் சட்டத்தரணியாக தன் சகாக்கள் மத்தியில் வந்தமையானது அன்னாரின் உறுதிப்பாட்டைக் காட்டுகின்றது.

அதன் பின் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று மீண்டும் மக்கள் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்ததை இவ்வேளையில் நினைவு கூர்ந்தேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்ட மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை நட்சத்திரமாக எவ்வேளையிலும் தோற்கடிக்க முடியாத தானைத் தலைவனாகவே தங்கத்துரை விளங்கினார். அமரர் அவர்கள் தனது பதவிக் காலத்தில் திருக்கோணமலை மாவட்டம் பற்றிய ஒரு கனவை வைத்திருந்தார்.

- மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி
- வீதிகள் பாலங்கள் அபிவிருத்தி
- திருக்கோணமலையில் தனியான பல்கலைக்கழகம்
- விவசாய நீர்ப்பாசன அபிவிருத்திகள்
- சுகாதார போக்குவரத்து மேம்பாடு
- மூதூர் திருமலை நகர் எல்லைகளில் பெரும்பான்மையின குடியேற்றத்தை நிறுத்துதல்
- திருக்கோணமலை நகர அபிவிருத்தி

மேற்குறித்த திட்டங்கள் நிறைவேற்றியிருந்தால் திருக்கோணமலை அழகாபுரியாக மாற்றம் பெற்று இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் தங்கத்துரையின் செயற்பாடுகளில் பொறாமை கொண்டவர்கள் இவரை எப்படி வீழ்த்தலாம் என பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால் அரசியல் எதிரிகளுக்கு தங்கத்துரை ஒரு சிம்ம சொப்பனமாகவே விளங்கினார்.

திருக்கோணமலையில் தங்கத்துரையை ஜெயிக்க முடியாத நிலையில் அன்னாரது சூழ்ச்சிகளுக்கு மத்தியில் 1997ம் ஆண்டு யூலை 5ம் நாள் அன்னார் புத்தி ஜீவிகளின் மத்தியில் படுகொலை செய்யப்பட்டமை தமிழ் மக்களால் அன்றும், இன்றும், என்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் மாபெரும் தலைவன் அன்புச் சேவகன் மீதான படுகொலை அரங்கேறி 25 வருடங்கள் கடந்தாலும் அமரர் திருக்கோணமலை வாழ்மக்களின் மனங்களில் என்றும் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

உரிமைகளுக்காக போராடிய ஒரு சிறுபான்மை இனத்தின் மக்கள் பிரதிநிதி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாரண புருஷராக விளங்கிய அமரர்.அருணாசலம் தங்கத்துரை அவர்களின் ஆத்ம சாந்திக்கு இந்நாளில் பிரார்த்திப்போமாக.

"தன்னலம் நிறைந்த இவ்வுலகில் - நீ
உனக்காக ஒன்றும் சேர்த்ததில்லை
மன்னரைப் போல் மாசற்ற சேவை செய்தாய்
சொன்ன சொல் தவறாத நேர்மை
பன் முகத்தன்மையாய் பலருக்கும் சேவை
சாதி மத பேதம் பார்த்ததில்லை என்றும்
இன் முகமாய் எல்லோருக்கும் ஒளி ஈந்த
அண்ணா! நீங்கள் எங்கள் விடிவெள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. விஜயானந்தமூர்த்தி
முன்னாள் கிழக்கு மாகாண மேலதிக
கல்விப் பணிப்பாளர்
திருக்கோணமலை

# மாமனிதர் அருணாசலம் தங்கத்துரை

1936ஆம் ஆண்டு கிளிவெட்டி மண்ணில் உதித்த அருணாசலம் தங்கத்துரை அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதற்காக 1970 ஆம் ஆண்டு மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். மூதூரில் ஒவ்வொரு தமிழ் மக்களுடைய உள்ளத்திலும் இவர் குடி கொண்டிருந்தார். இப்போது நாங்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றோம் என்றால் அன்னாரே அதற்கு வித்திட்டவராகும்.

ஒவ்வொரு தனி மனிதனும் தங்களுடைய வாழ்வை உயர்த்துவதற்கு அன்னார் பெரும் சேவை செய்துள்ளார். இவர் மீண்டும் தமிழ் மக்களுக்கான காவலனாக 1994 ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் இவர் ஒரு சட்டத்தரணியும் ஆவார். அன்னார் அவருடைய பல்லாயிரக்கணக்கான விசுவாசிகளாலும் அண்ணன் என்றே அன்பாக அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நினைவு தெரிந்த நாளிலிருந்தே அன்னாரை எனக்குத் தெரியும். நான் கிளிவெட்டியில் பிறந்தவனும் அன்னாரது உறவினருமாகும். அன்னாருடன் நான் தொடர்புபட்ட விடயங்கள் எல்லாம் இன்னும் என் நினைவில் உள்ளது. அவற்றில் சிலவற்றை கூற விரும்புகின்றேன். நான் 1991 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவை தெரிவு பரீட்சை எழுதியிருந்தேன். இந்நியமனம் தொடர்பாக எந்தத் தகவலும் பெற முடியாதிருந்த வேளை, அதன் விபரங்களை பெற்று எனக்கு அந்நியமனம் கிடைக்கும் என்பதையும் அறியத்தந்தார்.

1983ஆம் ஆண்டு இராணுவத்தினால் நான் கைது செய்யப்பட்ட போது அன்னார் பெரும் முயற்சி எடுத்து என்னை விடுவித்தார். அன்னார் தனது பிறந்த மண்ணிற்கு செய்த சேவைகளில் கிளிவெட்டி மகாவித்தியாலத்திற்கு செய்த சேவை அளப்பரியது. சிறிய பாடசாலையாக இருந்த கிளிவெட்டி மகாவித்தியாலயம் அன்னாரின் முயற்சியினால் பல கட்டிடங்களையும், தேவையான ஆசிரியர்களையும் பெற்றது. அத்துடன் இப்பாடசாலை அன்னாரது வழிகாட்டல்களுடன் பெரு வளர்ச்சியடைந்து மகா வித்தியாலயமானது.

இவருடைய நேர்மை, நன்மனப்பாங்கு முதலியவற்றினால் கட்டிக்காக்கப்பட்ட கிளிவெட்டி மகா வித்தியாலயம் தலை நிமிர்ந்து நின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற எவரும் கீழ் நிலையை அடைந்ததாக வரலாறு இல்லை. அன்னாரும் இப்பாடசாலையிலேயே தனது ஆரம்பக்கல்வியை கற்றவராவார். இவர் கடைசி நேரத்திலும் ஒரு வீரனாகத்தான் செயற்பட்டார். எனவே இவரை மாமனிதர் என்று கூறுவதில் நாம் பெருமை அடைகின்றோம். இவரைப் பெற்று வளர்த்த தாய், தந்தையர் பெருமைக்குரியவர்கள். இவர் பிறந்த மண்ணும் இவரால் பெருமையடைகின்றது. அன்னாரின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கலைமாறன்" செ.லோகராஜா
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பாலத்தடிச் சேனை, தோப்பூர்.
*12.05.2016.*

## நெஞ்ச நினைப்பினில் நிலைத்திருப்பாய்!

*(அமரர் அருணாசலம் - தங்கத்துரை நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிய என் நினைவலைகள்.)*

தி/மூ/கிளிவெட்டி மகாவித்தியாலத்தில் ஒன்பதாம் வகுப்பில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது அவரை முதலில் சந்திக்கும் சந்தாப்பம் கிடைத்தது. 1970ஆம் ஆண்டு கிளிவெட்டி மாரியம்மன் கோவில் தமிழரசுக்கட்சி ஏற்பாடு செய்திருந்த அகிம்சைவழிப் போராட்ட நிகழ்வில் அவரைக் கண்டேன். அதே ஆண்டிுல் மூதூர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக பொதுத் தேர்தலில் தெரிவாகி இருந்தார்.

நான் கிளிவெட்டி ம.வி யில் படிக்கும்போது அவரது மாமனார் அமரர்.பூ.விநாயகமூர்த்தி குடும்பத்தினரோடு பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது மகன் அமரர்.வி.தவராசா என் உற்ற நண்பன். அதுவும் அண்ணனோடு பழகுவதற்கு காரணமானது. பாலத்தடிச்சேனையைச் சேர்ந்த எனது நெருங்கிய உறவினரும், எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கற்பித்த எனது குருவாகிய அமரர்.திரு.வே.சிவஞானமூர்த்தி அதிபர் அவர்களும் அண்ணனும் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் சமகாலத்தில் கல்வி கற்ற நண்பர்கள். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். அதுவும் ஒரு காரணமாக அமைந்தது. க.பொ.த (சா.தர) பரீட்சையில் நான் சித்தி பெற்றிருந்த போது எனக்கு வங்கியில் முகாமைத்துவ உதவியாளராக நியமனம் கிடைப்பதற்கு எனது பெயரையும் சிபாரிசு செய்தார். சந்தர்ப்பவசத்தால் அப்பதவி கிடைக்காமல் போனாலும் 1977ம் ஆண்டு மே மாத இறுதியில் ஆசிரிய நியமனத்திற்கு எனது பெயரையும் சிபாரிசு செய்திருந்தார். அதன் நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதத்தை அவரின் வீட்டின் அலுவலக அறையில் குத்து விளக்கேற்றி ஆசீர்வதித்து வாழ்த்தி வழங்கியமை இன்றும் என் நினைவில் நிழலாடுகிறது.

என் தாய் தந்தையின் முழுமையான விருப்பத்தோடு நான் ஆசிரியத் தொழிலுக்கு அமர்த்தப்பட்டேன். இதில் எனது ஆசிரியரின் முயற்சியும் எனக்குக் கிடைத்தது. நல்ல மனிதர்களின் அன்பும், ஆசியும், அருளும் பல பதவிகளை வகிப்பதற்கு காரணமாக அமைந்தது. கல்விப் புலத்தில் 40 வருடங்கள் ஆசிரியராகத் தொடங்கி அதிபர், பிரதிக்கல்வி பணிப்பாளர் வரை அதிபர் சேவை வகுப்பு-I, இலங்கைக் கல்வி நிர்வாகசேவை வரை உயர்வதற்கு காரணமாக அமைந்தது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் திருக்கோணமலை, மூதூர், கிண்ணியா, ஈச்சிலம்பற்று பிரதேசங்களில் கடமை செய்ய வேண்டியேற்பட்டது.

நான் க.பொ.த (உ.த) விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக 1990ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு றோயல் கல்லூரி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு கடமைக்குச் சென்றிருந்தேன். அந்நேரம் அண்ணன் ஹெவலொக் வீதியுள்ள தமிழர் விடுதலை கூட்டணிக் காரியாலயத்தில் தங்கியிருந்த வேளை அவரை சந்திப்பதற்காகச் செல்வேன். அப்போது மூதூர் ஈச்சிலம்பற்று பிரதேசங்களின் கல்வி நிலைமை பற்றிக் கலந்துரையாடுவார். ஆக்கபூர்வமான கல்வி அபிவிருத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை ஆலோசனைகளைக் கூறுவார். பின்னாளில் நான் மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தில் 12 வருடங்கள் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்தவேளை அது பயன்மிக்கதாக இருந்தது. நான் ஈச்சிலம்பற்றுக் கொத்தணி அதிபராக இருந்து 1995 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் இடமாற்றம் பெற்று மூதூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராக வந்த வேளை தி/மூ/ கிளிவெட்டி ம.வி அதிபராக வருமாறு கேட்டுக் கொண்டார். அந்த நேரம் சந்தர்ப்ப சூழ்நிலை அமையாத காரணத்தால் தொடர்ந்து உதவிக்கல்வி பணிப்பாளராக கடமை புரியும் நிலையே ஏற்பட்டது. அந்நேரம் அவர் அமரர்.குணராஜரெட்ணம் அவர்கள் என்னோடும் மூதூரின் கல்வி அபிவிருத்திப் பற்றி அடிக்கடி கலந்துரையாடுவார்.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பிலும் திருக்கோணமலை மாவட்டத்தின் கிராமப்புற மக்களின் கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்துப் பாதைகள் அபிவிருத்தி, மின்சாரம் போன்ற பல துறைகளிலும் படித்த இளைஞர்களின் தொழில் வாய்ப்புக்கள் சம்பந்தமான தூர நோக்கும் அவருக்கு இருந்ததென அவரோடு பழகியவன் என்ற வகையில் அறிந்திருந்தேன்.

வெற்றித் தேவதை அமரர்.தங்கத்துரை அண்ணனை நாடிய காரணம் அவரது தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பு, மக்கள் சேவை ஆகும். "மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் அது முடிந்த பின் என்பேரிருக்கும்" கடமை அது என் கடமை என்பதை தன் வாழ்நாளில் நிரூபித்தக் காட்டியவர்.

"வலிகள் இல்லாமல் வழிகள் இல்லை
விழிகள் மூடினால் வெற்றிகள் இல்லை
முயற்சி இல்லாமல் மகிழ்ச்சி இல்லை
முயன்ற மனிதன் தோற்றது இல்லை" இவை அனைத்திலும் தங்கத்துரை அண்ணனுக்கு மிகப் பொருந்தும்.

1997 ஜுலை மாதம் 5ஆந்திகதி கல்விக் கண்ணைத் திறப்பதற்காக கலைக்கூடத் திறப்பு விழாவிற்காகச் சென்றவர் மீளாத்துயிலில் மூழ்கினார். 2016ஆம் ஆண்டு அவரது 13வது நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவிற்கு கிளிவெட்டி ம.வியில் அமரர் தங்கத்துரை மண்டபத்தில் அவரைப் பற்றிய நினைவுப் பேருரையை நிகழ்த்த கிடைத்த சந்தர்ப்பத்தில் மூன்று முக்கிய விடயங்களை அதில் நான் தெரிவித்து இருந்தேன். இன்று அது நிறைவேறும் நேரம் வந்துள்ளது என நினைக்கம் போது நெஞ்சில் ஆனந்தம் நிலைபெறுகிறது.

1. அமரர் தங்கத்துரை அண்ணனின் சிலையும் நினைவு மண்டபமும் அமைத்தல்.
2. அவர் பற்றிய வரலாற்று நூல் வெளியீடு செய்தல்.
3. அமரர். தங்கத்துரை அறக்கட்டளை நிதியம் ஆரம்பித்தலும் செயற்படுத்துதலும்.

இதன் மூலம் அன்னாரின் சேவையை நினைவு கூறுவோம்.
அவரின் ஆத்மா இறைபதம் சேர பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



**திருக்கோணமலையில் கல்வி அமைச்சர்**
**அல்ஹாஜ் பதியுதீன் முகம்மது அவர்களுடன்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகம் செல்வநாயகம்
(ஓய்வு – பிரதிக்கல்விப்பணிப்பாளர்)
தி/பள்ளிக்குடியிருப்பு

## கொட்டியாபுரப்பற்றின் அரசியல் வரலாறு படைத்த முதல்வர் அமரர் அ.தங்கத்துரை அவர்கள்

"அண்ணன்" என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்கள் கொட்டியாபுரப்பற்றின் அரசியல் வரலாற்றில் முதல்வராக களமிறங்கி வெற்றிவாகை சூடி பாராளுமன்றம் சென்று எமது பிரதேசத்தின் அரசியல், கல்வி, பண்பாட்டியல், பொருளாதார அபிவிருத்திகள் சார் மேம்பாட்டிற்காக உழைத்து மூதூருக்கும், திருக்கோணமலை மாவட்டத்திற்கும் முழு நாட்டிற்குமே முன் மாதிரியான பாராளுமன்ற உறுப்பினராக திகழ்ந்து எம் மண்ணிற்கும் பெருமை சேர்த்த மாமனிதர்.

கல்வி வரலாற்றில் அன்னியர் ஆட்சியிலிருந்து படிப்படியாக சுதந்திர நிலைக்கு வந்து கொண்டிருந்த காலத்தில் சுமார் 1920களின் பின்பே பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பாடசாலைகளை படிப்படியாக அரசு பொறுப்பேற்றது. 1931ல் டொனமூர் ஆட்சியில் வாக்குரிமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவரை இலங்கையரை ஆட்சிப் பொறுப்புக்கள் விளங்கிய காலமதில் C.W.W.கன்னங்கரா அவர்களின் ம.ம.வித்தியாலய திட்டங்கள் என கிராமப்புற மாணவர்கள் கற்பதற்கான வழிவகைகளும் உருவாக்கப்பட்ட காலம்.

ஆரம்பக் கல்வியை தனது ஊரான கிளிவெட்டியில் கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று மட்/வந்தாறுமூலை ம.ம.வி விடுதியுடனான பாடசாலையில் தனது இடைநிலைக் கல்வியையும் தொடர் கல்வியை யாழ்/ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்து இலிகிதராக வேலை வாய்ப்பைப் பெற்று தொழில் புரிந்து பிரதம இலிகிதராக பதவியுயர்வு பெற்றவர்.

இடதுசாரிக் கொள்கையின் அரசியல் போக்குடைய இவர் எமது பிரதேச மக்களின் எதிர்காலம், அபிவிருத்தி தேவைகளையும் மனதிருத்தி அதற்கான அரசியல்வாதியை இளம் வயதிலேயே நாடலானார். இதனால் தனது 34வது வயதிலேயே 1970ல் பாராளுமன்ற தேர்தலில் மூதூர் தொகுதியில் போட்டியிட்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி என்பதால் 2ம் இடத்தைப் பெற்று வெற்றி பெற்றார்.

அனைத்து தமிழ் கிராமங்களிலும் பெரும்பாலானவர்கள் தமிழ் அரசுக்கட்சியையே ஆதரிப்பவர்கள். தேர்தல் பிரசாரக் காலங்களில் பொதுக்கூட்டங்களில் தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் முதலான பல முதன்மைப் பேச்சாளர்களோடு வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா முதலான இளைஞர்களும் களமிறங்கும் அரசியல் பேச்சுக்கள் உணர்வு ரீதியான உணர்ச்சியூட்டுவனவாக அமையும். இளம் பேச்சாளனாக அண்ணன் தங்கத்துரையவர்களும் திகழ்ந்து வெற்றி வாகை சூடினார்.

பாராளுமன்ற உறுப்பினரானதும் அனைத்து கிராமங்களின் கல்வி, பொருளாதார கட்டுமான, நீர்ப்பாசன அபிவிருத்திகளில் கூடுதலான கவனம் செலுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தபாடுபட்டார். ஒவ்வொரு கிராமமாக உந்துருளியில் சென்று ஒவ்வொரு கிராமத்தின் தேவைகளை அங்கேயே சென்று இரவிலும் தங்கி நின்று தேவைகளை அறிந்து கொள்வதில் ஆவலாய் இருந்தார்.

அக்காலத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை கூடுதலாக ஆசிரிய நியமனங்களை வழங்கினார். கல்வி மூலமே சமூக மேம்பாடு சாத்தியம் என்பதை உணர்ந்தவராக அவரது செயற்பாடுகள் அமைந்தன. பாடசாலைகளை தரம் உயர்த்தியும், கட்டடம் முதலான பௌதீக வளங்களையும் அதிபர் ஆசிரியர்களை வழங்குவதில் கவனமாக செயற்பட்டார். அதனது விளைவு இன்று ஒவ்வொரு கிராமத்தின் கல்வி, பொருளாதார வள அபிவிருத்தியடைந்துள்ளமைக்கு அடித்தளமிட்டவர் அமரர்.தங்கத்துரை அண்ணன் என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

பதவியில் இருப்பவர்களும் மேலும் படித்து உயர்கல்வித் தகைமையுடையவர்களாக வேண்டுமென்பதில் ஆர்வமாக இருந்தார். 1997ல் நான் PGDEM பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா கற்கையின் தெரிவு பரீட்சையில் சித்தியடைந்தமையை கூற அவர் அடைந்த மகிழ்வைப் பார்த்தேன். தான் கொழும்பு செல்லவிருக்கின்றேன் என்றோடு பிக்கப்பில் வரவும் நான் NIEயில் கொண்டு விடுகின்றேன். எனக் கூறி ஊக்கப்படுத்திய சம்பவம் இன்னும் என்னினைவில் மறக்க முடியாதது.

நாம் கற்க வேண்டும். அப்போது தான் எம்மாலும் மேலும் பலருக்கு உதவ முடியும் என்ற அவரது வாசகங்கள் இன்றும் நினைவில். அவ்வாறே அவரும் முன்மாதியாக சட்டத்தரணியாக கற்றுயர்ந்தார்.

திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் முதன்மை நிலையில் வெற்றியடைந்தார். திருக்கோணமலை மாவட்ட மக்களின் ஏகோபித்த ஆதரவை அவரது அன்பு, அர்ப்பணிப்பான சேவைகள் மூலம் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அன்பும், புன்சிரிப்பும், உரிமையோடு அதட்டலும், பாசமும், கண்ணியப்படுத்தலும் ஒரு பெரும் முன் மாதிரி தலைமைத்துவத்தின் தந்தை எனக் கூறின் மிகையல்ல.

ஒரு தலைவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு அரசியலாளர்கள் எவ்வாறு செயலாற்ற வேண்டும். செயற்படவேண்டும் என்பதற்கெல்லாம் வழிசமைத்து தந்த பெரும் தலைவர் எல்லோர் மனங்களிலும் இன்று நீடித்து நிலைத்து வாழும் அண்ணன் தங்கத்துரை அவர்களை பற்றி பல கோணங்களில் மேலும் எடுத்தியம்ப முடியும்.

சமூக மேம்பாட்டிற்காய் உழைத்த அமரர் அ.தங்கத்துரை அவர்களின் அரசியல் வரலாற்றுப் பார்வையில் எமது நாட்டில் 1947களில் சோல்பரி அரசியல் யாப்பு பிரித்தானியர் ஆட்சியின் போது நடைமுறைக்கு வந்த வேளை,

- 1947ல் 1வது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. திருக்கோணமலை மாவட்டத்தில் திருக்கோணமலை மூதூர் எனும் இரு தொகுதிகளே இருந்தன. 1வது தேர்தலும் நடைபெற்றது

- 1952ல் 2வது பாராளுமன்ற தேர்தலும்

- 1956ல் 3வது பாராளுமன்ற தேர்தலும்

- 1960ம் ஆண்டு மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக ஆக்கப்பட்டது. இதுவரை திருக்கோணமலைக்கு ஒரு தமிழரும், மூதூர் தொகுதிக்கு ஒரு இஸ்லாமியரும் நியமிக்கப்பட்டு வந்தனர். மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியானதும் ஒரு இஸ்லாமியரும் ஒரு தமிழரும் பாராளுமன்ற உறுப்பினராக வர வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1960ம் ஆண்டு மார்ச் மாதம் 4வது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் மூதூர் தொகுதியில், அமரர்.ரி.ஏகாம்பரம் இ.த.அ.கட்சி 10685 வாக்குகள் பெற்று முதலாவது உறுப்பினர் எம்.ஈ.எச்.முகமது அலி சுயேட்சை 10680 இரண்டாவது உறுப்பினர்

- 1960ம் ஆண்டு ஜுலையில் 5வது பாராளுமன்ற தேர்தலில் ரீ.ஏகாம்பரம் ஏ.எல்.அப்துல் மஜீத் த.அ.கட்சி சி.சு.கட்சி 1வது பா.உறுப்பினர் 2வது பா.உறுப்பினர்(13,304) (13,247)

- 1961ஆம் ஆண்டு திரு.ரீ.ஏகாம்பரம் அவர்கள் காலமானார் இவ்விடத்தை நிரப்புவதற்கு 1961ம் ஜுன் மாதம் நடாத்தப்பட்ட இடைத்தேர்தலில் (By – election) எம்.ஈ.எச்.முகம்மது அலி அவர்கள் இ.த.அ.கட்சியில் போட்டியிட்டு (14,215) 1வது பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார்.

- 1965ம் ஆண்டு 6வது பொதுத்தேர்தலில், எம்.ஈ.எச்.முகமதலி ஏ.எல்.அப்துல் மஜீத் இ.த.அ.கட்சியில் போட்டியிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1வது பாராளுமன்ற உறுப்பினரானார் 2வது பாராளுமன்ற உறுப்பினர் (20,237) (16,726)

- 1970ம் ஆண்டு நடைபெற்ற 7வது பாராளுமன்ற தேர்தலில் ஏ.எல்.அப்துல் மஜீத் அ.தங்கத்துரை சிறிலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை தமிழரசுக்கட்சி 1வது பா.உறு (22,727) 2வது பா.உறு (19,787) வாக்குகள் திருக்கோணமலை மாவட்டத்தில் புதிதாக சேருவில எனும் தொகுதி உருவாக்கப்பட்டது. 1947 தொடக்கம் 1970 வரை நடைபெற்ற தேர்தல்களின் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் சமூகத்தினரே பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 1977ல் நடைபெற்ற 8வது பாராளுமன்ற தேர்தலில் சிங்கள சமூகத்தை சேர்ந்தவரும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருக்கோணமலை மூதூர் சேருவில திரு.,ரா.சம்பந்தன் பா.உ ஜனாப்.எம்.ஈ.எச்.மஹரூப் பா.உ திரு.எச்.டி.டில்.லீலரட்ண தமிழர் விடுதலைக்கூட்டணி ஐ.தே.கட்சி ஜெ.தே.கட்சி (15,144) (12,530) (14,926)

- 1988ல் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் தேர்தல் தொகுதி முறை நீக்கப்பட்டு விகிதாசார தேர்தல் முறை அமுல்படுத்தப்பட்டது. இதன் படி ஒரு மாவட்டத்தின் தேர்தல் தொகுதிகளை விட ஒருவர் மேலதிகமாக நியமிக்கப்படுவார். உதாரணம் திருக்கோணமலையில் மூன்று தொகுதிகள் நான்கு அங்கத்தவர் தெரிவு செய்யப்படுவார். இது மாவட்டத்தில் அதிகூடிய 1வது இடம்பெறுபவர்களுக்கு வழங்கப்படும்

- 1989ல் 9வது தேர்தலில் சுயேற்சைக்குழு (EROS அமைப்பினர்) ஐ.தே.கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி திரு.எஸ்.ரட்ணராஜா ஜனாப்.எம்.ஈ.எச்.மஹ்றூப் திரு.M.K.D.S.குணவர்த்தன ஜனாப்.அளீஸ் பளீர் அமீர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மாவட்டத்தில் ஈரோஸ் அமைப்பினரால் தமிழர் தரப்பினர் களமிறங்கி மாவட்டத்தில் முதன்மை நிலையைப் பெற்று இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் வென்றனர்.

- 1994ல் 10வது பொதுத்தேர்தலில் பின்வருவோர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர். ஐ.தே.கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாப் ஆ.நு.ர்.ம.ஃ.றூப் பா.உ திரு.ஏ.தங்கத்துரை பா.உ ஜனாப்.நஜீப் ஏ.மஜீத் (17,043) (22,409) (21,590) திரு.சுனில்சாந்த ரணவீர பா.உ (15,084)

- 1970ல் 7வது பாராளுமன்ற தேர்தலிலும்,

- 1994ல் 10வது பாராளுமன்ற மாவட்ட விகிதாசரத் தேர்தலிலும், போட்டியிட்டு அமோக ஆதரவுடன் வெற்றி பெற்றார். 1997.07.05ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவின் போது குண்டுவெடிப்பில் காலமானார். பேரிழப்பு

- 1982ல் சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கைக்கமைவாக மாவட்ட சபைகளை அப்போதைய அரசு முன் வைத்தது. மாவட்ட சபைகள் 'குட்டி பாராளுமன்றம்' எனவும் வர்ணிக்கப்பட்டு அதிகாரங்கள் உள்ளதாக கூறினர்.

- மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்ட அண்ணன் திரு.அ.தங்கத்துரையவர்கள் முதன்மை நிலை வெற்றியடைந்து திருக்கோணமலையை மாவட்ட சபைத் தலைவராகி சிறப்பான தனது பணியைத் தொடர்ந்தார். இவ்வாறு திரு.அ.தங்கத்துரை அண்ணன் அவர்களின் அரசியல் வரலாறானது,

- 1970ல் மூதூர் தொகுதியின் (இரட்டை அங்கத்தவர்) பாராளுமன்ற உறுப்பினராகவும்

- 1982ல் திருக்கோணமலை மாவட்ட சபைத் தலைவராகவும்

- 1994ல் திருக்கோணமலை மாவட்டத்தின் விகிதாசாரத் தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக வெற்றியீட்டினார்.

- 1970 களிலிருந்து 1997.05.07ல் அகாலமரணம் அடையும் வரை 27 இருபத்தேழு ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் பணியை மிகவும் மாண்புறு பணியாக மேற்கொண்டமை. இனமொழி வேறுபாடுகள் பாராது அனைத்து மக்களுக்குமான சேவையை வழங்கி அனைத்து இளையோருக்கும் அன்பு நிறை அண்ணனாக அன்பான கண்ணியமாக மகத்தான சேவையை வழங்கிய அண்ணன் தங்கத்துரை அவர்கள் சிரிப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவர் மனங்களில் நீடித்து இதயத்தில் இடம்பிடித்திருக்கும் அண்ணன் தங்கத்துரை அவர்களின் நாமத்தை எமது பள்ளிக்குடியிருப்பின் 1970ன் போது உருவான புதிய கிராமத்திற்கு 'தங்கபுரம்' என வைத்தோம்.

மூதூர் பகுதியில் 99.9% அதி கூடுதலானோர் இ.த.கட்சிக்கே வாக்களிக்கும் இடமாக எமது பள்ளிக்குடியிருப்பு இருந்தது. 'பள்ளிக்குடியிருப்பு இ.த.அ.கட்சியின் கோட்டை' என்றும், இதன் திறப்பு திரு.அ.தங்கத்துரை அவர்களின் கையில் உள்ளது என்றும் அப்போதை பிரசாரக்கூட்டங்களில் எம்மவர்களால் பேசப்பட்டது.

மூதூர் - திருக்கோணமலை பிரதேசங்களில் பெரும்பாலான மக்களின் மனங்களில் வாழ்த்து கொண்டிருக்கும் அமரர்.அ.தங்கத்துரை அண்ணன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.



மூதூரில் 'ஆறுமுகம் அரங்கு'
அமரர்.அ.தங்கத்துரை அவர்களால் திறந்து வைத்தபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒப்பிலாமணி குலேந்திரன்
மூதூர்
ஓய்வு நிலை உதவி கல்வி பணிப்பாளர்
திருக்கோணமலை.

## இறவாத பிறவாமை பெற்று மீண்டும் மறவாமையுடன் எம்மை நாடி சேவையாற்ற வாரீரோ...

தங்க மகனே தரணி போற்றும் தலைவா
பங்கமில்லா பாசத்தின் பிதா மகனே
பாரினில் பண்பால் உயர்ந்தவனே
அன்பால் அனைவர் தம்
உள்ளம் கவர்ந்தவனே
எந்தையும் தாயும் மகிழ்ந்திருந்த திருநாட்டின் முந்தையர்
வாழ்ந்து மடிந்ததும் இந்நாடே கிள்ளை மொழி பேசும்
கிளிவெட்டி தனில் பிறந்தீர் பிள்ளை தமிழுடன்
ஆங்கிலத்தில் ஆளுமை கண்டீர்.

ஆரம்பக்கல்விதனை பிறந்த மண்ணில் கற்றுணர்ந்தீர்.
ஐந்தாம்தரத்தில் அரசு புலமை சித்தி பெற்று.
வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமை படைத்து, யாழ் கனகரெத்தினம்
மத்தி மகா வித்தியாலயத்தில்
உயர் தரம் சித்தி கண்டீர்
பல்கலைக்கழகம் புகுமுகம் பெறும் நிலைதனில்
அரசு பதவி நாடிவந்திட்ட வேளைதனில் அதனை ஏற்றீர்.
குடும்ப உயர்வுக்காய் நின்தன் சேவை
கால்கோளாய் அமைந்ததே.
வல்லமை கண்டு அரச பதவியில் நின்று நிலைத்து
சமத்துவக் கொள்கை தடம் புரள பதவி துறந்தீர்.

அரசின் ஆட்சி மொழியாம்
சிங்களம் மட்டும் சட்டத்தால் பதவி துறந்தீர்கள்.
மக்கள் சேவையில் நாட்டம் கொண்டு
தேர்தல் களத்தில் நின்றிருந்தீர்கள்.
மூதூர்தமிழ் மக்கள் மனங்களில் நிறைந்து நின்றீர்கள்
பாராளுமன்ற தேர்தலில் மக்கள் துயர் துடைக்க வெற்றி
வாகை சூடி பாராளு மன்றம் சென்றீர்கள்.
மாண்புறு சேவையால்
மக்கள் மனங்களில் நிறைந்து நின்றீர்கள்.
வஞ்சகர் சூழ்ச்சி வரலாற்றில் தவறு சூழ்ந்தது.
மூதூரின் முத்து அரசியலில் நீங்கள் ஓர் முத்திரை
பதித்த நாயகன்.
நித்திலம் போற்றும் சாதனையாளர் தீர்க்கதரிசி.
மரணம் ஓர் இடைவெளியானால் மறைந்தாலும் மக்கள்
மனங்களில் ஓர் மனித நேயர் மட்டுமல்ல ஓர் சாணக்கியர்.
இறவாத பிறவாமை பெற்று மீண்டும் மறவாமையுடன்
எம்மை வந்து சேரவேண்டும்.
அண்ணா உங்கள் வரலாற்று படிமங்கள்
இதன் கீழ் தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமரைத்தீவான்

## இருத்துவோம்

இருந்தாலும் ஆயிரம் பொன் ஆகும் - கரி
இறந்தாலும் ஆயிரம் பொன்னாமே
பெரும் தங்கத் துக்குமிது பொருந்தும் - ஆம்
பெரு நெஞ்சர் ஒருபோதும் மறவார்!

தமிழர்க்கு ஒரு துரையே தங்கம் - அது
தான் தோன்றி யானதொரு மூதூர்!
அமுதான தமிழ் கொண்டு போகும் - பேர்
அறிவோடு பல வினைகள் புரியும்

மண்பற்றை மறவாது தங்கம் - அது
மாந்தருக் கான தெலாம் செய்யும்!
பண்போடு மக்களினை பார்த்தே – சில
பணியிலும் ஈடுபடும் பார்த்தோம்!

தாங்க முடியாதவர் ஒழித்தும் - பலர்
தாங்கி மறவாமலுளர் இன்னும்!
ஈங்கெமது துரையாரை யாங்கள் - நெஞ்
சிருந்துவோம் மறவாமல் - வாழ்க!

**"நத்தம் போல் கேடும் உளதாடும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது" (235 குறள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1970ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் முடிவுகள்

### 1970 Parliamentary General Election

Results of the 7th parliamentary election held on 27 May 1970:

| Candidate | Party | Symbol | Votes | % |
|---|---|---|---|---|
| A. L. Abdul Majeed | Sri Lanka Freedom Party | Hand | 22,727 | 29.72% |
| A. Thangathurai | Illankai Tamil Arasu Kachchi | House | 19,787 | 25.87% |
| H. D. L. Leelaratne | | Ladder | 18,698 | 24.45% |
| M. E. H. Mohamed Ali | United National Party | Elephant | 15,018 | 19.64% |
| B.G. Sirisena | | Lamp | 253 | 0.33% |
| **Valid Votes** | | | **76,483** | **100.00%** |
| Rejected Votes | | | 705 | |
| Total Polled | | | 77,188 | |
| Registered Electors | | | 44,176 | |
| Turnout | | | 174.73% | |

## 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் முடிவுகள்

### 1994 parliamentary general election

Results of the 10th parliamentary election held on 16 August 1994.

| Party | Votes per Polling Division | | | Postal Votes | Total Votes | % | Seats |
|---|---|---|---|---|---|---|---|
| | Mutur | Seru-wila | Trinco-malee | | | | |
| United National Party (CWC, UNP) | 13,773 | 14,556 | 5,703 | 954 | **34,986** | 29.17% | 2 |
| Tamil United Liberation Front | 6,817 | 1,765 | 18,548 | 1,250 | **28,380** | 23.66% | 1 |
| Sri Lanka Muslim Congress | 18,677 | 1,870 | 5,710 | 646 | **26,903** | 22.43% | 1 |
| People's Alliance (SLFP et al.) | 856 | 17,183 | 5,156 | 691 | **23,886** | 19.91% | 0 |
| Tamil Eelam Liberation Organization (EROS, PLOTE, TELO) | 651 | 271 | 2,736 | 51 | **3,709** | 3.09% | 0 |
| Eelam People's Revolutionary Liberation Front | 252 | 188 | 408 | 33 | **881** | 0.73% | 0 |
| Independent Group | 200 | 35 | 352 | 21 | **608** | 0.51% | 0 |
| Sri Lanka Progressive Front (JVP) | 86 | 286 | 199 | 18 | **589** | 0.49% | 0 |
| **Valid Votes** | **41,312** | **36,154** | **38,812** | **3,664** | **119,942** | **100.00%** | **4** |
| Rejected Votes | 2,210 | 2,311 | 2,110 | 51 | 6,682 | | |
| Total Polled | 43,522 | 38,465 | 40,922 | 3,715 | 126,624 | | |
| Registered Electors | 61,949 | 54,632 | 67,509 | | 184,090 | | |
| Turnout | 70.25% | 70.41% | 60.62% | | 68.78% | | |

*The following candidates were elected:*
***A. Thangathurai (TULF), 22,409*** *preference votes (pv); M. N. Abdul Majeed (SLMC), 21,590 pv; M. E. H. Maharoof (UNP), 17,043 pv; and Vithanage Sunil Shantha Ranaweera (UNP), 15,084 pv.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலாயுதம் தங்கராசா
தம்பலகாமம்

## தங்கமான சேவகன் தங்கத்துரை

மூதூரின் முத்து என மக்கள் எல்லாம்
முழு மன தோடவரை போற்ற வைத்த
சேவையின் நாயகனாம் தங்கத்துரை
திடீரென எம்மை விட்டுச் சென்று விட்ட
செய்தியைக் கேட்டறிந்து சர்ச்சை யுற்ற
ஏழைகளின் கண்ணீரால் எழுதும் மடல்
பார்வைக்கு உங்கள் முன் பகருகின்றேன்
ஒடித்தறிந்து உண்மைதினை அறிந்து கொள்வீர்.

இளவயது இவரா? எம். பி, என்று
எத்தனையோ பேர்வரை வியந்து நோக்கு
சேவைக்கு வயது எதற்கு பொறுமையாக
சேர்ந்து நீர் ஒன்றாகக் காண்பீர் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு மனதோடு முயன்று எங்கள்
தேவைகளைத் திரட்டி மன்றில் பேசி
இவரல்லோ எங்கள் எம்.பி, என்று
அனைவரும் புகழ்ந்தினிக்கச் சேவை செய்தான்

ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தெறிந்து
எதிர் படும் இளை யோரை நெறிப் படுத்தி,
கோழைகளாய் வீடுகளில் தூங்க வேண்டாம்
துடிப் போடு எழுந்து சேவை ஆற்றி
துன்பத்தை துடைத்தெறிந்து வாழ வழி
காட்டிய பெரும் தலைவன் கருணை யோடு
ஏழைகளாய் வாழ்ந்தவர்கள் மகிழ்ச்சி பொங்க
ஏற்றம் காண்பதற்கு வழி அமைத்தோன்.

தங்கமான சேவகன் தங்கத்துரை,
தமிழருக்குக் கிடைத்த பெருந்தலைவன்
எங்களின் நலனுக்காய் அல்லும் பகலும்
இணையற்ற சேவை செய்த பெரும் தலைவன்,
சாக் கடை அரசியல் அவர்
உயிரை சதி செய்து கவர்ந்தாலும் இன்று அவர்
எண்ணற்ற ஏழைகளின் நெஞ்சங்களில்
இனிதே இருக்கிறார், உண்மை உண்மை

தங்கமான துரை எங்கள் தங்கத்துரை
தமிழ் உலகம் உள்ளவரை அவரும் வாழ்வார்
நினைவுக்காக மலர் தொடுக்கும் நீங்களும்
நீடூழி பெருமையுடன் வாழ வாழ்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒ. வர்ணகுலநாதன்

## நினைவில் நிறைந்து நிற்கும் தலைவர்

பரந்த இப்பேருலகில் இன்றுவரை பிறந்து இறந்தவர்கள் எண்ணற்றோர். அனைவரையும் நினைவில் நிறுத்த இயலாது. ஆனால் ஒரு சிலரை மட்டும் மனித சமுதாயம் என்றென்றும் மறவாது போற்றுகின்றது. அவர்களைக் கோடிக்கணக்கான மக்களிலிருந்து பிரிந்து வேறுபட்டவர்களாக தெய்வநிலையில் வைத்து மதித்துப் போற்றுகின்றது. அவர்கள் வாழ்ந்த வாழ்வும், ஆற்றிய சேவையும் அவ்வாறு மதித்துப் போற்றும்படியாக அமைகின்றது. அவ்வாறு போற்றப்படுபவர்களில் எமது ஈழத்திருநாட்டில் தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும், சமுதாய உயர்வுக்காகவும் அயராது பாடுபட்ட தமிழ் தலைவர் அமரர் அருணாசலம் தங்கத்துரையும் ஒருவராவார்.

பெரியோரால் "தங்கா" எனவும் இளையோரால் "அண்ணன்" எனவும் உரிமையோடு அன்பாக அழைக்கப்பட்ட அமரர் தங்கத்துரை அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்திலே சைவமும், தமிழும் தழைத்து விளங்கிய இயற்கை வளங்கள் நிறைந்த கிளிவெட்டி எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் 1936ம் ஆண்டு தை திங்கள் 17ம் நாள் அருணாசலம் யோகம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். பாக்கியதுரை, முத்துக்குமாரபிள்ளை (குமாரதுரை) என்போர் இவரின் சகோதரர்களாவார். இவரின் தந்தையார் அப்பகுதி பிறப்பு, இறப்பு திருமண பதிவுகாரராவார். ஆயினும் விவசாயத் தையே ஏற்றமுடைய தொழிலாக கொண்டிருந்தார்.

தங்கத்துரை அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை தமது கிராமப் பாடசாலையிலேயே ஆரம்பித்தார். 5ம் வகுப்பு புலமைப்பரீட்சையில் சித்தி யடைந்து மட்/வந்தாறுமூலை. மகாவித்தியாலயத்தில் மேல்படிப்பையும் யாழ;/ஸ்ரான்லி கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றார். பின் எழுது வினைஞர் சேவையில் சேர்ந்து நீர்பாசனத் திணைக்களத்தில் சோமபுரம் இரத்தினபுரி கொழும்பு ஆகிய அலுவலகங்களில் திறம்படச் சேவையாற்றினார்.

1964ம் ஆண்டு, திருக்கோணமலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகள் சத்தியேஸ்வரி என்பவரை திருமணம் செய்து நடாத்திய இனிய இல்லறத்தின் பயனாக புஸ்பாஞ்சலி தர்மினி, சுமதி, அகிலன் ஆகிய நற்செல்வங்கள் நான்கிற்கு தந்தையானார்.

இவர் அரச சேவையில் இருந்த ஆரம்ப காலத்தில் இடதுசாரி கொள்கையை ஏற்று அவர்தம் தொழில் சங்கங்களுடன் இணைந்து தொழிலாளர் நலன்களுக்காகப்பாடுபட்டார். பின் தந்தை செல்வாவின் சமஸ்டிக் கொள்கையை ஏற்று தமிழரசுக்கட்சியில் சேர்ந்து கொண்டார். இவரின் பேச்சாற்றல் செயலாற்றல் என்பன கட்சியின் பெரும் தலைவர்களையும் இவர்பால் ஈர்த்தன. இளைஞர்கள் இவர் பின்னால் திரண்டனர். குறுகிய காலத்திலேயே தமிழரசு கட்சியின் இளைஞர் அணித்தலைவரானார்.

1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு ஒரு பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவானார். அன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் "வயதில் குறைந்த பிரதிநிதி என்ற பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். இவரின் கட்சி எதிர் கட்சியாக தொழில்பட்டது. ஆனால் இவரின் எப்போதும் சிரித்துப் பேசுகின்ற சுபாவம் சேவை மனப்பாங்கு தனது கருத்தை சரியான முறையில் எடுத்துக்கூறும் ஆற்றல் மற்றவர் கருத்தையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை என்னும் உயரிய பண்புகள் அரசாங்கக் கட்சி அங்கத்தவரிடத்தேயும் பெரும் மதிப்பினையும் செல்வாக்கினையும் ஏற்படுத்திக் கொடுத்தன. இதன் பயனாக மூதூர் தொகுதி மக்களுக்கு மாத்திரமன்றி முழுமாவட்டத்துக்குமான தேவைகளையும், சேவைகளையும் இவரால் ஆற்ற முடிந்தது. பாகுபாடின்றி மூவின மக்களுக்கும் சேவையாற்றினார். இதனால் முழுமாவட்ட மக்களும் விரும்பி உரிமை பாராட்டி போற்றிப் புகழும் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் 1977வரை மூதூர் தொகுதி பிரதிநிதியாக இருந்து மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றினார்.

1983ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசியல் திருத்த மொன்றின் படி இலங்கையர் யாவரும் தமிழீழக் கொள்கையை கைவிட்டு ஐக்கிய இலங்கை என்பதை ஏற்று மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்து தாம் வகிக்கும் பதவிகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப்பணிக்கப்பட்டார்கள் ஆனால் திரு. தங்கத்துரை அவர்கள் தமிழீழக் கொள்கையை கைவிட மறுத்து தனது மாவட்டசபைத் தலைவர் பதவியை உதறித் தள்ளினார்.

1979 - 1980 காலப்பகுதியில் கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்று திறம்படச் சித்தியெய்தினார். ஆனால் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த போதும் தமிழீழக் கொள்கையை கைவிட விரும்பாததால் சட்டத் தொழில் புரியவில்லை.

1985 கலவரத்தை தொடர்ந்து அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. எனவே குடும்பத்தோடு இந்தியா சென்றார். இலங்கையி லிருந்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்த மக்களின் நலன்களை கவனிக்கும் பணிகளில் ஈடுபட்டார். சில வருடங்களின் பின் மீண்டும் நாடு திரும்பி கொழும்பில் கட்சி நடவடிக்கைகளிலும் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிவரும் மக்களின் நலன்களை கவனிக்கும் பணிகளிலும் ஈடுபட்டார். 1957ம் ஆண்டு கொழும்பில் தமிழர் கூட்டணியின் செயலாளர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களும் உப தலைவர் திரு.வே.யோகேஸ்வரன் அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். கூட்டணியில் தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் சுட்டு படுகாயப்படுத்தப்பட்டார். சம்பவத்தை கேள்வியுற்று உடன் ஸ்தலத்துக்கு விரைந்த தங்கத்துரை அவர்கள் சிவசிதம்பரமவர்களை வைத்திய சாலை அவசர சிகிட்சைப் பிரிவில் சேர்ப்பித்து விட்டு மரணித்தவர்கள் சார்பான மேல் நடவடிக்கைகளை கவனித்து நின்றார். பின் கட்சி தலைமையகத்தில் தனி ஒருவனாக நின்று பணிகளை கவனித்து கட்சிக்குப் புத்துயிரூட்டினார்.

மீண்டும் 1994ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குழு சார்பாகப் போட்டியிட்டு மாவட்டத்திலேயே அதிகூடிய வாக்குகளைப் பெற்று மீண்டும் பாராளு மன்றப் பிரதிநிதியானார். ஆனால் இம்முறை மாவட்டத்தினதும் மாவட்ட மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினார். கடந்த 15 வருட காலமாக இம்மாவட்டத்தின் தமிழர் பிரதிநிதித்துவம் வெற்றிடமாக இருந்த காரணத்தால் தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டிருந்தது. தமிழ் இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினை பூதாகரமாக வளர்ந்திருந்தது. நாட்டில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வந்த இன வன்செயலின் வடுக்கள் பயங்கரமானவையாக இருந்தன. இன வன்செயலால் அழித்தொழிக்கப்பட்டவர்களின் குடும்பத்தாருக்கு புனர்வாழ்வு பெற்றுக் கொடுப்பதில் பிரச்சினை சொத்துக்களை இழந்து இடம் பெயர்ந்து தொழிலின்றி அன்றாடம் ஒரு நேர உணவுக்கே வழியின்றி அகதி முகாம்களில் அல்லலுறும் மக்களின் துயர் துடைத்து அவர்களை மீண்டும் அவர்தம் சொந்த இடங்களில் பாதுகாப்பாக குடியிருக்க ஆவன செய்ய வேண்டியிருந்தது.

இப்பிரச்சனைகள் யாவற்றுக்கும் மூல காரணம் இனப்பிரச்சினை இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் மலை போல் தோன்றியுள்ள ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் எல்லாம் பனி போல் நீங்குமென தீர்க்கமாக நம்பினார். இந் நம்பிக்கையோடு தான் சார்ந்த கட்சிப்பிரதிநிதிகளின் துணையுடன் அரசாங்கக் கட்சி, எதிர் கட்சி ஏனைய தமிழ் கட்சிகள் என்பவற்றுடன் மனம் திறந்து ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடாத்தி இனப்பிரச்சினைக்கு கருத்தொற்றுமையான பொருத்தமான தீர்வொன்றை பெற வேண்டுமென அயராது முயற்சித்து வந்தார்.

மேலும் சமூக மேம்பாட்டிற்கு இளம் சந்ததியினரின் கல்வி வளர்ச்சியே ஒரே வழி என்பதை உணர்ந்தார். மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றார்கள் அனைவருக்கும் தம் கருத்தை வலியுறுத்தினார் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் பெரும் பகுதியைப் பாடசாலை கட்டிடங்களுக்கென ஒதுக்கினார். வெளிநாட்டுத் தூதரகங்கள் நலம்புரி அமைப்புக்கள் என்பவற்றின் அனுசரணைகளைப் பெற்று பல பாடசாலைகளின் தொடர்ச்சியான திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுத்தார். பல காரணங்களுக்காகப் பாடசாலைப் படிப்பினை இடைநிறுத்திக்கொள்ளும் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக தொழில் கல்வியை வளர்க்கும் நோக்குடன் நகர எல்லையில் மிகுந்தபுரம் எனும் கிராமத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தற்சமயம் கட்டிடவேலைகள் முடி வடைந்த நிலையில் உள்ளது. மாவட்டத்தின் உயர்கல்வி மேம்பாட்டுக்காக நிலாவெளிக் கிராமத்தில் இணைந்த பல்கலைக்கழக வளாக மொன்றினை அமைக்கத் திட்டமிட்டு 40 ஏக்கர் காணியைப் பெற்றுக் கொடுத்தார். நிர்மாணப் பணிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவர் இம்மாவட்டத்தின் பின் தங்கிய பிரதேசங்களின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தினார். கல்வி வளர்ச்சிக்கு மேலதிகமாக அவர் ஆற்றிய சேவைகள் பின்வருமாறு.

1. மக்களின் சுகாதார வைத்திய வசதிகள் கருதி செல்வநாயகபுரம், நிலாவெளி, சம்பூர், மணல்சேனை, கிளிவெட்டி ஆகிய பின்தங்கிய கிராமங்களில் வைத்தியசாலைகளை அமைத்துக் கொடுத்தார். கப்பல் துறை கிராமத்தில் வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்காக ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை தளவைத்தியசாலை போது வைத்தியசாலையாக தரம் உயர்த்துவற்காக திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

2. குடியிருக்க வீடின்றி அல்லலுற்ற மாவட்ட மக்களின் வசதிக்காக கணேசபுரம், வரோதய நகர் ஆகிய இடங்களில் இரு வீடமைப்புத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். அவற்றில் சகல வசதிகளுடனும் கூடிய மூவின மக்களுக்குமான 100 வீடுகள் கொண்ட கணேசபுரம் வீடமைப்புத்திட்டம் நிர்மாண பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ளது. வரோதய நகர் வீடமைப்புத்திட்டமானது நிலம் சீரமைத்தலிலுள்ள தடங்கல் காரணமாக பின் தங்கிய நிலையில் உள்ளது. மேலும் வரோதய நகர் திட்டப்பகுதியில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்காக 5 வருட சம்பள முற்பணக் கடனுடன் கூடிய வீடமைப்புத் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்த வழிவகுத்திருந்தார்.

3. போக்குவரத்து வசதிகளின்றி கஸ்டப்பட்ட பல கிராமங்களை புதிய பாதைகள் அமைத்து இணைத்தார். சீரழிந்து கிடந்த பல பாதைகளை திருத்தி அமைத்தார். வடிகால்கள் அமைக்கப்பட்டன. பல சிறிய பாலங்கள் அமைக்கப்பட்டு பிரயாண தூரம் குறைக்கப்பட்டது.

4. சனசமூக நிலையங்கள் வாசிகசாலைகள் என்பனவற்றை அமைத்து மக்களின் ஒற்றுமை. பொழுது போக்கு அறிவு வளர்ச்சி என்பனவற்றுக்கு வழிவகுத்தார். தொழில்ப்பயிற்சி நிலையங்களை அமைத்து கிராமத்தில் இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார்.

5. மின்சார வசதிகளைச் செய்து கொடுத்ததன் மூலம் கிராமங்களுக்கு ஒளியூட்டியது மட்டுமன்றி பல சுய தொழில் வாய்ப்புகளுக்கும் வழிகாட்டினார்.

6. குடிநீர் வசதியற்ற கிராமங்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். நில அமைப்பில் உயர்வாக உள்ள இடங்களுக்கும் சீரான நீர்விநியோகத்தை கருத்தில் கொண்டு உவர்மலை, வரோதய நகர் ஆகிய இடங்களில் இரு பாரிய நீர்த்தாங்கிகளை அமைக்கத் திட்டமிட்டார். மேலும் ஈச்சிலம்பற்றை பிரதேச மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு வெருகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையிலிருந்து நீர் விநியோகிப் பதற்கான திட்டமொன்றை வகுத்திருந்தார்.

7. திருக்கோணமலை மாவட்டத்துக்கென 3000 தொலைபேசி இணைப்புகளை பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் நகர மக்கள் மாத்திரமின்றி கிராமமக்கள் கூட தமது தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றனர்.
8. இவருடைய அயரா முயற்சியினால் வறிய குடும்பங்களை அல்லது வன்செயலினால் பாதிக்கப்பட்டு உழைக்கும் தலைவர்களை இழந்த குடும்பங்களை சேர்ந்த சுமார் 200 இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்புக்களை பெற்று பயனடைந்தனர்.
9. பொலிசாராலும், பாதுகாப்புப்படையினராலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் இளைஞர், யுவதிகளின் விடயத்தில் உடன் தலையிட்டு அப்பாவிகளின் விடுதலைக்கு உதவினார். ஏனையோர் கடுமையாக துன்புறுத்தப்படுவதிலிருந்து காப்பாற்றி வந்தார்.

இவர் எளிமையானவர், மக்களின் பிரதிநிதியான தான் மக்களே மக்களாக இருக்க வேண்டுமென விரும்பியவர் எக்காரணம் கொண்டு ஒருவருக்காக இன்னொருவர் தன்னிடம் பேசுவதை விரும்பாத அறிமுகமில்லாதவர்கள் கூட நேரடியாக தம்மை அறிமுகப்படுத்தி தங்கள் பிரச்சனைகளை எடுத்துக் கூறலாம். அவரும் மலர்ந்த முகத்துடன் சிரித்து பேசி அவர் தம் பிரச்சினைகளைக் கேட்டறிந்து தன்னாலியன்ற உதவிகளையும், சேவைகளையும் ஆற்றும் பாங்குடையவர். ஞாபகசக்தி மிக்கவர். தனக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய நல்லுறவு இருக்க வேண்டுமென அவர் விரும்பினார். இந்நல்லுறவுக்கு தன்னுடன் வரும் சொந்தப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களின் கையிலுள்ள ஆயுதங்கள் இடையூறாக உள்ளன எனக் கருதினார்.

ஆதலால் பொதுக்கூட்டங்களுக்கு செல்லும் சமயங்களில் கூட தனக்கென வழங்கப்பட்ட சகல பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயதங்களுடன் அழைத்துச் செல்வதை தவிர்த்து வந்தார். விழா அமைப்பாளர்கள் மேலதிக பாதுகாப்பினை அவ்விழாவுக்காக ஏற்பாடு செய்வதைக் கூட அவர் விரும்புவதில்லை. அவர் சகலரையும் தன் நண்பர்களாக உடன் பிறப்புக்களாகக் கருதினார். ஆனால் கேள் போல் பகைவர் தொடர்பு என்ற நீதிக் குறளை நினைக்க மறந்து விட்டார் நாக்கிலே தேனும் நெஞ்சிலே நஞ்சுமாக தன்னுடன் பொய்யறவு கொண்டு தன்னை வேரறுக்க கூலிப்படையுடன் பின் தொடர்கின்றார்கள் என்பதை சிந்திக்கத் தலைப்பட்டாரில்லை.

1997ம் ஆண்டு ஆடி மாதம் 5ம் நாள் திருக்கோணமலை நகரின் மத்தியில் அமைந்துள்ள ஸ்ரீ சண்முகா மகளீர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடி கட்டிடத்தை திறந்து வைப்பதற்காக திரு. தங்கத்துரை அவர்கள் சென்றிருந்தார். விழா இனிதே முடிவுற்றது. பாடசாலையை விட்டு வெளியே வரும் சமயம் கூலிக் கொலைஞன் ஒருவரின் துப்பாக்கி இவர் மீது குண்டுகளைத் துப்பின. இவருடன் கல்விச் சேவை யாற்றிய மேலும் அறுவர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

பின் தங்கிய பிரதேச மக்களின் ஒளி விளக்கு இரத்த வெள்ளத்தில் துவண்டுவிட்டது. இரத்த வெள்ளத்தில் நனைந்த அமரரின் உடலை அன்பு மக்கள் தம் கண்ணீரால் கழுவினர். அன்னாரின் பூதவுடல் திருக்கோணமலை இந்து மயானத்தில் எரியூட்டப்பட்டது. அவரின் பூதவுடல் மறைந்தது. அவர் இம்மாவட்டத்தின் பாடசாலைகள் தோறும் அமைத்துக் கொடுத்த மாடிக்கட்டிடங்களே அன்னாரின் நினைவுத் தூபிகளாக நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி தெரேஸ்ராணி,
(அப்போஸ்தலிக்க கார்மேல் சபை).
முன்னாள் அதிபர்
புனித மரியாள் கல்லூரி,
திருக்கோணமலை

## சீவியத்தில் நேசித்தோம் இறப்பிலும் மறவோம்

இருபத்தைந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஓயாது நீண்டு செல்லும் உம் பசுமை நினைவுகள், இன்னும் எம்மை விட்டு நீங்கவில்லை

"சீவியத்தில் நேசித்தோம் இறப்பிலும் மறவோம்"

திருக்கோணமலை முன்னாள் பாராளுமன்ற அங்கத்தினர் அமரர் தங்கத்துரையை எம்மால் மறக்கவே முடியாது.

அவர் நம்முடன் வாழ்ந்தபோது ஒரு நாள் திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரிக்கு அவரை நாம் அழைத்திருந்தோம். சற்று நேரம் எம்முடன் கலந்துரையாடிய பின்பு எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவு கட்டிடக் குறைவு பற்றி எடுத்துரைத்தேன். அவரும் எம் தேவையை நேரில் கண்டுணர்ந்து அதன் தேவையை ஒரு வருடத்தில் எமக்குப் பூர்த்தி செய்தார். அன்று அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலிக்கின்றது. அதை என்னால் என்றும் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புனித மரியாள் கல்லூரியில் இப்படியும் ஒரு சிதைவுற்ற கட்டிடம் இருக்கிறதென எனக்குத் தெரியாது" என்று கூறினார். அது ஒரு பழைய கட்டிடம் என்பதை உணர்ந்தார்.

அவரின் உதவியால் எழுந்த புதிய கட்டிடம் இன்று கம்பீரமாக மூன்று மாடிக்கட்டிடமாக எழுந்து, புனித மரியாள் கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் இன்றும் காட்சியளிக்கின்றது. அவரின் உதவியை நாம் மறக்கவே முடியாது. ஒவ்வொரு தடவையும் அந்த வீதியால் செல்லும் வேளைகளில் அடிக்கடி அவரை நினைவு கூர்ந்து அவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிராத்திக்கின்றோம். அவர் எம் நினைவில் இன்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார். எமது வருங்கால சமூகம் அவரை எளிதில் மறக்க முடியாத வண்ணம் அவர் எமக்கு அளித்து விட்டுச்சென்ற சொத்தாகும்.

எனவே, அவரை இறப்பிலும் மறவோம்.

அவர் இவ்வுலகை விட்டுச்சென்ற 25ம் ஆண்டு நினைவஞ்சலியில் மனதால் கலந்து கொள்வதுடன் எமது உணர்வுபூர்வமாக கவலையுடன் அவரை நினைவுகூருகின்றோம் என்பதையும் தெரிவிக்கின்றேன். அவரின் உறவுகளுடனும், நண்பர்களுடனும் நேரில் சந்திக்க முடியாவிடினும் ஆழமான முறையில் மனதால் இணைந்து கொள்ளுகின்றோம்.

இத்தரணியில், திருக்கோணமலையில் உயர்ந்து நின்றவரே!
ஊருக்கு எத்தனை எத்தனை நன்மைகளெல்லாம் புரிந்தவரே!
ஏன்தான் இப்படி ஒரு இறப்பு என்று நான் நினைப்பதுண்டு.

எத்தனையாண்டுகள் புரண்டோடினும் உம் மக்களால் தங்களை மறக்கமுடியாது என்பது நிச்சயம்.

சூரியன் உதிக்கிறது - மறைகிறது
அதன் சுழற்சிக்கிடையே வாழ்ந்தே ஆகவேண்டியது... ஏன்?
எதற்காக? என்ற கேள்விகளுக்குத்தான் பதில் இல்லை.

உங்கள் அன்புக்கும், அக்கைறயுடனான மக்களின் பராமரிப்புக்கும், எமது கல்லூரியின் நன்றிகள் பல. உங்கள் ஆன்மா சமாதானத்தில் இளைப்பாற இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம். என்றும் எம் நன்றி உள்ளங்களில் வாழ்கின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. இராசேந்திரம்
ஓய்வு நிலை அதிபர்.
மூதூர்.

## சாதனையாளர்

பல வகை வளங்களும் நிரம்பிய மூதூர் பகுதியின் ஓர் அங்கமான கிளிவெட்டி என்கின்ற கிராமத்திலே திரு.திருமதி.அருணாசலம் தம்பதியரின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவராக 1936 ஆம் வருடம் தை மாதம் பதினேழாம் நாள் திரு.தங்கத்துரை அவர்கள் பிறந்தார்கள். இவரின் ஆரம்பக்கல்வி அவ்வூரில் அமைந்திருந்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலேயே அமைந்தது. இங்கிருந்து ஐந்தாம் வருடப் புலமை பரீட்சையில் தேறிய பிற்பாடு மட்டுநகர் வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் தொடர்ந்து யாழ்நகர் ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றுத்தேறினார். இதன் பின்னர் இரத்தினபுரி, கொழும்பு மட்டுமல்லாது எமது பிரதேசத்தில் அமைந்துள்ள சோமபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திலேயும் பிரதம இலிகிதராகக் கடமை புரிந்தார். இந்த வேளையிலே மூதூர் இரட்டைத் தொகுதியாக இருந்தது. பெரியவர்கள் பலரின் வேண்டுதலுக்கேற்ப 1970ல் நடந்தேறிய பொதுத்தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டார். அரசியல் பிரவேசம் இவ்வாறு ஆரம்பித்து வெற்றியும் கண்டார். எல்லா வகைகளிலுமே புறம் தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் வெற்றி ஒரு பெரிய வரப்பிரசாதமாகியது. இரட்டை அங்கத்தவர் தொகுதியிலே கீரியும் பாம்பும் போன்ற நிலையிலே கூட தன்னால் இயன்ற சகல கடமைகளையும் பேதம் பாராது செய்தார். கற்றிருந்தும் தொழில் தேடி அலைந்து அலுத்திருந்த தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பலரும் ஆறுதல் அடைந்தனர். பல தமிழ் பாடசாலைகள் உருவாகின. கட்டிட பற்றாக் குறையினால் அவதியுற்றிந்த எம்மவர் பாடசாலைகளுக்கு புதிய கட்டிட வசதிகள், ஆசிரிய விடுதிகள், தளபாட வசதிகள் என்பன சீராகச் செய்யப்பட்டன. புதிய ஆசிரிய நியமனங்கள் மட்டுமல்லாது தடைப்பட்டிருந்த அதிபர், ஆசிரியர்களின் தர உயர்வுகள் யாவுமே ஒழுங்காகச் செய்யப்பட்டன.

இத்தனை செயற்பாடும் வெகு இலகுவாக நடந்தன என்று கூறிவிட முடியாது, பல்வேறு தடைகளின் மத்தியிலே கல்லிலே நார் உரிப்பது போலவே நடந்தேறின என்பதை அவரும் அவருடன் கூட இருந்த சிலரும் நன்கறிவர். "ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்" என்பார்களே அதுபோல மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலய தர உயர்வு சம்பவத்தில் திரு.தங்கத்துரை அவர்கள் பட்ட துயரம் அளப்பெரியது. ஊரின் மத்தியிலே அமைந்துள்ள ஒரே தமிழ் வித்தியாலயம் இப்பிரதேசத்தின் தாய்ப் பாடசாலையும் இதுவே ஆகும். இப்பாடசாலை பின் ஆக்கங்களையும், தொன்மையையும் வரலாற்றினையும் சொல்ல அவசியமில்லை, ஏனெனில் ஊர் உலகறிந்த உண்மையாகும். இப்பாடசாலையைத் தரமுயர்த்த பெற்றாரும் பெரியவர்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அதற்கான காலமும் நேரமும் கைகூடி வந்தபோது இரட்டை அங்கத்தவர் தொகுதி எனக்குப் பங்கில்லையா? என்று ஒன்றன்மேல் ஒன்றாக பல தடைகள் தோற்றுவிக்கப்பட்டன.

அத்தனை தடைகளுமே நாடாளுமன்றத்திலே கட்டவிழ்கப்பட்டு உடைத்து எறியப்பட்டன. இன்று குறிப்பிட்ட பாடசாலை, தி/புனித அந்தோனியார் மகா வித்தியாலயமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது என்றால் திரு.அ.தங்கத்துரை அவர்கள் என்றுமே போற்றப்பட வேண்டியவர் ஆகின்றார். புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் என்ற அறிவித்தல் பலகையை ஒருபொழுது மட்டும் தொங்கவிட்டு மறு பொழுதே அழித்த வல்லவர்களால் நிரந்தர பதிவாக பதிவு செய்யப்பட்ட பதிவை அழிக்க முடியாது போய் விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. இ. தருமலிங்கம்
ஓய்வுநிலை அதிபர்
பாரதிபுரம், கிளிவெட்டி

## அணைந்தது தமிழரின் ஒளி விளக்கு

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள்' வைக்கப்படும்"**

அண்ணர் தங்கத்துரை 'வாழ்வாங்கு வாழ்ந்து' அமரர் ஆனவர். அறிவறிந்த குடும்பத்தின் பிறப்பும் அன்பும் பண்பும் அறனெனக் கொண்டவர். உரிய காலத்தில் உயர்கல்வி பெற்றவர், கற்றதன்படி நடந்தவர். மும்மொழி தேர்ச்சி பெற்றவர். என்னை விட ஒரு வயது மூத்தோர். 'தம்பி' என்றே அழைப்பார். மீண்டும் ஒருமுறை அழைக்க வேண்டும் என்று தோன்றும்.

ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி முடித்து முதல் பாடசாலை நியமனம் இலிங்கபுரம் கிராமத்தில் இலிங்கபுரம் வித்தியாலத்தினை 01.01.1970ல் ஏற்றேன். இங்கு இரு வெளிமாவட்ட ஆசிரியர்கள், 150 மாணவர்கள், சில வகுப்புக்கள் மட்டும், கட்டிடம் 60x20 அளவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டடம் மட்டுமே. தளபாடம் கற்பித்தலுக்கான வளங்கள் எதுவும் கிடையாது. அத்துடன் நிருவாகச் சீர்கேடு, சீரான கற்பித்தலும் இல்லை ஐந்தாம் வகுப்பு படித்த பின் உயர் கல்விக்காக இரண்டு மைல் தூரத்திலுள்ள கிளிவெட்டி மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் பரிதாப நிலையாக இருந்தது. இவற்றை இட்டு கவலையும், வேதனையும் அடைந்தேன்.

இக்காலத்தில் அண்ணர் தங்கதுரை மூதூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக 1970 தெரிவாயிருந்தார். இவரிடம் சென்று மேற்படி பாடசாலைகள் குறைபாடுகளை முன்வைத்தேன். இருமாத காலங்களில் பரிகாரமாக தமிழ்பாட, ஆங்கிலபாட, விஞ்ஞானபாட, சுற்றாடல்பாட, கணிதபாட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அத்துடன் கட்டடங்கள் விருத்திகள், தளபாட வசதிகள் நிறைவேற்றப்பட்டன. 5ம் வகுப்பிலிருந்து வகுப்புக்கள் 11ம் ஆண்டு வரை உயர்வடைந்தது. கட்டிடத் திறப்புவிழா, கலைவிழா ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிகழ்வுகள் ஓகோ... என வளர்ச்சியடைந்தது. இம்முன்னேற்றம் கண்டு அண்ணர், பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றோர் பூரிப்படைந்தகாலமது.

இதன் பொருட்டு அண்ணருக்கு அடிக்கடி நன்றி கூறுவேன். இவரது மேற்படி கல்விச் சேவை வளர்ச்சிக்கு இப்பாடசாலை ஓர் உதாரணமாகும். இதுவரை மூதூரில் தொகுதியில் நலிவடைந்திருந்த கிராமப் பாடசாலைகள் தரம் உயர்வு பெற்றன. இதில் சேனையூர், சம்பூர், மல்லிகைத்தீவு, கிளிவெட்டி போன்ற கிராமிய பாடசாலைகளைக் கூறலாம். படித்து வேலையற்றிருந்த இளைஞர் யுவதிகள் அனேகமானோர் அண்ணரால் வேலைவாய்ப்புக்களைக் பெற்றனர். தொண்டராசியர், சிற்றூழியர், இலிகிதர் என அரசதனியார் நிறுவனங்கள், துறைமுகம், நெடுஞ்சாலைகள், நீர்பாசனம் போன்ற திணைக்களகங்களில் வேலைவாய்ப்பு பெற்றனர்.

அத்தோடு பதவி உயர்வு, சம்பளப்பிரச்சனை, பதவி இடைநிறுத்தம் போன்ற பாரிய விடயங்கள் பலவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்தார். மேலும் மூதூர் பிரதேசத்தின் தேவைகள், மாவட்டத் தேவைகளையும் பாராளுமன்றம் வரை சென்று தீர்வு கண்டார். இதனால் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தார். உதாரணமாக கிளிவெட்டியில் இன்று பிரபல்யம் பெற்றிருக்கும் அரச வைத்தியசாலையானது அண்ணாரின் உறவினர் காணிகளை அவர்கள் பூரண சம்மதத்துடன் பெற்று இவ் வைத்தியசாலையினை நிர்மாணித்தார்.

மேலும் ஒட்டுப்பபடுகாடு பகுதி நிலங்களை காணியற்ற தமிழ் முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளித்தார். மாவட்ட தொகுதி மக்களுக்கு அரிய சேவையாற்றியதன் பலனாக சகல மக்களின் மனதிலும் இடம் பிடித்தார். மாவட்ட சபையில் அமோக வெற்றிபெற்று அளப்பெரும் சேவை செய்தார்.

இவருடைய சேவை தமிழர் தாயகம் மட்டுமன்றி சிங்கள தேசத்திலும் பிரபல்யமானது. இதனால் பொறுக்க முடியாத சில தமிழ் அரசியல் வாதிகளின் எடுபிடியாளர்களால் ஏற்பட்ட போட்டி, பொறாமை காரணமாக 05.07.1997ஆந் திகதி தி/ஸ்ரீ/சண்முக வித்தியாலத்தில் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் சதிகாரர்களின் குண்டிற்கு இரையாகினார். இவரது இழப்பு தமிழர்களின் அரசியலுக்குச் சாபக்கேடாய் அமைந்தது.

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| 1970 | - | பாராளுமன்ற உறுப்பினர் |
| 1977 | - | உறுப்பினராக நிராகரிப்பு |
| 1980 | - | மாவட்ட அபிவிருத்தி சேவை |
| 1983 | - | பதவி துறப்பு |
| 1985 | - | தி/கோட்டை முகாமில் சிறையில் |
| 1994 | - | மீண்டும் பாராளுமன்றம் |
| 1997 | - | கொலை செய்யப்பட்டார். |

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.அ.தங்கத்துரை அவர்கள் தனது பதவிக்கால அரசியல் பிரமுகர்களுடன் திருக்கோணமலை நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணாமலை வீரசிங்கம்
ஓய்வுநிலை அதிபர்
முன்னாள் கிராமோதய சபைத் தலைவர்
மல்லிகைத்தீவு.

## ஆற்றல் மிக்கவர் அண்ணன் தங்கதுரை

நாற் புறமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவு இலங்கைத்தீவு. அனைவரையும் கவர்ந்திழுக்கும் இயற்கை அரண்களாக மலைத்தொடர்களும் மண்வளமும் நிறைந்தது. இதனால் வெளிநாட்டவர்களும் இங்கே வருகை தந்து இயற்கையோடு ஒட்டிய தீவை பார்த்து ரசித்து செல்கின்றனர். திருக்கோணமலை மாவட்டத்தில் கரையோர பகுதி. இது கடல் வளம் நிறைந்த பகுதியாகவும் மேற்குப் பகுதி மகாவலி கங்கை வரம்பு நிறைந்து ஓடும் மண்வளம் நிறைந்த பகுதியுமாக திகழ்கின்றது. ஒரு பகுதி மீன்வளமும் மறுபகுதி கமச்செய்கை நெல் வளம் கொண்டதாகவும் உள்ளது. இதனால் மிகவும் செழிப்பாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். திருக்கோணமலையின் தெற்கே கொட்டியாபுரம் (மூதூர்) அமைந்துள்ளது. அதன் கிழக்கே நாற்புறமும் மகாவலி நீர் நிறைந்து வழிந்தோடும் கிளிவெட்டி கிராமம் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்கள் விவசாயத்தை மேற்கொள்பவர்கள் அக்காலத்தில் மிகவும் செழிப்பும் செல்வமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த கிராமமாக இருந்தது. மேலும் சிறப்புக்கு ஆறு குறுக்கே ஓடிக் கொண்டிருக்கிறது. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்ற முதுமொழியை நிரூபித்துக் கொண்டது. இக் கிராமத்தில்தான் எனது இதய தெய்வம் ஏன் எங்கள் பகுதியின் முத்தென்றே கூறலாம். அண்ணன் அவர்கள் அருணாச்சலம் யோகம்மா அவர்களுக்கு இரண்டாவது மகனாக பிறந்தார். கல்வியில் உயர்ந்து பல இடங்களில் எழுது வினைஞராக சேவையாற்றியதன் விளைவாக தந்தை செல்வாவின் காதுகளுக்கும் எட்டியது. இதன் விளைவாக 1971 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி சார்பிலே மூதூர் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். நிறுத்தப்பட்டதிலிருந்து நானும் ஏனைய கிராம தோழர்களும் அதாவது ஒவ்வொரு கிராமங்களிலும் இளைஞர் கூட்டம் அண்ணனை புடைசூழ்ந்து வெற்றி வாகை சூட்டினோம்.

அன்றிலிருந்து எமது தொகுதிக்கு விடிவெள்ளி தோன்றியது போல மிகவும் தேவைகள் நிறைந்த தொகுதியாக இருந்த மூதூர் தொகுதியை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே சீர் செய்ய தொடங்கினார். நாலுமுள வேட்டி, எடுப்பான தோற்றம், நேர்மை, உண்மை, இவைகளோடு எப்போதும் புன்சிரிப்பும் அண்ணன் முகத்தில் தவழ்ந்து கொண்டே இருக்கும். சேவையில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று பாகுபாடு இன்றி தன்னிடம் அணுகும் எவருக்கும் அவர்களின் தேவைகளை தன்னால் இயன்றவரை செயல்படுத்திக் கொடுத்ததொரு செயல்வீரன். நாடாளுமன்ற உறுப்பினராக வந்த பிறகே கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, குளங்கள் போன்றவற்றை சீர் செய்ததோடு அரசு ஊழியர்களாகவும் பலருக்கு நியமனம் பெற்று கொடுத்தவர். அந்த வகையிலே என்னையும் பல பிரச்சனைகளுக்கு மத்தியில் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுத்தந்து எனது வாழ்விலும் ஒளியேற்றி வைத்த ஒளிவிளக்கு, எனக்கு மட்டுமல்ல எமது தொகுதியையே பிரகாசிக்க வைத்த பெருமை அண்ணன் தங்கத்துரையையே சாரும்.

சட்டத்தரணிகள்தான் அரசியல் தலைவராக இருக்க வேண்டும் என்ற மேல்தட்டு அரசியல்வாதிகளின் கருத்தினை ஏற்ற அண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சட்டக் கல்வியைப்படித்து தானும் ஒரு சட்டத்தரணியாகிக் காட்டிய ஒரு வைராக்கிய அரசியல்வாதியாக எம் முன் வாழ்ந்து காட்டினார்.

இவர் ஒரு நீண்டகால சிந்தனையாளன். உயர்மட்ட ஆலோசனைகளை நடாத்தி செயல்பட்டவர் நானும் நெருக்கமாக பழகியதனால் செயற்பாடுகளை நானும் அறிவேன். அவர்களின் சேவை 1977 ஆம் ஆண்டோடு நிறைவு பெற்றது. அன்னாரின் சேவையின் நிமித்தம் எல்லோரும் மனதிலும் இதயக்கனியாக இடம் பிடித்துக் கொண்ட மகான்.

தலைமைக்கும் தான் சார்ந்த கட்சிக்கும் மிகவும் விசுவாசமாக இருந்து தனக்கு வழங்கப்படும் கட்டளைகளை சிரமேற்கொண்டு செயல்பட்டவர். 1994 ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பாடசாலைக் கட்டிடங்கள், வைத்தியசாலைகள், வீதிகள், குளங்கள் இவை அவர்களின் செயல்களில் முக்கிய இடம் பிடித்திருந்தது. அந்த வகையில் தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தன்னால் ஒதுக்கப்பட்ட கட்டிடத் திறப்பு விழாவுக்கு சென்று திரும்புகையில் கயவர்களின் குண்டு தாக்குதலில் அண்ணன் உயிர் பிரிந்தது.

“தேய்பிறை இல்லா சந்திரனாக” இன்றும் உனது நாமம் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. நானும் என்றும் மறவாத தம்பிகளில் ஒருவனாக உயிர் உள்ளவரை மறவாது இருப்பதோடு எனது வாழ்விலும் ஒளியேற்றிய தீபமே உனக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். அ. தங்கத்துரை அவர்களின் மறைவையொட்டி பத்திரிகையில் வெளிவந்தவை...

## மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர் தங்கத்துரை

### எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்



[illegible]

## அமரர் தங்கத்துரையின் காலம் தமிழ் மக்களுக்கு பொற்காலம்

### இன்று அன்னாரது 24ஆவது நினைவு தினம்





[illegible]

## தங்கத்துரையின் இழப்பு நிரப்ப முடியாத இடைவெளி



[illegible]

### இன்று 19 ஆவது நினைவு தினம்

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமலை நவம்

## ஒரு சாதாரண மனிதன் சரித்திரமாகினான்!

விருட்ஷங்கள் பறவைகளுக்கு விருந்தளிக்கிறது. விரிந்த கடல்கள் பூமிக்கு எல்லை விரிக்கின்றன. அசையும் காற்று உயிர்களுக்கு பிராணனாய் ஆகிவிடுகிறது. மரமும் கொடியும் செடியும் நிழலாகி குளிர்மையை நெய்கின்றன. ஒருமனிதனின் பிறப்பும் வாழ்கையும் ஏதோ ஒரு கடமைக்காக காரியத்துக்காக தோற்றம் பெறுகிறது. அந்த ஒரு அவதரிப்பு நாயகன்தான் அண்ணன் தங்கத்துரை. அவரை அவரது இல்லத்தில் ஒருவேட்பாளராக 1970 ஆம் ஆண்டு கிளிவெட்டிக்கிராமத்தில் சந்தித்தேன். அப்பொழுது நான் ஒரு பள்ளி மாணவன்.

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியின் ஒரு வேட்பாளராக அண்ணன் தங்கத்துரை இலங்கை தமிழரசுக்கட்சியால் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு பிரச்சாரம் செய்வதற்காக ஒரு அறிவிப்பாளராக கிளிவெட்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தேன். நெல்லரிசிச்சோறு நெய்வடியும் கறிகள் நெடுவாடை கொண்ட பண்டங்கள் விருந்தாக எங்களுக்கு, அவர் வீட்டில் இடப்பட்டது. உண்டு திளைத்து ஒருநாளோ இரண்டுநாளோ இருந்து கிராமம் கிராமாக சென்று பிரச்சாரம் செய்துவிட்டு திருக்கோணமலைக்கு திரும்பினேன். யார் என்னை கூட்டிச்சென்றார் எப்படி போனேன் என்பது ஞாபகமில்லை.

வெள்ளை வேட்டி விருட்ஷம் போன்ற சிரிப்பு குறுக்கே வாரிவிடப்பட்ட தலைமயிர் அள்ளி அணைக்கும் குணம் இடைக்கிடை ஆந்கிலத்தோடு கலந்த தமிழ் அத்தனையும் எனக்கு பிடித்திருந்தது.

கிளிவெட்டிக் கிராமத்தில் மாத்திரமல்ல கீழ் மூதூர் மேல் மூதூர் எல்லா மக்களாலும் நேசிக்கப்பட்ட ஒருவராக பார்க்கப்பட்டார் அவரைச்சுற்றி இளைஞர்கள் முதியவர்கள் என ஒரு படையணியே அணிவகுத்து நின்றதைக்கண்டேன். 1960 ஆண்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது. அபூபக்கர் முகமட் அலி தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த நிலையில் 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற தேர்தலில் தமிழரசுக்கட்சி மூதூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக ஏகாம்பரம் முதல் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 1960 யூலையில் நடைபெற்ற தேர்தலில் ஏகாம்பரமும் அப்துல் மஜீதும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஏகாம்பரத்தின் மரணம் காரணமாக மூதூர்த்தொகுதிக்கு தகுதியற்ற ஒருவரை தேடித்திரிந்த நிலையில்தான் 1965 ஆம் ஆண்டு தேர்தலில் மூதூர்த்தொகுதி உறுப்பினர்களாக முகமட் அலி அப்துல் மஜீது தெரிவு செய்யப்பட்டிருந்தபோதும் தமிழர்கள் சார்பில் போட்டியிட்டவர் வெற்றி பெறவில்லை.

1970 ஆண்டு தேர்தலுக்காக தகுதியான ஒருவர் தேடப்பட்டார். அவ்வேளையில்தான் அண்ணன் தங்கத்துரை தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தேர்தலில் இலங்கை தமிழரசுக்கட்சி வேட்பாளராக களமிறங்கிய அண்ணன் தங்கத்துரை 19787 (25.87) வாக்குக்களைப்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1970 - 1977 காலப்பகுதிவரை அவர் இந்த மாவட்டத்துக்கு ஆற்றியபணி அளந்து பார்க்கமுடியாத அமேசன் நதியைப்போன்று நீளமானது, நிரந்தரமானது. சுமார் 6 வருடங்கள் எனக்கும் அவருக்கும் இருந்த நெருக்கங்கள் நீண்டுகாணப்பட்டது. மீண்டும் 1980 ஆம் ஆண்டு அவரை சந்தித்து உதவி கேட்கவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. நான் ஒரு வேலையற்ற பட்டதாரியாக அவர் முன் சென்றேன். துரதி'டவசமாக 1977 ஆம் ஆண்டு மூதூர்த்தொகுதியின் வேட்பாளராக அவர் நிறுத்தப்படவில்லை. நிறுத்த வேண்டுமென்ற போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும் கட்சித்தலைமை பிடிவாதமாக இருந்துவிட்டது.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 வரை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதுர்ர்த் தொகுதி உடைக்கப்பட்டு சிங்கள மக்களுக்கென சேருவில தொகுதி 1977 ல் உருவாக்கப்பட்டது. மூதூர்பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தங்கத்துரைக்கு சந்தர்பம் வழங்கப்படாமல் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்.பாளராக எஸ். ஏம். மக்கீன் என்பவர் நிறுத்தப்பட்டார். ஆனால் மூதூர்த்தொகுதியின் வேட்பாளராக ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிட்ட எம்.ஈ.எச் மகறூப் தெரிவு செய்யப்பட்டார். மக்கீன் வெற்றிபெறவில்லை.

அண்ணனுக்கு கட்சி இழைத்த அநீதிக்கு பரிகாரமாக 1981 ஆண்டு உருவாக்கப்பட்ட மாவட்ட சபை தேர்தலில் நிறுத்தப்பட்டார். இத்தேர்தலில் தன்னை எதிர்த்து நின்ற ஜனாதிபதி ஜே. ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரை தோற்கடித்து 44692 வாக்குக்களைப்பெற்று திருமலை மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கிருந்த மாவட்ட அபிவிருத்திக் கனவுகளை நிறைவேற்றும் வாய்ப்பை அரசாங்கமும் வழங்கவில்லை. வடகிழக்கு போரும் தடையாக இருந்தது.

1983 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆடிக்கலவரம் அப்பதவியை துறக்கவைத்தது. தமிழர் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள் பலர் பாதுகாப்புக்கருதி இந்தியா சென்றிருந்தவேளை அண்ணனும் அவ்வாறு செல்லவேண்டிய சூழ் நிலைக்கு தள்ளப்பட்டார். காரணம் அன்றைய திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இரா. சம்பந்தருடைய வீடு சீருடைக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டு விலை மதிப்பற்ற சட்டப்புத்தகங்கள் எரியூட்டப்பட்டன. அரசியல் வாதிகளுக்கு பாதுகாப்பாற்ற நிலை காணப்பட்டதன் காரணமாக அவரும் இடம் பெயரவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டார். 1977 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலுக்குப்பின் ஜே. ஆர் தலைமையிலான அரசாங்கம் 1989 ஆம் ஆண்டுவரை பொதுத் தேர்தலை நடத்த முடியவில்லை.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்தப்பட்ட தேர்தலில் திருக்கோணமலையில் விடுதலைப்புலிகளின் அனுசரணையோடு ஈரோஸ் அமைப்பு போட்டியிட்டு இரு ஆசனங்களை சுவீகரித்துக்கொண்டது. அண்ணன் தங்கத்துரை இந்த தேர்தலில் போட்டியிடக்கூடிய சூழ்நிலை இருக்கவுமில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி வெற்றிபெறும் வாய்ப்பும் இருக்கவில்லை. 1989 ஆம் ஆண்டு திருமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களை ஈரோஸ் பெற்றுக்கொண்டபோதும். 1990 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் வெளியேற்றம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தம் முறிந்ததன் காரணமாக ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் பாராளுமன்றை பகிஸ்தரித்ததன் காரணமாக சுமார் நான்கு வருடங்கள் திருமலை மாவட்டம் தமிழ் பிரதிநித்துவம் அற்ற மாவட்டமாக காணப்பட்டது.

இலங்கை அரசியலில் புதியதொரு மாற்றமாக கருதப்பட்ட 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளராக அண்ணன் தங்கத்துரை, இரா. சம்பந்தன் ஐயா ஆகியோர் களமிறங்கினார்கள். இரு ஆசனங்களை பெறக்கூடிய வாய்ப்பிருந்தும் திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவிய உக்கிரமான விடுதலைப் போர்காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய தேசியக்கட்சி 29.17 வீத வாக்குக்களைப்பெற்று இரு ஆசனங்களை சவீகரித்துக்கொண்ட நிலையில் 23.66 வாக்குக்களைப் பெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு ஆசனத்தை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்தது. 22409 விருப்பு வாக்குக்களைப்பெற்று அண்ணன் தங்கத்துரை திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அந்த தேர்தலில் அதிக கூடிய விருப்பு வாக்கக்களை அண்ணன் தங்கத்துரையே பெற்றருந்தார்

| | | | |
|---|---|---|---|
| 1. | அ. தங்கத்துரை | த.வி. கூ. | 22409 |
| 2. | நஜீப் அப்துல் மஜீது | ஸ்ரீ.மு.கா. | 21590 |
| 3. | எம்.ஈ. ஏச். மகறூாப் | ஐ.தே.க | 17043 |
| 4. | சுனில் சாந்த ரணவீர | ஐ. தே.க. | 15084 |

1983 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டுவரை சுமார் 11 வருடங்கள் திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பிரதி நிதியற்ற அநாதைகள் ஆக்கப்பட்டார்கள். கல்வி விவசாயம் சுகாதாரம் மீன்பிடி வேலைவாய்ப்பு என அனைத்து துறைகளிலும் தமிழ் மக்கள் திட்டமிட்ட முறையில் ஒதுக்கப்பட்டார்கள். மாகாண சபை முறை 1988 ல் அறிமுகம் செய்யப்பட்டபோதும் அதன் அதிகாரங்கள் போதாமை அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறைகள் காரணமாக தமிழ் கிராமங்களின் வளர்ச்சிகள் முன்னேற்றங்கள் பாரிய பின்னடைவைக்கண்டிருந்த காலத்தில்தான் அண்ணன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மீண்டும் ஒரு ரட்சகர்போல் நாங்கள் அவரைப்பார்த்தோம். அப்போது நான் உவர்மலை விவேகானந்தா கல்லூரியன் அதிபராக நியமிக்கப்பட்டு கடமையாற்றிக் கொண்டிருந்தேன். எனது அதிபர் நியமனத்தின் பின்புலத்தில் அண்ணன் இருந்தார். பௌதீக வளம் இன்மை ஆசிரியர் போதாமை திணைக்களத்தின் பார்வையின்மை போன்றவை எனது பாடசாலைக்கு இல்லை என்பது என்னால் உணரப்பட்ட நிலையில் இப்பாடசாலையை தேசிய ரீதியில் முன் கொண்டுவரவேண்டுமென்ற வெறியும் தீர்க்கப்பார்வையும் என்னை ஆட்கொண்டிருந்தது. இச்சூழ்நிலையில் தான் இப்பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி தொடர்பில் அன்று என்னுடன் சேர்ந்து உழைத்துக் கொண்டிருந்த பாடசாலை அபவிருத்தி சங்கச் செயலாளர் கோ.சத்தியசீலராஜாவும் நானும் அண்ணனை அணுகி பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடினோம்.

அன்று ஜனாதிபதியாக பதவிவகித்துக்கொண்டிருந்த சந்திரிக்கா அம்மையாரின் கல்விக்கொள்கைக்கு அமைய பிரதேசங்கள் தோறும் ஒவ்வொரு பாடசலையை தேர்ந்தெடுத்து அப்பாடசாலையை அபிவிருத்தி செய்யும் D.S.D.திட்டத்தின் கீழ் 1996 ஆம் ஆண்டு எமது பாடசாலை தேர்ந்தெடுக்கப்பட்டது. அண்ணனின் சிபார்சின்பேரில் 25 மாவட்டங்களிலும் முதலாவது பாடசாலையாக உவர்மலை விவேகானந்தா தெரிவு செய்யப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் பல கட்டிடங்கள் உபகரணங்கள் தளபாடங்கள் என வாரி வாரி வழங்கப்பட்டது. அண்ணனின் சிபார்சில் தங்க முட்டையிடும் வாத்தாக எமது பாடசாலை மாறிக்கொண்டது.

இத்திட்டத்தின் கீழ் பாடசலையில் ஒரு திறந்த வெளி அரங்கை அமைப்பதற்கு நிதியை கோரியிருந்தோம். நிதி ஒதுக்கப்பட்டது. இப்பாடசாலையின் ஸ்தாபகரில் ஒருவரான வேலுப்பிள்ளை என்பவரின் நினைவாக 1997 திறந்தவெளி அரங்கை அமைத்து அதன் திறப்புவிழாவுக்கு அண்ணன் தங்கத்துரையை அழைத்திருந்தோம். இவ்விடத்தில் இச்சம்பவத்தை பதிவு செய்யாவிட்டால் வாழ்க்கையில் எனக்கு எப்பொழுதுமே நடந்த சம்பவத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்க முடியாமல் போய்விடும்.

திறப்புவிழாவுக்கு வருகைதந்த அண்ணன் அரங்கத்தை திறந்து வைத்து உரையும் ஆற்றியிருந்தார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளை பார்ப்பதற்காக முன் வரிசையில் அமர்ந்திருந்தார். அவர் அருகில் நானும் முன்னாள் திருக்கோணமலை நகரசபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தி அபவிருத்தி சங்க தலைவர் சத்தியசீலராஜா மற்றும் பிரமுகர்களும் அமர்ந்திருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நிகழ்ச்சிகள் தொடங்கியது. தொடங்கிய சிலவிநாடிகள் மேடை விளக்குக்கள் உட்பட அரங்க விளக்குக்கள் அனைத்தும் அணைந்துபோனது. அருகிலிருந்த அண்ணர் என்னிடம் காரணத்தைக் கேட்கிறார். அதற்கு பதில் இறுத்த யான் மேடையில் கூடிய விளக்குக்கள் பொருத்தப்பட்டிருப்பதால் அதிக கனதிகாரணமாக அணைகிறது போலும் என எனக்கு தெரிந்த காரணத்தை கூறுகிறேன் ஆனால் உண்மை அதுவல்ல. மின் இணைப்பை மேற்கெள்வோரைக் கொண்டு அணைந்த விளக்குக்களை திருத்தி மீண்டும் நிகழ்ச்சிகளை தொடங்க வைக்கிறேன்.

மீண்டும் நகழ்ச்சி தொடங்கி ஐந்து நிமிடம் ஆகவில்லை மீண்டும் மின் துண்டிக்கப்படுகிறது. ஏனக்கு ஒன்றும் புரியவில்லை மேடைக்கு ஓடுகிறேன். விளக்குக்கள் மீண்டும் ஒளிபடுத்தப்படுகிறது நிகிழ்ச்சிகளை தொடக்க வைத்துவிட்டு நான் அண்ணனோடு இருந்த ஆசனத்தை தேடி வருகிறேன். தங்கத்துரை அண்ணனை அங்கு காணவில்லை. அருகிலிருந்த சூரியமூர்த்தி என்னிடம் கூறினார் அண்ணன் சென்றுவிட்டார் என்று எனக்கு ஏமாற்றமாக இருந்தது. சற்றும் கோபமாகவும் இருந்தது நிகழ்ச்சிகளை பார்க்காமல் என்னிடமும் சொல்லாமல் சென்றுவிட்டாரேயென்று. இச்சம்பவம் நடைபெற்று சுமார் 20 நாட்கள் ஆகவில்லை 1997 ஆம் ஆண்டு யூலை மாதம் 5 ஆம் திகதி சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் புதிய கட்டிட திறப்பு விழாவுக்காக அதிதியாக அண்ணன் அழைக்கப்பட்டிருந்தார். அந்த கறுத்த நாளில்தான் அண்ணன் படுகொலை செய்யப்பட்டார்.

சண்முக வித்தியலயத்தின் அதிபர் சகோதரி இராஜேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களுக்கும் எனக்கும் இடையில் சிறிய மனக்கசப்பொன்று இருந்த காரணத்தினால் மேற்படி நிகழ்வுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அழைப்பு கிடைத்திருந்தால் அண்ணன் அருகில் நானும் இருந்திருப்பேன். சம்பவம் நடந்த அன்றைய தினம் சுமார் 8 மணியிருக்கும் அந்த துயரச்செய்தியை வட கிழக்கு மாகாண கல்விச்செயலாளராக கடமை ஆற்றிக்கொண்டிருந்த எனது சகோதரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் டிவகலால தொலைபேசி மூலம் அந்த அதிர்ச்சி செய்தியை எனக்கு தெரிவிக்கிறார் நான் நிலைகுலைந்து போகிறேன்.

நானும் செயலாளரும் அந்த கடைசி நிமிடம் ஆஸ்பத்திரிக்கு சென்று அந்த மகா மனிதனை திருக்கோணமலையின் தங்க பொக்கிஷத்தை மரண இருப்பில் காணுகின்றோம்.

இப்போது எனது பாடசாலை சம்பவத்துக்கு வருகிறேன். எனது பாடசாலையில் வைத்துத்தான் அவரை படுகொலை செய்வதற்கான திட்டம் தீட்டப்பட்டது என்பதை பிற்காலத்தில்தான் என்னால் அறியக்கூடியதாக இருந்தது. தனக்கு நடக்கவிருந்த சம்பவத்தை தெரிந்து கொண்டதனால்தான் அண்ணன் என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் சென்றிருக்கிறார் என்பது பின்புதான் எனக்கு புரியவந்தது. 2004 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் உயர்தரப்பரீட்சையில் சாதனை புரிந்த மாணவர்களை பாராட்டும் வைபவத்துக்கு ஜனாதிபதி மாளிகைக்கு நானும் எனது மாணவர்களும் ஆசிரியர்களும் அழைக்கப்பட்டிருந்தோம். தேசிய ரீதியில் வர்த்தகப்பிரிவில் முதலிடம் பெற்றிருந்த மாணவன் கோகிலன் பொறியியல்துறை மாணவர்களான பிரசாந்தன் பிறைதீசன் ஆகியோர் சென்றிருந்தோம்.

ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்தபோது ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் என்னிடம் குறிப்பிட்டார். தங்கத்துரை எனும் மிக சிறந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை சேவையாளனை திருக்கோணமலை மாவட்டம் இழந்து விட்டது என்று கவலைபடக்கூறியது இன்றும் எனது ஞாபகத்தை நெருடிக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் திரு.த. சிதம்பரப்பிள்ளை,
பல்துறை வித்தகர்,
ஓய்வு நிலை அதிபர்
வெருகலம்பதி முன்னாள் தலைவர்,
திருக்கோணமலை மாவட்ட இந்து மாமன்ற தலைவர்,
திருக்கோணேஸ்வர ஆலய நம்பிக்கைப்
பொறுப்பாளர் சபை உறுப்பினர்,
பள்ளிக்குடியிருப்பு தோப்பூர்.



# மறக்கமுடியாத செயல் வீரன்
# தங்கத்தமிழன் தங்கத்துரை (அண்ணன்)

புல்மோட்டை தொடக்கம் வெருகல் ஆறு வரையிலான நிலப்பரப்பே திருக்கோணமலை மாவட்டம் கடலால் சூழப்பட்டது ஒரு புறமும் மறுபுறம் மகாவலி நீர் பாயும் மண் வளம் நிறைந்த அதாவது வயலும் வயல் சார்ந்த பகுதியும் அமைந்துள்ளது. இங்கு வாழ்வோரின் வாழ்வாதாரமாக மீன்பிடியும் விவசாயத்தையும் கொண்டவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றைச் சித்தரித்துக் கொண்டிருக்கும் தெய்வீகம் நிறைந்த பூமி திருக்கோணமலை, இங்கு பல ஆலயங்கள் அமைந்திருந்த போதிலும் மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப்பெருமான் குடி கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். இவ்வாலயம் சார்பாக திருஞானசம்பந்தர் அருணகிரிநாதசுவாமிகள் தேவாரம், திருப்புகழ் பாடப்பட்ட திருத்தலமாகும்.

இதன் தெற்கேதான் மகாவலி நீரினால் புடை சூழ்ந்த கிளிவெட்டிக் கிராமம் அமைந்துள்ளது. மிகவும் பச்சைப்பசேலென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக் கூடியதாகவும் மூதூரை ஒத்த சிறப்பம்சங்கள் நிறைந்ததாகவும் கிளிவெட்டியையும் தங்கநகரையும் பிரித்து மகாவலி நீர் அல்லைக் குளத்தை நோக்கி ஓடுகிறது. அவற்றை கடப்பதற்கு பாதை போடப்பட்டிருந்தது. இதனூடாக மட்டக்களப்பைச் சேர்ந்த ஏனைய பகுதிகளுக்கும் பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது பாதையிலேயே பஸ் வாகனங்களை ஏற்றி இறக்கி பிரயாணம் மேற்கொள்ளப்பட்டு வந்தது தற்போது ஆற்றின் மீது பாலம் அமைக்கப்பட்டு போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பிறப்பு

இக் கிராமத்தில் தான் விடிவெள்ளி தங்கத்தமிழன் அண்ணன் தங்கத்துரை அருணாச்சலம் யோகம்மா தம்பதியினருக்கும் செல்வப் புதல்வனாக 1936-01-17ம் திகதி பிறந்தார். தந்தையார் அப்பொழுதே சிறந்த கல்விமான் அதனால் இறப்பு பிறப்பு திருமண பதிவாளராக பொறுப்பேற்று மக்களுக்கு மிகவும் சிறந்த சேவையாற்றி வந்தார். மிகவும் மரியாதைக்குரியவராகவும் திகழ்ந்தார். தங்கத்துரை அவர்களுக்கு பாக்கியதுரை (வைத்திய அதிகாரி) முத்துக்குமாரபிள்ளை, குமாரதுரை என மூன்று சகோதரர்கள். இதில் பாக்கியதுரை அவர்கள் அரச வைத்திய அதிகாரியாகவும், ஏனையவர்கள் விவசாயத்தை மேற்கொள்பவர்களாகவும் சமூகத்தோடு இசைவாக்கமாக மக்களின் தேவைகளை தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வந்ததோடு அண்ணன் அவர்களின் கல்வியோடு சேர்ந்த உயர்வுக்கும் உறுதுணையாக இருந்தார்கள்.

## கல்வி

ஆரம்பக்கல்வியை கிளிவெட்டி அ.த.க வித்தியாலயத்தில் பயின்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மட;/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் பயின்று உயர்கல்வியை யாழ்ப்பாணம்/ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றார். கல்வி கற்கும் காலத்தில் மிகவும் கல்வி ஞானத்திலும், விளையாட்டிலும், மிகவும் சிறந்து விளங்கியதால் அதிபர் ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்று நல்மாணாக்களாகத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி

கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று எழுதுவினைஞரக சோமபுரத்தில் கடமை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து இரத்தினபுரி, கொழும்பு போன்ற இடங்களிலும் தனது பதவியை மிகவும் சிறப்பாக செய்ததோடு மூன்று மொழிகளிலும் சிறந்து விளங்கினார்.

திருமணம்

சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதிகளின் மகள் சத்தியேஸ்வரி அவர்களை 1964ம் ஆண்டு திருக்கோணமலையில் தனது தாய் தந்தை உறவுகளின் விருப்பத்திற்கு அமைவாக திருமணம் செய்துகொண்டார். இதன் விளைவாக நான்கு செல்வங்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் புஷ்பாஞ்சலி, தர்மினி, சுமதி பெண் பிள்ளைகள். அகிலன் ஆண்பிள்ளை ஆகும்.

அரச சேவையில் ஈடுபட்ட காலத்தில் மக்களுக்கு உதவும் நோக்கோடு N.M பெரேரா பீற்ற கெளமண் போன்ற இடதுசாரி தலைவர்களோடு சேர்ந்து செயல்பட்டு அப்போதே மக்களுக்கு சேவை செய்து இதில் தமிழ் மக்களுக்கு சார்பாகவும் தனிநாட்டுக் கோட்பாட்டிலும் ஈர்க்கப்பட்டு தந்தை செல்வா அவர்களின் தலைமையை ஏற்றுக் கொண்டார்.

அரசியல்

இவர்களின் நன்னடத்தையும், உழைப்பையும் அறிந்த தமிழரசுக்கட்சி இளைஞர் அணித் தலைவராக நியமித்தது. அன்று தொடக்கம் ஒவ்வொரு கிராமம் கிராமமாக தனது பணியை ஆரம்பித்தார்கள். தமிழரசுக்கட்சிக் கிளைகளை, துடிப்புடன் செயல்படும் மக்களை, தனது பக்கம் கவர்ந்து கொண்டார். மிகவும் எளிமையான தோற்றமும், எப்போதும் புன்சிரிப்பும், நாலுமுழ வேஷ்டியும், நெற்றியில் பொட்டு வைப்பது போன்ற திருநீற்றுப்பூச்சி, கட்டக்கை சேட், துடிப்பான கம்பீரமான செயல் வீரன். அக்காலத்தில் துவிச்சக்கரவண்டி மூலமே கட்சிக்கிளைகள் அமைப்பதற்கு சென்றவர் என்பது குறிப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

970ம் ஆண்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பாக அண்ணன் தங்கத்துரை அவர்களை கட்சி களமிறக்கியது. இதில் வெற்றி வாகை சூடினார். அடுத்தவர் ஜனாப் A.L அப்துல் மஜீத் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் வெற்றிகொண்டார். இக்கட்சியே ஆட்சி அமைத்துக் கொண்டது. பிரதி அமைச்சராக அப்துல் மஜீத் அவர்களும் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில்தான் எதிர்க்கட்சியில் இருந்த தங்கத்துரை அவர்கள் தனது சாணக்கியத்தினால் சேவைகளை செய்யத் தொடங்கினார். குறிப்பாக கிழக்கில் உதயசூரியன் தோன்றியது போல மூதூர் பிரதேசம் படிப்படியாக வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். கொழும்புக்குச் சென்று வந்தால் ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் செல்வதும், தேவைகளை பூர்த்தி செய்வது அவர்களின் செயலாகும். வீட்டிற்கு வந்துவிட்டால் எப்போதும் மக்கள் கூட்டம் கூடிக்கொண்டே இருக்கும். இன, மத வேறுபாடு இன்றி சேவை செய்த உயர்ந்த மனப்பக்குவம் உடைய மனிதராக பார்க்கின்றேன்.

இருளடைந்து இருந்த மூதூர் தொகுதி சந்து பொந்தெல்லாம் செல்வார். தேவைகளை அறிந்து செய்தவர். சேவைகளை எவ்வாறு எடுத்துக் கூறுவது எத்தனை என்று கூறுவது இருந்தாலும் வீதிகள், பாடசாலைகள், குளங்கள், கட்டிடங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். அத்தோடு அரசு சார்பாக விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே அப்போது இருந்தனர். இவர்கள் மூலமே பெரும்பாலான தமிழ் இளைஞர், யுவதிகள் அரச ஊழியர்களாக நியமனம் பெறச் செய்தவர். ஆளும் கட்சியோடு போட்டா போட்டி போட்டு ஒவ்வொரு கிராமத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தவர். மூதூர் தொகுதியின் விடிவெள்ளி மாமனிதன் தங்கத்தமிழன் தங்கத்துரை அவர்களுக்கு மலையகம், வட மாகாணம், கிழக்கு மாகாணம் ஏனைய சிங்கள முஸ்லிம், சகோதரர்களுக்கும் வேறுபாடின்றி சேவை செய்தவர்.

1977ம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தோடு நின்றுவிடாது மக்களுக்காக சேவையை தொடர்ந்து கொண்டே இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமகன். மூதூர் தொகுதியில் உள்ள கிராமங்கள் அனைத்தும் உயிர் பெற்று எழுந்தது என்றால் அது தங்கத்துரை அவர்களையே சாரும். நான்காண்டுகள் அரசியல் தலைவர்களின் அண்ணன் தங்கத்துரை போன்ற நாடாளுமன்ற உறுப்பினரை இன்னும் காணவில்லை என்பது தெளிவான கருத்தாகும்.

1977ம் ஆண்டிற்கு பிற்பாடு அடுத்த தேர்தலுக்கு தமிழரசுக்கட்சி சார்பாக நியமனம் வழங்கப்படவில்லை. இதை அறிந்த மாவட்ட ரீதியிலான மக்கள் புகையிரத நிலையத்தில் அவர்கள் வரும் வரை காத்திருந்து கைகளால் தூக்கிக் கொண்டு வந்து அவர் இல்லம் சேர்த்து சுயேட்சை வேட்பாளராக கேட்க வேண்டுமென பல மணித்தியாலங்கள் அவரை இல்லத்தைச் சுற்றி கோஷம் எழுப்பப்பட்டது. எதற்கும் அசைந்து கொடுக்காத அண்ணன் அவர் எல்லோரையும் குறித்துச் சொன்னார். உண்மையான மரியாதை வைத்திருந்தால் நான் சொல்வதை கேளுங்கள் இங்கு எடுக்கப்பட்ட முடிவு நமது கட்சி எடுத்த முடிவு முடிவில் இருந்து நான் விலக மாட்டேன். எனவே நீங்களும் கலைந்து செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அங்கு கூடியிருந்த பெருங்கூட்டம் கவலையோடு கலைந்து சென்றது. இச்செயற்பாடு கட்சி மீதும், தலைமைகள் மீதும் வைத்திருந்த மதிப்பும் மரியாதையையும் காட்டுகின்றதல்லவா.

1994ம் ஆண்டு திருக்கோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அன்றிலிருந்து மீண்டும் "மக்கள் சேவை மகேசன் சேவை" என செயல்பட தொடங்கினார். அவர்களின் சேவையில் பாடசாலைகள், தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி பாதையிலும் பலர் நன்மை அடைய கூடிய செயல் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி செயற்பட்டவர். அவர்களின் வீட்டிலே இரவு 11 மணி வரைக்கும் மக்கள் வரிசையில் நின்று தங்களின் குறை நிறைகளை கூறி விமோசனம் பெற்றார்கள். இப்படியான நிகழ்வு இன்னமும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டிலும் கண்டதில்லை. தமிழீழத்திற்கும், தமிழுக்கும் பெரும் பங்காற்றி பல தடவைகள் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்ட அவர் மிகவும் எளிமையானவர். ஆனால் எதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சளைக்காத அஞ்சாநெஞ்சன் இவரின் சேவையை மறக்கமுடியாமல் பள்ளிக்குடியிருப்பு தங்கபுரம் என்றும் அரிப்பு கிராமம் தங்கநகராகவும் அவர்களின் திருநாமம் சூட்டி இன்றும் அவர்களின் பெயர்கள் மறக்க முடியாது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சேவைகள் மிகவும் திறம்பட மக்கள் மட்டத்தில் எதிர்க்கட்சியிலிருந்து தங்கத்துரை செயல்படுகிறார். என்பது மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்ட விடயம் இந்தியா, அண்ணா நகர் காலனியில் கூட அன்னாரின் பெயரில் தங்கத்துரை அரங்கமும். தங்கத்துரை பூங்காவும் அவர்களின் புகழை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டு இருப்பதை இன்றும் காணலாம்.

தன்னால் வழங்கப்பட்ட பாடசாலை கட்டடத் திறப்பு விழா திருக்கோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் 1997ஆம் ஆண்டு 07 மாதம் 5ம் திகதி மாலை கட்டிடத் திறப்பு விழாவை முடித்துக் கொண்டு வெளியேறும் போது கிட்டத்தட்ட இரவு 7 மணி அளவில் கூலிக்கு அமர்த்தப்பட்ட கொலையாளிகளின் துப்பாக்கி குண்டுகளுக்கு இலக்காகி தனது உயிரைத் துறந்தார். இச்சம்பவம் காட்டுத்தீ போல் எங்கும் பரவியது. திருமலை வைத்தியசாலையில் நிரம்பி வழிகின்றது. எல்லோரும் இறைவா எம் தலைவனை காப்பாற்றி தாருமையா என கண்ணீர் மல்க காத்து நின்றனர். இறுதியாக வைத்தியர்களின் அறிவித்தலின் பிரகாரம் தங்கத்தமிழன் தங்கத்துரை மரணித்து விட்டார் என அறிவிக்கப்பட்டது.

வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் மறுநாள் மிகவும் நெரிசலான கூட்டத்தின் மத்தியில் பூதவுடல் தாங்கிய பேழை தோளினால் சுமந்து திருமலை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இறப்பு எல்லோருக்கும் நியதி மக்களின் சேவகன் மரணித்தது மறக்க முடியாது உள்ளது. அன்றோடு எமது பகுதிகள் மீளவும் இருள் சூழ்ந்து கொண்டது. இன்றும் என்றும் எங்கள் தங்கம் தங்கத்துரை அண்ணனின் நாமம் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலாபூசணம்
இலக்கிய வித்தகர்
கதிரவேலுப்பிள்ளை ஜெயநாதன்
சம்பூர்
கிளிவெட்டி

## கிழக்கு வானில் உதித்த
## தங்கஜோதி அண்ணன் தங்கத்துரை

01. செந்நெல்லும் கன்னும் சேர்ந்துமே விளைந்து பந்தமும் பாசமம் பரவிட உயர்ந்த ஊர் விந்தையாய் மாவலி விளைநிலம் சேரும் சுந்தரி மாரியம்மன் சுகந்தரும் கிளிவெட்டி.

02. பண்பினுக் குறைவிடம் பல கலை பெற்ற என் அண்ணனாய் அருணாசலத்தார் புதல்வனாய் தண்மதியென்னத் தங்கத்துரையோன் மண்ணிலே உதித்தான் மாண்புடன் வளர்ந்தான்.

03. உற்றவர் மற்றவர் உறுதுணை பெற்றே பெற்றவர் மகிழ பெருமகன் இவனோ சுற்றமும் புகழ்ந்திட சுந்தர முகத்தோன் கற்றனன் ஒருபணிக் கடமையும் ஏற்றனன்.

04. நீர்ப்பாசனத்தில் லிகிதராய்ச் சேர்ந்த தால் நேர்மையாய்க் கடமையை நேர்த்தியைச் செய்தார்.ஒருவர் குலத்திலே எட்டியே நடந்தார். ஊரவர் புகழ்ந்திட உண்மையைத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. திருமலை தன்னில் துணைவியைக் கொண்டார்.ஒரு மகன் மூன்று எனப் பெற்றார். கருவிலே தமிழின் உணர்வினால் வளர்ந்தார். பெருமகன் மக்களின் சேவைகள் புரிந்தார்.

06. மூதூர் மக்களின் முடுமையைக் களைய சாதுவாய்த் தமிழர் கட்சியில் இணைத்தார். மாதுவாய் கிழக்கின் மைந்தனாய்த் திகழ ஏதுவாய் தந்தை செல்வா தந்தார் நமக்கிவரை.

07. எழுபதில் தேர்தல் களத்தினில் குதித்தார். முழுமையாய் வென்றார் முன்னணி வகித்தார். பழுதிலா சேவையைப் பாராளுமன்றம் சென்று தொழுதிடும் கடவுளாய் துன்பங்கள் தீர்த்தார்.

08. பள்ளிகள் கட்டினார் கல்வியை ஊட்டினார் அள்ளியே கொடுத்தார்.ஆசிரியர் குழாத்தை துள்ளிய மாணவன் துயர்தனைக் களைந்தார். வள்ளியின் வேலனாய் வளம்பல சேர்ந்தார்.

09. மூதூர் தந்த முத்தமிழ்ச் சிங்கமாய் ஏதுமே இல்லாந் வாழ்வினை உயர்த்தினார். யாதுமே பாரா நல்வினை செய்தார். போதுமாய் அனைத்துப் பணிகளும் புரிந்தார்.

10. பல்கலை வளாகம் தந்தார் திருமலைக்கு கல்விற்காய் தொழில் நுட்பக்கல்லூரி அமைத்தார் பாலங்கள் அமைத்து பல துறைகள் கொண்டு வந்தார். காலங்கள் முழுவதுமே கனவுகண்டு தானுழைத்தார்.

11. ஐயா நீ இல்லாத திருமலையோ நிறைவில்லை பொய்யில்லை உன் சேவை பேசுகின்றோம். இப்போது கையிலாகாதவரால் காலன் உயிர் பறித்தானே குய்யோ முறையோ என்று கூக்குரல் தான் கேட்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. இரத்தினசிங்கம்
'சேனையூர் இரத்தினா'
(ஓய்வுநிலை அதிபர்)
சேனையூர்

## மறைந்தும் மறையாத மாமனிதர் அண்ணன் தங்கத்துரை அவர்கள்

திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர் கிளிவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட, எளிமையும், கள்ளங்கபடமற்ற உள்ளமும், ஒளி வீசும் கண்களும், சுமாரன உயரமும், வேட்டியும், அரைக்கை சட்டையும், அமைதியும், அடக்கமும் கொண்ட ஒரு அற்புத மனிதராக இன்றும் எங்கள் நினைவுகளில் நிழலாடிக் கொண்டிருக்கும் தமிழின வரலாற்று நாயகனாகத் திகழ்ந்த மாமனிதர் அண்ணன் தங்கத்துரை அவர்களை நாம் கண்டோம். திருக்கோணமலை மாவட்டத்தில் சிறப்பாக பின் தங்கிய பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று, அங்குள்ள தேவைகளை இனங்கண்டு, அபிவிருத்தி செய்து வந்துள்ளார். 1970ஆம் ஆண்டு மூதூர் தொகுதியில் இரண்டாவது அங்கத் தலைவராகவும். 1994ஆம் ஆண்டில் (22-4-2009) விருப்பு வாக்குகளைப் பெற்று, அதிகூடிய விருப்பு வாக்குகள் பெற்றுச் சாதனை படைத்தவர். 1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்றுத் தலைவருமானார். இந்நாட்களில் விவசாயம், கல்வி, வேலைவாய்ப்பு சமூக அபிவிருத்தி வேலைகள் என்பவற்றில் என்றுமே இல்லாதளவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை செய்துள்ளார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தான் அதிகமான அரசவேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இன்றும் அவரின் முயற்சியினால் வேலை வாய்ப்புப் பெற்றோர் திணைக்களங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகள் வகிக்கின்றனர். இன, மத, பேதமற்றவகையில் எல்லா சமூகத்தவர்களோடும், ஒட்டுறவாடி வாழ்ந்தார் அண்ணன் அவர்கள், கிராமந்தோறும் தரிசித்து, மிகவும் நெருக்கமானதொரு உறவினை ஏற்படுத்தியிருந்தமையினால் தான், அவருடைய நினைவாக தங்கநகர், தங்கபுரம் போன்ற பெயர்களை தமது கிராமத்திற்கே வைத்துள்ளார்கள். மும்மொழியாற்றலும், சிறந்த பேச்சாளனுமாகத் திகழ்ந்தவர்கள் அன்று கைது செய்து காணாமல் ஆக்கப்பட்டோர் விபரங்களைத் தேடிப்பெற்று, இதனோடு தொடர்புடைய ஆணைக்குழு பாதுகாப்பு அமைத்து, சர்வதேச மன்னிப்புச்சபை என்பவற்றிற்குத் தெரியப்படுத்தி சம்மந்தப்பட்டோரை விடுவிப்பதற்கு, வழக்கு தாக்கல் செய்து தீர்வுகளைப் பெரிதும் உழைத்தவர்.

சொல்லினும், செயலினும், வல்லவராக வாழ்ந்தவர். எத்தகைய பிரச்சினைவந்தபோதும் மக்கள் முன் சென்று முகம் கொடுக்கும் தலைவனாக இருந்து, சிறைக்கூட வாழ்வினையும் அனுபவித்து மாண்டவர். இவ்வாறு எமது மாவட்டத்தின் பல்துறை அபிவிருத்தியாளனாகவும், எமது கட்சியில் மிகுந்த பற்றுடையவராகவும் செயல்திறன்மிக்க, மக்கள் தொண்டனாகவும், வாழ்ந்த தங்கமகனை 1997-07-05 அன்று திருமலையில் எதிர்பாராதவகையில் இழந்தமை ஈடுசெய்யமுடியாத மாபெரும் இழப்பாகும்.

அவரின் பிரிவு தமிழ் பேசும் மக்களுக்கும், எமது மாவட்டத்திற்கும், பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியது. அவரின் சுயநலமற்ற சேவைகள், இனி மேலும் இத்தகைய ஒரு தமிழ்மகன் பிறப்பானா என ஏங்கவைத்தது துயரத்தை மட்டும் நாம் சுமக்கவில்லை, துன்பங்களையும், பெரியதொரு. அபிவிருத்திப் பாதையின் சிற்பியினையும் தொலைத்துவிட்டோம் இது எம்மினத்தின் அவ்வப்போது இழந்த தியாகச் செம்மல்களில் ஒன்றாகும். "காலவரலாற்றின் எதிர்காலத்தில் எம்மினத்தினால் நினைவு கொள்ள வேண்டிய அண்ணன் தங்கத்துரை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.யோகானந்தன்
(ஓய்வுபெற்ற அதிபர்)
திருக்கோணமலை

## ஆளுமை நிறைந்த தலைவன்...

சிலர் பிறக்கிறார்கள்.

அடையாளம் தெரியாமல் மறைந்தும் விடுகிறார்கள்.

ஆனால் சிலர் மறைந்தும் மக்களின் மனதில் வாழ்கிறார்கள்.

அந்தவகையில் அமரர் தங்கத்துரை அவர்கள் இவ்வுலகில் இருந்து மறைந்து 25 வருடங்கள் கடந்துபோனாலும் புதிய அடையாளத்தோடு வாழ்கின்றார்.

மூதூரில் உள்ள கிளிவெட்டி என்னும் விவசாயக் கிராமத்தில் பிறந்து தனது தீர்க்க தரிசன அரசியலில் நின்று நிலைத்தவர். இவரது ஆளுமை பல இடங்களில் வெளிப்பட்டு நின்றதை நாடே அறியும். எளிமை, இனிய பேச்சு, மக்களை மதிக்கும் பண்பு இவரிடம் நிறைந்து காணப்பட்டது. மூதூரின் அரசியல் வரலாற்றில் இவர் நீங்கா இடம் பிடித்துள்ளார். தனது ஆளுமை காரணமாக மூவின மக்களின் அன்பையும், ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்றார். வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையில் எப்பொழுதும் எளிமையாகக் காட்சி தரும் இவர் திருக்கோணமலை மாவட்ட மக்களை நேசித்து, அவர்களுக்கான எதிர்காலத் திட்டங்களைத் தீட்டினார். குமாரபுரம் படுகொலை இவரை வாட்டி வதைத்தது. எண்ணற்ற உயிரிழப்புக்களைக் கண்டு நீதிக்காகப் போராடினார். பல வேலை வாய்ப்புக்களை உருவாக்கி ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளித்தார்.

நாட்டின் புள்ளிவிவரங்களை தனது விரல்நுனியில் வைத்திருக்கும் திறன் கொண்டிருந்தார். பல சிரமங்களுக்கு மத்தியில் சட்டத்தரணியாகி ஊருக்குப் பெருமை சேர்த்த பேராளன். சொல்லில் தெளிவும், உறுதியும், கடமை உணர்வும் கொண்ட இவர் வடகிழக்கில் ஏற்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக என்றும் குரல் கொடுத்து வந்தார். திருக்கோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சியளிக்கும் கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றித் திறந்து வைத்தார்.

1997.07.05 அன்று மாலை மயங்கிப் கொண்டிருந்தது. தேநீர்விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு விடைபெறத் தயாரான நேரம், தனது வாகனத்தில் ஏறுவதற்கு கால்களை வைத்தநேரம் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. அவரின் பக்கமாக நின்று கொண்டிருந்த நான் செய்வதறியாது திணறிப் போனேன். துப்பாக்கிகள் தோட்டாக்களைத் துப்பத் தொடங்கின. இரத்தத்தில் தோய்ந்து போய் உயிரிழந்தார். இவருடன் கல்லூரி அதிபர் உட்பட பலர் உயிரிழந்து போனார்கள். பாடசாலைத் தொலைபேசி அலறியது அதில் ஏளனமாக சிரிப்பொலி என்னசெய்வதென்றே அறியாது துடித்துப் போனோம். அவர் இறந்து போனமை கனவுபோல் உள்ளது. நல்ல சேவையாளனை மக்கள் இழந்து விட்டார்கள். மூதூரில் அரசியல் வரலாற்றில் அமரர்.தங்கத்துரையின் இழப்பு வெற்றிடமே என்றே சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.பா.கோணேஸ்வரராசா
அதிபர்,
தி/மூ/கிளிவெட்டி மகா வித்தியாலயம்

## திருக்கோணமலை மாவட்டத்தின் வரலாற்றில் தடம் பதித்த தங்கத் தமிழ் மகன் தங்கத்துரை ஐயா!

"தோன்றிற் புகழோடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்னும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க, புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்தவர் அமரர் அருணாசலம் தங்கத்துரை ஐயா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் அவர் மண்ணை விட்டு மறைந்து கால்நூற்றாண்டு கடப்பினும் எம் மக்கள் மனதை விட்டு மறையாது என்றும் உள்ளத்தில் உறைந்திருக்கும் மாமனிதர் என்பது யாவரும் அறிந்ததே. இதற்கு காரணம் அவர் வாழ்ந்த காலப்பகுதியில் ஆற்றிய அர்ப்பணிப்பான அர்த்தமுள்ள சேவைகளும் எம்மவர்க்காய் ஆளுமையோடு ஆற்றிய பணிகளுமே என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எழில் கொஞ்சும் திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்திலுள்ள கிளிவெட்டி கிராமத்தில் 1936 ஆம் ஆண்டு தை மாதம் 17ஆம் திகதி அருணாசலம் லோகம்மா தம்பதியினருக்கு கிடைத்த இரண்டாவது புதல்வரே தங்கத்துரை ஐயா அவர்கள் இவருடைய ஆரம்பக்கல்வி கிளிவெட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. அண்ணல் உயர்கல்வியை கற்று பல்வேறு பதவிகளை வகித்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. அவருடைய உள்ளமும் உயர் சிந்தனையையே நாடியது. அவர் எம்மவர்க்காய்ச் சிந்தித்தார். சிந்தித்தவற்றைச் செயற்படுத்தினார், சாதித்தார். சோதனைகள் சூழ்ந்தபோதும் சோர்ந்திடாது சேவை செய்தார். இவர் 1979 ஆம் ஆண்டில் கொழும்பு சட்டக்கல்லூரியில் இணைந்து 1980 இல் சட்டத்தரணியும் ஆனார். பதவிகள் பல வந்த போதும் பாதகம் நடக்கும் வேளை கட்சிமாறும் கயவர் அல்லர். பதவியை துறந்திடும் புண்ணியவான் எமது தங்கத்துரை ஐயா.

"அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் என் ஆவி
அழிவதற்குக் காரணமாயிருந்ததென்று
சமுதாயம் நினைத்திடுமோ! ஐயகோ! என்
தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிப்பதுண்டோ!

என்று கூறிச்சென்ற பாரதிதாசன் வழிவந்த கொள்கையில் அவதரித்தவர்.

கொழும்பில் நீர்ப்பாசன திணைக்களத்தில் பணியாற்றிய வேளை இலங்கையில் தனிச் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டபோது சீற்றம் கொண்டு அதனைத் தாங்கமுடியாது அரச பதவியைத் துறந்தார். இக்கால கட்டமே அவரை மீண்டும் மீண்டும் அரசியலில் ஈடுபடத் தூண்டியது. அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் அரசியலில் முழுமையாக இறங்கினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் தொகுதியில், 1970 இல் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராகவும், அக்கட்சியின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் சமூகத்தின் தலைவராகவும் பதவி வகித்தார். தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்ட இவர் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினராகவும், ஆதரவாளராகவும் செயற்பட்டார்.

1978 இல் ஏற்பட்ட இடர் அண்ணலைச் சிறையிருக்க வைத்தும், அவர் சளைத்தாரில்லை. 1994 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் திருக்கோணமலை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவரது அரசியல் இருப்பு திருக்கோணமலை மாவட்டத்தில் அறுகம்புல் வேர் போல் ஆழமுடையதாக காணப்பட்டது. தான் சார்ந்த மக்கள் மீதும், மண் மீதும் பற்றும் நாட்டமும் கொண்டவர். மிகவும் முன்னுதாரணம் கொண்ட தன்னிகரில்லாத் தலைவர்.

இவர் நாடாளுமன்ற உறுப்பினரான பின்னர் திருக்கோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தீவிரமாயின. சுகாதாரம், கல்வி, சமூகநலன் போன்ற பல் துறைகளில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டது. நீண்ட தூரம் சென்று நோய் தீர்க்கும் மக்களுக்காய் பல வைத்தியசாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. கல்விச் சாலைகள், தொழில் வாய்ப்புக்கள், ஏழை மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டு உதவி என்று பல துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டதை எழுத்தில் வடித்திட முடியாது.

எமது கிராம மக்களின் விவசாயத் தேவைகளை கருத்திற் கொண்டு பல கமநல சேவை நிலையங்களை ஏற்படுத்தினார். மேலும் கிராமப்புற மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக பல புதிய பாடசாலைகள் இவரால் தோற்றம் பெற்றன. பாடசாலைகள் பல தரம் உயர்த்தப்பட்டன. அண்ணல் கல்வி வளர்ச்சிக்காய் சிந்தித்தவிடயத்தில், எமது பகுதிக்கு ஏனைய மாவட்டத்தில் இருந்தே ஆசிரியர்கள் வருகை தந்தனர். இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கொண்டு ஆசிரியர் கலாசாலை ஒன்றை அமைக்க வேண்டும் எனும் திட்டத்தை நிறைவேற்ற எண்ணியும் அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

கிளிவெட்டி கிராமத்தின் பிரதான வீதியில் தற்போது 1C பாடசாலையாக காணப்படும் கிளிவெட்டி மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்காய் கல்வி கற்கும் சமூகத்தினரையும் கற்பிக்கும் சமூகத்தவரையும் மேம்படுத்த அயராது உழைத்தவர் என்பது பெருமைக்குரியது.

இந்த வகையில் கிளிவெட்டி மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியை நோக்கின், இப்பாடசாலை இலங்கையில் பிரித்தானியாவின் ஐந்தாவது ஜோர்ஜ் மன்னன் காலத்தில் 1885.04.23ஆம் திகதி, தரம் 1 - 5 வரையான வகுப்புகளைக் கொண்ட ஆரம்பப் பிரிவு (வகை-III) பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் 1939ஆம் ஆண்டு தரம் 1 - 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட (வகை - II) பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 37 ஆண்டுகளின் பின்னர், 1976ஆம் ஆண்டு கல்விப்பொதுத்தராதர உயர்தர கலைப்பிரிவுடன் 1C பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு மகாவித்தியாலயமாக்கப்பட்டது. இதற்கு முழு மூச்சாய் நின்று உழைத்தவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தங்கத்துரை ஐயா என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமல்ல இப்பாடசாலையின் வளர்ச்சிக்காய் மேற்கொள்ளப்பட்ட பணிகள் இன்னும் பல உள்ளன.

ஆரம்பத்தில் இப்பாடசாலையின் பிரதான வாயில், மாரியம்மன் கோயில் பின் பகுதியிலேயே அமைந்திருந்தது. இதனை கவனத்திற்கொண்ட தங்கத்துரை ஐயா அவர்கள், பாடசாலையின் வளம் கருதி பிரதான வீதியை அண்டிய காணியையும் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு காணியைப் பெற்றதோடு பிரதான வாயிலையும் பிரதான வீதியோடு இணைக்கச் செய்தார். தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வீதியை அண்மித்து அழகாகக் காட்சி தரும் பிரதான வாயிலுக்கும் பாடசாலையின் நிலப்பரப்பு அதிகரிப்புக்கும் காரணமானவர் என்பதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

பாடசாலைக்கான கட்டடங்கள் பெருமளவு இல்லாததை கண்ணுற்ற கடமையாளர் 1972 - 1975 வரையான காலப்பகுதியில் நான்கு கட்டடங்கள் (120'x20', 140'x20', 120'x20', 120'x20') அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு அவற்றை நிறைவேற்றினார். இக்கட்டிடங்கள் இன்றுவரை மாணவர்களுக்கு பயனுள்ளதாகக் காணப்படுகிறன. மற்றும் எமது பகுதிக்கு பல்வேறு துறைகளையும் கற்பிப்பதற்கான ஆசிரியர்களின் வளம் போதாமையினால் வெளிமாவட்ட ஆசிரியர்கள் தங்கியிருந்து பணி புரிவதற்கான 3 ஆசிரிய விடுதிகளையும் அமைத்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுமுகமாக வசதி வாய்ப்புக்களையும் ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்.

இறுதியாக் இப்பிரதேசத்தின் பாடசாலைகளில் முதலாவது மாடிக் கட்டடத்தை (110' x 25' அளவில்) இப்பாடசாலைக்கே 1996 இல் அமைத்துத் தந்தார். கல்வி நலன் கருதி கட்டப்பட்ட இக்கட்டடம் பூரணம் பெற்று முடிவதற்கு முன்பே தங்கத்துரை ஐயாவின் ஆத்மா, தி/தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியின் கட்டடத் திறப்பு விழாவின் போது உடலை விட்டுப் பிரிந்து விட்டது. அவருடைய ஆத்மா பிரிந்தாலும் அவரால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் அத்தனையும் இன்றும் பயனளித்துக் கொண்டிருக்கின்றன.

1976 முதல் உயர் தரத்தில் கலைப்பிரிவு மாத்திரமே காணப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு தொழிற்துறை பிரிவும், 2020 இல் வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப கல்வி வளர்ச்சியில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் துரித பணியில் ஈடுபடுவதற்கும் ஊன்றுகோலாக இருந்த ஐயா, இன்று இல்லாதது எமக்கு மிகவும் வேதனையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் கனவெல்லாம் நனவாக்கிடும் வல்லாளர், கரை காணமுன் கவர்ந்திட்டான் காலனவன். மரணப்பாதுகாப்பு வேண்டாமென்ற மாமனிதர், கல்லூரிக் கூட திறப்பு விழாவிலேயே நிரந்தரமாய்க் கண்களை மூடிக்கொண்டார்.

அன்று தொட்ட ஆறாத்துயர் இன்று வரை எம்மவர்க்கு மீளாத்துயராகி விட்டது. எத்தனை எத்தனை தேவைகள் அத்தனையும் தேங்கிக் கிடக்கின்றன. தங்கத்துரை ஐயா இருந்திருந்தால் இத்தனையும் தடங்கலாகியிருக்குமோ? அன்னாரது உயிர் துயின்றாலும் உணர்வுகள் துயிலாது. அவர் பணியினை அடுத்துவரும் பரம்பரை தொடர வேண்டும். கருணையாளரின் கனாக்கள் நிறைவேற இறைவன் துணைபுரிய வேண்டும்.

> "தங்கத் தமிழ் மகன் தங்கத்துரையோன்
> தன்னிகரில்லாத் தலைவன்"
> என்றும் அவர் நினைவு கூறப்பட வேண்டியவர்.

அவரது நினைவாக வெளியிடப்படும் இம்மலர் வெளியீடு எமது மனதுக்கு ஆறுதல் அளிக்கின்றது. அவரது பணிகளை அவரைச் சார்ந்தவர்கள் தொடர வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர்கள்.
செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை.

### அமரர் அருணாசலம் தங்கத்துரை (பா.உ) அவர்களின் 25ஆவது நினைவுநாள் செய்தி

## திருமலைக்கு கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம்

அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராகவும் மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும், திருக்கோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் இருந்து அமரத்துவமடைந்தார்.

இவரின் 25வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையானது இச்செய்தியை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களின் பெயரும் சிறப்பு இடத்தை கொண்டுள்ளது. எமது தேச பிதா மூதறிஞர் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாவின் பாசறை மூலம் தமிழர் தலைநகரமான திருமலைக்கு கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம் இவர் என்றால் மிகையாகாது.

தமது இறுதி நாட்கள் வரை திருமலை மக்கள் அனைவரையும் அன்புடனும், பாசத்துடனும் நேசித்து அவர்களின் தேவைகளை உணர்ந்து இளமைத் துடிப்புடன் சேவையாற்றிய ஒரு கனவானை அகால மரணத்தில் பார்க்க வேண்டிய ஒரு சோதனை எம் மக்களை நாடி வந்து கொண்டது. அந்த மக்கள் தாம் படும் துன்பங்கள், துயரங்களில் இருந்து மீண்டெழுந்து வெற்றிக்கொடி நாட்டி மகிழும் காலம் வரும் என நாம் நம்புகின்றோம்.



**ஆலயமுன்றலில் அமரர்.அ.தங்கத்துரை அவர்கள், பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளுடான சந்திப்பின் போது...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றும் அமரருடைய நினைவுகளுடன்,
அவரது அரசியல் சீடனாக,
தங்க. முகுந்தன்

## என்றும் மறக்கமுடியாத தனிப் பண்புகளையுடைய தலைவர் அமரர் அருணாசலம் தங்கத்துரை!!!

எனது அரசியல் ஆசான்களில் முதற்குரு 'தங்கத்துரை மாமா' என்பதில் நான் என்றும் பெருமை கொள்கிறேன்!

05.07.1997 திருக்கோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி புதிய மாடிக் கட்டிடத் திறப்புவிழாவின் நிறைவில் குண்டுத் தாக்குதலில் பலியாகிய அமரர் தங்கத்துரை மாமாவுக்கும் கூடவே அவருடன் அதே கல்லூரியின் அதிபர் திருமதி. இனாஜேஸ்வரி தனபாலசிங்கம், அதே கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு.பெ.சி. கணேசலிங்கம், திருக்கடலூர் நாமகள் வித்தியாலய அதிபர் திரு. சி. ஜோசப், கொழும்பு அதிபர் திரு. கா. சீவரத்தினம் ஆகியோர் கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த பொறியியலாளர் திரு.வே.ரட்ணராஜா அவர்கள் இரண்டு நாட்களின் பின் மரணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்துரை மாமா எம்மைவிட்டுப் பிரிந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டதா என்றதொரு செய்தியை மனம் ஏற்க மறுக்கிறது. 8 வருடங்கள் அவர்கூடவே இருந்த அந்தப் பொற்காலம் மறக்க முடியாதது. எமக்கு அரசியலைப் போதித்த ஆசான் அவர். நான் அவரைப்பற்றி பல விடயங்களை பல தடவைகள் பத்திரிகைகளிலும் எனது கிருத்தியம் இணையத் தளத்திலும் பதிவிட்டிருந்தாலும் எழுதப்படாத விடயங்கள் ஏராளம் உண்டு. சில விடயங்கள் மீளவும் நினைவுகொள்ள வேண்டிய அவசியமும் இருக்கிறது.

தன்னைப் போல மற்றவர்களை நோக்கும் தன்மைக்கு உதாரணமாக திகழ்ந்தவர்தான் தங்கத்துரை மாமா!!

எனது பெரியதந்தையாரும், யாழ்ப்பாணத்துப் பாராளுமன்ற உறுப்பினராக (1977 முதல் 1983 வரை) மக்கள் பணிபுரிந்த யோகேஸ்மாமாவும் கொல்லப்பட்ட பின் தமிழர் விடுதலைக் கூட்டணியை திரும்பவும் அதனை மீளுருவாக்கம் செய்த பெருமைக்கு தங்கத்துரை மாமாவும் முக்கியமானவர்.

1970களில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தகாலம் முதலே அவரது பெயரை அறிந்து வைத்திருந்தாலும், பழைய தமிழரசுக் கட்சி அலுவலகம் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்தபோது 1975 / 76களில் நேரடியாக பார்த்திருக்கின்றேன். தமிழரசுக் கட்சி மாநாடு இறுதியாக மல்லாகத்தில் நடந்தபோதும், கூட்டணியின் பண்ணாக மாநாடு, தந்தை செல்வாவின் இறுதி நிகழ்வு போன்றவற்றிலும் மாமாவைக் கண்டிருக்கிறேன். 1981 திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவராகிய பின்னர் யாழ் வந்த வேளைகளிலும் கண்டிருக்கிறேன்.

1989இல் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் கொல்லப்பட்ட தலைவர்களின் 45ஆம் நாள் காரியத்தின்பின் எங்களோடு அந்தக் கொலை நடந்த வீட்டில் வந்து வசித்தார். சேனாதி அண்ணை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாலன் அண்ணை, சின்னத்துரை அண்ணை, கௌரிஅண்ணை, தங்கத்துரை மாமாவோடு நானும் ஒன்றாக ஒருவருடம் அங்கே வாழ்ந்தோம்.

பின்னர் திம்பிரிகஸாய ஹவ்லொக் றோட் அலுவலகத்திற்கு இடம்மாறினோம். பழைய வீட்டிற்கு கலாநிதி நீலன் திருச்செல்வம் தனது மனைவியோடும் சிலவேளைகளில் மகன்மாருடனும் அடிக்கடி வருவதுண்டு. அதேபோல திரு.சாம்.தம்பிமுத்து தனது குடும்பத்தினரோடு வருகைதருவார்.

மே 1990ல் சாம். தம்பிமுத்து கொல்லப்பட்ட பின் அவரது இடத்திற்கு விருப்ப வாக்குகளின் முடிவுகளின் படி திரு. ஜோசப் பரராஜசிங்கத்தின் பெயர் அறிவிக்கப்பட்டபோது ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியினர் 'தமது கட்சிக்கு அந்த பதவி தரப்பட வேண்டும்' என மிகவும் கீழ்த்தரமான முறையில் எமது அலுவலகத்தின் முன் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தபோது, தங்கத்துரை மாமா எம்மை வெளியே போகவிடாது அலுவலகத்தினுள்ளே அமைதியாக இருக்குமாறு பணித்ததை எளிதில் மறந்துவிட முடியாது.

சேனாதி அண்ணையும், தங்கத்துரை மாமாவும் திரு. ஜோசப் பரராஜசிங்கம் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்க மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வர ஏற்பாடு செய்ததோடு, வழியில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாதவகையில் செயற்பட்டதை எம்மில் சிலர்மட்டுமே அறிவர்.

எனது பெரிய தந்தையார் திரு. அமிர்தலிங்கம் கொல்லப்பட்ட பின் அவரால் மேற்கொள்ளப்பட்ட சில விடயங்களை கலாநிதி நீலன் திருச்செல்வம் மற்றும் தலைவர் சிவாஜயா அவர்களின் உதவியோடு பாராளுமன்ற உறுப்பினர்களாயிருந்த திருவாளர்கள் சேனாதிராஜா மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் மூலம் முற்றுப்பெற இரவுபகல் பாராது உழைத்தமையையும் நான் குறிப்பிட்டேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991ஆம் ஆண்டு நாள் சரியாக எனக்கு ஞாபகமில்லை. வடக்குக் கிழக்குப் பகுதியின் புனரமைப்பு புனர்நிர்மாணங்களுக்காக வெளிநாட்டு உதவி ஒன்று கிடைக்கவிருந்த சமயத்தில் பெரிய திட்டம் (Project) ஒன்றை நள்ளிரவு தாண்டிய நேரத்தில் ஏறக்குறைய 2.30 மணிவரை தனியாக இருந்து ஆங்கிலத் தட்டச்சில் அதைத் தயார் செய்து முடித்ததை நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

அவரது வழிகாட்டலில் சில வரைபடங்களை நாமே கீறிக் கொடுத்தோம். நானும் எனது நண்பன் சபாபதி அவர்களும் அதைச் செய்து முடித்தோம். (அவர் பதுளை பிரதேச சபையின் உறுப்பினராக இருந்தார் - 1990 களில் நாம் கொழும்பில் இந்து சமய ஒற்றுமைப் பேரவையை நடத்திய காலங்களில் அவர் அதன் பொருளாளராக இருந்தவர் மலையகத்தைச் சேர்ந்த அவர் எமது மறைந்த தலைவர்கள் அனைவருடனும் அன்னியோன்னியமாக பழகியதையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாயிருக்கும் என நினைக்கின்றேன்.) வடக்கு கிழக்கு நெடுஞ்சாலைகளில் செப்பனிடப்படவேண்டிய பகுதிகள், மின்சாரம் வழங்க வேண்டிய பகுதிகள், பாடசாலைகளுக்கான புதிய கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், மாணவர் ஆசிரியர் விடுதிகள், திருத்தப்படவேண்டிய குளங்கள், வைத்திய சாலைகளின் தேவைகள், விளையாட்டு மைதானங்கள், குடிநீர் வசதிக்கான கிணறு அமைத்தல் போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

கல்விக்கும் கல்வி வளர்ச்சிக்கும் - ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல் பாடசாலை வளங்களை அதிகரித்தல் போன்ற சகல பணிகளிலும் அவர் கூடிய அக்கறை காட்டிவந்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களுக்கு தனித்தனியாக கோவைகளை தொகுதி, மாவட்டம், மாகாணம் என பிரிவுபடுத்தி - மனித உரிமை அமைப்புக்களோடும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தோடும் தொடர்பு கொண்டு செயற்பட்டார். திருக்கோணமலை மற்றும் மட்டக்களப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல கிராமங்களின் பெயர்களை அறியக் கூடியதாக இருந்ததோடு மட்டுமல்ல அந்தந்த ஊர்களின் கோப்புககளை வரிசைப்படி தனது அலுமாரியில் அடுக்கி வைத்திருந்தமையையும் நினைவில் கொள்ள விரும்புகிறேன். Amnesty international அமைப்பின் செயற்பாட்டாளர் இங்கிரிட் அம்மையாருடன் அடிக்கடி தொடர்பாயிருந்தார். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தனியாக படிவங்கள் அச்சிட்டு விபரங்களை சேகரிப்பார். அப்படி அனுப்பப்பட்ட கடிதமொன்றுக்கு வந்த பதிலை அனைவரும் அறிய - பதிவுக்காக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*ஆலய வீதி,*
*பாலையூற்று,*

*அந்தோனியம்மா எழுதிய கடிதமிது!*

*எனது மகன் கைது செய்யப்பட்ட விபரம் அனுப்பியிருந்தேன். எங்களோடு அனுப்பிய சிலர் கையெழுத்துப் போடவில்லை என்பதனால் திருப்பி அனுப்பியிருந்தீர்கள்!*

*அப்படி அக்கறையோடும் இரக்க சிந்தனையோடும் நல்லிதய நோக்கோடும் நீங்கள் செயற்படுவதை என்னால் உணர முடிகிறது! மேலும் தகவல் அறிந்தால் தயவாக அறிவியுங்கள்!*

*தங்கள் உடல் உள ஆன்மீக தேவைகளை நிறைவாக அளித்தருள இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.*

1994ல் தேர்தலில் வெற்றிபெற்ற பின் கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைவராக 7 வருடங்கள் பதவி வகித்த தங்கத்துரை மாமா தெரிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும். கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் நியாயமற்ற செயலால் அது நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பலப்பிட்டி சரஸ்வதி ஹோலில் கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு நடத்திய கூட்டத்தில் நடந்த வேறோர் சம்பவம்,

'கேடுகெட்ட தமிழர்' எனப்பேசி கைதட்டுவாங்கிய குமார் பொன்னம்பலத்துக்கும், மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரனுக்கும், டெலோ சிறீகாந்தாவுக்கும் பேசிய பேச்சுக்களில் ஒற்றுமை இருந்தது. வீறான பேச்சு!

நிமிடத்துக்கு ஒருதடவை கைதட்டும் கரகோசமும் - இறுதியாக மாமாவின் அமைதியும் பொறுமையும் நிறைந்த ஆராய்ச்சிப் பேச்சு!

"கேடு கெட்டுப் போனால் நல்லதுதானே!" என்று தொடங்கினார். ஆவேசப் பேச்சால் கொதித்திருந்த கூட்டம் அமைதிப் பேச்சினால் அடங்காமல் எழுந்து கூச்சல் போட்டது! கேள்வி கேட்டது! எந்தப் பதட்டமும் இன்றி தங்கத்துரை மாமா நிதானமாய்ப் பதிலளித்தார். இறுதியாக அனைவருடனும் அன்பாய் அளவளாவி விடைபெற்று வந்தார்.

பாராளுமன்ற உறுப்பினராக வரமுன்பும் பின்னரும் தனியாகவே நடந்தும் பஸ்வண்டிகளிலும் பயணிப்பார். தனது பாதுகாப்பைப்பற்றி சிறிதேனும் அவர் கவலைப்படவில்லை. நீதி நியாயமாக நடக்கும் உண்மையான ஒருவன் எதற்கு கவலையும் பயமும் கொள்ள வேண்டும் என அடிக்கடி சொல்லுவார். ஒருமுறை திருக்கோணமலை செல்ல புகையிரத நிலையம் போவதற்கு 138 இலக்க பஸ்ஸில் அவர் முன் ஏற பின்னால் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏறி வழியனுப்பி வைத்ததையும் மறக்கமுடியாது.

காலைக்கடன்களை முடித்துவிட்டு ஏறக்குறைய அரைமணி நேரம் தியானத்தில் தனது கட்டிலில் அமர்வார். காலையில் வாக்கிங்போகும் அமைச்சர் மஜீத் நேரே அவரது அறைக்குள் போய் சில வேளைகளில் அவர் தியானத்தில் இருந்தால், "பரவாயில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேணை! அவர் தியானம் முடிச்ச பிறகு கதைப்பம்" எனக் கூறி அவர் முன் கதிரையில் இருந்து அவரையே பார்த்தபடி இருப்பதும் மறக்கமுடியாது.

தந்தை செல்வாவின் நூற்றாண்டுக் காலத்தில் 11.02.1997ல் நாலந்த எல்லாவல அவர்களும் 05.07.1997ல் தங்கத்துரை மாமாவும் 20.07.1997ல் ம.்.றூப் அவர்களும் கொல்லப்பட்டார்கள். ம.்.றூப் அவர்கள் மாமாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த முதலில் எமது கட்சிக் காரியாலயத்திற்கு அல்ஹாஜ் அஸ்வர் ஆஹீயுடன் வந்ததுடன் இறுதி நிகழ்வில் கட்சிச் சார்பில்லாமல் எல்லோருக்கும் உதவியவர்

என அவர் இயல்பான குணாதியங்களைக் குறிப்பிட்டுப் பேசி, பாராளுமன்றம் தங்கத்துரையின் மறைவு குறித்து அறிவித்து ஒத்திப் போடப்பட்டது. ஆனால் திருக்கோணமலைப் பாடசாலைகள் அவருக்கு அஞ்சலிக்காக மூடப்படவில்லை என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதையும் நினைவு கூருவதுடன், அவரும் 2 வாரங்களின் பின் 20.07.1997 அவரது மெய்ப்பாதுகாவலர், ஒரு பாடசாலை அதிபர், சாரதி, நண்பர், சாரதியின் 3 வயதுக் குழந்தை ஆகிய அறுவரும் மிகக் கொடூரமாக காலை 10.30 மணியளவில் திருக்கோணமலை 6ஆம் கட்டையில் சுட்டும் பின் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டதும் என்றும் எவராலும் மறக்கமுடியாது.

மாலைதீவு நாட்டின் திட்டமிடல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கான அமைச்சர் அல்காஜ் இப்ரஹீம் ஹுசைன் ஷாஹி அவர்கள் தங்கத்துரை மாமா கொல்லப்பட்டதை அறியாமல் வருடாவருடம் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்து வந்தார். அவர் அனுப்பிய 2002ஆம் ஆண்டு வாழ்த்துமடல் எனது கையில் கிடைத்ததால் அவருக்கு மாமாவின் மரணச் செய்தியை தெரிவித்தேன். கூடவே சில ஆங்கில பத்திரிகைச் செய்திகளையும் அனுப்பியிருந்தேன். அதற்கு அவர் தனது நன்றியையும் அனுதாபங்களையும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அகராதியில் தங்கம் என்றால் பொன் (gold) அல்லது மதிப்புள்ளது (precious) என்று பொருள். அதுபோல் துரை என்ற சொல்லுக்கு தலைவன் (chief) அல்லது செழிப்பு (plenty) என்று பொருள்.

இவை அனைத்தும் என் குருவுக்கு பொருந்தும்!
ஆம்! என்றும் அவர் "தங்கத்திற்கு துரை"தான்
"தங்கமான துரை"யே தான்!
அவரைப் பற்றி எழுத ஏராளம் இருக்கிறது.

ஆனால் எல்லோரும் எழுதவேண்டும் என்பதற்காக ஒரு அளவுப் பிரமாணத்தை ஏற்பாடு செய்தவர்கள் அளவிட்டமையால் 25 ஆண்டுகள் கடந்திடினும் அமரரை எம்மால் மறக்கமுடியாத நினைவுகளை மீள அசைபோட்டுள்ளேன்.

நன்றி.



**அமரர்.அ.தங்கத்துரை அவர்கள் நிகழ்வொன்றில் பங்குபற்றிய போது...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பின்,
வீ.எஸ்.ராஜா
சாமாதான நீதிவான்
திருக்கடலூர்
திருக்கோணமலை

# முத்தமிழ் நாடாமல் மூதூரில் முதல் வரமய்யா நீங்கள்

எங்கள் தங்கமே பார்வையில்
பிரகாசிக்கும் தங்கதுரையே?
ஏணியில் ஏறுவது போல்
மும்மொழியும் கற்ற மூவேந்தனே

தமிழரசுக்கட்சியின் தானைத் தலைவனே!
தமிழ் கற்றால் மட்டும் போதாது
தலைவர்களெல்லாம் சட்டம் படித்தவர்களாம்
சட்டத்துறையில் மேன்மை கொண்போருக்கும்

மட்டுமே பாராளும் மன்றத்தில் அங்கத்தவர்களாம்
என்றும் தமிழரசுக் கட்சியில் பொதுக் கூட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தமிழரசுக் கட்சியின் செயலாலர் நாயகம்
கௌரவ அமிர்தலிங்கம் எடுத்து கூறவும்
அதை தேவவாக்காக நினைத்து சட்டத் துறைக்கு சென்றார்.

சட்டத்துறையில் ஆறு வருடமாக படித்து
தான் எடுத்துக் கொண்ட சத்தியத்தின்
நிமித்தம் சட்டக் கல்லூரில் சட்டதாரணியாக
பட்டம் பெற்று வெளியே வந்தார்

அடுத்த வந்த தேர்தலில் மூதூரில் முத்து
அண்ணன் தங்கம் தேர்தலில் நின்றார்
வெற்றியோடு பாராளுமன்றம் சென்றார்
தனது மண்ணுக்கே சேவை பல செய்தார்

என்னோடு வாஞ்சை மிக்க
அண்ணன் திருக்கடலூர் நாமகள்
வித்தியாலத்திற்க்கு இரு மாடி
கட்டிடங்களைக் கட்டி அழகு பாரத்தார்

திருக்கோணமலை திருக்கடலூர் சிவானந்த தபோவன
ஆச்சிரமத்தில் பணிப்பாளராக பல
வருடங்களாக சிறப்புற சேவை ஆற்றி
நற்பெயர் பெற்ற பெருந்தகை ஆனார்

காடையர்களால் 1935ம் ஆண்டு
அழிக்கப்பட்ட சிவானந்த தபோவன ஆச்சிரமத்தை
மீண்டும் புதுப் பொலிவுடன் கட்டி - வெளியே
வீடுகளில் வாழ்ந்த பிள்ளைகளை
அழைத்து வந்து தங்க வைத்து பராமரித்தார்
மீண்டும் புதுப் பொலிவுடன் சிவானந்த
தபோவனம் சிறப்பாக நடைபெற்று வருவதை
நாம் கண்கூடாக காண்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் அண்ணனை நான் அடிக்கடி
சென்று பார்த்து வருவேன்
ஒரு நாள் அண்ணன் என்னை
அழைத்து முக்கியமாக சில
வேலைகளைத் தந்தார்

சிவானந்த தபோவன ஆச்சிரமத்தில்
காணிகளை சில இயக்கங்களின்
ஆட்கள் அபகரிக்க முயலுவதாக
தான் அறிவதாகவும் அதனைச்
சற்று சுற்றி பார்க்கவேணும் தம்பி
என்று என்னை அமைதியாகப்
பார்த்துச் சொன்னார் நானும்
பணிவாக சரி அண்ணா
என்று சொல்லி எனது
உறவு முறை சகோதரனையும்
அழைத்துக் கொண்டு
தபோவன ஆச்சிரமம் பக்கம்
நடந்து போவோம்?

நாங்களிருவரும் நடந்து போகும்
பாதை நேரே புள்டோசர்
ஒன்றில் நான்கு இளைஞர்கள்
தொங்கிக் கொண்டு காணியை
புல்டோசரால் துப்பரவு செய்வதைக்
கண்டோம்?

நான் கையை காட்டி நிறுத்தும் படி
சைகை செய்தேன்
புல்டோசர் எங்களிருப்பவர் அருகில்
வந்து நின்றது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் எங்கள் வேலையை
மறிக்கின்றீர்கள் பேசாமல்
வீட்டுக்குப் போங்கள்?

தம்பிமாரே? தயவு செய்து மன்னிக்க
வேணும் இது தபோவன ஆச்சிரமத்தில் காணி
மாதாஜீ சரஸ்வதி அம்மா அவர்கள்
பல நூற்றுக் கணக்கான அனாதை பிள்ளைகளை
வைத்து பராமரிக்கும் இடம் இந்த இடம்
இப்போது எம்.பி.திரு.அ.தங்கத்துரை
அண்ணனின் நேரடி பார்வையில்
இருக்கின்றது தயவு செய்து
இதில் நீங்கள் தலையிடதமல் போங்கள்

அவ்வளவு தான்! புல்டோசர் மேலே
அமர்ந்திருந்த ஒரு இளைஞர்
அவசரப்பட்டு எகிறி குதித்து
ஓடி வந்த எனக்க பளீரென
கன்னத்தில் அறைந்தான்
நான் நிலை தடுமாறி கீழே
சரிந்தேன்!!

எனது கன்னத்தில் பாய்ந்து வந்த இளைஞர்
அறைவதை ஜீப்பில் பொலிசாரும்
திருக்கோணமலை மாவட்ட உதவி அதிபர்
கௌரவ மயில் வாகனம் ஐயாவும்
பின் பக்கமாக ஜீப்பில் அமர்ந்திருந்த
அண்ணன் பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ அ.தங்கதுரை அண்ணனும்
பார்த்து அதிர்ச்சியுற்று சத்தமிட்ட
குரலை நான் கேட்டேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே ஓடி வந்த பொலிசாரைக் கண்ட இளைஞர்கள்
பின்னே நோக்கி புகையிரத பாதை பக்கமாக
வேகமாக ஓடி மறைந்தனர் பொலிசாரும் திரும்பி
வந்தனர்

என்னைப் பார்த்து அண்ணன் கவலைப்பட்டார்
நானும் ஒன்றுமில்லை அண்ணன்?
சாதாரண அடித்தான்? இதெல்லாம் சாதாரணம் அண்ணா?
ஓ இதெல்லாம் உங்களுக்கு சாதாரணமா?
என்று சொல்லி புன்னைகையோடு என்னைத் தழுவி
கன்னத்தை தடவி? என்னோடு ஜீப்பில்
வாங்க தம்பி, விட்டில் சின்னக்கூட்டம்
என்ற சொன்னவர் AGA மயில்வாகனம்
அய்யாவையும் பொலிசாரையும் அழைத்துக்
கொண்டு தபோவன பக்கமாக சென்றனர்

வாகனத்தில் போகும் போதே சில அதிகாரிகளுடன்
வீட்டிற்க்கு வருமாறும் முக்கிய விடயமாக
அறிக்கைகள் தயாரிக்க வேண்டுமென சொல்வதை
நானும் கேட்டேன்
நாமகள் வித்தியாலயத்திற்க்கு கட்டிடம் அமைக்க
வேண்டுமென சொன்னதையும்
நான் கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

ஐயா? எங்கள் இதயத்தில்
விற்றீருக்கும் தெய்வமே?
ஊரைப் பற்றியும் ஊர்
மக்களைப் பற்றியுமே
தினந்தினம் சிந்தித்து
சேவைக்கம் மேலாக
பணியாற்றி மகிழ்ச்சி கண்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தின் சாட்சியாக
தேசமெல்லாம் புகழும்
தொழில் வளங்களையும்
பெற்றுக் கொடுத்து
ஆனந்தப் பட்டீர் இது உண்மை...?

எங்கள் சகோதர தம்பிகளுக்கும்
தாங்கள் தமிழர் / முஸ்லீம்கள் / சிங்களவர்கள்
என்று பேதங்கள் பாராது புன்
சிரிப்புடன் பதவிகளை அள்ளி வழங்கினீர்கள்
அன்றெல்லாம் வழங்கிய பதவி
வெற்றிடங்களுக் கெல்லாம்
கையூட்டும் மட்டும் கைநீட்டி
வாங்கியிருந்தால்
மாட மாளிகை கட்டி வசதியாக
வாழ்ந்திருப்பீர்களே - இல்லையே

நீதி நேர்மை கண்ணியம் கட்டுப்பாடு
கடவுள் சாட்சி இதுதானே
உங்கள் தாரக மந்திரம்
இது ஊர் முழுவதும் தெரியுமே
அப்படியிருக்க எப்படி அண்ணா?
காலன் கண் வைத்தான்
உங்கள் உயிர மேலே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றும் அண்ணனின் நினைவுகளோடு
கோ. இரத்தினசிங்கம்
தலைவர், ஏசியாட் காலனி
அண்ணாநகர் மேற்கு,
சென்னை-101

# நினைவுகளில் நிலைத்திருக்கும் அண்ணன் தங்கத்துரை

தோன்றிப் புகழோடு தோன்றுக அன்றேல்
தோன்றல் தோன்றாமை நன்று - எனும் கூற்றுக்

கிணங்க ஈழத்தமிழ் வரலாற்றில் கிழக்கின் உதய சூரியனாக 1970வதுகளின் பின்னர் அண்ணன் தங்கதுரை அரசியல் பிரவேசித்தார். 1994ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினராக அதிகூடிய விருப்பு வாக்குப்பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, எம்மினத்திற்காக குரல் கொடுத்தவர். 1997 ஆம் ஆண்டு வரை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்காகவும், மாவட்ட அபிவிருத்திக்காகவும் அயராது உழைத்த மாமனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் அவர்களும் நானும் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தோம். அவரோடு பழகிய நாட்கள் என்றுமே பசுமையான நினைவுகளோடு கூடியவை.

ஒரு தடவை என்.எம்.பிரேரா அவர்கள் நிதியமைச்சராக இருந்த போது அவரைச் சந்திக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் என்னையும், அவர் கூட்டிச் சென்றார். நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் நிதியமைச்சரை சந்திக்க வரிசையில் காத்திருந்தனர். அம்மக்களைத் தாண்டி இருவரும் சென்றோம். இந்நேரத்தில் எதிர்பாத்திருந்தவர்கள் மத்தியில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. உடனே அவர் திரும்பி சிங்களத்தில் "நான் திருக்கோணமலை மாவட்ட மக்களின் பிரதிநிதி, பல்லாயிரம் மக்களின் பிரச்சினைகளைச் சுமந்து செல்கின்றேன். நீங்கள் அனுமதிப்பீர்களா?" என்று கேட்டார். அப்போது அனைவருமே ஏகோபித்த நிலையில் மகிழ்ச்சியோடு "சென்று வாருங்கள்" என்று சொன்னார்கள். இந்த ஒரு நிமிடம் அனுகுமுறை அம்மக்களை ஏற்றுக்கொள்ள வைத்த விதம் என்னை மிகவும் கவர்ந்நது. அண்ணனின் ஆளுமையின் சிறப்பைக் கண்டேன்.

1981க்குப் பின்னர் திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவராக அண்ணன் இருந்த காலத்தில், அவரின் வழிகாட்டல், மூதூர் பிரதேச சபைக்கு நான் தெரிவு செய்யப்பட்டு, பிரதேச சபைத் தலைவராகப் பணி புரிந்தேன்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலையின் போது தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து, பல்வேறு இடங்களுக்கும் சென்றனர். நானும் எனது குடும்பத்தினரும் இந்தியா தமிழ் நாட்டிற்கு இடம் பெயர்ந்தோம். இவ்வேளையில் எங்களை அழைத்து தமது வீட்டில் இருக்குமாறு வசதிகள் செய்து கொடுத்தார். அடிக்கடி இந்தியாவிற்கு தமது கடமையின் நிமித்தம் வந்து சென்றார். இதன் மூலம் அவரது உறவு தொடர்ந்தது. அவரது வழிகாட்டல் எனது வாழ்வில் சிறந்த அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுத்தது. அவரை பின் தொடர்ந்தேன். பல விடயங்களை சாதிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் அவர்களின் எதிர்பாராத மறைவு என்னை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கியது. இப்படியானதொரு தலைவன் இனிமேலும் பிறப்பானா? என வேதனைப்பட்டேன். அவரது நினைவுகள் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் நிலைக்க வேண்டுமென தமிழ்நாடு அண்ணாநகரில் அரசு அனுமதிப்பெற்று ஒரு பூங்காவை அமைத்து, அதன் நடுவே "அண்ணன் தங்கதுரை நினைவு அரங்கம்" ஒன்றினையும் ஏற்படுத்தியுள்ளேன். இது என்றுமே உயிரோட்டமுள்ளதாக, மக்களின் உயிர்ப்பயிற்சிக் கூடமாகவும் பயன்படுகிறது.

அமரத்துவம் அடைந்த அண்ணன் தங்கதுரை அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழ்பேசும் மக்களின் உள்ளங்களிலும் என்றும் நிலைத்துள்ளார். வேலைவாய்ப்பு, மாவட்ட பல்துறை அபிவிருத்தி என்பனவும் அவர் காலத்தில் மேலோங்கியது. தூரநோக்கு செயல்திறன் மிக்க ஆளுமை, சமூகநல்லுறவு பேச்சுத்திறன்வன்மை, அத்தனையும் அவரிடம் நான் கண்டவை. சேவையாளர்கள் மரணிப்பதில்லை சிலைகளாக மக்கள் மனதில் என்றும் பூசிக்கப்படுவார்கள். என்பதற்கேற்ப நிலைத்துள்ளார். வாழ்க அவர் சேவை, வளர்க அவர் புகழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். அ. தங்கத்துரை அவர்களின் மறைவையொட்டி பத்திரிகையில் வெளிவந்தவை...

### மக்கள் நலத்திட்டங்களால் மனதில் நிறைந்து நீங்காதவர்
### அமரர் அருணாசலம் - தங்கத்துரை



### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரையின் அரசியல்காலம் தமிழ் மக்களுக்கான பொற்காலம்





### திருகோணமலை மாவட்ட மக்களின் மனதை விட்டு அகலாத மக்களின் தலைவன் அமரர் தங்கத்துரை



அமுதமொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்ரன் பயர்ஸ் கிறிஸ்தோபர்
(பயர்ஸ் மாஸ்டர்)
தென்னாபிரிக்கா

(அன்ரன் பயர்ஸ் கிறிஸ்தோபர் 07.08.2022 அன்று இயற்கை எய்தினார்)

# Thangathurai Annai

I arrived in Kiliveddy on the 14th of May 1975. I completed my studies at University of Peradeniya first week of April. I was interviewed at Ministry of Education for a science teaching position in April. Received my teaching appointment to Kiliveddy MV towards the first week of May. My first difficulty was to locate the school. Luckily there was a post office in Kiliveddy and post office in Jaffna was able to give the correct directions. First, I must go to Trincomalee and then take a ferry /boat to Mutur. From Mutur by bus to Kiliveddy. I have been to Trincomalee before and with the confidence of Peradeniya graduate I started the journey on the 13th. Luckily for me again there was a student from Kiliveddy (studying at Mahajana, Jaffna) was seated next to me in the bus. His name is Vinayagamoorthy. We got down at Trincomalee. I went to the Education office in Trincomalee to submit the appointment and report. I met the Chief Education officer who told me I will not get graduate salary scale when I graduate, as Kiliveddy MV does not have A/levels. He also indicated that I should be transferred to Mutur Muslim



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MV which has A/level. I told him that I will go to Kiliveddy MV first and talk to the Principal. Then I took the ferry to Mutur with Vinatagamoorthy. It was a remarkable trip across the Trincomalee bay. Boat was swinging wildly in the bay and the journey took almost an hour. At a point I was nauseous and decided to stand in the upper deck, which became my normal practice when I travelled by boat. After reaching Mutur jetty in literally pitch dark, Vinayagamoorthy and myself got into the bus to Kiliveddy. Bus kept on going for nearly an hour with many stops and suddenly came to stop in front of a river. We got down and that was Kiliveddy. We went to the school which was pad locked. Vinayagamoorthy took me to his home and I was given accommodation. His father Kathiravetpillai is a land lord and successful farmer.

On 15th I reported to work and the principal (Mr. Sivakolunthu) assigned me to teach Maths to several classes. On the May 16th or 22nd, the students told me they are on strike the following day. Strike organizer Navaratnarajah from Meenkamam went around the classes informing that they are going on strike. I asked him why there is a strike, then he said "MP has asked us to strike". For me coming from Peradeniya Communist Party student union activism it was horrendous that schools in a constituency go on strike just because a MP tells them to strike. It looked like a Tamil Nadu movie. But I saw the general populace in the constituency was observing the boycott. At the same time I was puzzled about the MP known as Thangathurai who had so much influence over people.

Soon after the strike on a Friday, one youngster in the area came and told me that MP wants to see me. I was irritated again due to my background at Peradeniya. But I decided to go and see him on the Saturday. There was large number of people waiting to see him. I went inside the house. He had a table next to the entrance door and was talking to the people as they came in. I quietly went and sat in the bench next to the wall. He saw me and still carried on with his conversations with people. I was observing what was going on. There were people inquiring about the progress on many issues. People were multiracial, Tamils, Sinhalese and Muslims. They have come from many villages



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

around and far. MP was explaining the progress and what struck me first was the fact that he knew all of them or remembered them. They were there for jobs for their children or development of schools or roads, water to the fields and so on. So many of them. MP listened and answered them patiently. I soon realized this is not an ordinary MP and immediately had respect for him. Process went on until people have left then MP turned behind asked about me. I introduced myself and he was happy to see me, He asked whether I have accommodation and inquired about the school. I answered about the science laboratory and said as a whole I am fine.

He said that he asked for me specifically from the list of candidates given to him by the Ministry of Education. I thanked him and told him about what Chief Education Officer in Trinco said about Graduate scale. He said not to worry and he will sort my graduate scale> once I get my results. We talked about politics and I told him about my scepticism about Tamil politics and politicians. He told me about his Trade union background. When I left his home I knew that I can work with Thangathurai Annai for a long time.

Over the next years I worked closely with Thangathurai Annai. Community centre was established in Kiliveddy with the assistance of Kumarathurai (brother of Thangathurai). It was a place where young and old can come and read. Agricultural land was cleared for students to play football after school. I also visited other schools in the neighbouring villages such as Meenkamam, Kanguveli and LB3. I also started participating in the Thangathuari Annai's political work. We went to Vaddukodai conference where Thangathurai Annai's name was proposed for the Treasurer post. It was remarkable that Youth from Jaffna called Thangathurai Annai as "eastern MGR". It reflected his growing popularity in Eastern province which some of the TULF (then TNA) leaders resented. This conflict came to climax when TULF agreed to the division of Mutur seat which Thangathurai Annai represented into Muslim majority Mutur seat and Sinhalese seat Seruwila. This division meant Mutur Tamils were deprived of representation and specifically Thangathurai will not become a MP. Division of Mutur seat was one of the most damaging decision supported by TULF as it lost the geographical



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

continuity for the Tamil people. When Amirthlaingam was questioned by me in a TULF meeting, he said that Tamils are getting additional seats in Pottuvil. It only showed political bankruptcy of Tamil leadership which was more interested in removing genuine Tamil leaders. Thangathurai Annai was popular among the Tamil masses because he was close to masses, did development work and at the same time fought for Tamil people's rights. He did development work by interacting with civil service (not with politicians) in Colombo and Trincomalee district. He had many friends in civil service due to his previous trade union relationships.

In the meantime, I was transferred to Mutur Muslim Maha vidyalayam within months of my arrival at Kiliveddy. I refused to take the transfer and principal informed the Chief education officer accordingly and I remained at Kiliveddy MMV. My graduate salary was sorted out after nearly one year. I continued to support Thangathurai Annai in his political work. One of the important lessons I learnt from him is the humility towards people. Whenever he came home from parliament> I went to his house to observe how he interacted with people. Even though he had official vehicle, he would visit neighbouring villages seating in the back of bicycles.

Once Mutur seat was divided, it was clear that only way in which Annai could be elected to Parliament is via Tamil majority Trincomalee seat. Youth organizations in Trincomalee started the campaign. I also realised that I should move to Trincomalee to support the campaign. I already had good relationship with students in Trincomalee. So I got a transfer to St.Joseph's college in Trincomalee and worked with youth organizations to elect Annai. However TULF leadership overlooked Thangathurai and selected Sampanthan. Sampanthan was chosen because he was a lawyer and close to TULF leadership. However, this step enraged Tamil youth in Trincomalee who burned effigies of TULF leaders. Thangathurai appealed for calm and restraint. Tamil youth embarked on a campaign to elect Thangathurai as an independent candidate. While this campaign was going on, TULF did a political gimmick to unify the Tamil vote. They brought Ashes of late leader Chelvanayakam's ashes to Trincomalee in a procession through



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sinhalese villages. This provocation created Sinhala Tamil riots in 1977 before elections.

Tamils were not prepared and lost control of bus stand and many road junctions which are strategic points within the city. Furthermore Tamil refugees streamed into Trincomalee town from Tamil villages such as Pankulam. They were looked after and resettled. This pre-election riots served the purpose which was for the Tamils to vote for Sampanthan and win. But the cost for Tamils was huge. Tamils control of strategic positions in and around Trnicomalee town were lost. Thangathurai Annai, however struck to party position and worked for Sampanthan to win the election. I focused on trade union and youth activities which were outside the parameters of TULF. But still I maintained good relationship with Thangathurai Annai.

On April 1978, I was asked by a colleague of Thangathurai Annai to meet him urgently. When I went to his home in Trincomalee there was tension. Thangathurai Annai said that that there are problems in and around Kiliveddy. A well-known Tamil thief called Kanthapodi went to a neighbouring Sinhalese village called Dehiwatte to rob a house. Robbery turned into shooting and the house owner was killed. The incident turned into communal tension. Annai was going to Kiliveddy to calm the situation following day in the morning and he asked me to accompany him. I was waiting for him at Trncomalee jetty and he arrived late for the boat. But the boat waited form him and we left for Mutur. From Mutur we arrived in Kiliveddy. There was lots of tension. A neighboring Tamil village called Kanguveli was burnt down and people streamed into Kiliveddy as refugees. An old lady on the border was brought in with bomb shrapnel wounds. While I was holding her, she passed away. This raised the tension. Annai and I went to the post office to phone Navy. Navy was considered an impartial force.

While we were phoning Navy there were gunshot outside. We made the arrangements with Navy and walked back to Annai's house. It was eerily quiet. By 3 pm the police came fully armed. Police commander asked Thangathurai Annai about his brother Kumarathurai. Annai said that he hasn't seen his brother since his arrival. Police went



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

looking for Kumarathurai and came back with the village chairman who was Kumarathurai's father in law.

Police told Thangathurai that they are going arrest both him and the Chairman until Kumarathurai surrenders. While Thangathurai Annai was being taken away, he asked me to help the people. It was total injustice. Thangathurai was not involved in the incidents and he was trying to calm the situation. In addition he phoned Navy to come. I stayed for couple of weeks and helped the people to settle down. Refugees went back to Kanguvelli. All the Tamil villages were safe and Sinhalese villages were too quiet. I visited Thangathurai Annai in prison couple of times. He was high in his sprits even in the prison.

By 1979, I have moved to Colombo and was getting ready to leave to Africa. On the day before I left, I met Thangathurai Annai. At that time he was running a company. He wished me all the best and there were tears in his eyes. Later from Africa, I communicated with him. He was always helping the people and constantly reminded me to help the people.

My association with Thangathurai Annai lasted 6-7 years. He was a role model for me. I learnt a lot from him which helped me to have confidence in the African liberation struggle. He was always a nonracial treated everybody same. But he cared for his people. He cared for their education, health, employment and general welfare, Today there are many Tamil schools prospered because of his efforts. Students started going to Universities from the villages to become engineers. Doctors, scientists, teachers. Communities from Verugal to Thambalakamam developed, He was forth right and courageous. He did what he thought was correct. He was not a politician but a leader. His loss is a severe loss to the Tamil community. Leader of his caliber would have easily worked with Sinhalese and Muslim leaders. Everybody respected him. He was a simple man and lived for his people.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பி இரா. ஞானகணேசன்
ஈச்சிலம்பற்று

## என்றும் மக்களின் மனதில் மங்காத புகழுடையோன்...

மூதூர் தொகுதி ஒற்றைத் தொகுதியாக இருக்கும் போது முஸ்லிம் மக்களே பெரும்பான்மையாக இருந்தார்கள். தந்தை செல்வா, செயலதிபர் அமிர்தலிங்கம் அவர்களின் முயற்சியினால் மூதூர் இரட்டைத் தொகுதியாகப் பிரிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் தமிழர்கள் இரண்டாம் பெரும்பான்மையாகவும் அன்றைய காலகட்டத்தில் சிங்களவர்கள் மிகவும் குறைவாக இருந்த காரணத்தினால் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகினர். முஸ்லிம்களால் தெரிவாக்கப்பட்ட முகமது அலி அவர்களை விட 5 வாக்குகள் மேலதிக வாக்குகளால் திரு.தம்பையா ஏகாம்பரம் அவர்கள் முதல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலகட்டத்தில் தமிழர்களின் ஒற்றுமை ஒருமித்து இருந்த படியால் இவருக்கு இந்த இடம் கிடைத்தது. (வெற்றி கிடைத்தது). அன்று ஏதோ சில அரசியல் காரணங்களால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் வாக்களிப்பு இடம்பெற்றபோது திரு.அப்துல் மஜித் முதலாம் இடமும் திரு.ஏகாம்பரம் அவர்களுக்கு இரண்டாம் இடமும் கிடைக்கப்பெற்றன. திரு ஏகாம்பரம் அவர்கள் 1960ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் கச்சேரி மறுப்பில் பாடுபட்ட காரணத்தால் தாக்கப்பட்டு மரணமடைந்தார் (திரு.ஏகாம்பரம் அவர்கள்).

இவரின் வெற்றிக்காக கட்டைபறிச்சான் திரு.சுப்பிரமணியம் குணநாயகம் அவர்களும் மல்லிகைத்தீவு கிராமசபைத் தலைவர் பூபாலப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்களும் மூதூர் பட்டினசபை அருளப்பு ஜோர்ஜ்வாசன் அவர்களும் முன் நின்று தேர்தலில் செயற்பட்டார்கள். அப்போது நான் பாடசாலை மாணவனாக இருந்தேன்.

சில காலங்களின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற போது வரும் காலத்தில் வயது கூடியவர்களை நிறுத்தக் கூடாது என்ற காரணத்தினால் ஆசிரிய மணிகளான மல்லிகைத்தீவைச் சேர்ந்த திரு. முத்துகுமார் கனகசபை அவர்களும் ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த இராஜேந்திரம் ஆகிய இருவருக்கும் வயதாகிய காரணத்தினால் கிளிவெட்டியைச் சோர்ந்த இளைஞரான திரு.தங்கத்துரை அவர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அக்காலத்தில் ஈச்சிலம்பற்றுக் கிராமசபைத் தலைவராக இருந்த காரணத்தாலும் அவருடன் இணைந்து தேர்தல் வேலைகளில் இரவு பகலாக செயற்பட்டேன். அவரை எதிர்த்த தமிழரில் ஒரு சிலர் பின்பு ஒட்டி உறவாடி பல நன்மைகளைப் பெற்றார்கள். இருந்தும் என்னைப் பொறுத்தமட்டில் அன்று தொடக்கம் 'தம்பி' என்ற வார்த்தையுடன் என்னை நேசித்து, அண்ணன் இறக்கும் வரை அவருடன் வாழ்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிக் கூட்டமாக இருந்தாலும் சரி, கிராமங்களாக இருந்தாலும் சரி, ஒன்றாக எமது பயணம் தொடரும். சிறிது காலம் அவருடைய பிரத்தியேக செயலாளராக இருந்த போது இ.போ.சபை பஸ்ஸில் மற்றும் புகையிரத சேவைகளில் எனக்கு இலவசமாகப் பயணம் செய்யும் சலுகையும் கிடைத்தது.

அதேபோல் அக்காலத்தில் இலங்கையின் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சிங்கள, முஸ்லிம் தலைவர்களை அறிமுகப்படுத்தியமையும் அண்ணன் திரு.தங்கத்துரை அவர்களைச் சாரும். அந்த வகையில் S.D.பண்டாரநாயக்கா S.A கறமித் திரு.தம்பிராசா அண்ணன் போன்றோர் முக்கிய மாணவர்கள்.

1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திரு. தங்கத்துரை அண்ணன் போட்டியிட மறுத்த காரணத்தால் மூதூர் பகுதியில் இருந்து போட்டியிட இருவர் தேவைப்பட்ட போது சிலருடன் போட்டி போட விரும்பாத காரணத்தால் திரு. யோகேஸ்வரன் அண்ணன் அவர்களும் திரு.தங்கத்துரை அண்ணன் அவர்களின் தூண்டுகோளின் அடிப்படையில் போட்டியிட்டு நான் தோற்கடிக்கப்பட்டேன்.

அதன் பின்னரும் அண்ணனுக்கும் எனக்கும் உள்ள உறவு நெருக்கமாக வளர்ந்து கொண்டுவந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிலர் எடுத்த தவறான முடிவினால் நான் நாட்டை விட்டு வெளியேறி இந்தியா சென்ற போது அண்ணனின் உதவியுடன் ஓரிரு வருடங்கள் அவருடன் வாழ்ந்தேன்.

அவர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்று பிரித்துப் பார்க்காமல் எல்லோருடனும் அன்பாகவும் வேறுபாடு காட்டாமலும் வாழ்ந்தார். அண்ணன் என்னுடன் பழகிய காலம் தொடக்கம் இறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையில் அதே அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டவர் என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

அண்ணனின் இழப்பானது திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் மாபெரும் இழப்பாகும் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

"வாழ்க அவர் நாமம்...
அண்ணனின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காப்பியக் கதிரோன்
முகம்மது முகைதீன் அனஸ்
பெரியபாலம்,
மூதூர் 05

## அமரர்.தங்கத்துரை பற்றிய என் மனப்பதிவுகள்...

திருக்கோணமலை மாவட்ட அரசியலில் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் 'தங்கத்துரை' எனும் நாமம் மீட்டப்பட்டுக்கொண்டே இருக்கும். உலகில் அவர் வாழ்ந்த காலம் உன்னத வாழ்வு வாழ்ந்ததால் 'மாமனிதர்' என்ற மகுடத்தை தாங்கியவராக தரிசனம் தந்து கொண்டிருக்கிறார்.

பணத்திற்கு பக்கவாத்தியம் இசைக்கும் இந்நாட்டு அரசியலில் அவர் என்றும் உண்மை, யதார்த்தம், இலட்சியம் என்ற தன்மைகளின் தடயங்களிலேயே வாழ்ந்தார். குறிப்பாக திருக்கோணமலை மாவட்டத்தில் வாழ்ந்த ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உள்ளமெல்லாம் நிறைந்த உன்னத தலைவராகத் திகழ்ந்தார்.

அவருடைய அரசியல் வரலாற்றில் பொய், ஏமாற்று என்ற வார்த்தைகள் அறியாதவராகவே அவர் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.அ.தங்கத்துரை அவர்களிடம் அரசியல் ஞானமும், தீர்க்கதரிசனமும், தூரப்பார்வையும் அணிகலன்களாகத் திகழ்ந்திருந்தன. முஸ்லிம் சமூகத்தவர்களின் மாண்பிற்குரிய தமிழ்த் தலைவரான அமரர்.அ.தங்கத்துரை அவர்களுடைய உயரிய இடத்தை இதுவரை திருக்கோணமலை மாவட்டத்தில் வேறு எந்த தமிழ் தலைவரும் பெற்றிருக்கவில்லை. பெறப்போவதும் இல்லை.

கடந்த 1994ல் பொதுத் தேர்தலில் அமரர்.தங்கதுரை அவர்கள் இரா.சம்பந்தன் அவர்களைத் தலைமை வேட்பாளராகக் கொண்டு தமிழ் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டனர். அத்தேர்தலில் நான் திருக்கோணமலை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரு கட்சிகளிலும் இணைந்திருந்த வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டேன். (ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர் நஜீப்.ஏ.மஜீத்) இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை வேட்பாளராக நானே இருந்தேன்.

அன்று திருக்கோணமலை கச்சேரியில் கண்டு, சந்தோசம் மிகைத்தவராகவும், என்னை அரசியலில் தட்டிக் கொடுக்கும் வகையிலும் திரு.அ.தங்கதுரைஅவர்கள் என்னிடம் கூறினார். "தம்பி அனஸ் எனக்கு கிடைக்காத சந்தர்ப்பம் உனக்கு கிடைத்ததையிட்டு மிகவும் சந்தோசப்படுகின்றேன். இத்தேர்தலில் (1994) ஒரு தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளராக நீ நியமிக்கப்பட்டுள்ளமை ஓர் உன்னதமான விடயமாகும்" எனக்கூறினார். இவ்விடயம் இன்றும் என் இதயத்தில் பசுமை நினைவுகளாக உள்ளது.

இத்தகைய ஓர் உயரிய மாமனிதனைப்பற்றி ஓர் காவிய நூல் எழுதியதன் காரணமாக என் இலக்கியப்பணி மகிமையுற்றதாக பெருமையடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணேசன் சுப்பிரமணியம்
டென்மார்க்

## மக்களால் போற்றப்படும் மக்கள் சேவகன்

அமரர் திரு.அ.தங்கத்துரை அவர்களின் 25வது வருட தினத்தையொட்டி சிலை திறப்பு, நினைவு மலர் வெளியிடுவதையிட்டு சந்தோசமும் வாழ்த்துக்களும்!

இவர் மக்களாலே போற்றப்படும் ஒரு சேவகன். எல்லா மக்களுடனும் பெருமை பாராட்டாது சரி சமமாகப் பழகும் சுபாவமுடையவர்.

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள சகல ஊர்களுக்கும் சேவை செய்த நல்ல உள்ளம் படைத்தவர். அவர் எத்தனையோ பேரின் எதிர்காலத்தை விடிவெள்ளியாக்கியவர். அவரின் எளிமையான செயல் வடிவத்தை நினைத்து இன்றும் மனது புல்லரித்து நிற்கின்றது. அவர் பல சேவைகள் செய்தாலும் மூன்று விடயங்கள் மட்டுமே எம் நினைவிலே நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அவர் முதன் முதலில் தமிழரசு கட்சியில் வேட்பாளராக களமிறங்கிய நேரத்தில் அப்போது பின்தங்கிய கிராமங்களான ஈச்சிலம்பற்று, இலங்கைத்துறை முகத்துவாரம் போன்ற கிராமங்களுக்கு சென்றபோது மக்கள் இவருக்கு காட்டிய மரியாதை இன்னும் என் கண்முன்னே நிற்கின்றது.

   அப்போது இலங்கைத்துறை முகத்துவார கிராமத்தலைவர் விருந்து கொடுத்து அந்த இடங்களை சுற்றிக் காட்டுவதற்கு சென்ற பொழுது அங்கு உள்ள சிறு மலைக் குன்றில் புராதான அம்மன் கோவில் இருப்பதைக் காட்டினார். அதனை பாதுகாத்து நல்ல முறையில் புனரமைக்க வேண்டும் என்பது அவரது அவா.

   பின்னர் ஏற்பட்ட தடங்கலால் இடையில் வந்த காலன் செய்த சதியால் மௌனமாகிவிட்டது. இன்று அது இன்னுமோர் இனத்துக்கு சொந்தமாகிவிட்டது எமக்கு கிடைத்த சாபக்கேடு. இன்று இலங்கைத்துறை முகத்துவாரம், 'லங்காபட்டினமாக' மாறிவிட்டது வேதனைக்குரியதே!

2. கிளிவெட்டி மண்ணில், கிளிவெட்டி - மல்லிகைத்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் உருவாக்க காரணமாய் இருந்தவர். அப்பொழுது மூதூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் திரு. அப்துல் மஜீத் அவர்கள் தகவல் ஒலிபரப்பு உதவி அமைச்சரக இருந்தவர்.

   இருவருக்கும் இடையிலே அபிவிருத்தியில் கடும் போட்டி நிலவியகாலம் அது. திரு.தங்கத்துரை எம்.பி அவர்களின் திறமையினால் எத்தனையோ தடங்கல்கள் வந்தபொழுதும் அதை வெற்றிகரமாக முறியடித்துக் காட்டியவர். அதற்கு உதாரணம் கிளிவெட்டி - மல்லிகைத்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கமே. அவர் இருந்த காலத்தில் நீதிமன்றம், நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப்படுத்தும் களஞ்சியம், கிராமசபை, விவசாய அபிவிருத்திக் கட்டடம், இலங்கை வங்கி, கிராமிய வங்கி போன்றன உருவானது. அத்துடன் கிளிவெட்டிப் பாடசாலை மகாவித்தியாலயமானதும் இவரின் காலத்திலேதான்.

3. அமரர் திரு.தங்கத்துரை அவர்கள் 1996ம் ஆண்டு டென்மார்க் நாட்டிற்கு வருகை தந்த பொழுது, டென்மார்க்கின் இரண்டாவது பெரிய water pump தொழிற்சாலையான Grundfoswக்கு விசேட அனுமதி பெற்று பார்வையிட சென்றார். (வெளி நாடுகளில் பல Grundfos தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பல ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.)



**தொழிற்சாலை பற்றிய கருத்தருங்களில் அமரர்.அ.தங்கத்துரை அவர்களுக்கு அங்குள்ள அதிகாரியினால் விளக்கமளிக்கப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மோட்டார் இயந்திரத்தின் மாதிரி

இதை ஒழுங்கு செய்தவர் திரு. மனோ சுந்தரலிங்கம் அவர்கள். (இவர் இங்கு Architectfhf பணியாற்றியவர்) தொழிற்சாலை பற்றிய கருத்தரங்கு அங்கு உள்ள அதிகாரியினால் நடைபெற்று தொழிற்சாலை முழுவதும் சுற்றிக் காட்டப்பட்டு, மதிய போசனமும் வழங்கப்பட்டது.

திருக்கோணமலையில் ஒரு Grundfos தொழிற்சாலை உருவாக்க வேண்டும் என்பது அவரது அவா. அனால் அடுத்த வருடமே காலன் அவரை பறித்துவிட்டான்.

இப்படியான நல்ல செயற்பாடுகள் அவரிடம் இருந்து கொண்டே இருந்தது. அவரின் இழப்பு தமிழ் இனத்துக்கு பேரிழப்பாகும்.




அமரர்.அ.தங்கத்துரை அவர்கள் சென்ற grundfos தொழிற்சாலையின் முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.விஜயன்
தலைவர்
கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்

# கிளிவெட்டி கிராமத்தின் விடிவெள்ளி எங்கள் தங்கத்துரை எம்.பி

'ஊருக்கு என்ன செய்தார்கள்' என்று மக்கள் கேட்கும் காலத்தில் ஊருக்கு நல்ல பல திட்டங்களை அமுல்படுத்தி மக்கள் மனங்களில் இடம்பிடித்து வாழ்ந்த தலைமைப் பண்பாளர். எளிமையின் பிறப்பிடம். நினைத்த நேரத்தில் எந்த மனிதர்களாயினும் அவரை சந்திக்கமுடியும். சட்டக்கல்லூரியில் படித்தவர், 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்' என்ற கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டவர். யாருக்காகவும் வளைந்து கொடுக்காதவர், கொள்கை வீரன் நேர்மையாக வாழ்ந்த மாமனிதர்.

ஒருவரைபற்றி இன்னொருவர் சொல்வதை கேட்பதை விட நேரில் அவரை சந்தித்த சந்தர்ப்பங்களின் எனது அனுபவ வெளிப்பாடே மேற்கூறியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், சட்டம், மனிதாபிமானம், இறை சிந்தனை, தேசபக்தி, நேர்மை இவை அனைத்தும் ஒருங்கிணைந்த ஒரு மனிதரைப் பார்க்க முடியுமா? என்றால், அது 'இல்லை' என்றே எனது அனுபவத்தில் கூறுவேன்.

நான் கடந்த நாற்பது வருட காலமாக ஐரோப்பிய நாடுகளில் வசித்துள்ளேன். இங்கு வேலை செய்துள்ளேன். பல மனிதர்களைச் சந்தித்துள்ளேன். அவர்களைப் பார்த்து வியந்துள்ளேன். அதற்கு கொஞ்சமும் குறைவில்லாத ஒரு மனிதரை எமது கிராமும் பெற்றதை நினைத்துப் பேருவகை கொண்ட நாட்கள் உண்டு. குறைகளை மட்டும் பார்த்து தீர்ப்புச் சொல்லும் மோசமான கலாச்சாரத்தில் இருந்து மனிதகுலம் விடுபட்டால் மட்டும்தான் மனிதநேயமுள்ள நல்ல சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

அதனை நமது வாழ்நாள் பணியென எடுத்து இயங்கும்பலர் இன்றும் வாழ்கின்றனர். இந்த தாரக மந்திரத்தினூடாகத்தான் கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம் இயங்கி வருகின்றது. அதற்கு வித்திட்டவர்களில் ஒருவர் அமரர் தங்கத்துரை எம்.பி ஆவார். அவரின் வழி வந்தவர்களே அனைத்தையும் சமூக அக்கறையுடன் இன்றுவரை பலவித வேலைப்பளுவின் நடுவிலும் செய்து வருகின்றனர். விதைகள் விருட்சமாக உயர உழைத்து வழிகாட்டிய அன்னாரின் ஆன்மா சாந்திபெற வேண்டி அவரின் நினைவுகளுடன் கரைந்த நல்ல நேரத்தை நிறைவு செய்கின்றேன்.

நன்றி வணக்கம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவமணிதேவி
லண்டன்

## உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்

"மலையில் தோன்றும் நதி ஒன்று கடலைச் சேருமே,
கடலைச்சேர முன்னமே அது மலையை நீங்குமே,
பள்ளம் பாயும், காட்டைக் கடக்குமே,
சமதரையில் நிதானம் பேணுமே,
சரிந்த வளைவில் ஆழம் காணுமே,
வயல்கள் தோறும் வளம் காணுமே,
தேசத் தேகம் எங்கும் நீரின் ஆரம் சூடுமே,
ஆனபின்பே ஆழி சேருமே
அமைதிகாணுமே."

இதுவே ஒரு நதியின் வாழ்க்கை வட்டம்.

அதே போன்றுதான் மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறுபட்ட பாத்திரங்களில் பிரகாசிக்கிறார்கள். தாய் தந்தைக்கு மகனாக, மக்களுக்கு தலைவனாக, தந்தையாக, தமையனாக, தம்பியாக, அன்புடை நெஞ்சத்தார்க்கு மாமனாக, மைத்துனனாக, மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்த வாழ்க்கைத் துணையாக, தூரநோக்குள்ள சிந்தனையாளனாக, செயல் வீரனாக, சிறப்புடை அரசியல் பங்காளனாக என்று பரந்துபட்ட பாத்திரங்களை ஏற்கிறார்கள்.

அதன்படி நடக்க முனைகிறார்கள். ஆனாலும் அதில் சில பாத்திரங்களிலேதான் பலராலும் பிரகாசிக்க முடிகிறது. ஆனால் முடிந்த வரை முழுப்பாத்திரத்தையும் அழகுற செய்வதே ஆளுமை எனப்படுகிறது. அந்தவகையில் அத்தனை பொறுப்புகளிலும் மற்றவர் இன்புற நடந்து, இயலுமை தாண்டி ஒளிபெறச்செய்தவர் எங்கள் "அண்ணாச்சி". அதனாலேயே இத்தனை பொறுப்புகளிலும் என்னைக் கவர்ந்தது "அண்ணாச்சி" என்கின்ற என் அன்புச் சோதரனாக அவர் ஆற்றுப்படுத்திய வழித்தடமே.

கூடப்பிறந்த பெண் சகோதரங்கள் இன்மையால் ஆரம்பம் முதலே எங்களை தன் சகோதரிகளாகவே வரித்துக்கொண்டார். எங்கள் மீது அளவற்ற பாசத்தையும், அக்கறையையும் வைத்திருந்தார். எங்கள் சுகதுக்கங்களிலும், நல்லதுகெட்டதுகளிலும் அன்போடும், அக்கறையோடும் உடனிருந்து வழிநடத்தினார். ஆரம்பம் முதலே படிப்பு, வேலை, அரசியல் என்கின்ற பெருந்தொடர்பால் ஊரைவிட்டுத் தூரமான போதும் ஊர்வந்து சேரும் ஒவ்வொரு முறையும் எங்கள் நலனில் அக்கறையோடு நடந்துகொண்டார். அந்தக் காலத்தில் அன்பையும், அக்கறையையும் அவர் காட்டத் தவறுவதேயில்லை. தன் வாழ்நாளில் உறவுகளுக்கு அவர் மிக முக்கிய இடம் கொடுத்தார். அதனாலேயே அவரை 'தங்கத்துரை எம்.பி' என்று அழைத்தவர்களை விட 'தங்கத்துரை அண்ணா', 'தங்கத்துரை மாமா', 'தங்கத்துரை மச்சான்' என்று அழைத்தவர்களே அதிகம். உறவின் மூலமே அவர் ஊரை உயர்த்தினார். பேரை வாங்கினார். அப்படிப்பட்ட என் அண்ணாச்சியோடு சேர்ந்து கூடி வாழ்வதற்கு எனக்கு இரண்டு, மூன்று சந்தர்ப்பங்களே கிடைத்தன. அதை இன்று உங்களோடு பகிர்ந்து என் மனதை ஆற்றிக்கொள்கிறேன்.

1957ஆம் ஆண்டு எங்கள் ஊரில் மிகப்பெரிய வெள்ளம் ஒன்று ஏற்பட்டது. எங்கள் வளவினுள்ளயே 2 1/2அடிக்குத் தண்ணீர் நிறைந்துவிட்டது. அப்போது அருணாசலம் பெரியப்பாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளுக்கு இணங்க அவர்களின் வீட்டில் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஒன்றாகச் சேர்ந்து வாழும் பாக்கியம் எங்களுக்கு அமைந்தது.

அதன் பின்னர் 1985ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் இந்தியாவந்து தமிழ்நாட்டில் அண்ணாச்சி குடும்பத்தாரோடு மீண்டும் சேர்ந்துவாழும் பாக்கியம் பெற்றேன். அங்கிருந்த ஓராண்டுகளில் அண்ணாச்சியும், மச்சாளும், அவர்களின் பிள்ளைகளும் காட்டிய வாஞ்சையும், அன்பும் என் வாழ்நாளில் மறக்க முடியாத நினைவுகள். கிஞ்சித்துக்கூட மனக்கசப்பு வந்துவிடாதபடி எங்களை தாங்கிக்கொண்டார்கள், ஏந்திக்கொண்டார்கள் என்றே சொல்லமுடியும். அன்பு, பாசம், அளவற்ற அக்கறையை எங்கள் மீது காட்டினார்கள். தன் உறவுகளுக்காக இப்படி மலர் போல் விரிந்த உள்ளத்தை நான் வேறெங்கும் கண்டதில்லை.

அதன் பின்னர், பல்வேறு சிரமங்களைத் தாண்டி எங்களை 1987 இல் நோர்வேக்கு அனுப்பிவைத்தார். அப்படி அனுப்பும் போது என்னிடம் "டிலோஜினிக்கு எப்படியாவது தமிழை கற்றுக்கொடுத்துவிடு" என்று வேண்டிக்கொண்டார். அந்த வேண்டுகோளை என் தலையாய கடமையாக ஏற்று நானும் அதை நிறைவேற்றி வைத்தேன். அதை அவர் தன் கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும் இன்புற இறைவன் 1996ம் ஆண்டு ஒரு சந்தர்பத்தை ஏற்படுத்தினான்.



1996ம் ஆண்டு அண்ணாச்சி Norway வந்து எங்களோடு நான்கு நாட்கள் தங்கியிருந்தார். அப்போது டிலோவின் தமிழ் மொழி அறிவைக்கண்டு என்னை பாராட்டினார். அதை என் மிகப்பெரிய வாழ்நாள் விருதாக இன்றுவரை நான் நினைத்துக்கொள்வேன். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருப்பதை அறிந்த மேற்கு நோர்வேயின் sunnmørs posten பத்திரிகை ஆசிரியர் ஒருவர் வந்து அண்ணாச்சியை பேட்டி கண்டார். பேட்டி முடிந்ததும் அவரை புகைப்படம் எடுக்க விரும்புவதாக பத்திரிகை ஆசிரியர் தெரிவித்ததும் உடனே என்னை அழைத்து இவள் என் சகோதரி, இவர் என் சகோதரன் ஆகவே இவர்கள் கூட சேர்ந்தே நான் புகைப்படம் எடுப்பேன் என தெரிவித்தார். பத்திரிகை ஆசிரியரும் அதை ஏற்றுக்கொண்டார். இதுவே எங்கள் இறுதி சந்திப்பு என்பதை இயற்கை அவருக்கு உணர்த்தியதோ என்னவோ, என்னை தன்னருகே இருக்கும்படி வாஞ்சையோடு கேட்டார்.


7012 0000

Møtte familien i Sto

அவ்வாறே பத்திரிகை ஆசிரியரையும் போட்டோ எடுக்கும்படி கூறினார். அடுத்த நாளே அந்த பத்திரிகையில் அவரின் பேட்டியும் எங்கள் புகைப்படமும் வந்தது.

இவ்வாறு வாழும் காலம் முழுதும் எங்களோடு எவ்வளவு பாசத்தோடு இருந்தாரோ அதே போன்று அத்தனை உறவுகள் மேலும் பாசத்தோடும் அக்கறையோடும் இருந்தார். ஒவ்வொரு உறவினரின் தனிப்பட்ட நலனிலும் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தினார், ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் வழங்கினார், ஆதரவு தந்தார். இது உறவுக்கென்றுவிரிந்த நெஞ்சம், பாசத்தில் பரிணமித்த தெய்வம்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Saro Sris
Scarborough
Canada.

## மனதில் பதிந்த நினைவுகள்

**நான் அறிந்த அண்ணர்...**

7 வருடங்கள் சென்னையில் அவரின் குடும்பத்துடன் ஒருவராக வாழும் போது தந்தைக்கு ஒப்பாக அண்ணரும் கூடப்பிறந்தவர்களாக அவர் பெற்ற செல்வங்களும் என்னை அரவணைத்துக் கொண்டனர், அது ஒரு கனாக்காலம்.

ஒரு நாள் வீதியில் 'சப்போட்டா' விற்றுக்கொண்டு சென்ற ஒரு பெண்ணை அழைத்து நானும், பெரியம்மாவும் பேரம் பேச முற்பட்டபோது, அண்ணர் அந்தப்பெண் கேட்ட பணத்திற்கு மேலே கொடுத்து சுமையைத் தூக்கவும் உதவி செய்தார். சென்னையில் இருக்கும்போது யார் வந்து என்ன உதவி கேட்டாலும் தன்னால் முடிந்த அளவு உதவி செய்தார். அவரையண்டி வாழ்ந்தவர்கள், அவரின் பெயரைச் சொல்லி வாழ்ந்தவர்கள், அவரால் வாழ்ந்தவர்கள் என்று அடுக்கிக்கொண்டே செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மற்றவர்களிடம் இருக்கும் திறமையை புகழ்ந்து கூறுவார், திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் சமனான புலமை பெற்றவர் என்று அவரின் சிறப்பைக் கூறுவார். அடிக்கடி சின்ன ஆங்கில சொல்லைக்கூறி அதன் தமிழ் கருத்தையும் கூறுவார். பிள்ளைகளின் மீது அளவற்ற பாசமும் அதேநேரம் கண்டிப்பும் உள்ளவர். அண்ணரின் இதழ்க்கடையோரம் ஒரு சிறு புன்முறுவல் எப்போதும் தவழ்ந்து கொண்டிருக்கும், சந்தர்ப்பத்திற்கேற்ப கேலியாகவும் மாறும். ஒருநாள் கையில் தண்ணீர்க்கோப்பையுடன் மேசைக்கருகில் நின்று கொண்டு, எல்லோரிடமும் பொதுவாக நாங்கள் எல்லோரும் எவ்வாறு தண்ணீர் குடிப்போம் என்று கேட்டார். கையில் கோப்பையை வாங்கிக்கொண்டு நிமிர்ந்த போதுதான் தெரிந்தது சுவரின் மூலையிலிருந்த ஒட்டடை- அவரின் இதழ்க்கடையில் கேலிப்புன்னகை.

ஒருநாள் எல்லோரும் வீதியில் நடந்து சென்றபோது வழியில் எதிர்ப்பட்ட ஒரு ஆயா வேலை செய்யும் பெண் அண்ணரைப்பார்த்து, "டைம் என்ன சார்?" என்று கேட்டார். இவரும் அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு "ஐந்து மணி!" என்று அழகாக கூறினார். அந்தப்பெண் இவரைத் திரும்பிப்பார்த்து, "இன்னா சார், பைவ் ஓ குளக் என்று சொல்லமாட்டியா?" என்று சொன்னபோது.

அண்ணர் பகலில் படுத்துறங்கியதை நான் பார்த்ததேயில்லை, எப்பொழுதும் ஒரு புத்தகம் அவர் கையிலிருக்கும். அவர் அமெரிக்காவிலிருந்து வரும்போது பெட்டி நிறைய புத்தகங்கள் கொண்டு வந்ததாக அறிந்தேன். வயதான காலத்தை இலங்கைத்துறைமுகத்தில் தனது நூல்களுடன் கழிக்கவேண்டும் என்பது அவருடைய அவா. வீட்டிலும் ஒரு சிறிய நூலகம் மாதிரி வைத்திருந்தார். காலனால் கூட அவரை புத்தகத்திடமிருந்து பிரிக்க முடியவில்லை, சரசுவதித்தாயின் மடியில் தானே உயிர் நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புடன்
வை.சு.சிறி
சுவிற்சலாந்து

## எமது மண்ணில் மணம் வீசும் மனிதர்
## அமரர் அ. தங்கத்துரை அவர்கள்..

அமரர் திரு. அருணாச்சலம் தங்கத்துரை அவர்கள் வீரம் செறிந்து விளைவு கொளித்து பெருமை கொள்ளும் கிளிவெட்டியின் மூத்தகுடி பரம்பரையில் கிளிவெட்டி பெற்றெடுத்த தங்கமகன் திரு.தங்கத்துரை துருவ நட்சத்திரம்.

எல்லோரையும் பிடிக்கும் என்பது சுபாவம், எல்லோருக்கும் பிடித்தவராய் இருப்பது வரம். அந்த வரம் வாங்கிக் கொண்டவர் கிளிவெட்டி அமரர் அருணாச்சலம் யோகம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனாய் பிறந்திட்ட எங்கள் ஐயா தங்கமகன் திரு.தங்கத்துரை அவர்கள். இவருக்கு பாக்கியதுரை (வைத்தியர்), என்பவர் அண்ணணாகவும், பிந்திய சகோதரர் முத்துக்குமாரபிள்ளை (குமாரதுரை) தம்பியாகவும் இரண்டு ஆண் சகோதரர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 17.01.1936 கிளிவெட்டியில் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை தனது செந்த ஊரான கிளிவெட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றார். புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்று பின்னர் மட்டக்களப்பு வந்தாறுமூலை மகாவித்தியாலயத்தில் ஆங்கிலக்கல்வி மூலமும், பின்னர் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றார். பாடசாலைக் காலங்களில் பாடசாலை நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகளில் சிறந்த விளையாட்டு வீரராகவும் இருந்திருக்கின்றார் என அறிந்துள்ளோம். பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் எழுதுனராக நியமனம் பெற்று சோமபுரம், இரத்தினபுரி, கொழும்பு முதலான இடங்களில் பணிபுரிந்துள்ளார்.

திருக்கோணமலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதிகளின் மகளான சத்தியேஸ்வரி என்னும் பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள் இவர்கள் இல்வாழ்க்கையில் நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். முறையே முத்த பெண்பிள்ளையாக புஸ்பாஞ்சலி, தர்மினி, அகிலன் அடுத்த பெண்பிள்ளை சிறுவயதிலையே இறந்து விட்டது.

திரு.தங்கத்துரை அவர்களை அரசியலுக்கு வரவழைத்து முன்னிறுத்துவதற்கு வித்திட்டவர்கள் திரு.பூ. வினாயகமூர்த்தி சேமனார், எனது தந்தை திரு. சுந்தரலிங்கம் post master. அதன் பின்னரே பலருடனும் கலந்து ஆலோசித்து திரு.தங்கத்துரை அவர்களிடம் இந்த விடயம் எடுத்துக் கூறப்பட்டதாக அறிந்தேன். திரு. தங்கத்துரை அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக மூதூர் தொகுதியில் போட்டியிடுவதற்கு சிலரது ஊக்குவிப்புக்களும் நடந்தது.

1970ம் ஆண்டு போட்டியிடுவதற்கு தன்னம்பிக்கையும் சுய உரிமையும் எடுத்து என் தந்தையிடம் (post master) சில பொறுப்புக்கள் கொடுத்திருந்தார் என் மாமா தங்கத்துரை அவர்கள். அதில் ஒன்றுதான் முதல் அறிமுகப் பிரச்சாரம். கூடுதலாக பிற்பட்ட கிராமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்துரை மாமாவின் அறிமுகம் குறைவு அதற்கு எடுத்துக்காட்டாக ஒருசில இடங்களை நினைவு படுத்துகின்றேன்.

ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை, மாவடிச்சேனை, முகத்துவாரம் வெருகல், சோமபுர போன்ற இடங்கள் இந்த இடங்களில் இருக்கும் பெரிய மனிதர்களைச் சந்தித்து அறிமுகப்பிரச்சாரம் செய்யும்படி இந்தப் பொறுப்பை அப்பாவிடம் ஒப்படைத்திருந்தார் எனது தந்தை post master என்பதும் எனது தாயார் 'இராசையாப் போடியார் மகள்' என்றால் எல்லோருக்கும் இலகுவாகப் புரிந்து விடும் என்ற நம்பிக்கையில் பிரச்சாரப் பீரேங்கிகள் என் தாய், தந்தை இருவரும் சனி, ஞாயிறு விடுமுறையில் மிதிவண்டியில் செல்ல நினைத்தனர். காரணம் அப்போது போதிய அளவு போக்குவரத்துக்கள் நம்மூரில் இல்லை. எண்ணங்களில் வசந்தம் வீச இருவரும் சைக்கிலில் சென்ற காட்சி இன்னும் நினைவிருக்கின்றது. அம்மா தன்னுடைய உடையலங்காரத்தோடு கொண்டை போட்டுக் கொண்டு எங்கள் வீட்டு முற்றத்தில் பூத்திருந்த பூவை கொண்டையில் வைத்துக்கொண்டு, அப்பா எப்போதும் தனது வழமையான வெள்ளை உடையுடன் மிதிவண்டியில் ஏற்றிக்கொண்டு சவாரி செய்த ஞாபகம் இன்னும் என் மனத்திரையில் நிழலாடுகின்றது.

இது மட்டும் அல்லாது ஆலங்கேணி, தம்பலகாமம் செல்வார்கள். சென்றால் இரண்டு நாட்கள் கழித்து தான் வீடு வருவார்கள். என் அம்மாவிடமும் அந்த நிகழ்ந்த சம்பவங்கள் இன்னும் நினைவில் இருக்கின்றது.

கிளிவெட்டியும் அதனைச்சுற்றியுள்ள தமிழ் கிராம இளைஞர்களும் திரு.குமாரதுரை அவர்களின் வழிநடத்தல் ஒற்றுமையுடன் பிரச்சார வேலைகளில் பங்களிப்பு செய்தார்கள். அத்துடன் மட்டுமல்லாது தேர்தல் தினத்தினத்துக்கு முந்தியநாளே எமது கிராமத்து இளைஞர்கள் அயல் கிராமத்து இளைஞர்களும் மாட்டுவண்டில்கள் எடுத்துக்கொண்டு தூர இடங்களான ஈச்சிலம்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசம் முகத்துவாரம், வெருகல் போன்ற தமிழ் பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களை அழைத்துவரும் முயற்சியிலும் மிகவும் மும்முரமாகவும் அவர்கள் பணியினைச் செய்து முடித்தார்கள். நானும் முதல் வாக்களித்து, தகுதியானதும் என்மாமாவுக்கே. இது என் முதல் அனுபவம் அதுவே என் இறுதிவாய்ப்பும்.

1970ஆம் ஆண்டு அரச சேவையில் இருந்து ஒய்வு பெற்று இரட்டை அங்கத்தவர் தொகுதியாக அப்போது இருந்த மூதூர் தொகுதியில் இலங்கை தமிழசுக்கட்சி வேட்பாளராக போட்டியிட்டு மூதூர் மக்களால் வெற்றிவாகை சூடி நாடாளுமன்ற உறுப்பினராக தொரிவானார். அப்போது திரு.தங்கத்துரை அவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபமுன்னணி தலைவராகவும் அக்கட்சியின் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

அரசியல் தலைவன் தன்னை மறந்து, பசியைத் துண்டித்து, தூக்கத்தை மறந்து, மக்களுக்காய் சேவை செய்ய வந்தவர் என்றால் எங்கள் ஐயா தங்கத்துரை அவர்கள் தான். விருந்தோம்பும் பண்புடன், நல்ல பண்கலை உணர்வுடையவர். நெஞ்சில் உறுதி, நேர்மை, தைரியம், அன்பு, கனிவு, கண்டிப்பு, இன மத மொழிக்கப்பால் பழகும் நற்பண்புகள் கொண்டவர். உறவு சார்ந்து ஓர் உணர்வுடன் பழகுபவர்.

இவர் மூதூர் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது எமது ஊரில் மின்சாரம் இல்லை. தொலைபேசி வசதிகள் இல்லை. ஒரே ஒரு தொலைபேசி அதுவும் post officc இல் மட்டும்தான். ஏதாவது முக்கியமான விடயங்கள் அரசாங்கம் சம்பந்தப்பட்ட விடயங்கள் என்றால் இரவு எந்த நேரம் என்றாலும் எங்கள் வீட்டுக்கு வந்து, அத்தான் (என் அப்பப்பாவை) என்று உரிமையுடன் அழைத்துச்சென்று, தபால் கந்தோரில் கதைத்து விட்டு வருவார். இவர் எம் மக்களுக்காய் பாடுபட சேவையில் இறங்கியவர். தியாகத்தை அடிக்கல்லாகவும், திறமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கல்லாகவும் கொண்டு வாழ்ந்தவர். இந்நிலையில் 1978 ஆம் ஆண்டு கிளிவெட்டி கிராமத்தில் இன வன்செயல் பிரச்சினை சம்பவத்தில் இவரையும் தொடர்புபடுத்தி சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் எட்டு மாதங்கள் சிறையில் இருந்து பின்னர் விடுதலையானார். சிறை இவரை செதுக்கியது. சிறையில் இருக்கும் போதே சட்டப்படிப்பை பயில ஆரம்பித்து விடுதலையான பின்னர் கொழும்பு சட்டக்கல்லூரியில் இணைந்து 1980 இல் சட்டத்தரணியானார்.

1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு திருக்கோணமலையை அலங்கரிப்புச் செய்தார். திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

அப்பாவும், தங்கத்துரை மாமாவும், சேவியர் மாமாவும் (பொன்னுச்சாமி) சிவக்கொழுந்து ஐயா, ஜீவரெட்ணம் master (கொழும்பு) பாக்கியதுரை வைத்தியர் இன்னும் ஒரு சிலர் இரவு நேரங்களில் நிலா வெளிச்சமுள்ள முற்றத்தில் கதிரை போட்டு கதைப்பார்கள். மிக முக்கியமானவர்கள் வந்தால் பெற்றோல் மெக்ஸ், அல்லது மண்ணெண்ணை விளக்கு இதுதான் எங்கள் வீட்டு வெளிச்சவீடு. அதிகமாக ஆங்கிலத்தில் தான் கதைப்பார்கள். எனக்கு அப்போதெல்லாம் விளங்காது அவர்கள் பேசுவதை ஒரு ஓரமாக இருந்து படிப்பது போல் மிக ஆவலாக பார்த்துக் கொண்டிருப்பேன். அது விளங்கியிருந்தால் எழுதியிருப்பேன்.

என்ன செய்வது அவமானங்களை அடைமானம் வைத்து எழுதுகின்றேன். நான் அம்மாவிடம், “அப்பாவுக்கு இவ்வளவு English பேசத்தெரியுமா? ஏன் எனக்கு தெரியாது?” என்று கேட்ட போது அம்மா, “இவர்கள் எல்லோரும் மட்டக்களப்பில் ஆங்கிலத்தில் படித்தவர்கள்” என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக இவர் தனது திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவர் பதவியைத் துறந்தார்.

1994 இல் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு அம்மாவட்டத்தில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று மீண்டும். திருமலையை அலங்கரித்த நாயகன். திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரான திரு.இரா.சம்பந்தன் அவர்களும் போட்டியிட்டிருந்தார். இத்தேர்தலில் மாவட்டத்தில் அதிகம் வாக்குகளை திரு.தங்கத்துரை அவர்கள் பெற்றார். அப்போது தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் பணியாற்றினார். ஆளப்பிறந்த ஆளுமை நாயகனாய் பரிமாணம் பெறத்தொடங்கினார். இவர் காலத்தில்தான் கிளிவெட்டி பாடசாலை மகா வித்தியாலயமாக மாற்றம் பெற்றது. அன்றைய தினம் வருகைதந்த சிறப்பு விருந்தினருக்கு எங்கள் வீட்டிலேயே சமையல் ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஊரும் உறவுகளும் ஒன்று கூடி பெண்கள் எல்லோரும் சேர்ந்து சமைத்து விருந்துபசாரம் செய்ததை என்றும் எங்களால் மறக்க முடியாது. இவர் காலத்தில் பல இளைஞர்கள், பெண்கள் வேலை வாய்ப்பு பெற்றனர். பல வேலை வாய்ப்பு திட்டங்களும் உருவாக்கப்பட்டது.

கிளிவெட்டியில் பொதுவான இடத்தில் வைத்தியசாலை கட்டவேண்டும் என்ற கனவை நிறைவுசெய்ய காரணிகள் தேடிக்கொண்டிருந்தார் அப்போது பல முக்கியமானவர்கள் கிளிவெட்டியில் காணிதருவதாக கூறியிருந்தார்கள். இவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். (இவர் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களுக்கு பொதுவாக இடம் (58) பாரதிபுரம் இந்த இடத்தில் வைத்தியசாலை அமைக்கவேண்டும் என்பது இவரது இறுதியான முடிவாக இருந்தது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது எனது அப்பா, "இந்த இடத்தில் கட்டலாம். அப்படியென்றால் நான் என்னுடைய காணியைத் தருகின்றேன். நீங்கள் பக்கத்துக் காணியையும் கேட்டுப்பாருங்கள்" என்று கூறினார். தனது உறவுமுறையான சொந்தங்களிடம் இருந்த தென்னந்தோட்டக்காணிகளில் 'வைத்தியசாலை கட்டவேண்டும்' என்று கேட்ட போது எதுவித மறும்பும் கூறாமல் மனம் உவந்து தங்கள் தென்னந்தோட்டக்காணியை கொடுத்துதவிய நல் உள்ளங்களையும் இந்த இடத்தில் நினைவுபடுத்தவேண்டியது முக்கியம்.

அமரர் திரு. கதிரவேலுப்பிள்ளை (கானா), அமரர். திரு.வெற்றிவேல், அமரர்.திரு.சுந்தரலிங்கம், என் தந்தை (தபால் அதிபர்) ஆகியொர். இந்த வைத்தியசாலை அமரர் திரு.தங்கத்துரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அன்பு, பண்பு, பணிவு, துணிவு மரியாதை கொண்ட மாமனிதர். இவரை இன்று வரை ஆளுகின்ற அரசியல்வாதிகளுடன் ஒப்பிடமுடியாத உத்தமர் ஐயா தங்கத்துரை அவர்கள்.

1996ல் குமாரபுரம் எரிக்கப்பட்டு அக்கிராமத்து மக்களை இனவெறி ஆக்கிரமிப்பாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட பொழுது அங்கு மக்களைப் பார்ப்பதற்கு தயாரான நிலையில் அரசாங்கம் பாதுகாப்பு கொடுக்க மறுப்புத் தெரிவித்தது. (அடுத்த கணமே துணிச்சலுடன் தனி ஒருவனாய் சென்று அந்த இடத்தையும் மக்களையும் பார்த்து, காயப்பட்டவர்களை உடனடியாக திருக்கோணமலை வைத்தியசாலையில் அனுமதித்து, வைத்தியவசதிகள் செய்து கொடுத்தார்.)

இவருக்கு பக்கபலமாக இவர் அண்ணன் வைத்தியர் திரு.பாக்கியதுரையவர்களின் பங்களிப்பும் மிக முக்கியமாக இருந்தது. கிளிவெட்டி உறவுகளும் திருக்கோணமலை மக்களும் இந்தத்தருணத்தில் காயப்பட்டவர்களுக்கு வேண்டிய உணவுகளும் மாற்று உடைகளும் மேலும் பல உதவிகள் செய்தமை யாராலும் மறக்கமுடியாது, மறைக்கவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது! வந்தது!! எல்லாம் வந்தது!!!
மக்களுக்காய் போராடிய வரலாறும் வந்தது!!!
விதை முளைக்கும் போது சத்தமில்லாமல் முளைக்கின்றது.
மரம் சரியும் போது சத்தத்துடன் தான் சரிகிறது.

1997 யூலை மாதம் 5 ம் திகதி ஒரு சதிவலை பின்னப்பட்டது. ஸ்ரீ சண்முக இந்துக்கல்லூரியின் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு விடைபெறும் போது கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி, இவ் உலகில் இருந்து விடைபெற்றார். இவருடன் கல்லூரி அதிபர் மற்றும் ஐந்து கல்விமான்களும் உயிர்த் தியாகம் செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. தங்கத்துரை அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் திருக்கோணமலை ஒரு வசீகரமாகத் திகழ்ந்தது. அவர் மறைவுக்குப் பின், அந்த இடம் இன்னும் நிரப்பப்படாமல் வெற்றிடமாகத்தான் இருக்கின்றது. இதுவரைக்கும் யாரும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வரவுமில்லை, இந்த நிமிடம் வரைக்கும் பிறக்கவுமில்லை.

வாழும் காலம் முழுவதும் மக்களுக்காய் வாழ்ந்து வரலாறு படைத்த மாமனிதர். வேர் இழந்த மரமும் வரலாறு மறந்த இனமும் வாழாது. எந்த ஒரு கிளிவெட்டியானுக்கும் இது மாறாத வடு. அந்தப் புள்ளியில் இருந்துதான் நானும் ஐயா (மாமா) என்ற பாசப் பிணைப்புடனும் உறவு முறையுடனும் சில ஆதங்கங்களை வெளிப்படுத்தத் தோன்றுகின்றது. அந்த துருவநட்சத்திரம் இன்றும் கண் முன்னே மின்னிக்கொண்டிருக்கின்றது.

என் கருத்து உரமாகட்டும்!
உங்கள் பார்வை மரமாகட்டும்!
அதிகாரம் எடுப்பவர்கள் அரசியல்வாதிகள் அல்ல!
அவதாரம் எடுப்பவர்தான் அரசியல்வாதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.தங்கத்துரை அவர்களை அவர்காலத்தில் வாழ்ந்தவர்கள் தங்கள் உறவுமுறை பெயர் கூறி அழைப்பார்கள் நானும் 'மாமா' என்ற உறவுமுறையில்தான் அழைத்தேன். இன்றைய இளைய தலைமுறையினரும் 'மாமா' என்று பெயர் சொல்லி அழைப்பது மிக்க மகிழ்ச்சி.

நானும் 1990க்கு முன் மாமாவை உரிமையுடனும் உணர்வுடனும் அடையாளப்படுத்தி அழைத்தவன் தான் அவர் மறைவுக்குப்பின் 'ஐயா' என அழைப்பதில் என்மனம் இடம் கொடுக்கிறது. வேட்டியும் சேட்டும் போட்டுக் கொண்ட திரைமறை விசுவாசிகளை 'ஐயா' என்று அழைக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை.

நல்ல எண்ணங்களும் மனித நேயமிக்க மனிதராகவும் நேர்மை கொண்ட மனிதர்களை 'ஐயா' என்று அழைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. நல்லவர்களை நாம் அறிவோம்.

நான் சிறையில் இருந்து விடுதலையாவதற்கு இவருடைய முயற்சியும் எனக்கு பயனளித்துள்ளதாக இருந்திருக்கின்றது. நான் விடுதலையானதும் என்னை, "அங்கே இருக்க வேண்டாம்" என்று என்னையும் இந்தியா வரவழைத்து ஐந்து வருடங்கள் அவர்கள் பார்வையில் என்னை பாதுகாப்பாக வைத்துக்கொண்ட பெருமகன்.

எழுதுகையில் மனதில் வலியுடன் இமைகளை ஈரமாக்குகின்றது. நான் 'மாமா' என்ற உறவு முறை தாண்டி, 'ஐயா' என்ற வெகுமதி கொடுத்து அடையாளப்படுத்துவதில் என் மனநிறைவில் மகிழ்வு கொள்கின்றேன்.

எங்கு முதன்முதல் இவரை அரசியலில் களம் இருக்கவேண்டும் என்று அன்று பேச்சு நடந்ததோ, அதே இடத்தில் இன்று இவர் மறைந்து 25ம் ஆண்டு இவருக்கான உருவச்சிலை உருவாக்கம் பெற்று திறப்பு விழா நடைபெறுவதும் வரலாற்று முக்கியத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் காலம் முழுவதும் எம் ஊருக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவையை மறக்க முடியுமா?

எம் இனத்துக்கும் நாட்டுக்கும் நல்லது செய்ய அவ்வப்போது நல்லவர்கள் பிறக்கத்தான் செய்கின்றார்கள். வரலாறு படைக்கின்றார்கள். இந்த வழியில்தான் எங்கள் ஐயா திரு.தங்கத்துரை அவர்கள் பிறந்தார். இவரது வெற்றி, புகழ், விசுவாசம் இவை எல்லாம் அதிஷ்டத்தாலோ வானுலகில் இருந்து கொட்டியதாலோ கிடைக்கவில்லை. முயற்சி, பயிற்சி, திட்டமிடல் மக்களின் எண்ணங்களை புரிந்து கொண்ட பண்புதான் இந்த வெற்றிக்கு அத்திவாரங்கள்.

இவர் ஒரு புதிர் அல்ல.
சின்ன வயதில் விளைந்த கதிர்.
கிளிவெட்டி உருவாக்கிய கடைசி மகன் நீங்கள்.
நீங்கள் இறந்தும் மக்கள் மனதில் உயிர் வாழ்கின்றீர்கள்.

மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மனிதரை கூட்டத்தில் இருந்து ஒரு தனி மனிதனாய் அடையாளப்படுத்தி அழகு பார்க்கக் கூடிய இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர் வாழ்ந்த காலங்களை நாம் நினைத்து வாழ்வது ஒவ்வொரு கிளிவெட்டி மக்களுக்கும் உள்ள கடமைப்பாடாகும்.

இந்த மாமனிதரைப் போற்றுவதில் என்ன குறை கண்டோம். எம் மண்ணோடு என்றும் மணம் வீசும் எங்கள் மாமனிதர். என்பதில் நாங்கள் பெருமை அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. க. ஜெகதீஸ்வரா
லண்டன்
(சொக்கன்)

## ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலையாகலாம்!

இதோ இன்று மனிதன் வளர்ந்து நிற்கிறான். அறிவியலில், ஆன்மீகத்தில், வியாபாரத்தில், பொருளாதாரத்தில், நாகரீகத்தில், மருத்துவத்தில், மனிதாபிமானத்தில் மனிதன் வளர்ந்துவிட்டான் என்று நாம் பெருமைகொள்கிறோம். உண்மையும் அதுதான். உலக மனித நாகரீக வளர்ச்சி பற்றிய பாடங்கள் அதைத்தான் நமக்கு காண்பிக்கிறது. முன்னொரு காலம் மனிதன் நடந்துவந்த பாதைகள் மிக அபாயகரமானதாகவும், கொடூரமானதாகவும் இருந்தது என்பதை நாம் அறிவோம்.

ஆகவே அவற்றோடு ஒப்பிடும் போது இன்றைய மனிதனின் வளர்ச்சியும், விருத்தியும் உண்மையில் பாராட்டத்தக்கதே. ஆகவே மனித இனம் வளர்ந்திருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டேயாக வேண்டும். இருந்த போதிலும், மனிதன் நாகரீகத்திலும், பொருளாதாரத்திலும், பண்பாட்டிலும், அரசியலிலும், அறிவியலிலும் வளர்ந்தளவு "பொதுமையான சிந்திப்புகளிலும் செயலாற்றுகைகளிலும்" இன்னும் குறிப்பிடத்தக்களவு வளரவில்லை என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இருந்தபோதும் உலக வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுகிலும் ஏராளமான மேதைகளும், மேன்மக்களும் பொதுக் கொள்கைகளுக்கான விதைகளையும், பொது நோக்கு பற்றிய விழுதுகளையும் ஆங்காங்கே விதைத்துவிட்டே சென்றுள்ளனர். அது அறிவியலில் 'பிளாட்டோ', 'அரிஸ்ரோட்டில்' தொடங்கி 'ஸ்ரிபன்ஹாக்கிங்' வரை நீளும், 'காலமாக்ஸ்' தொடங்கி 'லெனின்', 'மாஓ சேதுங்க', 'பிடல்ஹாஸ்ரோ' வரை நீளும், 'வள்ளுவன்' தொடங்கி 'வள்ளலார்' வரை நீளும் 'காரைக்கால் அம்மையார்' தொடங்கி 'ரமணமகாரிஷி' வரை நீளும் 'அண்ணல் காந்தி', அருமை 'நபிநாயகம்', பெரு 'ஞானப்புத்தன்', பேரன்பின் 'இயேசு' என்று இந்த பட்டியல் நீண்டு செல்லும்.

இவ்வாறு பொதுவான நோக்கில் கடையனும் கடைந்தேறும் வண்ணம் சிந்திக்கும் மனிதர்கள் தான் இறந்தும் இறவாமல் வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்ந்த காலத்தை தமதாக்கிக்கொள்கிறார்கள். இவ்வாறு காலத்தை தமதாக்கிக்கொண்டவர்கள் காலம் கடந்தும் வாழ்கிறார்கள். இந்த காலம் கடந்த மனிதர்கள் அனைவரும் ஒரு புள்ளியில் இணைவதை நாம் உன்னிப்பாக அவதானிக்கும் போது அறியலாம். அந்த புள்ளிதான் "பொது நலன்" அல்லது "பொது நோக்கு" என்ற பொருளில் இணைகின்றனர்.

தனக்குத் தனக்கு என்று வாழ்ந்த எவரையும் இந்த உலகம் நினைவில் கொள்ளவில்லை என்பதையும் நாம் உணரலாம். இவர்கள் வாழ்ந்த காலத்திலேயே உலகில் லட்சோபலட்சம் பெருந்தனக்காரரும், பெருத்த அறிவாளிகளும், அதிகாரம் மிக்கோரும் வாழ்ந்திருப்பர் என்பது திண்ணம். ஆனாலும் அவர்கள் எவரையும் உலகம் இவர்களவு நினைவில் கொள்ளவில்லை என்பதை நாம் உற்றுநோக்க வேண்டும். தன்பிள்ளை, தன்பெண்டு, தன்சுற்றம் என்ற குறுகிய கொள்ளைகளை கொண்டவர்களை இந்த உலகம் காலப்போக்கில் மறந்துவிடுகிறது. ஆனால் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பொதுக் கொள்கைகளில் நின்ற மாந்தர் மறைந்தாலும் மறக்கப்படுவது இல்லை என்பதை நாம் உணரலாம். இவ்வாறு பொதுமைபடுத்தப்பட்ட சிந்தனை உடைய மனிதர்களை,

1) சர்வதேச அளவில் அறியப்பட்டவர்கள்
2) நாடளவில் அறியப்பட்டவர்கள்
3) பிரதேசளவில் அறியப்பட்டவர்கள்
4) கிராம (ஊர்) மட்டத்தில் அறியப்பட்டவர்கள்

என்கின்ற பிரிப்புகளை உருவாக்கி வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் போக்குக்கு ஏற்பவும், மனித குலத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவும் உலகம் வர வர சுயநலத்தின் பால் சுருங்கத்தொடங்கிவிட்டது. பொதுக்கொள்கைகளில் இணைவது என்பதே சுயதேவைகளையும், சுயநலன்களையும் மையப்படுத்தியே என்கின்ற கருத்து வலுப்பெறத்தொடங்கிவிட்டிருந்தது. இந்த காலத்தின் இடையே தான் வாராது வந்த மாமழையாய், வந்துதித்த இளம் சூரியனாய், வற்றாத நதியாய், வளரிளம் பிறையாய் , பலருக்கு வழிகாட்டியாய், சிலருக்கு எடுத்துக்காட்டாய், எல்லாருக்கும் இன்பத்தேனாய், தெவிட்டாத தமிழாய், அரசியல் வானில் ஒரு சுடர்விளக்காய், அங்கலாய்ந்த எங்கள் மக்களில் ஒருவனாய் வந்துதித்தார் எங்கள் பெரியப்பா "அமரர் தங்கத்துரை" அவர்கள்.

நான் மேலே குறிப்பிட்ட படி பொது நோக்கில் சிந்திக்கின்ற மனிதர்கள் உலகம் உள்ளளவும் கொண்டாப்படுகிறார்கள் என்பதற்கு இவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. ஒரு மனிதன் ஒரு நாளில் 24 மணி நேரமும் கிழமையில் 7 நாளும் தன்னுடைய பிரதேச மக்கள், தன்னுடைய பிரதேசம், அதன் அபிவிருத்தி, அதன் வளர்ச்சி பற்றி மட்டுமே சிந்தித்து செயலாற்ற முடியுமா? என்ற கேள்வி என்னுள் எப்போதும் ஓடும். ஆம் அப்படி செயலாற்ற முடியும் என்று நான் உணர்ந்தது இவரிடம் தான். எனக்கு நெருங்கி பழக வாய்ப்பில்லாத போதும் என் குடும்பத்தவர் அனைவரும் அவருடன் உடனுறைந்து வாழ்ந்தவர்கள்.

அவர்கள் ஒவ்வொரு போதும் பெரியப்பாவின் நினைவுகளை கதை கதையாய் என்வீட்டில் எப்போதும் பேசுவார்கள். அப்படி அவர்கள் பேசும் போது அருகிருந்து கேட்கும் பெருமை பெற்றேன். அதன் மூலம் அவரை அறிந்து உணர்ந்து கொண்டது மட்டுமன்றி, காட்டு வழி செல்லும் ஒருவன் அடர்ந்த காட்டில் காலடித்தடங்களை வைத்தே முன்சென்ற விலங்கு எது என்பதை அறிந்து சொல்லும் அறிவுடையவனாவான். அவ்வாறே அவர் வாழ்ந்த வாழ்வை வைத்தும், அவர் செய்த செயல்களை வைத்தும் அவரின் அருமை பெருமைகளையும், அர்பணிப்பையும் உணர்ந்துகொண்டேன். அதனால் தான் இந்த பதிவுக்கு நான் "ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகயாகலாம்" என்ற தலைப்பை வைத்தேன். எப்போதும் பொதுமையான சிந்திப்பு, செயலாற்றுகை என்பது எல்லாராலும் முடியாத காரியம். வாய்ப்பு வந்ததும் மாறியவர் பலருண்டு, வளங்கள் வந்த போது அனுபவித்தவர் பலருண்டு, தன்பிள்ளை, தன் பெண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான், தனதென்று மடிந்தவர்கள் கோடி கோடி உண்டு. அவர்களில் இருந்து இவர் மாறுபட்டார், வேறுபட்டார், ஆகவே மனதில் நின்றார். இல்லாவிட்டால் இத்தனை ஆண்டுகள் கழிந்தும் அவர்பற்றி எழுதும் போது ஏன் என் கண்கள் பனிக்க வேண்டும்? ஏன் என் நெஞ்சம் கலங்கவேண்டும்? நா தழுதழுக்க வேண்டும்? எங்கள் ஊரின் பொது வளர்ச்சியை, பொது நோக்கை சிந்திக்கும் எவருக்கும் அமரர் தங்கத்துரை மனக்கண்ணில் வந்து செல்வார் என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியும். இல்லாவிட்டால் 25 ஆண்டுகள் கழிந்தும் இந்த இளஞ்சந்ததி அவரை ஏற்றிக்கொண்டாடி, இன்று சிலை வைக்குமளவுக்கு செல்ல காரணம் என்ன? வீட்டிற்கு மட்டுமே வாழ்ந்திருந்தால் இது நடந்திருக்குமா? அன்றி ஊருக்கென்று வாழ்ந்ததால் தான் வயது வித்தியாசம் கடந்து, அறிவு வித்தியாசம் கடந்து, அந்தஸ்து வித்தியாசம் கடந்து அத்தனை உள்ளங்களையும் நிரப்பி நிற்கின்றார்.

அரசியலில் இருந்தோர் ஆதாயங்கள் பல கண்டதுண்டு, ஆனால் மக்கள் அன்பு கண்ட தலைவன் எங்கள் பெரியப்பா. தன் பிள்ளைகள் மீது எவ்வளவு பாசமும் அக்கறையும் வைத்திருந்தாரோ அதேயளவு அன்பையும் அக்கறையையும் ஈச்சிலம்பற்றில் இருந்தவர்களிடத்தும், சம்பூரில் இருந்தவர்களிடத்தும், நிலாவெளியில் இருந்தவர்களிடத்தும், தம்பலகாமத்தில் இருந்தவர்களிடத்தும் வைத்திருந்தார். இவர்களுக்கான நலன்களை நான் செய்யவில்லை என்றால் யார் செய்வது? என்ற எண்ணமே அவரை இடைவிடாது செயற்படவைத்தது.

சகல அமைச்சர்களோடும் நெருக்கமான தொடர்பு, அனைத்து பாராளுமன்ற உறுப்பினரோடும் அன்பான பேச்சு, ஆணித்தரமான கருத்து, விட்டுக்கொடுப்பு, விவேகம் என்று அத்தனை திறமைகளையும் அவர் ஒன்றே ஒன்றுக்கு பயன்படுத்தினார், அதுதான் ஊரின் வளர்ச்சி முன்னேற்றம், பிரதேச வளர்ச்சி , பிரதேச முன்னேற்றம் என்ற ஒன்றுக்கே. இறுதிவரை ஊரின் வளர்ச்சியையே கருத்தில் கொண்டதால் தான் இன்று சிலையாகி நின்றார். "நல்லார் ஒருவர் ஊருளேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் மழை" என்பது போல் அவர் பொருட்டு மழை பெய்ததால் நாங்களும் வளம்பெற்றோம், நலம்பெற்றோம். இவ்வாறு ஊருக்கே உழைத்த நெஞ்சம் சிலையாகிறது. வாழ்த்தி வணங்குகிறோம்

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்

## துருவ துடிப்புகள்

அடர்ந்த காட்டின் நடுவே செல்லும் ஒருவன் தான் செல்லும் திசையறிந்து நடக்க துருவ நட்சத்திரத்தினை துணைகொள்வான். நான்கு புறமும் மலைபோல் எழும் அலைகளின் நடுவே கப்பலை செலுத்தும் மீகாமன் தான் செல்லும் திசையை துருவ நட்சத்திரத்தினை வைத்து கணித்துக்கொள்கிறான்.

அரேபிய பாலைவனங்களில் அந்தகார இருட்டில் வியாபார நோக்கமாக செல்லும் அரேபியர்கள் தங்கள் பாதைகளை துருவ நட்சத்திரத்தினை வைத்து கணித்துக்கொள்கிறார்கள். ஆதிகாலத்தில் ஐரோப்பாவிலும் இதே நடைமுறைதான் இருந்தது. அமெரிக்க பழங்குடிகளிடமும் இதே பழக்கம் தான் இருந்தது. ஆகவே உலகெங்கும் வாழ்ந்த மக்களின் வழிகாட்டியாக, நம்பிக்கை ஒளிக்கீற்றாக, எதிர்கால வெளிச்சமாக இந்த துருவ நட்சத்திரத்தின் ஒளித்துடிப்புகளே அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அல்லற் பட்டு , அநாதரவாக அயல்நாடுகளில் தஞ்சமடைந்து, தங்களை ஆசுவாசப்படுத்திக்கொண்ட அத்தனை புலம்பெயர் கிளிவெட்டி பெருமக்களுக்கும் துருவ நட்சத்திரமாய் தெரிவது அண்ணன் அ.தங்கத்துரை அவர்கள் தான். அயலகத்திலும் சரி, ஐரோப்பாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, அவுஸ்ரேலியாவிலும் சரி வாழ்கின்ற எங்கள் அனைவரின் உயிர்மூச்சும் அண்ணன் தங்கத்துரையை ஒருகணமேனும் எண்ணும் என்பது திண்ணம். அயலகத்தில் இருந்த போதும், அலைகடலென துன்பம் நிறைந்திருந்த போதும் எங்கள் அனைவரையும் ஆதரித்தார், அனுசரித்தார், உபசரித்தார். எங்களை இங்கு அனுப்பி வைப்பதிலும் ஏதோவொரு வகையில் துணை நின்றார், வழிகாட்டினார். எங்கள் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் அக்கறை எடுத்துக்கொண்டார்.

அவரிடம் கற்றுக்கொள்ளவும், பழகிக்கொள்ளவும் ஏராளம் கிடந்தது எங்களுக்கு. அந்த பொறுமையும், உறுதியும், காரியத்தெளிவும், திண்ணமும், எண்ணமும், நோக்கும், கண்ணியமும், கனிந்த பேச்சும், கண்டிப்பும், கரிசனையும், அக்கறையும், அரவணைப்பும், எப்போதும், முப்போதும் கிளிவெட்டி பற்றிய கதைகளும், சிந்தனைகளும், தெளிந்த நீரோடை போன்ற புனிதமும், நேர்மையான நடத்தையும், நிறைந்த அறிவும் இயல்பாய் எங்களுக்கு அவரின் மீதான அன்பையும், மதிப்பையும் பெருக்கச்செய்தது. அவர்போல் கிளிவெட்டியை நேசித்தவர்கள் எவருமில்லை என்றே சொல்லலாம். பேச்சு மூச்சு எல்லாமே கிளிவெட்டிதான்.

அத்தகைய பெருந்தகையிடம் நாங்கள் பார்த்து வியந்தது,

- ஊரை நேசிக்கும் பண்பு.
- உண்மையும் நேர்மையும்.
- ஆருக்கும் அஞ்சாமை.
- கல்வியில் எம் சமூகம் உயர வேண்டும் என்ற எண்ணம்.
- சமூக முன்னேற்ற கருத்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்கால நோக்கு.
- பொருளாதார வளர்ச்சி பற்றிய எண்ணக்கரு.
- இன,மத,மொழிகளுக்கு அப்பாற்பட்ட உறவு.
- ஆரம்ப சுகாதார விழிப்புணர்வு.
- அரசியலில் முதிர்ச்சி.
- இணைந்து செயலாற்றும் தன்மை.

இன்னோரன்ன பண்புகளே எங்களை அவர்பால் கவர்ந்தது.

இப்படிபட்ட மகாத்மாவோடு பழகியதால் தான் எங்களுக்கும் எங்கள் ஊரின் மீதும், உறவுகளின் மீதும் அளவற்ற பற்றும் அன்புங்கொண்டு மீண்டும் ஒரு குடும்பமாக "கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்" என்ற பெயரில் எங்களால் இணைய முடிந்தது.

அண்ணன் தங்கத்துரை அவர்களின் எண்ணக்கருவில் தோன்றிய சிலவற்றையாவது செயற்படுத்த முனைவோம் என்ற எண்ணத்தில் உருவானதே 'கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்'. இந்த ஒன்றியத்தின் புலம்பெயர் உறவுகள் அனைவரையும் கட்டிவைத்த மந்திரக் கயிறுதான் அண்ணன் தங்கத்துரை அவர்கள் என்றால் மிகையில்லை. இந்த கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியத்தின் துருவ நட்சத்திரம் தான் அண்ணன் தங்கத்துரை அவர்கள். அந்த துருவ நட்சத்திரத்தின் துடிப்புத்தான் புலம்பெயர் உறவுகளின் அர்ப்பணிப்பாக வெளிவருகிறது.

அந்தவகையில், எங்களூரில் அண்ணனுக்கு சிலையமைக்கும் கைங்காரியத்தில் புலம்பெயர் உறவுகளின் துணையோடு ஒரு பங்காளராக கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியமும் கைகோர்ப்பதில் பெருமையடைகிறது. இது எங்கள் அனைவரதும் பெருங்கனவு. இந்த கனவு நனவாவதை ஒட்டி பேரன்போடு இலங்கையில் வாழும் எம் உறவுகள் அனைவருக்கும், புலம்பெயர்ந்து வாழும் எம் கிளிவெட்டி சொந்தங்களுக்கும், நன்கொடையாளர்கள் அனைவருக்கும், இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பணியில் கைகோர்த்த சங்கங்கள், தனிநபர்கள், அர்பணிப்பாளர்கள், கைகொடுத்த அனைவருக்கும் பெருத்த நன்றியையும் பேரன்பையும் மீண்டுமொரு முறை சொல்லிக்கொள்கிறது கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம்.

அண்ணன் கண்ட கனவை நனவாக்க கை கோர்த்து செயற்படுவோம்.

அற்றை தரள அருமணிகள் சேர்க்கும்
பற்றைக்காடெனவே பசுந்நெல் செழித்திருக்கும்
முற்றத்திரு நகைகள் முகங்கள் நிறைத்திருக்கும்
நற்றை தவநெறி முற்றிய மாவலி
பெற்றிய பெருந்தலைவனை பாடோமே

எண்ணி வியந்தோமடா எங்கள் ஏகனை
மண்ணில் ஒருவர்க்கும் மட்டில்லா மாதவனை
கண்ணில் நற்கனவுகள் தந்தானை கர்மவீரனை
பண்ணில் நிறைந்த பழந்தமிழில் பாடோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். அ. தங்கத்துரை அவர்களின் மறைவையொட்டி பத்திரிகையில் வெளிவந்தவை...

## பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு உதாரண புருஷராகத் திகழ்ந்தவர் அமரர் அருணாசலம் தங்கத்துரை



இன்று, மூதூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அ. தங்கத்துரை அவர்களின் 24 ஆவது சிராத்த தினமாகும்.

## இறந்தும் வாழும் நேயமிக்க அரசியல் தலைவர் தங்கத்துரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். அ. தங்கத்துரை அவர்களின் மறைவையொட்டி பத்திரிகையில் வெளிவந்தவை...



## இன, மத பேதமின்றி சேவையாற்றிய அமரர் அருணாசலம் தங்கத்துரை

அமுத மொழிகள்

இன்று 21 ஆவது ஆண்டு சிரார்த்த தினம்

இன, மத...



## ஆளுமைமிக்க தலைவர் அருணாசலம் தங்கத்துரை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1997 ජූලි 23වන බදාදා**
**1997 யூலை 23, புதன்கிழமை**
**Wednesday,23th July,1997**

# පාර්ලිමේන්තු විවාද
(හැන්සාඩ්)

# பாராளுமன்ற விவாதங்கள்
(ஹன்சாட்)


# PARLIAMENTARY DEBATES
(HANSARD)

## නිල වාර්තාව
அதிகார அறிக்கை
OFFICIAL REPORT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ඩී. බී. ඒකනායක මහතා]

දේශපාලනයට අදාළ කාරණා, ඔහුට තිබෙන අභියෝගයන්, ඔහුට තිබෙන තර්ජන. පිළිබඳව අපත් සමග කථා කළා. එතුමාගේ ඝාතනය සම්බන්ධයෙන් අධිකරණයෙන් කුමන තීන්දුවක් ලැබුණත්, එදා මේ රටේ ජනතාව හඬා වැලපුණු ආකාරය, තරුණයන් හඬා වැලපුණු ආකාරය ගැන කල්පනා කරන විට, දෙවිය විසින් එම පාපකරුවන්ට හිමි දඬුවම දෙනවාය කියන එක මා මේ අවස්ථාවේදී කියන්නට ඕනෑ. ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂයේ තරුණ සංවිධානයේ විතරක් නොවෙයි, රත්නපුර දිස්ත්‍රික්කයේ විතරක් නොවෙයි, සමස්ත ලංකාවේ තරුණ ව්‍යාපාරයේම තරුණයන්ගේ දේශපාලනය පිළිබඳව කථා කරන්නට සිටි ඉතාමත් නිහතමානී දේශපාලනඥයකු විධියටත්, අවංකත්වයේ ඉහළ තලයේ සිටි තරුණයකු විධියටත් මේ නාලන්ද එල්ලාවල තරුණ මිත්‍රයා අපි දකිනවා. එතුමා වැනි දේශපාලනඥයන් ඉතාමත් අඩු මෙවැනි යුගයක, එතුමා වැනි දේශපාලනඥයින් ඉතාමත් අවශ්‍ය යුගයක, එතුමා නැවතත් අපි අතරේ ඉපදේවා කියා ප්‍රාර්ථනා කරමින් මම නිහඬ වෙනවා.

එන්. බෙනට් කුරේ මහතා
(திரு. என். பெனட் குரே)
(Mr. N. Bennet Cooray)

ගරු කථානායකතුමනි, 1994 මහා මැතිවරණයේදී අපත් සමග මේ උත්තරීතර ආයතනයට පිවිස මහත් දයාවෙන් පිරුණු හදවතින් ජනතාවට සේවයක් කරන්නට කැප වී සිටි, අප සමග මිල්ලෙනියම් කණ්ඩායමේ විශේෂ වැඩ කොටසක් – කාර්ය භාරයක් – ඉටු කළ අපේ සහෝදර නාලන්ද එල්ලාවල රත්නපුර දිස්ත්‍රික් පාර්ලිමේන්තු මන්ත්‍රීතුමාගේ අභාවය පිළිබඳව මම පසුගියවේලේ එතුමාගේ ආදරණීය මැණියන්ටත්, සොහොයුරියටත්, ඒ වාගේම පවුලේ අනෙක් ඥාතීන්ටත් මගේ සංවේගය ප්‍රකාශ කරන්නට කැමැතියි.

ගරු කථානායකතුමනි, ලෝකයේ අවිහිංසාවාදය අගය කළ, මිනිස්කම අගය කළ, ප්‍රජාතන්ත්‍රවාදය අගය කළ මානව දයාවෙන් පිරුණු හදවතක් තිබූ මිනිසුන් වෙඩි තබා ඝාතනය කර තිබෙනවා. මහාත්මා ගාන්ධි මැතිතුමා, ජෝන් එෆ්. කෙනඩි මැතිතුමා, මාටින් ලූතර් කිං මැතිතුමා, සහ ශ්‍රී ලංකාවේ එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මැතිතුමා ආදී වශයෙන් තවත් එවැනි අය රාශියක් ඉන්නවා. ඒ සියලු දෙනාම වෙඩි තබා මරාදමා තිබෙනවා. තුච්ඡ සමාජය අවිහිංසාවාදයට සහ මානව හිතවාදයට කළගුණ සලකා තිබෙන්නේ වෙඩි උණ්ඩයෙනුයි. නාලන්ද එල්ලාවල ගරු මන්ත්‍රීතුමා මානව හිතෛෂීත්වයෙන් පිරුණු හදවතක් තිබූ කෙනෙක්. එතුමා තමන්ගේ පවුලේ මොහොතකවත් ගැන හිතන්නේ නැතිව පොදු ජනතාව වෙනුවෙන් සේවය කරන්නට කැප වී සිටියා. එතුමාගේ පියා සමග අපි වෘත්තීය සමිති ව්‍යාපාරයේ යෙදී සිටියදී එතුමාගේ පියාගේ එඩිතරකම, නිර්භීතකම හා කාර්ය ශූරත්වය අතර මනුස්සකමින් යුක්ත වී සිටියා මට මතකයි. පියා තුළ තිබූ ඒ මනුස්සකම කිසිම අඩුවක් නැතිව නාලන්ද එල්ලාවල ගරු මන්ත්‍රීතුමාත් තුළ තිබුණා. එතුමා රත්නපුර ජනතාව ගැන කථා කළා; රත්නපුරයේ මැණික් ගැන කථා කළා. හද යෞවනයේ අසිරිමත් වර්ණකාරයෙන් රත්නපුර ඒකාලෝක කරන්නට සූදානම් වෙමින් සිටි අවස්ථාවකයි, ඒ ආලෝකය නිවා දැමුවේ.

මට මතකයි; එතුමා අයවැය විවාදයකදී රත්නපුර මැණික් මංකඩවක් පිහිටුවන්නය කියා යෝජනා කළා. මුළු ලෝකයටම වටිනා මැණික් ගොඩ ගසන, මැණික් කර්මාන්තයෙන් ජීවත්වන අති විශාල ජනතාවක් සිටින, මේ රටට විශාල වශයෙන් විදේශ විනිමය උපයා දෙන මැණික් කර්මාන්තය වෙනුවෙන් රත්නපුරයේ මැණික් මංකඩවක් පිහිටුවා, ඒ කර්මාන්තයේ නියැළී සිටින අහිංසක කම්කරුවන්ගේ පටන් රට ඉහළ තලයේ සිටින වෙළෙන්දා දක්වා වූ සියලු දෙනා ආරක්ෂා කළ යුතුය කියා නාලන්දා එල්ලාවල මන්ත්‍රීතුමා කිව්වා. එතුමාගේ ඒ යෝජනාව පරිදි මැණික් මංකඩවක් පිහිටෙව්වා නම්, එහි දීප්තිය, තේජය නංවන්නට සිටි වටිනාම නිල් මැණික නාලන්ද එල්ලාවල මැතිතුමා වෙන්නට තිබුණා. අවාසනාවකට අපට ඔහු අහිමි වුණා. ගරු කථානායකතුමනි, අපි මේ උත්තරීතර සභාවට තේරී පත්වන්නේ ජනතාවට සේවය කරන්නටයි. ජනතාවට සේවය කරන්නට පැමිණෙන අපේ පසුපස මනුස්සකම නැත්නම්, මානව හිතවාදය, මානව දයාව, මානව භක්තිය අප හදවත් තුළ නැත්නම්, අපට අවංකව ජනතාවට සේවය කරන්නට පුළුවන්ය කියා මම හිතන්නේ නැහැ. මොනම පක්ෂයකට අයත් වුණත් මේ උත්තරීතර සභාවට පත් වන අප, මිනිසුන් හැටියට හිතවතුන් හැටියට කටයුතු කළ යුතු වෙනවා. රටට සේවය කරන්නට, මේ උත්තරීතර සභාවට පැමිණ ජනතාවගේ සේවකයින් හැටියට කටයුතු කරද්දී ඔහුට එරෙහි වන්නට තරම් වූ දරුණු මිනිස් සිතිවිලි තුළ හෝ පහළ වෙනවා නම්, එය දෙවියන්ගේ නොහැකියාව හෝ සිදු වූ වරදක් කියා මා කල්පනා කරනවා. ඒ වරද නැවත සිදුනොවන විධියට අප නිවැරදි කර ගත යුතුව තිබෙනවා. නාලන්ද එල්ලාවල අභාවයෙන් අප ගත යුතු වැදගත්ම ආදර්ශය එයයි කියා මා හිතනවා. මේ ඝාතනයෙන් අපට වටිනා ශ්‍රේෂ්ඨ පුද්ගලයෙක් අහිමි වුණා. ඒ වාගේම ඒ ඝාතනයෙන් ඉදිරියේදී අප උගත යුතු දෙයක් තිබෙන බව මා මතක් කර දෙන්නට කැමැතියි.

මා දීර්ඝ වශයෙන් කථා කරන්නට බලාපොරොත්තු වන්නේ නැහැ. අප අතර සිටි අපේ ඉතාමත්ම සමීප හිතවතාණන්ට, අපේ ඒ මිත්‍රයාට අත් වූ ඒ ඛේදජනක ඉරණම පිළිබඳව අප කනගාටු වෙනවා. ඔහු නැවතත් අප අතර ඉපදී මේ රටේ ජනතාවට සේවය කරන්නට තරම් වාසනා ගුණයෙන් පිරුණු කෙනෙක් වේවාය කියා මා ප්‍රාර්ථනා කරනවා.

කථානායකතුමා
(சபாநாயகர் அவர்கள்)
(Mr. Speaker)

I wish to associate myself with the sentiments expressed by both sides of Parliament on the death of Mr. Nalanda Ellawala, ex-Member of Parliament. I shall direct the Secretary-General of Parliament to make a minute of the proceedings of the meeting today and send a copy thereof to the members of the bereaved family.

## ශෝක ප්‍රකාශය : ඒ. තංගතුරෙයි මහතා

### அனுதாபப் பிரேரணை : திரு. அ. தங்கத்துரை

### VOTE OF CONDOLENCE : MR. A. THANGATHURAI

ගරු එස්. අලවි මවුලානා මහතා (පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යතුමා)
(மாண்புமிகு எஸ். அலவி மௌலானா – மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர்)
(The Hon. S. Alavi Moulana – Minister of Provincial Councils and Local Government)

Mr. Speaker, I rise today, with a heavy heart and a deep sense of loss to move a Vote of Condolence on the tragic death of Mr. A. Thangathurai, who was gunned down senselessly along with a few other civilians by a group of terrorists in Trincomalee on 5th July, 1997, when he was attending a public function. He represented the people of Muttur and Trincomalee in this House from May 1970 to May 1977 and from August 1994 until his demise.

Born on 17th January, 1936, he received his education at Vantharamoolai Central School, Batticaloa and Stanley College, Jaffna.

After leaving school , he joined the Public Service as a Clerk in 1950. In 1970 he resigned from the General Clerical Service in order to take to active politics – which he did forthwith by contesting the Multi-Member Constituency of Muttur at the General Election held in May, 1970 as the nominee of the Federal Party. He was successful and was elected the Second Member of Parliament for Muttur. He also successfully contested the District Development Council elections held in 1981 for Trincomalee District as a nominee of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TULF and was later elected as chairman of the Trincomalee District Development Council. Late Mr. Thangathurai once again contested the General Election held in August 1994 under the Proportional Representation System as a nominee of the TULF and was elected a Member of Parliament for Trincomalee District. His immense popularity was reflected in the large number of preferential votes they cast for him at this election – securing 22,409 preferential votes – topping the TULF candidates in the Trincomalee District.

While being a Member of Parliament and a keen student of law and human rights, he gained admission to the Sri Lanka Law College and qualified as an Attorney-at-Law.

Late Mr. Thangathurai took a keen interest in the upliftment of the social conditions of his constituents in Muttur and Trincomalee. As a result of the programme of action launched by him as a Member of Parliament, there was significant development in the fields of housing, agriculture, industry and communication in the areas he represents.

As a young political activist, he was the President of the Federal Party Youth League and was also in later years the Administrative Secretary of the TULF.

Late Mr. Thangathurai was a very convincing and effective speaker, both in Tamil and English, and he devoted his entire life for working tirelessly to safeguard fundamental and human rights, equality and to bring about a lasting and just resolution to the prevailing ethnic conflict. He was a man who acted according to the dictates of his conscience, and a very pleasant and vibrant personality who nevertheless expressed his views without fear or favour, regardless of the consequences.

Late Mr. Thangathurai will live long in the hearts of the people for whom he worked unceasingly without counting the cost – and finally laid down his life. I can pay no greater tribute to him than to say that he died as a martyr for democracy and ethnic harmony in Sri Lanka. Mr. Speaker, I propose that the condolence of his House be conveyed to the members of the bereaved family.

Thank you.

ආචාර්ය නීලන් තිරුචෙල්වම් මහතා
(கலாநிதி நீலன் திருச்செல்வம்)
(Dr. Neelan Tiruchelvam)

Mr. Speaker, I wish to, on behalf of my Party and other members of the Opposition speak on the Vote of Condolence of Mr. Arunachalam Thangathurai who suffered a cruel death a few weeks ago when he was brutally murdered. Mr. Thangathurai was one of the senior members of our party and until his untimely death was its Administrative Secretary. He entered Parliament when he was merely 32 years of age and represented the multi-member constituency of Mutur. Mutur has always been a constituency in which both Tamil and Muslim communities have co-existed for decades. It was a predominantly agrarian community and it was reported recently that Mr. Thangathurai was the first person of that constituency to have been admitted as an Attorney-at-Law.

Mr. Thangathurai was educated at Mutur and he was successful in the 5th standard scholarship examination and thereafter joined Vantharamoolai Central College and he then went to Stanley Central College which is now known as Kanagaratnam Vidyalaya. He was successful at the Advanced Level Examination but at the same time he had applied for the Clerical Service Examination and on admission to Government Service he was attached to the Irrigation Department which he served in many parts of the country.

Sir, Mr. Thangathurai served Parliament from 1970 to 1977 until the delimitation of constituencies. He was not able to secure nomination in the 1977 General Elections. From 1977 he remained outside formal representative politics, but he contested the District Development Council elections which took place in 1981. Sir, it was one of the most fiercely contested elections. I recall addressing a number of his meetings, campaigning on his behalf within the Trincomalee District. He was successful and he was elected as Chairman of the District Development Council. He had a difficult task of establishing this Council given the complexities of the demographic balance in Trincomalee. With the cooperation of the then District Minister Mr. H. G. P. Nelson, my good Friend, he was able to succeed admirably in administering this Council to the complete satisfaction of all the communities in the Trincomalee District.

The events of July 1983 superseded and Mr. Thangathurai was not able to complete his term. He returned to Parliament after an interval of almost 17 years in 1994 as a Member of Parliament for the Trincomalee District. He served several important Committees of the House including the Public Accounts Committee where his experience and understanding of Public Administration was valued by other members of the Committee. He worked tirelessly for the betterment of his constituents and he was easily accessible to the poorest and the most disadvantaged. He was modest, unassuming and unfailing in his courtesy. He devoted a great deal of time and energy to resolving individual problems of his constituents and to improving the educational, Social and welfare opportunities of the people of Mutur in particular, and the District of Trincomalee in general.

Arunasalam Thangathurai was deeply concerned with issues relating to human rights, although he made no attempt to project himself publicly on this issue. He worked quietly. Human Rights Organizations abroad used to frequently consult him on the ground situation and found that he was well-informed and that he was conscientious and that he was reliable. He never attempted to over-dramatise a situation, as he was committed to ensuring that the facts surfaced and that appropriate steps are taken to ensure accountability and compensation for the victims and for their families. His loss creates a void with regard to this work which would be difficult to fill.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ආචාර්ය නීලන් තිරුචෙල්වම් මහතා]

He was particularly active with regard to the Kumarapuram incident which resulted in the death of 24 persons including a number of women and children. He was responsible for ensuring that those involved in this extra-judicial killing are dealt with in accordance with the law.

On the national question and its resolution Thangathurai displayed all the characteristics of a mature and constructive politician who felt deeply about the sufferings of ordinary people. It is today easy for even an idealistic person in public like to be overcome by the enormity of our problems and to feel tired and exhausted by these developments. Mr. Thangathurai never surrendered to despair or to cynicism. He remained positive and optimistic and never abandoned his abiding faith in human nature. He followed events closely, studied problems and was always willing to engage in the endless and time-consuming discussions in the relentless pursuit of a political consensus. He was always willing to engage in debates and discussions. He had infinite patience and would devote hours persuading the most obstinate and obdurate of persons. He was a kindly and warm person who moved easily with even the humblest of persons. He was deeply devoted to his family – his wife, his son and two daughters – all of whom who have achieved academic distinctions, and his brothers and other siblings. Although he was a very private person his concern and affection for them was always visible. They must feel a terrible sense of loss. We have no words to comfort them except to say that we also share their sense of loss of a valued and respected colleague.

Thank you.

කථානායකතුමා
(சபாநாயகர் அவர்கள்)
(Mr. Speaker)

Order, please ! The Sitting is suspended till 1.30 p.m.

*ඊන් පසු රැස්වීම අ. භා. 1.30 දක්වා අත්හිටුවන ලදින්, අ. භා. 1.30 ට නියෝජ්‍ය කථානායකතුමා [ගරු අනිල් මූණසිංහ මහතා] ගේ සභාපතිත්වයෙන් නැවත පවත්වන ලදී.*

*அதன்படி, அமர்வு பி. ப. 1.30 மணிவரை இடை நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கிற்று. பிரதிச் சபாநாயகர் அவர்கள் [மாண்புமிகு அனில் முனசிங்ஹ] தலைமை வகித்தார்கள்.*

*Sitting accordingly suspended till 1.30 p.m. and then resumed,* MR. SEPUTY SPEAKER [THE HON. ANIL MOONESINGHE] *in the Chair.*

යූ. එල්. එම්. මොහිදීන් මහතා
(ஜனாப் யூ. எல். எம். முஹியத்தீன்)
(Mr. U. L. M. Mohideen)

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரை அவர்களுடைய அனுதாபப் பிரேரணையில் எனது கட்சி சார்பாக உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக நன்றி கூறுகிறேன். அருணாசலம் தங்கத்துரை அவர்கள் கிழக்கு மாகாணத்திலே ஒரு முதிய அரசியல்வாதியாவார். ஈழத்துக் காந்தி என்று சொல்லப்படும் கௌரவ எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இந்த நாட்டிலே உருவாக்கிய 'தமிழரசுக் கட்சி' யின் கொள்கை அடிப்படையிலே வளர்த்த ஓர் அரசியல்வாதிதான் எங்கள் அன்புக்குரிய உறுப்பினர் தங்கத்துரை அவர்கள். அவருடன் குறுகிய காலம் நெருங்கிப் பழகிய போதும் அவருடைய கொள்கையையும் ஆற்றலையும் அனுபவத்தையும் நான் நன்கு அறிந்தவன். கிழக்கு மாகாணத்தின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பல கூட்டங்களிலே நாங்கள் இரண்டு பேரும் பங்குபற்றியுள்ளோம்.

தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவையும் நான் அறிவேன். குறிப்பாக வடக்கு கிழக்கிலே வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுடைய உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலே வளர்ந்த ஓர் அரசியல்வாதிதான் காலஞ்சென்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்கள்.

அவர் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தனது அரசியலைத் தொடங்கினார். திருகோணமலைப் பகுதியில் அரசியலை நடத்தும்போது, அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிக்குத் தலைவராக இருந்து, திருகோணமலை நகரிலும் மூதூரிலும் சேவை செய்தார். மக்களுடைய ஆதரவைப் பெற்றார். இளம் வயதிலேயே இலங்கை அரசாங்கத்தின் இலிகிதர் சேவையில் சேர்ந்து தனது தொழிலைச் செய்தார். தொழில் செய்யும் போதும் அரசியலில் ஈடுபட்ட ஓர் அரசியல்வாதிதான் தங்கத்துரை அவர்கள். அதன் பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்து ஒரு சட்டத்தரணியாக வெளியேறி, திருகோணமலையிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் தனது தொழிலை ஆரம்பித்தார். அதன் பின் இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூரின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, அங்குள்ள மக்களுக்குக் கூடிய சேவை செய்தார். அவர் தனது அரசியல் வாழ்க்கையில் முக்கியமாக தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும்; உடைமைகளைக் காப்பாற்ற வேண்டும்; மண்ணைக் காப்பாற்ற வேண்டும்; தமிழ்க் கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கைகளையே கடைப்பிடித்து வந்தார். அவருடன் நான் பழகிய அந்தக் குறுகிய காலத்திலே நான் அறிந்துகொண்ட விடயம் என்னவென்றால், தமிழ் மக்கள் கல்வியிலே முன்னேற வேண்டும் என்பதற்காகப் பல காரியங்களைச் செய்தமையாகும். இந்தியாவுக்குப் போயிருந்த அவர், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் மூன்று மாடிக் கட்டிடத் திறப்பு விழாவுக்காக அங்கிருந்து வந்திருந்தார். அந்த வைபவத்திலன்றுதான் இந்த ஆபத்து அவருக்கு நடந்தது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலே தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து, ஒற்றுமையாக ஓர் அரசியல் தீர்வைக் காண வேண்டும்; குறிப்பாக, வடக்கு - கிழக்கு மக்களுடைய உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்ற வேண்டும்; அவர்களின் உரிமைகளைக் காப்பாற்றும்போது, அது சிங்கள மக்களைப் பாதிக்கக் கூடாது என்ற கொள்கையுடையவர் அவர். நாட்டைப் பிரிக்கக் கூடாது; இந்த நாட்டிலே தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக எந்தப் பகுதியிலும் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற ஓர் அடிப்படைக் கொள்கையைக் கொண்ட மனிதர்தான் தங்கத்துரை அவர்கள். திரு. தங்கத்துரை அவர்கள் இறந்த இரண்டு கிழமைகளின் பின்னர், அந்தப் பகுதியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் அன்பைப் பெற்றவரும் அவர்களால் விரும்பப்பட்ட ஓர் அரசியல்வாதியுமான ஜனாப் எம். ஈ. எச். மஃரூப் அவர்களும் இறந்துவிட்டார். இன்று கிழக்கு மாகாணத்திலேயுள்ள மக்கள் குறிப்பாக, தமிழ் மக்கள் - வடக்கு - கிழக்கிலேயுள்ள தமிழ் மக்கள், வவுனியாவிலேயுள்ள தமிழ் மக்கள், மன்னாரிலேயுள்ள தமிழ் மக்கள் - மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, பாதுகாப்பற்ற நிலையிலே அந்தத் தமிழ்ப் பொதுமக்கள் படும் கஷ்டத்தைப் பார்க்கும் பொழுது, எங்களுடைய மனம் உருகிக் கொண்டிருக்கின்றது சகோதரர்களே!

இப்படிப்பட்ட சம்பவங்கள் இந்த நாட்டின் வடக்கு - கிழக்கிலே நடக்கக்கூடாது; அதைத் தவிர்க்க வேண்டும் என்ற கொள்கையிலே வளர்ந்த ஒரு மனிதர் தான் திரு. தங்கத்துரை அவர்கள். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை மிக ஆழ்ந்த அறிவுடனும் அனுபவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடனும் மிகவும் ஆணித்தரமாக இந்தப் பாராளுமன்றத்திலே அவர் பேசும்பொழுது எடுத்துக் கூறியுள்ளார். திருகோணமலையிலேயுள்ள மக்கள் படும் கஷ்டம், மூதூரிலேயுள்ள மக்கள்படும் கஷ்டம், கிண்ணியாவிலேயுள்ள மக்கள்படும் கஷ்டம் வவுனியாவிலேயுள்ள மக்கள் படும் கஷ்டம், மன்னாரிலேயுள்ள மக்கள் படும் கஷ்டம், யாழ்ப்பாணத்திலேயுள்ள மக்கள் படும் கஷ்டம் என்பன பற்றி எல்லாம் ஆணித்தரமாக எடுத்துக் கூறிய ஓர் அரசியல் வாதிதான் திரு. தங்கத்துரை அவர்கள். திருகோணமலை நகரத்திலே சிங்கள மக்கள் வசிக்கின்றார்கள்; தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள்; முஸ்லிம் மக்கள் வசிக்கின்றார்கள். அந்த மக்கள் மத்தியிலே ஓர் அமைதி ஏற்பட வேண்டும்; அவர்கள் அன்பாக நடந்துகொள்ள வேண்டும் என்ற ஓர் அடிப்படைக் கொள்கையுடைய மனிதர்தான் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தங்கத்துரை அவர்கள். இப்படிப்பட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கொலையுண்டதையிட்டு எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

The late Mr. Thangathurai was a senior Parliamentarian from the Eastern Province. In his early days he was associated with the Federal Party which was founded by the late Mr. S. J. V. Chelvanayakam. The TULF is a very popular party even today among the Tamil-speaking people of the North and the East. They are not interested in arming the people. They want a peaceful settlement. The Tamil people and the ordinary civilians living in the North and the East want a peaceful settlement to the ethnic problem. The Federal Party and the TULF were established by the late S. J. V. Chelvanayakam, the most respected and populat Tamil leader produced in the 20th century. The Tamil people called him the 'Eelam Gandhi of Sri Lanka'. In any village if you walk in to any Tamil man's house, you will see a photograph of the late S. J. V. Chelvanayakam. That much of respect he commands even after his death. He commands that respect among the Tamil-speaking people of the North and the East.

The supporters of that particular party in our area wants peace to prevail among all the communities living in Sri Lanka – the Sinhala people, the Tamil people and the Muslim people. They are not for the division of this country. They are fighting to satisfy the aspirations of the Tamil community - in the field of language, in the field of land settlement and in the field of education. They want to save the soil of the area. That is the policy of the TULF.

Late Mr. Thangathurai was associated with that party and earlier he represented the Muttur electorate, a multi-member constituency where Tamil and Muslim people live. I am very happy to note that Mr. Thangathurai looked after the interests of the population of Muttur the Tamil and the Muslim People– equally well as a Member of the Trincomalee District which was represented by one Tamil Member, two Muslim Members and one Sinhala Member. Even during his time in Parliament, he helped the Muslim community and the Tamil community, particularly in the field of education and in establishing peace in the Trincomalee District. Such a Member was untimely killed in the most brutal manner.

Within two weeks of his death we observed that another Member representing the same district, the late Mr. Maharoof, the most peaceful man who was loved by all the communities in that area, was also killed. He was not a controversial figure but he was also eleiminated. Mr. Thangathurai stood for the Sri Lankan unity and Sri Lankan sovereignty. The death of such a Member is a great loss to the Sri Lankan community. With those few words I conclude my speech and request the Hon. Speaker to forward a copy of these proceedings to his wife and children.

Thank you.

**ඩී. සිද්ධාර්ථන් මයා**
(திரு. டி. சித்தார்த்தன்)
(Mr. D. Sithadthan)

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, படுகொலை செய்யப்பட்ட திருவாளர் தங்கத்துரை அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இச்சபையின் இரு பக்கங்களிலும் இருக்கின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அனுதாப உரைகளின் மூலம் அவருடைய சேவைகளை உலகத்துக்கு எடுத்துக் கூறுகின்றார்கள். திரு. தங்கத்துரை அவர்கள் கொல்லப்பட்ட அதேநேரத்திலே அவருடன் இன்னும் ஆறு பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். தங்கத்துரை அவர்களுடன், அந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு, அந்தப் பகுதியின் கல்வி முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவிருந்த திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் அவர்களும், அந்தக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபைக் காரியதரிசியாக இருந்தவரும், அந்தப் பகுதியில் பாடசாலைக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு மிக முக்கிய ஆதாரமானவராகவிருந்த பொறியியலாளர் ஒருவருமுட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவரினதும் குடும்பத்தவர்களுக்கும் எனது கட்சியின் சார்பிலும் எனது சார்பிலும் முதலில் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அண்ணன் தங்கத்துரை அவர்கள் கொல்லப்பட்டு இரண்டு வாரங்கள் முடிவதற்குள் திருகோணமலையில் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கின்றார் - ஜனாப் மஃரூப் அவர்கள். அவர் மிகவும் இனியவர்; அனைவரோடும் அன்பாகப் பழகுபவர். அப்படிப்பட்ட மஃரூப் அவர்கள் கூடப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். திரு. தங்கத்துரை அவர்கள் 1970 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தமிழரசுக் கட்சியினூடாகத் தெரிவு செய்யப்பட்டார். பிற்படுத்தப்பட்ட பகுதியாகவிருக்கின்ற அந்த மூதூர்த் தொகுதிக்குத் தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு பல அபிவிருத்தித் திட்டங்களை அவர் மேற்கொண்டார். கல்வியிலே பின்தங்கிய பகுதியாகிய அந்தப் பகுதிக்குக் கல்வி வளத்தைக் கொடுப்பதற்குப் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவந்தார். அந்த மாவட்டத்தை ஒரு முன்னேற்றகரமான மாவட்டமாக்க வேண்டுமென்பதற்காக அம் மாவட்ட அபிவிருத்தி வேலைகளில் அவர் கவனஞ் செலுத்தித் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்துவந்தார். அவர் திருகோணமலை மாவட்டத்தின் வளர்ச்சிக்காக உழைத்தது மாத்திரமன்றி, ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் இழந்துவிட்ட உரிமைகளை மீட்டெடுப்பதற்காகத் தன்னாலான பணிகள் அனைத்தையுமே செய்துவந்தார்.

சாத்வீகப் போராட்டமாகவிருந்த தமிழ் மக்களின் போராட்டம் எண்பதுகளில் அல்லது எழுபதுகளின் கடைசிப் பகுதியில் ஆயுதப் போராட்டமாகக் கூர்மையடைந்தது. 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரங்களின் பின்னர் ஆயுதப் போராட்டம் மிகப் பெருமளவில் வளர்ச்சிகண்டு, அந்தப் போராட்டம் கூர்மையடைந்தது. அந்தக் காலகட்டத்தில் நான் சார்ந்திருக்கின்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் திரு. தங்கத்துரை அவர்கள் தன்னாலான உதவிகளைச் செய்தார். அவருடைய குடும்பத்தின் காணியிலேதான முதன் முதலில் எங்களுடைய முகாம் திருகோணமலையிலுள்ள மூதூரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[[illegible] මහතා]

அமைக்கப்பட்டது. தங்கத்துரை அவர்கள் சாத்வீகப் போராட்டத்தில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டதைக் கண்டு இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்துக்குத் தம்மைத் தயார்படுத்திய நேரத்திலே, தமிழ் மக்களின்—தமிழ் பேசும் மக்களின்—உரிமைகள் வென்றெடுக்கப்படுவதற்கு ஆயுதப் போராட்டமும் ஒரு கருவியாகப் பாவிக்கப்படவேண்டுமென்பதை உணர்ந்து அதற்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். அதன் பின்னர் இன்று, அதாவது 1994 ஆம் ஆண்டில் அவர் பாராளுமன்றத்துக்கு வந்த பின்பு அவருடைய அறிவின் முதிர்ச்சியை நாங்கள் பார்க்கக்கூடியதாகவிருந்தது. பிரச்சினைகளை உணர்வு பூர்வமாக அல்லாமல், அறிவுபூர்வமாக அணுகுகின்ற ஒரு தன்மையை நாம் பார்த்தோம். தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் வடக்கு-கிழக்கிலே இருக்கின்ற யதார்த்த நிலைமைகளை நன்றாக உணர்ந்துகொண்டு, தமிழ்மக்களாக இருந்தாலென்ன, முஸ்லிம் மக்களாக இருந்தாலென்ன, சிங்கள மக்களாக இருந்தாலென்ன அந்த மக்களின் அவலங்களையும் துன்பங்களையும் தெரிந்து கண்டறிந்து—அந்த யதார்த்த சூழ்நிலைகளை நன்றாகப் புரிந்துகொண்டு, அவற்றுக்கேற்ற ஒரு சரியான அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் பாடுபட்டு வந்தார். இறப்பதற்கு அண்மிய காலங்களில் அவர் காட்டிய ஆர்வமும் தீவிரமும் எங்களால் மறக்க முடியாத ஒரு விடயமாகும். இந்தப் பிரச்சினையை அணுகுவதில் அவர் காட்டிய யதார்த்த அணுகுமுறையை நாம் எவருமே மறந்துவிட முடியாது. தமிழ்த் தலைவர்கள் பலர் அநியாயமாகப் பலிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, ஒரு முதிர்ந்த அறிவுமிக்க தலைவரைத் தமிழினம் இழந்திருக்கின்றது. அவருடைய இழப்பை வெறும் அஞ்சலி செலுத்துவதன் மூலம் நாம் ஈடு செய்துவிட முடியாது. அவர் எதற்காக, எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ, எந்த மக்களின் விடுதலைக்காக, எந்த மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டாரோ அந்த மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் தான் உண்மையான அஞ்சலியை நாம் அவருக்குச் செலுத்தியவர்களாவோம்.

எனது கட்சியின் சார்பில் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்து எனது பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன். நன்றி.

**කේ. පී. සිල්වා මහතා**
(திரு. கே. பீ. சில்வா)
(Mr. K. P. Silva)

[illegible]

[illegible] 1970 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

**නියෝජ්‍ය කථානායකතුමා**
(பிரதிச் சபாநாயகர் அவர்கள்)
(Mr. Deputy Speaker)

Will an hon. Member propose the name of Mr. K. P. Silva to take the Chair?

**අල්හාජ් ඒ. එච්. එම්. අස්වර් මහතා**
(அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர்)
(Alhaj A. H. M. Azwer)

I move,

"That Mr. K. P. Silva do now take the Chair."

**සෙයිඩ් අලි සාහිර් මවුලානා මහතා**
(ஜனாப் செய்யித் அலி சாஹிர் மௌலானா)
(Mr. Seyed Ali Zahir Moulana)

*[illegible]*
*ஆமோதித்தார்.*
*Seconded.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රශ්නය විමසන ලදින්, සභා සම්මත විය.
*வினா விடுக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.*
*Question put, and agreed to.*

*ඉක්බිති නියෝජ්‍ය කථානායකතුමා මූලාසනයෙන් ඉවත් වූයෙන්, කේ. පී. සිල්වා මහතා මූලාසනාරූඪ විය.*
*அதன் பிறகு பிரதிச் சபாநாயகர் அவர்கள் அக்கிராசனத்தினின்று அகலவே, திரு. கே. பீ. சில்வா அவர்கள் தலைமை வகித்தார்கள்.*
*Whereupon* MR. DEPUTY SPEAKER *left the Chair and* MR. K. P. Silva *took the Chair.*

**වී. බාලචන්ද්‍රන් මහතා**
*(திரு. வீ. பாலச்சந்திரன்)*
(V. Balachandran)

கௌரவ தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாந் திகதி இரவு சுமார் ஒன்பது மணியளவில் எமது கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ சித்தார்த்தன் அவர்கள் தொலைபேசி மூலம் அமரர் தங்கத்துரை அவர்களின் படுகொலையைப் பற்றித் தெரிவித்தார். அச்சமயத்தில் நான் பேரதிர்ச்சியடைந்தேன். இச்சபையில் எனக்கு அருகாமையில் உள்ள ஆசனத்தில் இருந்து செயற்பட்ட ஒரு மாமனிதப் அவர். அவருடைய இழப்பு, அவர் சார்ந்த கட்சிக்கு மட்டுமல்ல, இலங்கையிலே வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஒரு பேரிழப்பு என்றே நான் கருதுகின்றேன். அவருடைய அரசியல் வாழ்விலே பல சோதனைகளைக் கண்டபோதும், பல சாதனைகளையும் நிலைநாட்டியவர் அவர். அன்னாரை எல்லோரும் 'தங்கா' என்று அன்போடு அழைப்பார்கள். அவரைப் பொறுத்த வரையில், அவர் தன்னை நேசிக்கின்றவர்களிடம் தன்னை ஒரு திறமையான மனிதன் என்ற வகையில் மட்டுமல்லாமல் தன்னுடைய உண்மையான அன்பை வெளிக்காட்டும் வகையிலும் பழகக்கூடிய ஒருவர். சிறிது காலமே அவரோடு நெருங்கிப் பழகியிருந்தாலும் கூட, அவருடைய அன்பை, அவருடைய பெருமதிப்பை நன்கு அறிந்தவன் நான்.

1936 ஆம் ஆண்டு மூதூர் தொகுதியைச் சேர்ந்த கிளிவெட்டி எனப்படும் கிராமத்திலே பிறந்த திரு. தங்கத்துரை அவர்கள், ஆரம்பக் கல்வியைக் கிளிவெட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை வந்தாறுமூலை மத்திய கல்லூரி மற்றும், யாழ். ஸ்ரான்லி மத்திய கல்லூரியிலேயும் கற்றார். பாடசாலைப் பருவத்திலே, மாணவர்களுக்குத் தலைமைதாங்குகின்ற தலைமைப் பொறுப்புக்களைப் பெற்ற ஒரு நல்ல மாணவனாகத் திகழ்ந்த ஒருவர் அவர். தன்னுடைய படிப்பை 1956 ஆம் ஆண்டு முடித்துக் கொண்ட அவர், அரசாங்க எழுதுவினைஞர் சேவையிலே சேர்ந்து, நீர்ப்பாசன இலாகாவிலே கடமையை ஏற்றார். முதலில் தனது சொந்த ஊரிலே சேவையை ஆரம்பித்த திரு. தங்கத்துரை அவர்கள், நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு, இரத்மலானை போன்ற இடங்களிலே தனது சேவையைத் தொடர்ந்து, ஒரு திறமையான நிர்வாக உத்தியோகத்தர் என்ற பெயரைப் பெற்றவர். 1964 ஆம் ஆண்டு சந்திரேஸ்வரி சுப்பிரமணியம் என்ற பெண்ணை மணந்து நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையானார்.

அரசாங்க சேவையிலிருந்து 1970 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று தமிழரசுக் கட்சியிலே சேர்ந்து, பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மூதூர் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தினார். 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை அரசியல் வாழ்வில் இருந்து ஒதுங்கி தென்னிந்தியாவிலே வாழ்ந்த அவர், அமரர்களான அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களினதும் அண்ணன் யோகேஸ்வரன் அவர்களினதும் மறைவுக்குப் பின்பு மீண்டும் இலங்கைக்கு வந்து, தனது கட்சியின் முழு நேரத் தொண்டராக ஈடுபட்டு 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரானார்.

5 – D 045635 (97/07)

திரு. தங்கத்துரை அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் எந்தவொரு பேதமுமின்றிச் சேவை செய்தவர். பெரியவராக இருந்தால் என்ன, சிறியவராக இருந்தால் என்ன, அல்லது கஷ்டப்படுகின்றவர்களாக இருந்தால் என்ன, அத்தனை மக்களுக்கும் தன்னுடைய சேவை போய்ச் சேர வேண்டும் என்ற ஒரு மனப்பான்மை உடையவர் அவர். அது மட்டுமல்ல, தன்னுடைய தொகுதியிலே பின்தங்கிய பகுதிகளிலேயுள்ளவர்களது பிள்ளைகளுடைய கல்வி வளர்ச்சியடைய வேண்டும் என்று எண்ணிய காலகட்டத்தில், அவர்களுடன் சேர்ந்து அந்தப் பிள்ளைகளுடைய கல்வி வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டார். அதுமட்டுமல்ல, தமிழ் பேசுகின்ற மக்கள் எத்தனையோ இக்கட்டான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பல போர்க்கணைகளைத் தொடுத்து, அந்த மக்களுடைய கஷ்டங்களை இந்நாட்டுக்கு எடுத்தியம்பியவர். அன்னாருடைய இழப்பு ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாகும். அன்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலே அவருடன் சேர்ந்து ஐந்துபேர் இறந்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் தங்கத்துரை அவர்களுடைய குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி அதிபர் இராமேஸ்வரி தனபாலசிங்கத்தின் குடும்பத்தினருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திரு. கணேசலிங்கம் குடும்பத்தினருக்கும் நாமகள் வித்தியாலய அதிபர் எஸ். ஜோசெப் அவர்களது குடும்பத்தினருக்கும் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி உதவி அதிபர் திரு. ஜீவரத்தினம் குடும்பத்தினருக்கும் பொறியியலாளர் திரு. இரத்னராஜா குடும்பத்தினருக்கும் எனது கட்சியின் சார்பாகவும் எனது குடும்பத்தின் சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தங்கத்துரை அவர்களின் குடும்பத்தாரை எனக்குத் தெரியாவிட்டாலும்கூட, அவருடைய மகனான அகிலனை எனக்கு நன்கு தெரியும். அமரர் தங்கத்துரை அவர்கள் பாராளுமன்றத்தில் எனக்கு அருகாமையிலுள்ள ஆசனத்தில் மட்டுமல்ல, மாதிவெல வீடமைப்புத் திட்டத்திலும் கூட எனது வீட்டுக்குப் பக்கத்திலேயே வசித்து வந்தவர். அந்த வகையில் அவருடைய மகன் அகிலனை எனக்கு நன்கு தெரியும். அவருக்கும் அவருடாக அவருடைய குடும்பத்தாருக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிளிவெட்டி மண்ணிலே தவழ்ந்து விளையாடி, மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, அதன் பின் சம்பந்தரும் சுந்தரரும் போற்றிப் பாடிய, திருக்கோணேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் திருத்தலத்தைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் அந்த மக்களினால் தத்தெடுக்கப்பட்ட 'தங்கா' அவர்களின் இழப்பையிட்டு, திருகோணமலை மாவட்ட மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

**ගරු රනිල් වික්‍රමසිංහ මහතා (විරුද්ධ පාර්ශවයේ නායකතුමා)**
*(மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்ஹ - எதிர்க்கட்சி முதல்வர்)*
(The Hon. Ranil Wickremasinghe – Leader of the Opposition)

I would like to thank the Chair for giving me this opportunity. As the Leader of the Opposition and as the leader of the UNP I want to express our sorrow on the tragic death of our Colleague, Mr. Thangathurai. I would not deal at length with the political history of Mr. Thangathurai. He had been a member of parliament in 1970 and again he entered this House in 1994. In between he served in the district Development Council. Mr. Thangathurai's name is synonymous with Trincomalee. He was liked by the people of Trincomalee, whether they be Tamils, Muslims or Sinhalese, he has friends in all the communities. He helped the people of Trincomalee. mr. Thangathurai's life was devoted to the service of the people he represented in that district. He was also committed to his party, the Tamil United Liberation Front. We have all



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ගරු රනිල් වික්‍රමසිංහ මහතා]

known Mr. Thangathurai and worked with him despite whatever political views we held. Whether we agreed with him or disagreed with him everyone liked him as a person.

It was only a few weeks back that he spoke to me and wanted to be one of the delegates to the IPU conference in Cairo. I think, we all agreed that he should be one of the members to represent the Opposition. But unfortunately, he did not get that opportunity of going to Cairo. Mr. Thangathurai believed that a political solution was necessary for the problems of the North and the East. There were aspects on which we in the UNP agreed with him and there were also aspects on which we did not agree but nevertheless he was a friend to all of us. He took an active part and Mr. Thangathurai was always a believer in democracy and in a united Sri Lanka. Though we differed on the paths – and in this House all of us do on many topics – Mr. Thangathurai's commitment to the principles could not be in anyway questioned. His death has caused a void in the politics of Muttur. His death has caused a void in the leadership, the political leadership of Trincomalee District, together with late Mr. Maharoof. Both of them were the leading political figures of the Trincomalee District. What we have to question today is the nbumber of lives of Parliamentarians that have been lost, that have been sacrificed to uphold democracy. Both the TULF and the United National Party are no strangers to this. A number of Members of Parliament and ex-members of Parliament from both sides have already given their lives to the causes that they believed in. The TULF has had its leader and many other sitting members killed, so has the UNP.

So we are at a time when democracy is under threat from different quarters in this country and those who believe in Parliamentary democracy, those who believe in this way of life, are necessarily exposed to the risks from outside. It is our hope that Mr. Thangathurai's death is not a death in vain and that he like others have finally paid the price in the hope that democracy and peace will prevail in Sri Lnaka.

I would like our views to be conveyed to Mrs. Thangathurai and the members of the late Mr. Thangathurai's family. His death is a loss to this House, is a loss to his party and to all those who believe in the democratic way.

Thank you.

පී. පී. දේවරාජ් මහතා
(திரு. பீ. பீ. தேவராஜ்)
(Mr. P. P. Devaraj)

மதிப்புக்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் இன்று காலையிலிருந்து நாம் நாவலத்த எல்லாவல அவர்களுடைய படுகொலைக்கு எங்களுடைய அனுதாபங்களைத் தெரிவித்தோம். இப்போது தங்கத்துரை அவர்களைப் பற்றிப் பேசுகின்றோம். அதேவேளையில் நம்மத்தியிலே நடமாடிக்கொண்டிருந்த மஹரூப் அவர்களும் மறைந்துவிட்டார். இப்படித் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது,- அடுத்தடுத்து நடைபெறும் இப்படிகொலைகளை நோக்கும்போது,- நமது நாடு பண்டைய காலத்தில் ஒரு சாபக்கேட்டினால் பீடிக்கப்பட்டு மீளமுடியாதேவார் அழிவுப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றதோ என்று ஓர் எண்ணம்தான் ஏற்படுகின்றது.

தங்கத்துரை அவர்கள் எந்நேரமும் புன்னகை தவழ இந்தச் சபையை அலங்கரித்துக்கொண்டிருந்த ஒருவராவார். இன்முகத்தோடு அனைரோடும் பேசி, எவருடைய உள்ளமும் நோகாதவண்ணம் அவர்களுடன் பழகித்தனது கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே அவர் வல்லவராகத் திகழ்ந்தார். பல பாராளுமன்ற அங்கத்தவர்களை நாம் இந்தச் சபையிலே பார்க்கின்றோம். எந்த நேரமும் கையிலே கோவைகளைத் தூக்கிக் கொண்டு ஒவ்வோர் அமைச்சர்களிடமும் சென்று தன்னுடைய தொகுதி மக்களின் நலன்களைக் கவனிப்பதில் அவரைப்போன்று வெகுசில அங்கத்தவர்களே இச் சபையில் உள்ளனர். அவ்வளவு சிறப்பாகப் பணியாற்றியவர் தங்கத்துரை அவர்கள். எந்தக் கருத்தையும் பண்புடன் அடக்கமாகச் சொல்லும் ஒரு திறனை அவர் பெற்றிருந்தார். அதனால் தான் சபையின் அங்கத்தவர்கள் மத்தியிலே அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது அப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதர் ஏன், இப்படிப்பட்ட ஒரு மரணத்தை எய்தவேண்டுமென்ற ஒரு கேள்வி நம்முடைய மனங்களிலே விஸ்வரூபம் எடுக்கின்றது. ஏன் இந்தக் கொலைகள்? ஏன் இந்த அவலங்கள்? ஏன் நம் நாடு இத்தகைய அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றதென்ற சோகம் நம்மைப் பீடிக்கின்றது. எமது உள்ளத்திலே கவலையை ஏற்படுத்துகின்றது.

சபைத் தலைவர் அவர்களே, என்றோ ஒரு நாள், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் வன்முறை என்றவொரு சிறு விதையை யாரோ விதைத்து விட்டார்கள்; ஓர் அத்தியாயத்தை அன்று திகழ்த்திவிட்டார்கள். அந்த விதை வேரூன்றி வளர்ந்து இன்று ஒரு விஷ விருட்சமாக மாறிவிட்டது. அது கிளைகள் பல விட்டு இந்த நாட்டையே சூழ்ந்துகொண்டிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் அதனுடைய விஷக்காற்று வீசிக்கொண்டிருக்கின்றது. அது நம்நாட்டையே ஆட்டங்காண வைத்துக்கொண்டிருக்கின்றது. அடுத் தடுத்துக் கொலைகள்! நண்பர்கள் மறைந்துகொண்டிருக்கிறார்கள். இப்படியே சென்றால் இந்த ஜனநாயகத்திற்கு அர்த்தமென்ன? ஒருவர் தன்னுடைய கருத்தை எடுத்துரைக்கும் உரிமையில்லாதிருந்தால், நாகரிகம் எங்கே இருக்கின்றது? நாகரிகமற்ற ஒரு சமுதாயமாக, பண்பற்ற ஒரு சமுதாயமாக நாம் மாறிக்கொண்டிருக்கின்றோம். நம்மை எதிர்த்துப் பேசுபவர்களை நாம் துப்பாக்கியால் சுடப் பார்க்கின்றோம். நம்மோடு ஒத்துப்போகாதவர்களை வன்முறையைப் பிரயோகித்த அடக்கப் பார்க்கின்றோம். இதுதான் தம் நாடு சென்றுகொண்டிருக்கின்ற திசை. படிப்படியாக மனிதகுலம் முன்னேற்றமடைந்து நாகரிகத்தை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்க வேண்டும். ஆனால் நம்து நாடோ நாகரிகம் என்ற நிலையிலிருந்து மாறி, வேறொரு திசையில் சென்று கொண்டிருக்கின்றது. எங்கே பார்த்தாலும் அழிவும் இரத்தக்களரியும் நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக் கின்றன. வன்முறையினால் உலகில் சமாதானத்தை ஏற்படுத்தவோ நல்லதைச் செய்யவோ முடியாதென்பதை நமது முன்னோர்கள், பெரியோர்களெல்லோரும் எத்தனையோ தடவை கூறியுள்ளார்கள். எத்தனையோ போர்களில் வெற்றிகண்ட மாமன்னன் அசோகன், இறுதியாக வெற்றிகொண்ட போர்க் களத்துக்குச் சென்று அங்கே சிதறுண்டு கிடந்த தலைகளையும், தலைவேறு உடல்வேறாகி மரணித்துக் கிடந்தவர்களையும் பார்த்துச் சோகமுற்று இந்த இரத்தக்களரியைத் தன்னால் இனியும் பார்க்க முடியாதென்று வருந்தி, மனிதர்களின் உள்ளத்தைக் கவரவேண்டுமென்றால் சமாதானம்தான் - அன்புதான் சிறந்த வழியென்பதை அன்றுணர்ந் தான். அவனை ஆட்கொண்ட அந்தப் பௌத்த மதக் கருத்துக்கள், போதனைகள்தாம் இந்த நாட்டில் வேரூன்றியிருக்கின்றன. அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நல்லவர்களாக வாழ வேண்டும். நாகரிகம் வளர வேண்டுமென்று ஒரு பக்கத்தில் எண்ணிக்கொண்டிருந்தாலும் மறுபக்கத்தில் நாகரிகமற்ற செயல்கள் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அது ஏனென்று கேட்கத் தோன்றுகின்றது. இதற்கொரு முடிவே இல்லையா என்ற வினா நம் மனதிலே எழுகின்றது.

தங்கத்துரை அவர்கள் ஓர் அடக்கமுள்ள, பண்புள்ள மனிதர். தன்னுடைய கருத்துக்களை எல்லோருக்கும் அவர் கோபத்தோடன்றி இன்முகத்தோடு சொன்னார். ஒருவருடன் கருத்து வேறுபட்டால், அக்கருத்து வேறுபாடு பற்றி அவரிடம் பண்புடன் எடுத்துரைக்கும் வல்லமை பெற்றிருந்தார். அவ்வாறு எமது கருத்தைச் சொல்வதற்கு உரிமையில்லாவிட்டால், நாம் வாழ்வதில்தான் என்ன அர்த்தம்; இந்தச் சபை இருந்துதான் என்ன அர்த்தம் என்று கேட்கத் தோன்றுகிறது. இந்தச்சபை, பாராளுமன்றம், ஜனநாயகம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்? எம்முடைய கருத்துக்களை பண்புடன் அடக்கமாக விளக்கிச் சொல்வதற்கு சந்தர்ப்பம் இல்லாவிட்டால் நாம் இருந்து என்ன பயன்?

நமது நாடு ஏதோ ஓர் அடித்தளத்தில் ஆட்டங்கண்டு கொண்டிருக்கிறது. எங்கோ ஒரு பெரிய தவறு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல பல கொலைகள் அடுத்தடுத்து நடந்து கொண்டிருக்கின்றன. இரத்தக்களரி இன்னும் நிரம்பிக் கொண்டிருக்கிறது. திரு. தங்கத்துரை அவர்களுடைய சாவை ஒரு தனி மனிதருடைய சாவாக மாத்திரம் நாம் கருத முடியாது. ஒரு சமுதாயத்தின் சாவைப் பிரதிபலிக்கின்ற ஒரு நிகழ்ச்சியாகத்தான் நாம் இதனைப் பார்க்க வேண்டியிருக்கின்றது. திரு. தங்கத்துரை அவர்களின் மறைவுக்குப் பின் மறைந்த நண்பர் மஃரூப் அவர்களும் இன்முகத்துடன் பழகக்கூடிய, அடக்கமுள்ள, யாருடனும் நட்புறவு கொள்ளக்கூடிய பண்புகளைப் பெற்றவர். இவர்கள் ஏன், இப்படிக் கொல்லப்படுகின்றார்கள்? ஏன், இவர்கள் இப்படிப் படுகொலைக்காளாகின்றார்கள்? இந்த நிலைமை மீட்டெடுக்க இந்த நாட்டிலுள்ள அனைத்துச் சக்திகளும் ஒன்றிணைய வேண்டும். அடித்தளத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சமாதானம் என்று பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதில் நாம் அனைவரும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்.

எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி அல்லது தமிழர் விடுதலைக்கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வேறுபாடுகள் இங்கே இருக்கின்றன. ஆனால், நாம் எல்லோரும் மனிதர்கள்; இந்த நாட்டின் தலைவர்கள்; இந்த நாட்டை நல்ல வழியில் இட்டுச் செல்ல வேண்டியவர்கள். எனவே, தங்கத்துரை அவர்களுடைய படுகொலை, மஃரூப் அவர்களுடைய படுகொலை என்பன எமக்கு எதையாவது உணர்த்தியிருக்கு மென்றால், உடனடியாக நாம் செயற்படவேண்டும். இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எக்காரணத்தைக் கொண்டேனும் செயற்பட வேண்டும். இனியும் தாமதிக்க முடியாது. இல்லாவிட்டால் இந்த நாடு அழிவை நோக்கியே சென்றுவிடும். அழிவிலிருந்து நாட்டை மீட்கவே முடியாது போய்விடும். அந்தக் காலத்திலே ஏற்பட்ட ஒரு சாபக்கேடு எம்மைப் பீடித்து, இந்த நாட்டையே இல்லாதாக்கிவிடும் ஒரு நிலை தான் ஏற்படும். திரு. தங்கத்துரை அவர்கள் கொலையுண்டபோது, அப்பாவியான, ஒன்றுமறியாத ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபரும் மற்றும் சிலரும் கொலையுண்டிருக்கிறார்கள். அது போன்று தான் மற்றக் கொலையின் போதும் நடந்திருக்கின்றது. பக்கத்தில் நின்ற காரணத்திற்காக, நாட்டிற்கு நன்கு சேவை செய்தவர்கள், அரசியலில் ஈடுபடாதவர்கள், ஒன்றிலும் சம்பந்தப்படாதவர்கள் கூட அநியாயமாகக் கொலையுண்டு விடுகிறார்கள். அத்தகைய சம்பவங்கள்தாம் நடந்து கொண்டிருக்கின்றன. எத்தனை பேர்! அத்தனை பேர்!! எனவே இக்கொலைகள் எமக்கு எதையாவது உணர்த்துகின்றதென்றால், இந்த நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் இனியும் தாமதிக்கக் கூடாது. தங்கத்துரையின் மரணத்தையிட்டு நாம் இங்கு அனுதாபம் தெரிவிப்பதோடு நின்றுவிடுவோமானால், இந்தச் சபைக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். அல்லது 'மஃரூப்பின் மறைவுக்காக நாம் கவலைப்படுகின்றோம்' என்று தெரிவித்து விட்டால் மாத்திரம் போதாது. அல்லது 'நாலந்த எல்லாவல மறைந்து விட்டார்' என்று நாம் இங்கே கண்ணீர் அஞ்சலி செலுத்தினால் மாத்திரம் போதாது. இவை எமக்குப் பெரும் படிப்பினைகள். அடிக்கடி நடக்கின்ற இத்தகைய படுகொலைகள் ஒரு பாரிய பொறுப்பை நம்மீது சுமத்துகின்றன. எனவே, இவை எமக்குப் படிப்பினைகளாக அமையட்டும். இனியும் நாம் தாமதிக்க முடியாது. எனவே, உடனடியாக அனைவரும் ஒன்றுபட்டு ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வர வேண்டும். தங்கத்துரையின் இந்த அனுதாபத் தீர்மானத்திலே எதையாவது உறுதி பூணுவதாக இருந்தால், சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியிலே அனைவரும் சகல வேற்றுமைகளையும் மறந்து ஒன்றுபடுவதற்கே உறுதி பூண வேண்டும்.

அமரர் தங்கத்துரை அவர்களுடைய குடும்பத்தினருக்கும், இந்தச் சம்பவத்தின் போது அனாவசியமாகக் கொலையுண்ட ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர், மற்றும் மரணமடைந்த ஏனையவர்களின் குடும்பத்தினருக்கும் என்னுடைய அனுதாபத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

**එම්. එන්. අබ්දුල් මජීඩ් මහතා**
(ஜனாப் எம். என். அப்துல் மஜீத்)
(Mr. M. N. Abdul Majeed)
பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

அண்ணன் தங்கத்துரை அவர்களின் மறைவு என்னை, ஆச்சரியத்திலும் கவலையிலும் ஆழ்த்தியது என்பதை இந்தச் சபையிலே நான் முதற்கண் கூற விரும்புகின்றேன். அண்ணன் தங்கத்துரை அவர்கள் 1970 ஆம் ஆண்டு எனது தந்தையாரோடு மூதூர் தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு, தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களென மூவின மக்களுக்கும் சரிசமமாகச் சேவை செய்த ஒருவர் என்றால் அது மிகையாகாது.

அது மட்டுமல்ல, 1981 ஆம் ஆண்டிலே நடந்த அபிவிருத்திச் சபைத் தேர்தலிலே திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அவர், அந்த மாவட்டத்திற்குப் பல அரிய சேவைகளைச் செய்தார். 1994 ஆம் ஆண்டிலே நடைபெற்ற தேர்தலிலே, திருகோணமலை மாவட்டத்திலே இருந்து தெரிவு செய்யப்பட்ட அண்ணன் தங்கத்துரை அவர்களும் நானும் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைந்த தலைவர்களாக அதாவது, அண்ணன் தங்கத்துரை அவர்களும் நானும் ஒன்று சேர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வந்தோம் என்பதை இந்தச் சபையிலே நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

திரு. தங்கத்துரை அவர்கள் எப்போதும் இனிய சுபாவத்துடனும் தெளிந்த உள்ளத்தோடும் தெளிவான கருத்துக்களைக் குறிப்பிடுவார். திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்காகப் பல்வேறு திட்டங்களை அவர் முன் வைத்தார். அந்தத் திட்டங்கள் இப்போது செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் இந்தச் சபையிலே நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். திருகோணமலை மாவட்டம் என்பது, தமிழ் மக்களும் முஸ்லிம்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[එම්. එස්. අමීර් අලී මහතා]

சிங்களவர்களும், சரி சமமாக, ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்ற ஒரு மாவட்டமாகும். திரு. தங்கத்துரை அவர்கள் இந்த மாவட்டத்திலே இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார் என்பதையும் நான் இந்தச் சபையிலே கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அது மட்டுமல்ல, திரு. தங்கத்துரை அவர்கள் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலே வாழ்கின்ற தமிழ் மக்களின் உரிமைக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார் என்றால் அது மிகையாகாது. அவருக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்பதைப் பற்றி நான் சிந்தித்துப் பார்க்கின்றேன். என்னோடு அவர் நெருங்கிப் பழகும் போது, நாங்கள் எவ்வாறான செயற்றிட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி நல்ல முறையிலே தெளிவாக என்னிடம் எடுத்துரைப்பார். திருகோணமலை மாவட்டத்திலே அபிவிருத்தித் திட்டங்களை எப்படி நாங்கள் நடைமுறைப்படுத்த முடியும் என்பது சம்பந்தமாக நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து அடிக்கடி பேசிக் கொள்வோம்.

திரு. தங்கத்துரை அவர்கள் கொலை செய்யப்பட்டு இரண்டு கிழமைகளின் பின்பு, திருகோணமலை மாவட்டத்தின் இன்னுமொரு பாராளுமன்ற உறுப்பினரான ஜனாப் மஃரூப் அவர்களும் கொலை செய்யப்பட்டார். இருபது வருட காலமாக அந்த மாவட்டத்தில் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த அவரின் மறைவும் எமக்கு குறிப்பாக, எனக்கு ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று தான் நான் கூற வேண்டும். தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தால், அதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி நாங்கள் நல்ல முறையிலே தெளிவாக ஆராய்வது மிகப் பொருத்தம் என்றுதான் நான் கருதுகின்றேன். இந்த நாட்டிலே நடைபெறுகின்ற இப்படிப்பட்ட படுகொலைகளுக்கு, இப்படிப்பட்ட அரசியல் கொலைகளுக்கு என்ன பரிகாரம் என்பதை நாங்கள் எல்லோரும், எல்லாக் கட்சிகளும், கட்சி பாகுபாடற்ற முறையிலே ஒன்று சேர்ந்து சிந்தித்து ஒரு முடிவை எடுப்பது மிகவும் சாலப் பொருத்தம் என்றுதான் நான் கருதுகின்றேன்.

அரசியல் இலாபத்திற்காக எங்களுக்கிடையிலே பிரச்சினைகளை ஏற்படுத்தி, அதன் காரணமாக இந்த நாட்டிலே இரத்த ஆறு ஓடுவதை நிச்சயமாக நிறுத்த வேண்டும். இது நிறுத்தப்பட்டால் மட்டுந்தான் இந்த நாட்டிலேயுள்ள எல்லா மக்களும் சமாதானமாக, சுபிட்சமாக, சந்தோஷமாக வாழ முடியும். அப்படிப்பட்ட ஒரு நிலை எப்போது ஏற்படும்? அந்த ஒரு சுமுகமான நிலையை நாங்கள் கொண்டு வருவது மிக, மிக அவசியமும் அவசரமும் என்று தான் நான் கருதுகின்றேன்.

தொடர்ந்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றால், இந்த நாட்டிலே அமைதி இருக்கிறதா? பாதுகாப்பு இருக்கிறதா என்பதை நாங்கள் நன்கு சிந்திக்க வேண்டும். இந்த அமைதியை, பாதுகாப்பை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்துவதே, எல்லாக் கட்சிகளினதும், இந்த அரசாங்கத்தினதும் முதல்கடமை என்று நான் கருதுகிறேன். அன்னைன் தங்கத்துரை அவர்களின் மறைவு, திருகோணமலை மாவட்ட மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கே ஒரு பேரிழப்பாகும். அந்தப் பேரிழப்பை நிச்சயமாக எங்களால் ஈடு செய்ய முடியாது. அன்னாரின் பாரியார் அவர்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் திருகோணமலை மாவட்ட மக்களின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன், நன்றி.

සෙයිඩ් අලී සාහිර් මවුලානා මහතා
(ஜனாப் செய்யித் அலி சாஹிர் மௌலானா)
(Mr. Seyed Ali Zahir Moulana)

Sir, let me associate myself with you and the other Members of Parliament to voice my condolence in this august Assembly today for a person who had been championing the course of democracy in these terrible moments in the North Eastern area for over a period of two decades.

The late Mr. Thangathurai was so near and dear to me. I have known him since my schooldays. He was a past pupil of Vantharamoolai Central College where I too was a student. I have known and learnt about his services to the Eastern Province and his yeomen humanitarian service to the people, the development of education in the area and varied interests specially towards the upliftment of the North Eastern Province, particularly to the Trincomalee Disrict.

When we talk of the Trincomalee District we are reminded of its strategic importance both for Sri Lanka and the world. It has both a historical and a geographical importance well-known to the International world and our beloved the late Thangathurai represented this area.

Indeed he was a mature politician and when I paid my last respects to him two weeks ago inTrincomalee, I was accompanied by another well matured and good – matured senior politician in the Trincomalee District, the late Mr. Maharoof, who was a good Friend of Mr. Thangathurai. On that fateful day, the late Mr. Maharoof had on behalf of our Opposition Leader, the Hon. Ranil Wickremasinghe, expressed sincere feelings of sympathy and bade farwell to late Mr. Thangathurai. But today the late Mr. Maharoof is not here to speak on the Vote of Condolence that we express on behalf of Mr. Thangathurai.

I feel now that as the only Member of Parliament who is remaining as a Tamil-speaking Member of our party in the region it is my duty and it is most appropriate, Sir, to voice my feelings and sentiments to this august Assembly on a Vote of Condolence to my beloved and dear Friend the late Mr. Thangathurai.

கௌரவ தலைவர் அவர்களே, பரந்த நோக்கும் இன, மத பேதமற்ற முறையில் மக்களை மனிதர்களாக மதிக்கும் பண்பும் கொண்ட, தனக்கென வாழாது, தான் சார்ந்த இனத்துக்கென்று வாழாது, சகல இன மக்களையும் சமமாக எண்ணும், அதேசமயத்தில் தன்னினம் நசுக்கப்பட்டபோது, அதற்கெதிராகத் துணிச்சலுடன் குரல் கொடுத்து உரிமைக் குரல் எழுப்பிய ஓர் உத்தமரை நாம் இங்கு நினைவு கூர்ந்துகொண்டிருக்கின்றோம்.

திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவருமான திரு. தங்கத்துரை அவர்கள், உண்மையிலேயே ஓர் உத்தமராகத் திகழ்ந்தவர். எவருடனும் மனந்திறந்து பேசுகின்ற அவரின் இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாவத்தை இச்சந்தர்ப்பத்தில் நான் எண்ணிப் பார்க்கின்றேன். நீண்ட காலம் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த திரு. தங்கத்துரை அவர்கள், ஆரம்பத்தில் தந்தை செல்வா அவர்களுடன் தோளோடு தோள் நின்று பல அஹிம்சைப் போராட்டங்களிலும் சத்தியாக்கிரகங்களிலும் ஈடுபட்டார். தமிழ் மொழிக்காகவும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும் இச்சபையில் அநேக சந்தர்ப்பங்களில் அவர் குரல் கொடுத்திருக்கிறார். பல வாதப்பிரதிவாதங்களிலும் பங்கு கொண்டிருக்கின்றார்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராகத் திகழ்ந்த அவர், தனது இளம் பருவத்திலேயே திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. வே. வன்னியசிங்கம், திரு. கே. பீ. இரத்தினம், திரு. எஸ். எம். இராசமாணிக்கம், திரு. எம். இராஜவரோதயம், திரு. என். இராஜதுரை போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழகினமை, அவர் அரசியலில் பல அனுபவங்களையும் பல தெளிவான விளக்கங்களையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்தது. இச் சபையிலுள்ள அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அமரர் தங்கத்துரை அவர்களைப் பற்றி நிறையப் புரிந்து கொண்டிருப்பார்களென நான் நினைக்கின்றேன். என்னைப் பொறுத்தவரை, "உரிமை" என்று வரும்போது மட்டும் உணர்ச்சி வசப்பட்டு அவர் குரல் ஓங்கி ஒலித்ததையும், மற்றைய நேரங்களிலெல்லாம் மிக அமைதியாக அனைவருடனும் மனம்விட்டுப் பேசி வெகு சகஜமாக அவர் பழகியதையும் நான் என்றும் மறக்க முடியாது. அவர் பெயரில் மட்டும 'தங்கத்துரை'யாக விளங்கவில்லை; சுபாவத்திலும் தங்கமாகவே மிளிர்ந்தார். கௌரவ தலைவர் அவர்களே,

"தோன்றிற் புகழொடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற திருக்குறளின் வரிகள் திரு. தங்கத்துரையைப் பொறுத்தவரை மிகவும் பொருத்தமாகவே அமையுமென நம்புகின்றேன். சாதாரண ஒரு குடும்பத்தின் மைந்தனாகப் பிறந்து, தனது ஆரம்பக் கல்வியைத் தன் சொந்தக் கிராமத்திலேயே பயின்று, பின்னர் [illegible] மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்கல்வி கற்று, சர்வகலாசாலை சென்று, பட்டம் பெற்று, பாராளுமன்ற உறுப்பினராகி, பல தியாகங்களைப் புரிந்து, சிறைவாசம் அனுபவித்து, முடிவில் சிந்திய இரத்தத்துடன் ஒரு தியாகியாகவே தங்கத்துரை அவர்கள் தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டுள்ளார்.

அமரர் தங்கத்துரை அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக நான் மறைந்த மற்றொரு திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம். ஈ. எச். மஃரூப் அவர்களுடன் சென்றிருந்தேன். திரு. தங்கத்துரை அவர்களின் பூதவுடலைக் கண்ட மஃரூப் அவர்கள் கண்கலங்கியதை என்னால் அவதானிக்க முடிந்தது. இன்று அவரும் எம்மிடையே இல்லையென்பது மிகவும் வேதனைக்குரிய விடயமே.

கௌரவ தலைவர் அவர்களே, ஒரு நல்ல கணவரை இழந்து தவிக்கும் திருமதி தங்கத்துரை அவர்களுக்கும், ஒரு பாசமுள்ள தந்தையைப் பிரிந்து துயரில் வாடும் அன்னாரின் பிள்ளைகளுக்கும், சமூகத்துக்காகக் குரல் கொடுத்து உயிரைத் தியாகம் புரிந்த ஓர் உத்தமரைப் பறிகொடுத்துத் துயரத்திலாழ்ந்துள்ள அவரின் உறவினர்களுக்கும் திருகோணமலை மாவட்ட மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மேலும், அமரர் தங்கத்துரை அவர்கள் இறந்தபோது அவருடன் சேர்ந்து உயிர்த்தியாகம் புரிந்த மற்றும் அனைவரினதும் குடும்பங்களுக்கும் என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

ගරු රිචඩ් පතිරණ මහතා (අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යතුමා සහ ආණ්ඩු පක්ෂයේ ප්‍රධාන සංවිධායකතුමා)

(மாண்புமிகு றிச்சட் பத்திரன – கல்வி, உயர் கல்வி அமைச்சரும் பிரதம அரசாங்கக் கொறடாவும்)

(The Hon. Richard Pathirana – Minister of Education and Higher Education and Chief Government Whip)

මූලාසනාරූඪ ගරු මන්ත්‍රීතුමනි, පාර්ලිමේන්තුවේ ඉතාම දක්ෂ ඒ වගේම අපේ හිතවත් ගරු මන්ත්‍රීවරයකු හැටියට කටයුතු කළ ඒ. තංගතුරෙයි මැතිතුමා ඉතාමත්ම ශෝකජනක ලෙස අභාවයට පත්වීම අප කාගේත් බලවත් කණගාටුවට කාරණයක්. මා එතුමා හඳුනා ගත්තේ එතුමා මේ පාර්ලිමේන්තුවට පත් වී පැමිණියාට පසුවයි. 1994 අවුරුද්දේ අගෝස්තු මස සිට එතුමා මිය යන තුරු ඉතාම හිතවත් ගරු මන්ත්‍රීවරයකු හැටියට අප සමඟ කටයුතු කළා.

විශේෂයෙන්ම අධ්‍යාපන ක්ෂේත්‍රය පිළිබඳව එතුමා දැක්වූයේ පුදුමාකාර උනන්දුවක්. නිතර අපේ අමාත්‍යාංශයට එමින් ඒ වගේම මා හමු වෙමින් ඒ පළාතේ පාසල් දියුණු කරන්න එතුමා අති විශාල මුදලක් ලබා ගත්තා. ඒ වගේම එතුමාගේ විමධ්‍යගත අරමුදල්වලින් විශාල ප්‍රමාණයක් ඒ ප්‍රදේශයේ අධ්‍යාපන දියුණුව වෙනුවෙන් යෙදූ බව මා සෝදාහරණව දන්නවා. එතුමා ඉතාම රුදුරු ආකාරයෙන් ඝාතනය කළෙත් පාසලක උත්සවයකට සහභාගි වී එම ස්ථානයෙන් පිටත්වෙන්න ආසන්න අවස්ථාවේදියි.

ඒ වගේම එතුමා අධ්‍යාපන ක්ෂේත්‍රය හැරුණු විට අනෙක් ක්ෂේත්‍ර වෙනුවෙනුත් කටයුතු කළා. කෘෂිකර්මය, විදුලිබලය, වාරිමාර්ග සහ මහාමාර්ග වැනි ජනතා අවශ්‍යතාවන් සැපයීමට අති විශාල උත්සාහයක් දැරූ පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරයකුයි, තංගතුරෙයි මැතිතුමා.

එතුමාට ඉතා හොඳ දේශපාලන ඉතිහාසයක් තිබෙනවා. එතුමා 1970 පාර්ලිමේන්තු මැතිවරණයේදී මූතූර් ඡන්ද කොට්ඨාසය වෙනුවෙන් ඉදිරිපත්ව පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරයකු හැටියට තේරී පත් වී 1977 දක්වා ඒ පාර්ලිමේන්තුවේ කටයුතු කර තිබෙනවා. ඒ කාලයේදීත් එතුමා ඒ ප්‍රදේශවල ජනතාව වෙනුවෙන් විශිෂ්ට සේවයක් ඉෂ්ට කළ බව අප දන්නා කාරණයක්. ඊට පසු එතුමා ත්‍රිකුණාමල දිස්ත්‍රික්කයේ සංවර්ධන සභාවට පත් වී එහි සභාපතිවරයා හැටියට කටයුතු කරමින් ඒ ප්‍රදේශයේ ජනතාව වෙනුවෙන් ඉතාම වටිනා සේවාවක් ඉෂ්ට කළා. ඉන් පසු 1994 මහා මැතිවරණයේදී ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණෙන් ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයට ඉදිරිපත්ව ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණේ වැඩිම ඡන්ද සංඛ්‍යාව ලබා ගත් අපේක්ෂකයා ලෙස මේ පාර්ලිමේන්තුවට පැමිණියා. එදා සිට මිය යන තුරුම එතුමාගේ ජීවිතයේ ඉතා වැදගත්, උතුම් ලක්ෂණයක් වුණේ මේ රටේ ජාතික සමඟිය වෙනුවෙන් කැප වීමයි. අන්න ඒ වගේ මන්ත්‍රීවරයකුයි, ඒ. තංගතුරෙයි මැතිතුමා. අද මේ රටේ පවතින ජනවාර්ගික ප්‍රශ්නයට දේශපාලන විසඳුමක් මඟින් රටේ සාමය ඇති කළ යුතුය යන මතය දෘඪතර ලෙස, අවංකව විශ්වාස කළ කෙනෙක් තමයි තංගතුරෙයි මන්ත්‍රීතුමා. එතුමා ඒ පිළිබඳව තමන්ගේ අදහස් පැහැදිලිව ප්‍රකාශ කළා. මේ ප්‍රශ්නය යුද්ධයෙන් නොව, දේශපාලන විසඳුමක් මඟින් නිරාකරණය කළ යුතු බව එතුමා මා සමඟත් කීප වතාවකදී ප්‍රකාශ කර තිබෙනවා. අපේ රජය ක්‍රියාත්මක කිරීමට අදහස් කරන දේශපාලන විසඳුම් පිළිබඳව ඒ පක්ෂවල අදහස් ලබා දීමේදීත්, ඒවා ක්‍රියාත්මක කිරීමෙන් ලබා ගත හැකි ප්‍රතිඵල ගැනත් හොඳ විමර්ශනයක යෙදුණු මන්ත්‍රීවරයකු තමයි, තංගතුරෙයි මන්ත්‍රීතුමා. එතුමා මේ සභාව තුළදී ක්‍රියා කළ ආකාරය ගැන අපි කවුරුත් දන්නවා. එතුමා ඉතාම දක්ෂ කථිකයෙක්. ඒ වාගේම එතුමා සැම මන්ත්‍රීවරයකු සමඟම ඉතාම හිතවත් කල්‍යාණ මිත්‍රයකු වාගේ ජීවත් වුණු කෙනෙක්.

පාසල් දරුවන් වෙනුවෙන් පාසලක පැවැති උත්සවයකට සහභාගි වී, ඒ ස්ථානයෙන් පිටව යෑමට උත්සාහ කළ අවස්ථාවේදී එතුමාත්, එම විදුහලේ විදුහල්පතිනියත්, තවත් කිහිප දෙනකුත් ඝාතනය කිරීම ගැන අප කනගාටු වෙනවා. ඒ සිද්ධියට පසුව, ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ගරු විචී පසිරණ මහතා]

නියෝජනය කළ, පාර්ලිමේන්තුවේ ඉතාම ජ්‍යෙෂ්ඨ මන්ත්‍රීවරයකු වන මහරූප් මැතිතුමා ඝාතනයට ලක් වුණා. මේ සිද්ධිවලින් අපට පැහැදිලි වන්නේ කුමක්ද? මේ රටේ සාමය ඇති කිරීමට යම්කිසි ආකාරයක හැප කිරීමක් කරන්නට බලාපොරොත්තු වන හැම කෙනාකුටම විරුද්ධව මේ ත්‍රස්තවාදීන් ආයුධ ඔසවන බවයි, එයින් පෙනී යන්නේ. හංගුරෙයි මන්ත්‍රීතුමා ජීවත්ව සිටියා නම් ත්‍රිකුණාමල දිස්ත්‍රික්කයට අති විශිෂ්ට සේවාවක් එතුමාගෙන් ඉටු වනවාට කිසිම අනුමානයක් නැහැ.

මගේ පෞද්ගලික මිත්‍රයකු වූත්, පාර්ලිමේන්තුව තුළ ඉතාම දක්ෂ කථිකයකු වූත්, ජාතික සමගිය අවංකව අපේක්ෂා කළ නිහතමානී මන්ත්‍රීවරයකු වූත් හංගුරෙයි මහතාගේ අභාවය පිළිබඳව, එතුමාගේ සියලුම ඥාතීන් වෙනුවෙන්, ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණේ නායකතුමා, එම පෙරමුණේ පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුන් ඇතුළු සියලු දෙනා වෙනුවෙන් මගේ බලවත් ශෝකය මේ අවස්ථාවේදී පුද කරනවා.

එතුමා මිය ගියත් මේ රටේ ජාතීන් අතර සමගිය ඇති කොට, සියලුම ජාතීන්ට මේ පොළව මත සාධාරණව ජීවත් වීමේ අයිතිය ලබා දීමට එතුමා තුළ තිබුණු අවංක හැපවීම අපි හැමටත් ආදර්ශයක්.

අභාවප්‍රාප්ත වූ හංගුරෙයි මැතිතුමාට එතුමාගේ ආගම අනුව සියලු අපේක්ෂාවන් ඉෂ්ට වේවායි ප්‍රාර්ථනය කරමින් මගේ වචන කීපය අවසාන කරනවා.

**වෛද්‍ය ජයලත් ජයවර්ධන මහතා**
*(வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்தன)*
(Dr. Jayalath Jayawardana)

මූලාසනාරූඪ ගරු මන්ත්‍රීතුමනි, අද අපි මේ අස්ථාවේදී ශෝකය ප්‍රකාශ කරන්නේ දිවංගත ඒ. හංගුරෙයි මන්ත්‍රීතුමාගේ අභාවය පිළිබඳවයි. හංගුරෙයි මන්ත්‍රීතුමා මා සමඟ ඉතා දීර්ඝ කාලයක සිට සම්බන්ධකමක්; මිත්‍රකමක් පොහිබුණක් 1994 දී මේ පාර්ලිමේන්තුවට මා පත්වුණාට පස්සේ හංගුරෙයි මන්ත්‍රීතුමාත් සමඟ ඉතාමත්ම කිට්ටු මිත්‍රකමක්, සම්බන්ධකමක් මා පැවැත්වූවා. එතුමා ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය නියෝජනය කරමින් ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ සියලුම ජන කොටස්වල ජනතා අයිතීන් සුරැකීමට කටයුතු කළ දේශපාලනඥයකු; ජනතා නායකයෙකු බව මම මේ අවස්ථාවේදී සඳහන් කරන්නට කැමැතියි.

මූලාසනාරූඪ ගරු මන්ත්‍රීතුමනි, ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය මේ රටේ ප්‍රධාන ජාතීන් තුනම වාසය කරන ඉතාමත්ම වැදගත් දිස්ත්‍රික්කයක්. සිංහල, දෙමළ, මුස්ලිම් යන ප්‍රධාන ජනකොටස් තුනම මේ දිස්ත්‍රික්කයේ වාසය කරනවා. ඒවගේම ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය, ත්‍රස්තවාදීන්ගේ අවාසනාවන්ත හස්තයට හසුවුණු දිස්ත්‍රික්කයක්. 1994 වර්ෂයට ප්‍රථම මේ ප්‍රදේශයේ ත්‍රස්තවාදය ඉතාමත් තීව්‍රවූව පැවතුණා. නැගෙනහිර පළාතේ විශේෂයෙන් මේ දිස්ත්‍රික්කයේ ත්‍රස්තවාදී කටයුතු මැඩලන්නට එක්සත් ජාතික පක්ෂ රජයට පුළුවන්කම ලැබුණා. ප්‍රජාතන්ත්‍රවාදය යළි ස්ථාපනය කර නැගෙනහිර පළාත නැවත වරක් සුරක්ෂිත කරන්නට එක්සත් ජාතික පක්ෂ රජයට පුළුවන්කම ලැබුණා. 1994 පසුගිය මහා මැතිවරණයේදී ජනතාවගේ ඡන්දයෙන් මෙම ගරු සභාවට පත් වෙන්නට හංගුරෙයි මන්ත්‍රීතුමාට අවස්ථාව ලැබුණේ ඒ පදනම නිසයි. එතුමා ජනතාව වෙනුවෙන් ලබා ගත් ඒ අයිතිය මනාව සුරක්ෂිත කළ ජනතා නායකයකු බව මේ අවස්ථාවේ දී මා සඳහන් කරන්නට ඕනෑ. ජාතික ලැයිස්තුවෙන් පත්වුණු මන්ත්‍රීවරයෙක් හැටියට මම විශේෂයෙන්ම උතුරේත් නැගෙනහිරත් ත්‍රස්තවාදය නිසා ගුටිකන, මැරුම් කන අහිංසක ජනතාව වෙනුවෙන් කටයුතු කරද්දී හංගුරෙයි මන්ත්‍රීතුමාගෙන් මට ලැබුණු මාර්ගෝපදේශකත්වය කොතෙක්ද කියන එක මම දන්නවා. එතුමා මට හැම විටම කථා කර කිව්වේ, "ඔව්, ඔබත් මම වගේම නැගෙනහිරත්, උතුරේත් අහිංසක ජනතාව වෙනුවෙන් සේවය කරන්න ඉදිරිපත් වෙනවා" කියායි. සිංහල හෝ වේවා, මුස්ලිම් හෝ වේවා, දෙමළ හෝ වේවා විශේෂයෙන්ම නැගෙනහිර පළාතේ ජීවත් වෙන අහිංසක ජනතාවගේ මූලික අවශ්‍යතාවන්; ඒ අයගේ ආහාරපාන, ඒ අයගේ අධ්‍යාපනය, ඒ අයට අවශ්‍ය කරන බෙහෙත් වගේ දේවල් සපුරාලන්නට එතුමා තුළ පුදුම වුවමනාවක්, පුදුම කැක්කුමක් තිබුණා. අපි හමුවෙන මේ පාර්ලිමේන්තු සභා ගර්භය තුළදීත් පාර්ලිමේන්තු සභා ගර්භයෙන් පිටතදීත් එතුමා හැම විටම කථා කළේ නැගෙනහිර පළාතේ අහිංසක ජනතාව ගැනයි; ප්‍රජාතන්ත්‍රවාදී සාමකාමී ජනතාව ගැනයි; කිසිම කෙනෙකුගේ හවුහරණයක් නැති සාමකාමී ජනතාව ගැනයි. එතුමා මිය යන්නට මාස ගණනකට ප්‍රථම මූතූර් ප්‍රදේශයේ අහිංසක ධීවර ජනතාව ගැන මා සමඟ කථා කළ ආකාරය මට මේ අවස්ථාවේදී මතක් වෙනවා. තමන්ගේ ජීවනෝපාය කර ගන්නට අවශ්‍ය පරිසරය නොමැති කම නිසා පවුල් 6000කට වැඩි ධීවර පිරිසක් අද අසරණ වී ඉන්නවා යයි එතුමා එද පුදුම කැක්කුමකින්, පුදුම වේදනාවකින් මා සමඟ කියන්නට යෙදුණා.

මූලාසනාරූඪ ගරු මන්ත්‍රීතුමනි, මම හංගුරෙයි මැතිතුමා දකින්නේ, එතුමාගේ දර්ශනය දකින්නේ ජාති, ආගම්, කුල භේදයකින් තොරව, දේශපාලන භේදයෙන් තොරව මේ රටේ ලාංකික ජනතාවට සේවය කළ ඒ ප්‍රදේශවාසීන්ට ආදර්ශයක් දුන් ජන නායකයෙකු හැටියටයි. රජයෙන් කාරුණිකව ඉල්ලීමක් කරන්නට මම මේ අවස්ථාව ප්‍රයෝජනයට ගන්නවා.

විශේෂයෙන්ම නැගෙනහිර පළාතේ ජනතා නියෝජිතයන්ගේ ආරක්ෂාව මීට වඩා තර කළ යුතු බවත් ජනතාව වෙනුවෙන් හඬ නගන, ජනතා අයිතීන් සුරකින, ජනතා නියෝජිතයින්ගේ ජීවිත ගැන මීට වඩා සැලකිලිමත් විය යුතු බවත් මම මේ අවස්ථාවේදී කියන්නට කැමතියි. හංගුරෙයි මැතිතුමා ඝාතනය කර මාසයක් යන්නට ප්‍රථම, එතුමාගේ අභාවය සම්බන්ධයෙන් අපි අද ශෝකය ප්‍රකාශ කරන මේ අවස්ථාව වන විට එම දිස්ත්‍රික්කයේම තවත් ජ්‍යෙෂ්ඨ මන්ත්‍රීවරයකු වන එම්. ඊ. එච්. මහරූප් මැතිතුමා ඉතාමත් අමානුෂික ලෙස ඝාතනය කර තිබෙනවා. මේ ඝාතන කෙදිනක නවතීවිදැයි අප කවුරුත් දන්නේ නැහැ. හංගුරෙයි මන්ත්‍රීතුමා ජනතාවට ලබා දීමට බලාපොරොත්තු වූ අයිතීන්, ජනතාවගේ යහපත සඳහා වූ එතුමාගේ යෝජනා, එතුමාගේ දර්ශනය ඉදිරියට ගෙන යාම ඉතාමත්ම වැදගත් කියලයි මම සිතන්නේ. අපි එතුමාට කරන උපරිම ගෞරවය, එතුමාට කරන ආචාරය වන්නේ ඒ ප්‍රදේශයේ අහිංසක ජනතාවට සේවය කිරීමයි. එම නිසා අද මේ සභා ගර්භය තුළ හංගුරෙයි මැතිතුමා ගැන අපේ සහෝදර මන්ත්‍රීවරුන් කළ ගුණකථන සියයට සියයක්ම මම අනුමත කරනවා. හංගුරෙයි මන්ත්‍රීතුමා ඒ ප්‍රදේශයේ ජනතාව වෙනුවෙන් ඉටු කළ සේවය අද ඒ ජනතාවට අහිමි වී තිබෙනවා. හංගුරෙයි මැතිතුමාගේ ඝාතනයෙන් පසු, විශේෂයෙන් මහරූප් මැතිතුමාගේ ඝාතනය කළාට පසු කින්නියා, මූතූර් ප්‍රදේශවල ජනතාව අද අසරණ වී සිටිනවා. අද ඒ ජනතාව දේශපාලන නායකත්වය නැති කත්තත්වයට පත්ව සිටිනවා. අද නැගෙනහිර පළාත් ක්‍රම ක්‍රමයෙන් නැවත වරක් කොටි ත්‍රස්තවාදයට ගොදුරුව තීව්‍රවුණු තත්ත්වයකට යොමු වෙමින් පවතිනවා. ඉතාමත්ම ශෝකජනක මේ අවස්ථාවේදී, හංගුරෙයි මැතිතුමාගේ දයාබර බිරිඳට හා එතුමාගේ පවුලේ සියලු දෙනාටම පෞද්ගලිකව මෙන්ම එක්සත් ජාතික පක්ෂයේ මන්ත්‍රීවරයකු හැටියට මගේ සානුශය මෙන්ම සංවේගය ප්‍රකාශ කළ යුතුව තිබෙනවා.

මූලාසනාරූඪ ගරු මන්ත්‍රීතුමනි, මේ පාර්ලිමේන්තුවේ ජ්‍යෙෂ්ඨ මන්ත්‍රීවරයකු හැටියට මේ රටේ ඒකීය භාවය වෙනුවෙන් මේ රටේ සියළුම ජන කොටස්වල අයිතීන් වෙනුවෙන් කටයුතු කළ ඒ ජනතා පුත්‍රයාට, හංගුරෙයි මන්ත්‍රීතුමාට මේ අවස්ථාවේදී මගේ උපහාරය සිහි ප්‍රණාමයෙන් යුතුව පුද කරන අතර එතුමාගේ අභාවය සම්බන්ධයෙන් අපගේ ශෝකය එතුමාගේ පවුලේ සියලු දෙනාටම දන්වා යවන ලෙස ඉල්ලා සිටිමින් මම නිහඬ වෙනවා. ඔබට ස්තුතියි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ගරු කේ. තුරෛරාජසිංහම් මහතා
(திரு. கே. துரைராஜசிங்கம்)
(Mr. K. Thurairasasingham)

கௌரவ தலைவர் அவர்களே, அமரர் தங்கத்துரை அவர்களின் மறைவினை இந்தச் சபை நினைவு கூர்ந்துகொண்டிருக்கின்றது. ஏழை மக்களுக்கு உதவி செய்வதையே தன்னுடைய நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த தங்கத்துரை அவர்கள், மிக ஏழ்மையான குடும்பத்திலே பிறந்து, தன்னுடைய திறமையின் காரணமாக ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பெற்று, தனது கிளிவெட்டிக் கிராமத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள வத்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியை மிகச் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்து, அதற்குப் பின்பு பெற்ற ஒரு புலமைப் பரிசில் மூலம் யாழ்ப்பாணத்தைச் சென்று கல்வி கற்ற பின்னர், எழுதுவினைஞர் சேவையில் நுழைந்தார். பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றால், சாதாரண ஓர் உத்தியோகத்தின் மூலம் மட்டும் செய்ய முடியாது என்ற பரந்த நோக்கத்துடன் அரசியலில் ஈடுபட்டவர் அமரர் தங்கத்துரை அவர்கள். அன்றைய சூழ்நிலையில் பேரினவாதக் கொள்கைகளின் காரணமாக தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை இழந்து தவித்த நேரத்தில், தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய ஓர் உன்னதக் கட்சியாகிய தமிழரசுக் கட்சியில் அதாவது, தந்தை செல்வா அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சியில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து, அவர் காட்டிய அகிம்சை வழியிலே தமிழ் மக்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக அயராது உழைத்த ஓர் உத்தமர் அமரர் தங்கத்துரை அவர்கள். ஒரு கொள்கையைக் கடைப்பிடிப்பதென்பது, அதை மிகவும் கண்ணியத்துடனும் காருண்ணியத்துடனும் கடைப்பிடிப்பதிலேதான் தங்கியிருக்கிறது. அமரர் தங்கத்துரை அவர்கள், தான் எதற்காக பொது சேவையில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டவர். அவர் பொதுச் சேவையைச் சீரோடும் சிறப்போடும் செய்ய வேண்டுமென்றால், மற்றவர்களுக்குத் தான் செல்கின்ற பாதையின் அளவையும் தன்மையையும் அவர்கள் ஏற்கக்கூடிய விதத்திலே எடுத்தியம்ப வேண்டுமென்ற சிறந்த கொள்கையை உடையவர். எனவேதான் தன்னுடைய கருத்துக்களைக் கூறுகின்ற பொழுதெல்லாம் மிகவும் நிதானமாகவும் அர்த்தபுஷ்டியாகவும் மிகவும் தர்க்க நியாயத்துடனும் சொல்கின்ற வல்லமை மிக்கவராக அமரர் தங்கத்துரை அவர்கள் விளங்கினார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் ஆத்திரப்பட்டதை நான் கண்டது கிடையாது. போற்றினாலும் சரி, தூற்றினாலும் சரி, போற்றப்படுவதற்காகப் புளங்காகிதம் கொள்வதோ, தூற்றப்படுவதற்காக எரிச்சல் கொள்வதோ அவருடைய இயல்பாக இருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் காண்கின்ற அனைவரையும் அவர் நண்பர்களாக மாற்றிக் கொண்டிருந்தார். அவருடைய கருத்துக்கள் மிகவும் ஆணித்தரமாக இருக்கின்ற அதேவேளையில், மற்றவர்களுடைய கருத்துக்களையும் மிகவும் நுணுக்கமாகவும், அவதானமாக நோக்கக்கூடிய வல்லமை மிக்கவராக அமரர் தங்கத்துரை அவர்கள் விளங்கினார். எப்பொழுதும் மற்றவர்களுடைய கருத்துக்களுக்கு ஜனநாயகப் பாங்கில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒருவராக அவர் விளங்கினார். அவர் மீது பலர் மிகவும் கொடுமையான, சூடான வார்த்தைகளைச் சொல்லிய போதிலும்கூட, அவர்களையெல்லாம் 'தம்பி' என்று விளித்து தன்னுடைய கருத்துக்களை மிக நிதானமாகச் சொல்வார். அவ்வாறு குதித்தவர்கள், கூத்தாடியவர்கள், கொடுமையாகப் பேசியவர்கள் எல்லோரும், "'ஆம்' நீங்கள் சொல்வது சரிதான்" என்று ஏற்கக்கூடிய விதத்திலே மிக நிதானமாகப் பேசுகின்ற ஆற்றல் மிக்கவராக திரு. தங்கத்துரை அவர்கள் விளங்கினார். ஒரு பிரச்சினைக்குத் தீர்வுகாண்கின்றபோது மூன்று பக்கங்களைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும் என்று எனக்கு அவர் அடிக்கடி சொல்வார். இரு தரப்பினரும் தங்களுடைய நியாயங்களை எடுத்துச் சொல்வார்கள்; அவற்றில் ஒன்று ஆதரவாக இருக்கும். மற்றொன்று எதிராக இருக்கும். அந்த விடயத்துக்குத் தீர்வு காணவேண்டுமென்றால், அந்த இரண்டு பக்கங்களுக்கும் அப்பால் நின்று பார்க்கின்ற மூன்றாவது ஒரு நியாயமான கண்ணின் மூலம் பார்த்துத் தான் தீர்வு காணவேண்டும் என்று சொல்வார். அதாவது, ஒரு விடயத்தை எடுத்து வாதிடுகின்ற பொழுது, அந்த மூன்றாவது கண்ணை—மூன்றாவது நியாயமான மனிதனைக்—கவரக்கூடிய விதத்திலே நம்முடைய கருத்துக்கள் வைக்கப்பட வேண்டுமென்று மிகச் சிறந்த சித்தாந்தத்தோடு தன்னுடைய கொள்கையை அவர் கடைப்பிடித்துக் கொண்டு வந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையிலே இன்று தமிழ் மக்கள்படுகின்ற அல்லல்களைத்துடைத்தெறிவதற்காக, கட்சி எடுக்கின்ற எல்லா நடவடிக்கைகளையும் மிக ஆழ, நீள, அவதானத்தோடு விவாதங்களுக்கு மத்தியிலே தீர்மானித்துச் செயற்படுத்துகின்றபொழுது, தோளோடு தோள் நின்று செயற்படுகின்ற வல்லமைமிக்கவராக அமரர் தங்கத்துரை விளங்கினார். தமிழினத்தை அவசரகாலச்சட்டம் மிகவும் பாதிக்கின்றது; அவசர காலச் சட்டத்தின் காரணமாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன. எனவே, நாம் அதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்று தீர்மானம் எடுத்தபொழுது, மாதாமாதம் இந்தச் சபையிலே நடைபெறுகின்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு எதிர்த்து வாக்களிப்பது தன்னுடைய தலையாய கடமை என்று கருதி அமரர் தங்கத்துரை அவர்கள் அதனைக் கடைப்பிடித்து வந்தார். அவர் இந்த நாட்டிலே நிற்க முடியாத பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இருந்தபொழுதிலும் கூட, —அந்த வேலைகள் எல்லாம் எவ்வளவு அவசியமானவைகளாக இருந்த பொழுதிலும்கூட, —அவற்றை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு தன்னுடைய கட்சி எடுத்த முடிவின்படி தன்னுடைய கடப்பாட்டைச் செய்வதற்காக ஒவ்வொரு அவசரகாலச்சட்ட நீடிப்பிலும் அரசுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற தன்னுடைய கடப்பாட்டை மீறாது கடைப்பிடித்து வந்த மிகவும் கண்ணியம் மிக்க கட்சித் தொண்டராக அவர் விளங்கினார்.

தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை எல்லாம் மிகவும் நிதானத்தோடு அவதானித்து, அவற்றை எல்லாம் மிகைப்படுத்தாத விதத்திலே, உண்மையான செய்திகளை அறிந்து, எங்கெங்கிருந்தெல்லாம் அவற்றுக்குப் பரிகாரம் பெறமுடியுமோ, அந்தந்த இடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய விதத்திலே அவற்றைக் கொண்டு சென்று, பரிகாரம் தேட வேண்டுமென்பதில் மிகவும் துல்லியமாகவும் தெளிவாகவும் செயற்பட்டவர் அமரர் தங்கத்துரை அவர்கள். வேண்டுமென்று வெறும் செய்திகளைப் பரப்பி விடுவதாக இல்லாமல், உண்மையாகவே அந்த விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டுமென்பதற்காக தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதிலே மிகவும் அக்கறையோடும் ஆர்வத்தோடும் செயற்பட்டதுடன், உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதிலும் ஆர்வம் கொண்டவராக அமரர் தங்கத்துரை அவர்கள் விளங்கினார். திருகோணமலை மாவட்டத்திலுள்ள குமாரபுரத்திலே மிகக் கொடுமையான சம்பவமொன்று நடைபெற்றது. பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பல இருந்தபொழுதிலும்கூட, அவர் தன்னந்தனியானாக அங்கே சென்றார். அந்தச் சம்பவத்தை நேரிலே கண்டார். உரிய அதிகாரிகளைச் சந்தித்தார். உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அங்கிருந்த உள்ளூர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். அது மட்டுமல்ல, உயர்பீடத்திற்கும் அதனை எடுத்துச் சென்றார். மேதகு சனாதிபதி அவர்களைச் சந்திக்கின்ற பொழுதெல்லாம் அது தொடர்பாக நினைவூட்டி, அந்த விடயத்தில் ஒரு நியாயமான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதிலே மிகவும் உறுதியாக அவர் செயற்பட்டு வந்தார். வன்னியிலே நிகழ்ந்த கொடுமைகள் பற்றியும், யாழ் மக்களின் இடம்பெயர்வுக்குப் பின்பு தமிழ் மக்கள் பஞ்சத்தாலும் பசியாலும் நோயாலும் வாடிய செய்திகள் என்பனவற்றைப் பற்றியும் புள்ளி விபரங்களோடு உரிய அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்ற அந்தச் சொல்லாலே, அவர்களுக்குச் செயல்படுகின்ற உத்வேகத்தை ஊட்டக்கூடிய ஓர் ஆற்றல் மிக்கவராக அமரர் தங்கத்துரை அவர்கள் விளங்கினார்.

அவர் தன்னுடைய தொகுதியைப் பற்றி மிகச் சிறப்பான கனவைக் கண்டு கொண்டிருந்தார். அமரர் தங்கத்துரை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[කේ. තුරෙයිරත්නසිංහම් මහතා]

இறுதியாக ஆற்றிய உரையிலே கூட, "நான் கிளிவெட்டியில் இருந்து வந்தாறுமூலைக்குச் சென்று, யாழ்ப்பாணத்திற்குச் சென்று கல்வி கற்க வேண்டிய அவல நிலை அன்று இருந்தது. அந்த நிலைமை என்னுடைய வருங்காலச் சந்ததியினருக்கும் இருக்கக்கூடாது. சகல கல்வி வளமும் இந்தப் பிரதேசத்திலேயே இருக்க வேண்டும் என்ற நோக்கோடுதான் இங்கே பாடசாலைகளை அமைக்கின்றேன்." என்று கூறியிருக்கின்றார். திருகோணமலை மூலைமுடுக்கு எங்கிலும், குக் கிராமங்கள் எங்கிலும் பாடசாலைகளை அமைத்து, அங்கு கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு மிகவும் அரும் பாடுபட்டவர் அவர். இதற்கு மிகவும் உயர்ந்த சாட்சியாக கல்வி அமைச்சர் அவர்களே இப்பொழுது இதனை இந்தச் சபைக்குத் தெளிவுபடுத்திக் காட்டியிருக்கின்றார்.

மூதூரிலே படகுச் சேவை இல்லாமல் மக்கள் படுகின்ற துன்பங்களைக் கண்ணுற்று, அங்கு இன்னுமொரு படகு ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்பதற்காகப் பல தடவை ஜனாதிபதி அவர்களிடம், அது பற்றி மிகச் சிறப்பாக எடுத்து விளக்கி –அவ்வாறான படகுச் சேவை ஒன்றினுடைய அவசியத்தை மிகவும் ஆணித்தரமாக எடுத்துக் கூறி –எவ்வளவு நிதிச் செலவு ஏற்பட்டாலும் கூட அதைச் செய்து முடிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் ஒன்றை ஏற்படுத்தி, அவர் அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார். ஆனால், அந்தப் படகு ஓடுவதற்கு முன்பே அவர் கொலையுண்டதால் அதனைக் காண முடியாத துர்பாக்கியசாலியாகி விட்டார்.

திருகோணமலையிலே அநாதைகளாக்கப்பட்ட இளம் சிறார்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற சிவானந்தா தபோவனம் எனப்படுகின்ற விடுதியை மிகச் சிறந்த முறையிலே செய்யவிட்டு, அதற்கான ஒரு சிறந்த கட்டடத்தை உப்புவெளியிலே கட்டிக் கொண்டிருந்தார் அவர். அந்தக் கட்டடத்திலே குடிபோவதற்கு முன்பு, இவ்வுலகை விட்டுப் போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

அமரர் தங்கத்துரை அவர்கள் எந்தவொரு விடயத்தையும் மிகவும் நாகரிகமாகச் சொல்கின்றவர் என்பதற்கு உதாரணமாக, இந்தச் சபையிலே மிகவும் அண்மையிலே நடைபெற்ற ஒரு விடயத்தை நான் சுட்டிக் காட்ட விழைகின்றேன். இந்தச் சபையில் கௌரவ சபாநாயகர் அவர்கள் தலைமைதாங்கிக் கொண்டிருந்த நேரத்திலே அமரர் தங்கத்துரை அவர்கள் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால், அன்றைய பேச்சாளர்களின் தொகை அதிகரித்ததன் காரணமாக 6 நிமிடங்களிலே அவருடைய பேச்சை முடிக்கும் படி சபாநாயகரிடமிருந்து அவருக்கு ஆணை பிறந்தது. அவர் அப்பொழுது, "கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினராக அந்தச் சபையிலே பேசிக் கொண்டிருக்கின்றேன். இங்கு பெரிய கட்சிகளுடைய உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையிலே நான் ஒருவன் மட்டுந்தான் பேசுகின்றேன். ஆகவே, எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திலே நீங்கள் எந்த விதத்திலும் வெட்டுப் போடுவதை நான் விட்டுக் கொடுக்க முடியாது" என்று சபாநாயகரிடம் மிக நிதானமாகவும் மிக நாகரிகமாகவும் கூறினார். கௌரவ சபாநாயகர் அவர்கள், அவருடைய நியாயமான கோரிக்கையை ஏற்று, அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பேச அனுமதி கொடுத்தார். இது ஒரு சிறிய விடயமாகவிருக்கலாம். ஆனால், அவர் எடுத்துக் கொண்ட விடயத்தை எவ்வளவு தூரம் மிக நிதானமாகக் கையாண்டு அதில் வெற்றி பெற்றார் என்பதற்கு ஓர் உதாரணமாகத்தான் நான் இதனைக் கூற முடியும். வரவு செலவுத் திட்ட உரைகள் இந்தப் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட பின் எல்லா வரவு செலவுத் திட்ட யோசனைகளையும் படித்துப் பார்த்து, அதனோடொட்டிய பேச்சைப் பேசுகின்ற உறுப்பினர்கள் சிலர் மட்டுந்தான் இந்தச் சபையிலே இருக்கின்றார்கள். அத்தகைய சில உறுப்பினர்களுள் ஒருவராக அமரர் தங்கத்துரை அவர்கள் விளங்கினார்கள்.

வெறும் சலசலப்புக்களை, வார்த்தை ஜாலங்களை, செய்திப் பரம்பல்களை விரும்பாதவராக, உண்மையான விடயங்களிலே உரியவர்களை ஈர்த்து, விடயங்களைவென்றெடுப்பதிலே மிகவும் அக்கறையுள்ளவராக அமரர் தங்கத்துரை அவர்கள் இருந்தார். அவர் மிகப் பெரிய கனவு கண்டு கொண்டிருந்தார். தமிழ் மக்களுடைய வாழ்வு செழிக்க வேண்டும்; சிறக்க வேண்டும் என்று அரும் பாடுபட்டுக் கொண்டிருந்தார். அந்த எண்ணத்திற்காக அவர் தன்னை இரையாக்கிக் கொண்டிருக்கின்றார்.

அவருடைய ஆத்மா நல்ல பதவியினை எட்ட வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவினால் வாடுகின்ற அவருடைய குடும்பத்தினருக்கும், அவரின் சிறந்த சேவையை இழந்து வாடுகிற அவருடைய மாவட்ட மக்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்த் தலைவர் ஒருவரை இழந்து தவிக்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் என்னுடைய அனுதாபங்களைத் தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி.

ඩී. එච්. එන්. ජයමහ මහතා
(திரு. டி. எச். என். ஜயமஹ)
(Mr. D. H. N Jayamaha)

Thank you for the indulgence, Sir, The late Mr. Thangathurai entered the national legislature as the Second Member for Muttur in 1970. Mr. Thangathurai had a rich political career. Born on the 17th of January 1936, after his education et cetera at the age of 32, he joined the then Federal Party. That was in the 1965 - 1970 period where the Federal Party was in coalition with the United National Party Government headed by late Mr. Dudley Senanayake. That was the time he entered the political arena as a young man.

He had been the organizing Secretary of the Federal Youth Organization. As time passed on, when the Federal Party was transformed to the Tamil United Liberation Front in 1971, the late Mr. Thangathurai continued his services and he was working as an active member of the TULF. In 1977, in keeping with the nature of the politics, he could not make it to Parliament but he did not give up his interest. The point I want to stress is this. Here is a man who just did not come to politics for the sake of coming in search of a job but he came with a commitment. He continued his interest in the party. In 1981, when the Development Council was started he found his way and he played an active role in that setup.

Thereafter, Sir, he took a long period of time to come back to the legislature, the Parliament, but the sustained interest was there concepts of because he was a man with a commiment and with his own. I met him when he joined us in August 1994. I had the occasion sometimes to sit with him at lunch and talk to him. We never knew that this sudden fate would take him away from us.

In the short period that I associated with him I specially noted his commitment. One place where I could see his commitment was at the Parliamentary Consultative Committees. The Parliamentary consultative committee forum is a very valuable forum in this institution. The late Mr. Thangathurai was one who made use of it in order to render whatever service he could. Particularly in the Consultative Committee on Education he was a very regular Member and he used to study the papers. He used to get his problems



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

presented there. It was really a pleasure to see how he had done indepth studies into these matters and come prepared for these. Similarly, in other Consultative Committees also he played the same role be it in the Consultative Committees on Irrigation, Power, Rehabilitation, Reconstruction et cetera.

This is an occasion for us, while we mourn his death, to think as to what we can draw from his life. To my mind what strikes first is his commitement to do a service to the people. It was a definite commitment.

His political base was the District of Tricomalee. In the recent past it has been a district riddled with problems, but he was not discouraged by it. Undaunted, he went forward. The other aspect of it was the friendliness he displayed. He was a friend to all. His funeral in Trincomalee was an eloquent tribute to the way he conducted his affairs in that multi-racial district. The Tamils, the Muslims, the Sinhalese, they all, on their own in spite of he tragic circumstances came and paid their tribute to him. That was the second striking feature in his career, the friendliness towards human beings.

Sir, we must also mention his deep commitment to democratic concepts. In spite of the problems, he had to face the challenges. He was one of the hon. Members of this House who firmly believed in the democratic way of life. He believed in national harmony, solving problems through negotiations, discussions and through political solutions. Up to the very last day he st·`k to that ideal. Unfortunately he has been taken away from us. In these circumstances, when we are honouring his mem·ry in this House, it gives us the satisfaction that here was a man who had a commitment to serve the people, who had that humane friendliness and who had that democratic concept. We hope that we all can strive and take these concepts forward. Thank you.

**පී. සෙල්වරාසා මහතා**
**(திரு. பீ செல்வராசா)**
**(Mr. P. Selvarasa)**

கௌரவ தலைவர் அவர்களே, எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான, அமரராகிவிட்ட காலஞ்சென்ற தங்கத்துரை அவர்களின் மறைவையிட்டு இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அஞ்சலியுரைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம். அமரராகிவிட்ட அண்ணன் தங்கத்துரை அவர்கள், மூதூர்ப் பிரதேசத்திலுள்ள கிளிவெட்டி என்றவொரு சிறிய கிராமத்திலே ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். ஏழையாகப் பிறந்தாலும் தனக்குக் கொடுக்கப்பட்ட அறிவைக்கொண்டு தன்னையொரு தலைவனாக்கிய பெருமை தங்கத்துரை அண்ணன் அவர்களுக்கே உண்டு. மூதூர்ப் பகுதியிலே முதன்முதலாக ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையிலே சித்தியெய்திய ஒரு தமிழ் மாணவன் என்ற சரித்திரப் பெருமையைப் பெற்றுக் கொண்டவர் அமரர் தங்கத்துரை அவர்கள்.

தனது சிறுவயதுக் கல்வியை மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொண்ட அவர், இலங்கை பொது எழுதுவினைஞர் சேவையிலே இணைந்து தனது தொழிலை ஆரம்பித்தார். அந்தத் தொழிலில் ஒரு தலைமைத்துவத்தையடைந்து நாடளாவிய ரீதியிலே அவர் ஒரு தலைவராகக் கணிக்கப்பட்டார். அதன் பின்னர் தந்தை செல்வா அவர்களின் அமைப்பில் உருவான தமிழரசுக் கட்சியிலே தன்னை இணைத்துக்கொண்ட அவர், 1970 ஆம் ஆண்டு மூதூர்த் தொகுதியிலே போட்டியிட்டுப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அந்த நேரத்திலே அவர் ஓர் இளைஞராக இருந்தபோதிலும், வயதில் சிறியவராக இருந்தபோதிலும், சக பாராளுமன்ற உறுப்பினர் ஆளுங்கட்சியின் ஓர் அமைச்சராகி இருவரும் எதிரும் புதிருமாக இருந்தபோதிலும், பல அபிவிருத்தித் திட்ட வேலைகளை மூதூர் மக்களுக்காக ஏற்படுத்திக் கொடுத்தவர் அமரராகிவிட்ட அண்ணன் தங்கத்துரை அவர்கள்.

அதன் பின் திருகோணமலை மாவட்டத்தின் மாவட்ட சபைத் தலைவராகவும் விளங்கிய அவர், அரசியல் வாழ்வில் சற்று ஒதுங்கியிருந்து, 1994 ஆம் ஆண்டில் மீண்டும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டார். அன்னாரை நாங்கள் அணுகும்போது, அவரிடம் சில ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். முதிர்ந்த அரசியல் அறிவு அவரிடமிருந்தது. ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் அரசியலிலே மிகவும் அவதானமாக நடந்து கொண்டிருந்தவர் அவர். எந்த நேரமும் இனிய முகத்துடன் பழகுபவர். "தம்பி" என்று எல்லோரையும் இனிமையாக அழைப்பவர் "தங்கா" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவர். இப்படியாகப் பல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அமைச்சர்களினதும் மக்களினதும் பாராட்டுதல்களையும் அன்பையும் பெற்றவர் அமரராகிவிட்ட அண்ணன் தங்கத்துரை அவர்கள்.

அண்மையிலே அவர் தனது பாதுகாப்பைப் பற்றி அவ்வளவாகச் சிந்திக்கவில்லை.

அவர் கொழும்பு மாநகரிலே பஸ்களிலும் ஓட்டோக்களிலும் தன்னந்தனியாகச் சென்று பொதுமக்களுக்காகத் தனது சேவையைச் செய்து முடித்தவர். இப்படிப்பட்ட அண்ணன் தங்கத்துரை அவர்கள், தனது மாவட்டத்தின் கல்வி நிலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணக்கருவைக் கொண்டவராக இருந்தார். அதன்பிரகாரம்தான் கௌரவ அமைச்சர் ரிச்சட் பத்திரண அவர்கள் கூறியதுபோல, பல கோடிக்கணக்கான ரூபாவைத் தனது மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கெனப் பெற்றுக் கொண்டார். இந்தப் பணத்தை எப்படிப் பெறுவது? எவ்வாறு பெறுவது? என்பதை நன்றாக அறிந்து வைத்திருந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை என்றால், அதனை எவராலும் மறுக்க முடியாது. காரணம், அவரிடம் ஆளுமை இருந்தது. யாரை? எவ்வாறு அணுகவேண்டும் என்ற அறிவை அவர் நன்றாகப் பெற்றிருந்தார். அவரிடம் அநுபவம் பேசியது.

சென்றவாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. தங்கத்துரை அவர்களின் இறப்பு சம்பந்தமாக அவர் என்னிடம் வினவிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் கூறினார், "வருகின்ற மாதம் நாலும் அவரும் கிளிவெட்டியில் பாலம் அமைப்பு வேலைக்காக அந்த இடத்தைப் பார்வையிடுவதற்குச் செல்ல இருந்தோம் : அதற்கிடையில் அவரைக் காலன் அழைத்துவிட்டான்" என்று. அண்மையிலே அமைச்சர் பௌஸி அவர்களைச் சந்தித்தேன். அவர் கூறினார்,"பல வருட காலமாக ஒரு முதியோர் இல்லத்தை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார் : திறை சேரியிலும்கூட, பலமுறை இதற்காக வாதிட்டிருக்கிறார் : இப்பொழுது அந்தப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது : ஏறக்குறைய நான்கு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது : பாவம்! அவர் இறந்துவிட்ட பின்னரே அந்தப் பணம் அங்கே செல்லப் போகிறது" என்று.

"திருகோணமலை மாவட்டம் ஒரு பின் தங்கிய மாவட்டமாகும். நான் ஒரு தலைவனாக வந்துவிட்டாலும்கூட, அந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஏனையவர்கள் சிலவேளை என்னைப்போல் வரமுடியாத நிலை ஏற்படலாம் : எனவே, அங்கே இருக்கின்ற ஒவ்வொருவரையும் சிறந்த மாணாக்கராக, சிறந்த கல்விமானாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[සී. සෙල්වරාජා මහතා]

சிறந்த தலைவர்களாக உருவாக்க வேண்டும்" என்று அவர் அடிக்கடி கூறிக்கொள்வதுடன், அதற்காகத் திடசங்கற்பம் பூண்டிருந்தார்.

கருக்கக் கூறுவதாக இருந்தால், அவரை ஒரு "தரவு வங்கி" –DATA BANK– என்றுகூடக் கூறலாம். ஏனென்றால், எதனை? எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்குத் தரவுகளைப் புரட்டுவதற்காக நாங்கள் நூலகத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவரின் மூளையிலே சகல தரவுகளும் அமைந்திருந்தன. அவரிடம் அவற்றை நாங்கள் காணக்கூடியதாக இருந்தது. இப்படிப்பட்ட ஒரு கனவான் இறந்ததையிட்டு, நாங்கள் இன்று அனுதாபம் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். அவரை இழந்து வாடுகின்ற அவரது அன்பு மனைவி, பாசமுள்ள குழந்தைகள், உற்றார் உறவினர் ஆகியோருக்கு தனிப்பட்ட முறையிலும் எனது கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி.

අල්හාජ් ඒ. එච්. එම්. අස්වර් මහතා
(அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர்)
(Alhaj A. H. M. Azwer)

கௌரவ தவிசாளர் அவர்களே,

கருமேகம் கதிரவனை மறைக்கின்றது !
கருமேகம் சந்திரனை மறைக்கின்றது !
கும்மிருட்டு சபையைக் கௌவிக் கொள்கிறது !
நாம் இருளில் மூழ்கியிருக்கிறோம் !
அணையாத தீபம் எங்கே ?
அண்ணா ! அருணாசலம் தங்கத்துரையே நீர் எங்கே ?
அனைவரும் போகுமிடம் சென்றடைந்தனையோ ?
திரும்பிவர மாட்டீர்
தங்கமானாலும் நீர் திரும்பிவர மாட்டீர்
இது நிச்சயம்
நீர் செய்தவை மட்டும்
தரணியில் தங்கி நிற்கும்
புவிதனில் தேங்கி நிற்கும்
ஏனெனில், நீர் ஒரு தங்கம்
தங்கத்துக்கு ஒரு துரை
என்றும் உன் தரம் குறையாது
ஆம் ! உன் குணம் குன்றாது !

இன்று இந்தச் சபையின் 'கலரி' யிலே அமரர் தங்கத்துரை அவர்களுடைய மனைவியார் சத்தியேஸ்வரி, அருமை மகன் புஸ்பாஞ்சலி மதனதேவா, அருமை மகள் தர்மினி, அருமை மகன் அகிலன் ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எங்களுடைய ஆழ்ந்த துயரத்தை இந்தச் சபையின் மூலம் நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். நாளை இதனைத் தொடர்வோம். சோகம் சுமழ. நன்றி.

## තේරීම් කාරක සභාව
## தெரிவுக் குழு
## COMMITTEE OF SELECTION

ගරු රත්නසිරි වික්‍රමනායක මහතා (රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, වැවිලි කර්මාන්ත අමාත්‍යතුමා සහ පාර්ලිමේන්තුවේ සභානායකතුමා)

(மாண்புமிகு ரத்னசிறி விக்ரமநாயக்க – பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்)

